# டிரினிடி மகளிர் கல்லூரி

(கலை மற்றும் அறிவியல்)

டிரினிடி நகர், மோகனூர் ரோடு, நாமக்கல் - 637002, தமிழ்நாடு.

சேலம் பெரியார் பல்கலைக்கழகத்தின் நிரந்தர இணைவுபெற்றது.
புதுதில்லி பல்கலைக் கழக மானியக்குழுவின் 2(f) &12(b) அங்கீகாரம் பெற்றது.

## தமிழ்த்துறை

## பாடகோப்பு

**பாட ஆசிரியர் : முனைவர் சி. கோபியா**

**பாடப்பிரிவு : இளங்கலைத் தமிழிலக்கியம்**

**தாள் குறியீடு : (17UTA09) & (19UTA09) / ஐந்தாம்பருவம்**

**தாள் பெயர் : திராவிட மொழிகளின் ஒப்பாய்வியல்**

# பெரியார் பல்கலைக்கழகம்

## சேலம் - 636 011

## இளங்கலைத் தமிழிலக்கியம்

## (பி.ஏ.,தமிழ்)

## பருவ முறைப் பாடத்திட்டம்

**CBCS பாடமுறை**

## இணைவு பெற்ற கல்லூரிகளுக்கான திருத்தியமைக்கப் பட்ட பாடத்திட்டம்

**2017 - 2018 ஆம் கல்வியாண்டு முதல் சேர்க்கைப் பெறும் மாணவர்களுக்குரியது**

# இளங்கலைத் தமிழ் - ஐந்தாம் பருவம்

# முதன்மைப் பாடம் - தாள் 9

# திராவிட மொழிகளின் ஒப்பாய்வியல்

**பாட நோக்கம்:**

திராவிட மொழிக் குடும்பத்தின் தாய் தமிழே என்பதனை நிறுவுவதற்கான மொழியியல் ஒப்பாய்வு முறையைக் கற்பித்தல்,

**அலகு - 1**

திராவிட மொழிக்குடும்பம் - தென் திராவிடம் - நடுத்திராவிடம் - திராவிட

மொழிகளின் தனித்தன்மைகள்.

**அலகு - 2**

ஒலி பிறப்பு - உயிரொலி மாற்றம் மெய்யொலி மாற்றம்

உருபன்களும் சொல்லாக்கமும்.

**அலகு - 3**

பெயர்கள் - திணை, பால், இடம், எண் உணர்தல் - வேற்றுமைகள் -

மூவிடப்பெயர்கள் - எண்ணுப்பெயர்கள்.

**அலகு 4**

வினைச்சொற்களின் அமைப்பு - வினை வகைகள் - வினைச் சொற்கள் காலம் காட்டும் முறை - எச்சங்களும் முற்றுகளும் - வினைப்பெயர்கள் - வினைப் பொருட்கள்.

**அலகு - 5**

திராவிட மொழிகளின் சொற்றொடரமைப்பு.

**பாடநூல்:**

டாக்டர். ஜி.ஜான் சாமுவேல், 'திராவிட மொழிகளின் ஒப்பாய்வு' ஆசியவியல் நிறுவனம், சென்னை .

**பார்வை நூல்கள்:**

1. கால்டுவெல் ஒப்பிலக்கணம், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம். சென்னை.

2. டாக்டர் ரா.சீனிவாசன் ‘மொழி ஒப்பியலும் வரலாறும்’ அணியகம், சென்னை-30.

3. டாக்டர். மு.வரதராசன், ‘மொழி நூல்' சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம். சென்னை.

# திராவிட மொழிகளின் ஒப்பாய்வியல்

## பிரிவு – I திராவிடம்

கூறு 1 : திராவிட மொழிக்குடும்பம்

கூறு 2 : தென் திராவிட – நடுத்திராவிடக் குடும்பம்

கூறு 3 : திராவிட மொழிகளின் தனித்தன்மைகள்

## பிரிவு - II ஒலி - பிறப்பு, வேற்றுமைகள்

கூறு 4 : ஒலி பிறப்பு – உயிரொலி மாற்றம்

கூறு 5 : மெய்யொலி மாற்றம் - உருபன்களும் சொல்லாக்கமும்

கூறு 6 : பெயர்கள்

கூறு 7 : திணை – பால் - இடம்

கூறு 8 : எண் உணர்த்தல்- வேற்றுமைகள்

## பிரிவு - III வினை வகைகள்

கூறு 9 : மூவிடப்பெயர்கள்- எண்ணுப் பெயர்கள்

கூறு 10 : வினைச்சொற்களின் அமைப்பு – வினை வகைகள்

கூறு 11 : வினைச் சொற்கள் காலம் காட்டும் முறை

## பிரிவு - IV எச்சம் - முற்று - சொற்றொடரமைப்பு

கூறு 12 : எச்சங்களும் முற்றுகளும்

கூறு 13 : வினைப்பெயர்கள் - வினைப்பொருட்கள்

கூறு 14 : திராவிட மொழிகளின் சொற்றொடரமைப்பு

## பார்வை நூல்கள்


1. கால்டுவெல் ஒப்பிலக்கணம் - சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை
2. டாக்டர் இரா.சீனிவாசன் - மொழி ஒப்பியலும் வரலாறும், அணியகம், சென்னை -30

# கூறு 1

# திராவிட மொழிக்குடும்பம்

குறிப்பு

மனிதகுலம் தோன்றிப் பன்னெடுங்காலம் பல்வேறுபட்ட கண்டுபிடிப்புகளை நிகழ்த்தியுள்ளது. அவற்றுள் தலையாயது மொழியே ஆகும். மொழி இன்று எட்டிய வளர்ச்சி என்பது எளிதில் நிகழ்ந்த ஒன்று அன்று. பல்லாயிரம் ஆண்டுகளில் மனித குல உணர்ச்சியும் கருத்துணர்த்தும் முயற்சியும் சேர்ந்து உருவாக்கிய கலவையே மொழி. அ∴து ஒரு கருத்துப் புலப்பாட்டுக் கருவி. நமது முன்னோர்கள் மூலம் நம்மிடம் வந்து நமக்குப் பின்னும் நம் சந்ததிகளுக்குக் கொண்டு செல்லும் அறிவுச் செல்வம். ஒரு பண்பாட்டைத் தாங்கியிருக்கும் கருவூலம்.

விலங்குகளும் தங்களுக்குள் கருத்துப் புலப்பாட்டை நிகழ்த்தி வருகின்றன. அவை அப்புலப்பாட்டைமொழியெனும் கட்டமைப்பில் ஒலி-வரி வடிவங்களில் கட்டமைத்துக் கொள்ள இயலவில்லை. எனவே மனிதனை மனிதனாக இனங்காட்டுவது மொழி எனலாம். காலப்பெருவெளியில் முன்னும் பின்னும் நம்மைப் பிணித்திருக்கும் கண்ணி மொழியாகும்.

இந்த மொழியின்றேல் மனித குலத்தின் இன்றைய நாகரிக வளர்ச்சி இருந்திருக்காது. கலை அறிவியல் நுட்பங்கள் ஆகியன தோன்றியிரா. நன்கு பண்பட்ட சமுதாயத்தில்தான் மொழியின் வளர்ச்சி சிறந்த பயனை எய்தி இருக்கும். இலக்கியங்களும் ஏனை அறிவுத்துறை நூல்களும் மொழியின் தோற்றம் மற்றும் வளர்ச்சியாலேயே சாத்தியமாயின. மனிதன் மொழியினைக் கண்டுணர்ந்தாலும் உலகெங்கும் ஒரே சூழலில் ஒரே காலப்பிரிவில் மொழி தோன்றவில்லை. ஒரேஒரு மொழியும் தோன்றிவிடவில்லை. மாறாக மனிதனின் வாழ்விடச் சூழல், தேவை ஆகியன மொழியை உருவாக்கிக்கொள்ளவும் கட்டமைத்துக்கொள்ளவும் உதவின.

## மொழிக்குடும்பங்கள்

உலகில் பல்லாயிரக்கணக்கான மொழிகள் பேசப்பட்டு வருகின்றன. மனித வாழ்க்கைப் படிநிலைகளில் ஏற்பட்ட மாற்றங்களைப்

போல மொழிகளும் பல்வேறு மாற்றங்களையும் தாக்கத்தையும் சந்திக்கின்றன. இவற்றின் விளைவாகச் சில மொழிகள் அழிந்தும் வருகின்றன. யுனெஸ்கோவின் கருத்துப்படி 6000க்கும் மேற்பட்ட மொழிகள் பேசப்பட்டு வருகின்றன. இவ்வாறு வழங்கும் மொழிகளைப் பற்றிய ஆய்வு கடந்த 19, 20 ஆம் நூற்றாண்டுகளில் மொழிகளுக்கிடையேயான ஒற்றுமை வேற்றுமைகளை இனங்காணும் ஆய்வாக வளர்ந்தது. இதனால் மொழி ஒப்பியல் ஆய்வுத்துறை வளர்ந்தது. இவ்வாய்வின் வளர்நிலையாக ஒரு தன்மையான இலக்கணக் கூறுகளைப் பெற்றிருக்கும் மொழிகளை ஒரேவகையினவாக ∴ குடும்பமாக வகுத்தனர்.

உலகில் பல்வேறு இனக்குழுக்களின் பண்பாடுகளால் செழித்துத் திகழும் நாடு இந்தியா. அவ்வினக்குழுக்கள் பேசும் மொழிகள் பலவற்றைத் தன்னகத்தே உடையது. 1961ஆம் ஆண்டு கணிப்பின்படி இந்தியாவில் 1652 மொழிகள் பேசப்பட்டு வருகின்றன. 2001 ஆம் ஆண்டு கணக்கின்படி இம்மொழிகளில் 22 மொழிகள் பெரு வழக்கினவாகப் பத்து லட்சத்திற்கும் மேற்பட்ட எண்ணிக்கையில் உள்ள மக்களிடம் வழங்கப்பட்டு வருகின்றன. 122 மொழிகள் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட எண்ணிக்கையில் உள்ள சமூகத்தாரால் பேசப்பட்டு வருகின்றன. எஞ்சிய மொழிகள் இவற்றினும் குறைந்த எண்ணிக்கையுடைய மாந்தர்களாலேயே பேசப்பட்டு வருகின்றன.

இந்திய மொழியாய்வு என்பது தொடக்கத்தில் சம்ஸ்கிருதத்தைச் சார்ந்து அமைந்தது. ஆசியக் கல்விச் சங்கத்தைத் தோற்றுவித்த வில்லியம் ஜோன்ஸ் சம்ஸ்கிருத மொழியினை நன்கு ஆய்ந்து அதன் மொழிக்கூறுகள் மேலை ஐரோப்பிய மொழிக்கூறுகளுடன் ஒத்திருப்பதைக் கருதி அதனை, இந்தோ - ஐரோப்பிய மொழிக்குடும்பமாக வகைப்படுத்தினார். 1786இல் அவருடைய அறிவிப்பினால் இந்திய மொழிகள் யாவும் சம்ஸ்கிருத மூலத்திலிருந்து தோன்றின, எல்லா இந்திய மொழிகளும் இந்தோ ஐரோப்பிய மொழிக்குடும்பத்தின என்னும் கருதுகோள் ஏற்பட்டது.

ஆயினும் இந்திய மொழிகளில் பெரிதும் வேறுபட்ட இலக்கணக் கூறுகளுடைய மொழிகள் உள்ளன என்பதை நுணுகியுணர்ந்த டாக்டர் இராபர்ட் கால்டுவெல் 1856இல் தென்னிந்தியாவில் வழங்கும் தமிழ் முதலான மொழிகள் சம்ஸ்கிருத மொழியிலிருந்து மாறுபட்டதொரு மொழிக்குடும்பத்தின என்று நிறுவி அவற்றை திராவிடம் என்ற

வகைப்பாட்டில் அடக்கினார். இதனால் தென்னிந்திய மொழிகள் பற்றிய கருத்தாக்கங்களும் இம்மொழிகளை ஒட்டி அமைந்த இலக்கணக்கூறுகளைப் பெற்றுப் பல்வேறு இனக்குழுக்களால் இந்தியாவின் பல்வேறு இடங்களில் பேசிவந்த மொழிகள் பற்றிய கருத்தாக்கங்களும் மாறத் தொடங்கின.

இந்தியாவில் மேற்சுட்டிய இந்தோ ஐரோப்பிய மொழிக்குடும்பம், திராவிட மொழிக்குடும்பம் ஆகியவற்றைத் தவிர திபெத்தோ சீன மொழிக் குடும்பம் ஆஸ்ட்ரிக் -முண்டா மொழிக்குடும்பம் சார்ந்த மொழிகளும் வழங்கி வருவதாகக் கண்டறிந்தனர். 1864இல் ஜெருமனி அறிஞர் மாக்ஸ்முல்லர் முண்டாவைத் தனி மொழிக்குடும்பமாகக் கண்டறிந்தார்.

1866இல் நடந்த வியன்னா கீழ்த்திசை மாநாட்டின் விளைவாக 1881இல் இந்திய மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் மொழிகளைப் பற்றிய கணக்கெடுப்பும் நிகழ்த்தப்பட்டது. இந்திய மொழிகள் பற்றிய பல்வேறு தரவுகள் கிடைத்தன. சர் ஜான் கிரியர்சன் 1898இல் இத்திட்டத்தின் மேலாளராகச் சேர்ந்து சேகரித்த ஆய்வு முடிவுகள் 1927இல் வெளியாயின. அதன்படி 179 மொழிகளும் 544 கிளைமொழிகளும் இந்தியாவில் வழங்கப்பெறுகின்றமை சுட்டியுரைக்கப்பட்டது.

அந்தமான் தீவுகளில் வழங்கும் மொழிகள் தனிக் குடும்பம் எனத் தக்கன. நகலி என்னும் மொழியின் மூல மொழிக்குடும்பம் இருந்து அழிந்திருக்கவேண்டும் என்றும் அறிஞர் கருதுவர். எனினும்

1. இந்தோ ஐரோப்பிய மொழிக்குடும்பம்
2. திராவிட மொழிக்குடும்பம்
3. முண்டா - ஆஸ்ட்ரிக் மொழிக்குடும்பம்
4. திபெத்திய சீன மொழிக்குடும்பம்

என்னும் நான்கு மொழிக்குடும்பங்கள் பற்றிய கொள்கையே பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

விடுதலை பெற்ற பிறகு 1961இல் நிகழ்ந்த கணக்கெடுப்பின் படி

| | | |
|---|---|---|
| 1. இந்தோ ஐரோப்பிய மொழிகள் | 574 மொழிகள் | 73.3% மக்கள் |
| 2. திராவிட மொழிக்குடும்பம் | 153 | 24.47% |
| 3. முண்டா - ஆஸ்ட்ரிக் மொழிக்குடும்பம் | 65 | 1.5மூ |

4. திபெத்திய சீன மொழிக்குடும்பம் 226. 0.73மூ என்ற கணக்கில் இந்திய மொழிகள் பற்றிய தரவுகள் கண்டுணரப்பட்டுள்ளன. இவை தவிரப் பிரித்தறிய இயலாத 530 மொழிகளும் உள்ளன என்றும் இக்கணக்கெடுப்பு உணர்த்திற்று. மேற்சுட்டிய மொழிகளில் ஒரு மொழியின் வட்டாரச் சிதைவுகளையும் தனி மொழிகளாகக் கருதிக் கொண்டனர் என்பர். இந்த ஆய்வின்படி திராவிட மொழிக்குடும்பத்தினவாக 27 மொழிகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

## திராவிட மொழிக்குடும்பம்

பொதுவாகத் தென்னிந்தியப் பகுதிகளில் வழங்கும் மொழிகளைத் திராவிட மொழிகள் எனக்குறித்தலும் பண்டைய இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் திராவிட மொழிகள் பேசப்பட்டு வந்துள்ளன என்பதை மொழியியல் அறிஞர்கள் ஆய்ந்துரைத்துள்ளனர்.

இன்றைய இந்தியாவின் மேற்கே பாகிஸ்தானின் பலுசிஸ்தான் பகுதியில் பிராகூயி பேசப்பட்டு வருகின்றது. வட இந்தியாவின் இராஜ்மகாலில் மால்டோவும் மத்திய பிரதேசத்தில் கோலாமி பார்ஜி ஆகியனவும் வழங்கப்பட்டு வருகின்றன.

நீலகிரி மலைப்பகுதியில் படகா, கோதா, தோடா ஆகிய மொழிகள் பேசப்பட்டு வருகின்றன. மாராட்டிய மாநிலத் தெற்கெல்லைப் பகுதியில் கோண்ட் மொழி வழங்கப்படுகின்றது. எனவே திராவிட மொழிக்குடும்பத்தின் மூலத் திராவிடமொழி இந்தியப் பகுதிகளில் பரவலாக வழங்கப்பட்டுப் பின்னர், திருந்திய திருந்தா மொழிகள் பலவாக உருமாறியிருக்கக் கூடும் என்பது மொழி ஆராய்சியாளர் கருத்தாக அமைகின்றது.

## திராவிட மொழிகள் பற்றிய ஆய்வு

தொடக்க நிலையில் திராவிட மொழிகள் பற்றிய ஆய்வு என்பது தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகியன பற்றியே இருந்தது. 1816இல் ஏ.டி.கேம்பெல் என்பார் எழுதிய தெலுங்கு இலக்கண நூலிற்கு முன்னுரை வரைந்த பிரான்சிஸ் ஒயிட் எல்லிஸ் என்பார் தமிழ், தெலுங்கு, கன்னடம் , மலையாளம் ஆகியன சமஸ்கிருதம் சாராத தனித்த மொழிக்குடும்பம் என்று அறிவித்தார்.

**குறிப்பு**

வடமொழி இலக்கணத்தை ஆராய்ந்த ராஸ்க் என்பார் வடமொழிக்குச் சாராத சொல்வழக்காறுகளை இனங்கண்டு அவை மலபார் மொழிகளுக்குரியவை என்றார். மலபார் என்பது 16 -18 ஆம் நூற்றாண்டுகளில் தமிழையே குறித்தது.

1844இல் லாசர் என்பவரும் வில்லியம் கேரி என்பவரும் தமிழ் முதலான மொழிகள் தனித்த மொழிக்குடும்பத்தின என்று அறிவித்தார். பேராசிரியர் ஸ்டீவன்சன் வடமொழிகள் திராவிட மொழிகளிலிருந்து வேறானவை என்று நிறுவினார்.

பேராசிரியர் ஸ்மித் மால்டோமொழி பற்றியும் பேரா.லீச் பிராகூயி மொழி பற்றியும் பேரா.வாய்சே கோண்ட் மொழி பற்றியும் எம்.பஹ்லர் படகா மொழி பற்றியும் ஆராய்ந்து இவை வடமொழி சாராத மொழிக் குடும்பத்தின என்று ஆராய்ச்சிகளால் நிறுவினர். இவ்வாறு வடமொழி மரபு சாராத மொழிகளை மாக்ஸ்முல்லர் நிஷத மொழிகள் என்றார். ஆனால் இவ்வாறு தனித்த ஆய்வுகளின் தொடர்ச்சியாக ஒன்றிணைத்து ஆராய்ந்து இம்மொழிகளைத் திராவிடம் என்று குறியிட்டு அழைத்தவர் இராபர்ட் கால்டுவெல் ஆவார்.

கி.பி. 1856இல் திராவிட மொழி ஒப்பியலாய்வின் தந்தை எனப் போற்றப்பெறும் டாக்டர் கால்டுவெல் திராவிடம் என்ற பெயரால் இம்மொழிகளை அழைத்தார். இந்திய மொழிகளில் திராவிட மொழிகள் ஒரு தனிக்குடும்பத்தைச் சார்ந்தவை என்றும் இந்தோ ஐரோப்பிய மொழிகளோடு தொடர்புடையன அல்ல என்றும் அவர் நிறுவினார். மேலும் தென்னகத்தில் செம்மையாக வழங்கும் மொழிகளான தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளோடு வேறு சில பண்படாத மொழிகளும் திராவிட இனத்துடன் நெருங்கிய தொடர்புடையன என்பதை விளக்கினார்.

வெளிநாட்டு மொழிகளாகிய சித்திய மொழிகளோடு தொடர்புடையனவாகத் திராவிட மொழிகள் விளங்குகின்றன என்பதை நிலை நாட்டி, தம் ஆய்வினை 1856இல் நூலாக வெளியிட்டார். இவரைப் போன்று மாக்ஸ்முல்லர், ஸ்கிரேடெர் ஆகியோரும் திராவிட மொழிகள் சித்திய மொழிகளோடு உறவுடையன என்று நிறுவ முயன்றனர்.

டாக்டர் கால்டுவெல் தமிழ், தெலுங்கு , மலையாளம், கன்னடம், துளு ஆகிய ஐந்து மொழிகளைத் திருந்திய மொழிகளாகவும் தோடா, கோடா, கோண்டு, கூய் என்ற நான்கையும் திருந்தாத மொழிகளாகவும் கருதினார். பிராகூயி, மால்டோ போன்ற மொழிகளைச் சுட்டிச் சென்றாரே தவிர அவற்றைப் பற்றிய சிறப்பான ஆராய்ச்சியை மேற்கொள்ளவில்லை.

1875இல் வெளியிட்ட பதிப்பில் முன்பு திருந்திய மொழிகளாகக் குறிப்பிட்ட ஐந்து மொழிகளோடு குடகு மொழியினையும் திருந்தாத மொழிகளோடு ராஜ்மகால், ஒரோவோன் ஆகிய மொழிகளையும் இணைத்தார். டாக்டர் கால்டுவெல் ஒப்பிலக்கணம் எழுதிய காலத்தில் இந்தோ ஐரோப்பிய மொழிக்குடும்பம் தவிர்த்த ஏனைய மொழிக்குடும்பங்களில் ஒப்பியல் ஆய்வு மிகுதியான அளவு வளரவில்லை என்பது ஜீல்ஸ்ப்ளாக்கின் கருத்தாகும்.

டாக்டர் கால்டுவெல் தமது நூலை வெளியிடுவதற்கு நான்கு ஆண்டுகளுக்கு முன்னர்தான் ஸ்லாவ் கெல்டிக் மொழிகளின் இலக்கணங்கள் வெளியாயின. லைசர் என்பவர் எழுதிய லித்துவேனிய மொழியின் இலக்கணம் வெளியாகி இருந்தது. மேலும் ஒலியியல் ஆய்வு கால்டுவெல் காலத்தில் அறிவியல் ரீதியாக மிகுந்த வளர்ச்சி பெற்றிருக்கவில்லை.

திருந்திய மொழிகள் என்று அவர் குறிப்பிட்ட சில மொழிகளைத் தவிர ஏனைய மொழிகளை ஆராய்வதற்கு உரிய சான்றுகளும் வாய்ப்புகளும் அவருடைய காலத்தில் மிகவும் அரிதாக அமைந்திருந்தன. இவ்வாறு ஒப்பியலாய்வும் ஒலியியலாய்வும் முழுமையாக வளர்ச்சி அடையாத காலத்தில் குறைந்த வசதிகளோடு சிறந்த ஆய்வினை மேற்கொண்டு தன் ஆய்வுக்காக டாக்டர் பட்டமும் பெற்றார்.

இவருடைய ஆய்வு பெரும்பாலும் தென் திராவிட மொழிகளைப் பற்றியதாக இருப்பதால் இதனைத் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்று பொது நிலையில் கூறுவதைக் காட்டிலும் தென் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்று அழைப்பதே பொருந்தும் என்பது டாக்டர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் கருத்தாகும்.

குறிப்பு

## கால்டுவெல்லுக்குப் பின்

கி.பி1866 ஆம் ஆண்டு வியன்னாவின் மொழியாராய்ச்சி மாநாடு டாக்டர் கஸ்ட் என்பாரின் தலைமையில் மொழி ஆய்வுக் குழு ஒன்றனை இந்தியாவிற்கு அனுப்பி இந்திய மொழிகளின் இயல்பை ஆராய வேண்டுமென்று முடிவு செய்தது. இப்பணி பல்லாண்டிற்குப் பின்னர் 1894இல் தொடங்கியது. இதன் தலைமைப் பொறுப்பைக் கிரியர்சன் ஏற்றார். 1891இல் நடைபெற்ற கணக்கெடுப்பு இம்மொழி ஆய்வுக் குழுவிற்குப் பெரிதும் துணைசெய்தது.

இந்திய மொழி பற்றிய இக்கள ஆய்வில் உதவி புரிந்த டாக்டர் ஸ்டெங்கினோ அவர்கள் தெரிவித்த முண்டா மொழிகள் திராவிட மொழிகள் பற்றிய கருத்துக்கள் 1906இல் வெளியிடப்பட்டபோது திராவிட மொழிகளின் ஒப்பாய்வு புத்துயிர் பெறத் தொடங்கியது. இக்கள ஆய்வின் முதல் பகுதியில் தென்னிந்திய மொழிகள் விலக்கப்பட்டிருந்தன. எனினும் பின் நான்காம்பகுதியில் திராவிடம் முண்டா மொழிகள் இடம் பெற்றன.

கால்டுவெல் குறிப்பிட்ட பன்னிரண்டு மொழிகளோடு கொலாமி, நாயக்கி என்னும் இரு மொழிகளையும் இணைத்து கிரியர்சன் திராவிட மொழிகள் பதினான்கு எனக்குறிப்பிட்டார். இந்நிலையில் திராவிட மொழிக்குடும்பத்தின் கிளைமொழிகள் பற்றிய பல்வேறு வகையான ஆய்வுக் கட்டுரைகள் மொழி நூலறிஞர் பலரால் வெளியிடப்பட்டன. 1913 ஆம் ஆண்டில் குவி (கூய்) மொழியினைப் பற்றிய ஆய்வினை பிட் ஜெரால்ட் என்பர் மேற்கொண்டு அம்மொழி திராவிட மொழிக்குடும்பத்தின் ஒரு கிளைமொழியே என்று நிறுவினார். 1964இல் ஜீம்ஸ் பிளாக் என்பவர் திராவிட மொழிகளின் இலக்கண அமைப்பு என்னும் நூலை பிரெஞ்சு மொழியில் எழுதி வெளியிட்டார். திராவிட மொழிகள் பற்றிய இவருடைய கொள்கைகள் பலவற்றை பர்ரோ போன்றவர்கள் பின்னர் மறுத்துரைத்து உள்ளனர்.

ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் சமஸ்கிருதப் பேராசிரியராகப் பணிபுரிந்த தாமஸ் பர்ரோ என்பவர் திருந்தாத மொழிகளுக்கு முதலிடம் தந்து அவற்றின் தன்மைகளை ஆய்ந்துள்ளார். இக்காலக் கட்டத்தில் திராவிட மொழிகளைத் தென் திராவிட மொழிகள், நடுத்திராவிட

மொழிகள், வட திராவிட மொழிகள் எனப் பிரித்து அவற்றின் சிறப்பியல்புகளைத் தனியே நுணுகி ஆராயும் போக்கு வளர்ந்தது.

1950இல் பர்ஜி மொழியையும் பெஸ்கோ மொழியினையும் திராவிட மொழிக்குடும்பத்தின் தனிக்கிளை மொழிகள் எனப் பர்ரோ கண்டறிந்தார். இவருடன் இணைந்து ஆராய்ச்சியினை நிகழ்த்திய பட்டாச்சார்யா கோண்ட், கடபா ஆகிய மொழிகளை ஆராய்ந்து அவற்றைத் தனி மொழிகள் எனக் கண்டறிந்தார். தோடா மொழி பற்றிய தனி ஆய்வைச் சிறப்பாக மேற்கோண்ட கலிபோர்னியப் பல்கலைக்கழகப் பேராசிரியர் டாக்டர் எமனோ தன் ஆய்வினைத் தனி நூலாக வெளியிட்டார். மேலும் திராவிட மொழிகளின் ஒலியியல் ஒப்பியல் ஆய்வுகளையும் தனி நூலாக வெளியிட்டுள்ளார்.

பர்ரோவின் ஒப்பாய்வு பற்றிய பல்வேறு கட்டுரைகளும் இத்துறை ஆய்வு செழிப்படையக் காரணமாயின. இவ்விருவரும் இணைந்து திராவிட மொழிகளின் வேர்ச்சொல்லகராதி ஒன்றை உருவாக்கி ஒப்பியலாய்வு வளர வழிவகுத்தனர். இத்துறையில் கேரள மஹாராசா கல்லூரியின் ஆங்கிலப் பேராசிரியரான எல்.வி.ராமசாமி ஐயர் குறைந்த வசதிகளிலும் நிறைவான ஆய்வுகளைச் செய்துள்ளார். உசுமானியப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியரான பி.எச்.கிருஷ்ணமூர்த்தியும் திராவிட மொழிகளின் வினைச்சொல் பற்றிய விரிவான ஆய்வை மேற்கொண்ட டாக்டர் பி.எஸ்.சுப்பிரமணியன் என்பவரும் இத்துறையில் சிறப்பாகக் குறிக்கத்தக்க முன்னோடி ஆய்வாளர்கள் ஆவார். டாக்டர் தெ.பொ.மீனாட்சிசுந்தரனார், டாக்டர் சு.அகத்தியலிங்கம் ஆகியோர் ஒப்பிலக்கண ஆய்வில் சிறந்த பங்களிப்பைச் செய்துள்ளனர்.

ஒலியியில் ஆய்வு சிறப்பானதொரு வளர்ச்சியை அடைந்திருந்தாலும் சொல்லியல், தொடரியல் பற்றிய ஆய்வு முழுமை பெறவேண்டியுள்ளது, தொடக்க நிலையில் பன்னிரு மொழிகளையே திராவிட மொழிகளாகக் கருதினர். ஆனால் திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்வு வளர்ச்சி பெற்ற இக்காலத்தில் புதிதாகப் பல்வேறு மொழிகள் கண்டறியப்பட்டு அவற்றின் மூலமொழிக் குடும்பங்களை வரையறுத்துள்ளனர். கிளைமொழிகள் என்று கருதப்பட்ட சில மொழிகள் தனி மொழிகளாக நிறுவப்பட்டுள்ளன. இன்று

திராவிட மொழிகள் மொழியியல் ஒப்பியல் ஆய்வால் 30க்கும் மேற்பட்டனவாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

குறிப்பு

## திராவிட என்ற சொல்லாட்சி

வடமொழி அல்லாத அதற்கு மாறுபட்ட வளமையான மொழிக்குடும்ப மொழிகளான தென்னக மொழிகளையும் அவற்றின் இனமான பண்படாத மொழிகளையும் இனங்கண்டுகொண்ட ஆராய்ச்சியாளர்கள் அவ்வகை மொழிகளுக்கு ஒவ்வொரு பெயரிட்டு வந்தனர். தென்னிந்தியாவில் வழங்கும் தொடர்புடைய இன மொழிகள் இலக்கணக் கட்டமைப்பின் பொதுக்கூறுகளாலும் வழங்கும் இடத்தாலும் நெருக்கமான உறவுடையன. இம்மொழிகளுக்குரிய வேர்ச்சொற்கள் பொதுப்படையாக அமைந்தன. எனவே இவற்றை ஒருங்கு தொகுத்து மேனாட்டு ஆராய்ச்சியாளர்கள் மலபார் மொழிகள் என்றும் தமுள் என்றும் தமுலிக் என்றும் வழங்கினர்.

தென் இந்திய மொழிகள் பலவும் தனித்தனிப் பெயருடையன. அவற்றை ஓரினப்படுத்தி அவற்றிற்கு ஓர் அடையாளம் தருதலைக் கால்டுவெல் இன்றியமையாதது என்று கருதினார். தம்முள் காலத்தால் வேறுபட்ட இலக்கணக் கூறுகள் சிலவாக இருந்தாலும் சொற்களஞ்சியம் இலக்கணக் கட்டமைப்பில் பெரிதும் ஒத்திருக்கக் கூடிய இம்மொழிகளை, ஒரு மூலத்திலிருந்து கிளைத்த இவ்வகை மொழிகளை ஓரின மொழிகளாகக் குறியிடல் அவசியம் என்றும் கருதினார்.

மேனாட்டு ஆராய்ச்சியாளர்கள் தொடக்க நிலையில் தென்னிந்திய மொழிகளை தமிழ் என்று வழங்கினர். தென்னிந்திய மொழிகளின் தனிச்சிறப்பையும் இலக்கண இலக்கிய வளத்தையும் தொன்மையையும் கொண்ட தமிழை அதன் இன மொழிகளுடன் இணைத்துக் குறியிடல் ஒரு நிலையில் ஏற்கத்தக்கது. ஆனால் ஒப்பிலக்கணத் தெளிவு கருதித் தமிழை மட்டும் பேசும் பகுதி, மக்கள் ஆகியோரைக் குறிக்கப் பயன்படும் மொழிக்குறியீட்டைப் பொதுமைப்படுத்திக் கூறுதல் சிக்கலை ஏற்படுத்தும். ஆகவே தென்னிந்திய மொழிகள் உள்ளிட்ட அதன் இன மொழிகளைக் குறிக்க ஒரு கலைச்சொல் தேவைப்படுகின்றது. எனவேதான் கால்டுவெல் திராவிடம் என்ற சொல்லைக் கையாண்டார்.

குறிப்பு

## திராவிடம் என்பதன் பழைய வழக்காறு

வடமொழியில் தென்னக மொழிகளை வழங்க முன்னாளில் வழங்கப்பட்டதாக அறியப்படும் சொல் திராவிடம் என்பதாகும். திராவிட என்ற சொல்லுக்கு மூன்று வடிவங்கள் உள்ளன. திரமிட - திராவிட - திரவிட என்னும் குறிகள் தமிழ் உள்ளிட்ட ஓரின மொழிகள் வழங்கும் பிரதேசத்தையே குறித்தது. கி.பி. ஏழாம் நூற்றாண்டு குமாரிலப் பட்டர் திராவிட ஆந்திர என்று இதனை எடுத்துரைத்துள்ளதாகக் குறிக்கும் கால்டுவெல் இது தமிழையும் தெலுங்கையும் குறிக்கும் தொடர் என்கின்றார். மலையாளத்தைத் தமிழிலும் தெலுங்கைக் கன்னடத்திலும் அடக்கிக் கூறியிருப்பர் என்கிறார். ஆனால் தெ.பொ.மீ இதனை மறுத்து திராவிட ஆதி என்பதுதான் இத்தொடர் என நிறுவுகின்றார். மேலும் குமாரிலப் பட்டர் காலத்தில் மலையாளம் முழுமை பெற்றிலது. எனினும் திராவிடம் என்பது தென்னகப் பகுதியையே சுட்டுகின்றது. ஆதலால் கால்டுவெல்லின் குறியீடு பொருந்தும்

மனு ஸ்மிருதியில் பிராமணர்களுடன் தொடர்பிழந்த மக்கட் கூட்டத்தைக் குறிக்கும்போது பௌண்ட்ரகர், ஒட்ரர், திராவிடர் காம்போஜர் போன்ற இனத்தார் குறிக்கப்படுகின்றனர். மேற்குறித்த குடிகளில் தென்னிந்தியாவிற்குரியவர் திராவிடர்களே. எனவே தென்னிந்தியப் பகுதி மக்களைப் பொதுப்படக் குறிக்க திராவிடம் என எடுத்தாளல் பொருந்தும். இந்தியப் பெரு மூதாதையருள் ஒருவரான சத்திய விரதரைப் பாகவத புராணம் திராவிட மன்னன் என்கின்றது.

தமிழகத்தில் சமணச் செல்வாக்கு ஏற்பட்ட காலத்தில் வச்சிரநந்தி அமைத்த சங்கம் திராவிட சங்கம் எனப்பட்டது. சமயவங்சுத்த, லலித விஸ்தரம் என்னும் சமண, புத்த நூல்கள் அன்றைய எழுத்துவகையில் ஒன்றாக திராவிடி என்ற ஒன்றைக் குறிக்கின்றன. இது தென்னக எழுத்து வடிவமாக இருக்கக்கூடும். வைணவ உரைகாரர்கள் திவ்ய பிரபந்தத்தைத் திராவிட வேதம் என்பது வடமொழியாளரிடத்தில் தென் தமிழ் மொழி திராவிடம் எனக் குறியீடு பெற்றமையை உணர்த்தும்.

மனு ஸ்மிருதி காலத்திற்குப்பின் மொழியறிஞர்கள் திராவிடமென்ற சொல்லைத் தென்னாட்டு மொழியினத்தைக் குறிக்க எடுத்தாண்டுள்ளனர். இந்திய பாகத மொழிகளைத் தொகைப்படுத்தியவர்கள் அவற்றை மஹாராஷ்ட்ரி, சௌரசேனி, மாகதி என்று பிரித்தனர். இவற்றிற்கு அடுத்த

பாகதமொழித் தொகுதியாக அமைந்தவற்றுள் திராவிடி என்னும் சொல் காணப்பெறுகின்றது. இது ஒரு குறிப்பிட்ட மொழியினத்தைக் குறிக்கும் சொல் என்பது தெளிவு.

ஜே.மூர் என்னும் மேனாட்டு ஆசிரியர் வடமொழி நூலின்குறிப்பாக, திராவிடம் விபாஷை எனக் கூறப்பெற்றமையை எடுத்துரைத்துள்ளார். மற்றொரு வடமொழி ஆசிரியர் திராவிடருடைய மொழி திராவிடி என்கின்றார். வடநாட்டாரால் திராவிடி எனப்பட்ட குறியீட்டுப்பெயர் தென்னிந்தியப்பகுதிகளில் பேசிய மொழியினத்தையே என்பதும் அவற்றை ஓரின மொழிகளாகவே கருதினர் என்பதும் புலனாகும்.

எஸ்.கே சட்டர்ஜி இடைக்காலப் பிராமணர்கள் பஞ்ச திராவிடா என்ற சொல்லைப் பரந்துபட்டநிலையில் கையாண்டுள்ளனர் என்கின்றார். தாகூர் தான்பாடிய தேசியப்பண்ணிலும் திராவிட என்ற சொல்லைக் கையாண்டுள்ளார்.

வடநாட்டாரின் பைசாசமொழிக் கருத்தியலில் திராவிட மொழியையும் அடக்கியமை கொண்டு வடமொழியாளரால் வழங்கப்பெறாத மொழியினங்களை அவர்கள் மொழிகளினின்று வேறுபடச் சுட்டிய பெயராகவே கருதலாம். எனவே வடமொழி சாராத தனித்த இனத்தின் மொழியாகக் கருதலாம். 1854இல் பாபு இராசேந்திரலால் மித்ரா என்னும் மொழி ஆய்வாளர் சௌரசேனி மொழியைப் போலவே திராவிடி மூல பாகதங்களில் ஒன்று - பல மொழிகளுக்குத் தாய் எனப்படும் தன்மையது என்றும் கருத்துரைத்துள்ளார்.

இதுகாறும் கூறியவற்றால் தமிழ் என்பதனை ஒரு மொழிக்கே உரியதாகக் கொண்டு அதனொடு ஒத்த இனமொழிகளைத் திராவிடம் எனக் கால்டுவெல் குறித்தமை வரலாற்று நிலையில் பொருந்திவரும் கருத்தாகும் என உணரலாம்.

## திராவிட மொழிகளும் ஏனை உலகமொழிக்குடும்பங்களும்

திராவிட மொழிக்குடும்பம் இந்தியாவில் வழங்கிவரும் மொழிக்குடும்பங்களில் பழமையானதும் மிகப்பரவலாக வழங்கிவந்ததும் ஆகும். திராவிட மொழிக்கூறுகள் பாரத நாடெங்கும் பரவியிருப்பதைக் கண்ணுறும் மொழியாய்வாளர்கள் ஜார்ஜ் ஆலிவர் போன்ற மானிடவியல்

பேராசிரியர்கள் சிந்து சமவெளி (மொகஞ்சதரோ - அரப்பா) நாகரிக நிலப்பகுதிகள் தொட்டு வடபகுதியில் இம்மொழிகளைப் பேசுவோர் வாழ்ந்திருக்க வேண்டும் என்றும் காலப்போக்கில் ஆரியர்கள் வருகையால் இவர்கள் தெற்குப் பகுதிக்குத் துரத்தப்பட்டிருக்கவேண்டும் என்கின்றனர். சிந்துசமவெளிப்பகுதிகளை ஆய்ந்த ஹீராஸ் பாதிரியார், அவ்விடங்களில் திராவிட மொழிகளே வழங்கியிருக்கவேண்டும் என்கின்றார். திராவிட மொழி பிராகூயி பாகிஸ்தான் பகுதிகளில் வழங்கிவருவதும் ஏனைத் திராவிட மொழிகள் வடநாட்டின் பல்வேறு பகுதிகளில் வழங்கிவருவதும் கொண்டு எஸ்.கே.சட்டர்ஜி திராவிடர்களின் பரவலாக்கத்தை உறுதிப்படுத்துகின்றார்.

இவ்வாறு பரவியிருந்த நிலையில் ஆரியர்களின் வருகையும் கலப்பும் இருவேறு மொழிக்குடும்பங்களிலும் கொள்வினை, கொடுப்பினை காரணமாக ஒருமைப்பாடான சில அமைப்புகள் தோன்றச் செய்தன. திராவிடச் சொற்கள் வடமொழிகளிலும் வடமொழிச் சொற்கள் திராவிடச் சொற்களிலும் கலந்திருப்பதுகொண்டு இதனை உறுதிப்படுத்தும். தமிழ், கன்னட மொழிகளின் தொடரியல் கூறுகளும் வங்காளி, இந்தி ஆகியவற்றின் தொடரியல் கூறுகளும் ஒத்திருப்பதும் இவற்றினிடையே ஒலியன் கூறுகள் ஒத்திருப்பதும் எஸ்.கே.சட்டர்ஜியின் ஆய்வு முடிவுகளில் வெளியாயின.

எகர, ஒகர ஒலியன்கள் இந்தோஆரிய மொழிகளில் இல்லை. இத்தன்மையைப் பிராகூயி மொழியிலும் காணமுடிகின்றது. சந்தியக்கரம், மூக்கின உயிர் ஒலிகள் பிராகூயி, குருக் மொழிகளில் வழங்கிவருதல் போலவே இந்தோ ஆரியமொழிகளிலும் வழங்கி வருகின்றன.

உராலிய மொழிக்குடும்பத்துடன் திராவிட மொழிகள் நெருங்கிய தொடர்புடையன என்பதை டாக்டர் கால்டுவெல் உள்ளிட்ட ஒப்பியல் மொழி அறிஞர்கள் விதந்துரைத்துள்ளனர். இந்த இரு வேறுபட்ட மொழிக்குடும்பங்களுக்கு இடையில் அமைந்துள்ள பொதுவான சொற்களை ஆய்ந்துரைக்கும் டாக்டர் கால்டுவெல் இம்மொழிகளை மங்கோலிய மொழிகளுடன் உறவுடையன என்று நிறுவினார். எனினும் இக்கருத்து இன்னும் ஆய்வுக்குரியதாகவே இருக்கின்றது.

மங்கோலிய, திராவிட மொழிகள் குறித்து ஆய்வு நடத்திய எ.ஃப்.ஓ.ஸ்கிரேடர் என்பார் இவ்விரு மொழிக்குடும்பங்களுக்கு இடையே உள்ள உறவு வரலாற்றுக்கும் முற்பட்ட காலத்தில் இம்மொழிகளைப்

பேசும்மக்கள் இணைந்து வாழ்ந்தமைக்குச் சான்றாக விளங்குகின்றது என்கின்றார். ஆனால் பேராசிரியர் பர்ரோ இட நெருக்கத்தால் ஏற்பட்ட தொடர்பன்று என்றும் குடும்ப உறவு சார்ந்தது என்கின்றார். இவ்விரு மொழிகளுக்குடையே காணப்படும் இணைச்சொற்களின் மிகுதியே பர்ரோவின் கருத்துக்குச் சான்றாகும். கால இடைநிலைகளில் இறப்பல்லாக் காலத்தில் நிகழ், எதிர் என வேறுபடுத்தும் இடைநிலைகள் தோடா, கோடா மொழிகளிலும் இல்லாமை போன்றே உராலிய மொழிகளிலும் இல்லை.

பர்மியன் தவிர்ந்த உராலிய மொழிகளில் இறந்த காலம், இறப்பல்லாக்காலம் ஆகியன மட்டுமே காணப்படுகின்றன. தென் திராவிட மொழிகளில் காணும் எதிர்காலஇடைநிலை வகரத்திற்கு ஒப்பான இடைநிலையை உக்ரிய மொழிகளிலும்காண முடிகின்றது.

மூல உராலிய மொழிகளில் திராவிட மொழிகளில் காணும் வேற்றுமை உருபுகள் போலவே, 2, 4, 6 ஆம் வேற்றுமைக்கான உருபுகளைக் காண முடிகின்றது. டாக்டர் ஜேம்ஸ் ஹார்னல் போன்றோர் மத்திய தரைக் கடற்பகுதி மக்களோடு திராவிட மக்கள் பல நிலைகளிலும் நெருக்கமான தொடர்புடையவர்களாக விளங்கினர் என்கின்றனர். பண்டைய திராவிட மக்களை கிரேக்கர் தமிரிகா என்று அழைத்தனர். ஆரிய மொழிகளில் உள்ள நாவளை ஒலிகள் திராவிட மொழிகளிடத்து வழங்கிய மொழிகளின் தாக்கங்கள் என பேரா.எஸ்.கே.சட்டர்ஜி கருதுகின்றார்.

திராவிட மொழிகள் கிழக்காசிய ஜப்பானிய, கொரிய மொழிகளோடும் கொண்ட தொடர்பை அறிஞர்கள் ஆய்ந்துரைத்துள்ளனர். பேரா.எச்.பி ஹூபர் தன்னுடைய கொரிய திராவிட ஒப்பாய்வு நூலிலும் சுசுமோ ஓனோ ஜப்பானிய தமிழ் மொழிகளுக்கு இடையிலான தொடர்பை ஆய்ந்து சப்பானியத்தின் மூலமொழி தமிழே என்று நிறுவுகின்றார். அவரே ஜப்பானியர் தமிழரின் உலகப் பார்வையும் சடங்குகளும் என்பதையும் ஒப்பிட்டுரைத்துள்ளார்.

குறிப்பு

## திராவிட மொழிகளின் முப்பிரிவுகள்

திராவிடமொழிகள் தமக்குள் கொண்டுள்ள உறவுநிலைகளை அடித்தளமாகக் கொண்டு அவற்றைப் பகுத்துக் காண்பதில் திராவிட மொழியாய்வின் தொடக்க நிலையிலிருந்தே கருத்தைச் செலுத்திவந்தனர். டாக்டர் கால்டுவெல் இவற்றின் இலக்கியவளத்தின் பின்னணியில் திருந்திய, திருந்தாமொழிகள் என இருவகையாகப் பகுத்துக் காண்கின்றார். இது பண்பாட்டாய்விற்கு உதவுமே தவிர மொழி ஒப்பியலாய்விற்குத் துணை செய்யவல்லது அன்று.

தமிழ் மலையாளத்துடனும் கன்னடம் தெலுங்குடனும் கொண்ட உறவை டாக்டர் கால்டுவெல் வலியுறுத்துகின்றார். ஸ்டெங்கனோ தமிழ்த்தொகுதி, தெலுங்குத் தொகுதி என்ற பாகுபாட்டைக் கண்டார். இதுவே தென் திராவிடம், நடுத் திராவிடம் என்னும் பிரிவுகள் தோன்றக் காரணமெனலாம். மொழியியலார் இம்மொழிகளை அவை வழங்கும் இடம், மாறுதல்களின் பொதுமை, பொதுக்கூறுகள் ஆகியவற்றைக் காரணிகளாகக்கொண்டு பிரிப்பர். தற்கால மொழி அறிஞர்கள் திராவிட மொழிகளை,

1. தென் திராவிட மொழிகள்
2. நடுத் திராவிடமொழிகள்
3. வடத்திராவிட மொழிகள்

என வகைப்படுத்தி ஆய்வுக்கு உட்படுத்துகின்றனர்.

### இரு மதிப்பெண் வினாக்கள்

1. ஆசியக் கல்விச் சங்கத்தைத் தோற்றுவித்தவர் யார்?
   வில்லியம் ஜோன்ஸ்

2. திராவிட மொழி ஒப்பிலக்கணத்தின் ஆசிரியர் யார்?
   திராவிடமொழி ஒப்பியலாய்வின் தந்தை எனப்படுபவர் யார்? எந்நாட்டினர்?
   டாக்டர் இராபர்ட் கால்டுவெல் இங்கிலாந்து

3. இந்தியாவில் வழங்கிவரும் மொழிக்குடும்பங்களைச் சுட்டுக.

குறிப்பு

1. இந்தோ ஐரோப்பிய மொழிக்குடும்பம்
2. திராவிட மொழிக்குடும்பம்
3. முண்டா - ஆஸ்ட்ரிக் மொழிக்குடும்பம்
4. திபெத்திய சீன மொழிக்குடும்பம்

4. மலபார் என்ற குறியீட்டால் சுட்டப்பெற்ற மொழி எது?
தமிழ்

5. வடமொழி மரபு சாராத மொழிகளை மாக்ஸ்முல்லர் எவ்வாறு குறித்தார்?
நிஷாதமொழிகள்

6. திராவிட என்ற சொல்லை முதலில் கையாண்டவர் யார்?
குமாரிலப் பட்டர்

## குறுவினாக்கள்

7. இந்திய மொழிக்குடும்பங்கள் குறித்து எழுதுக.
(பாடப்பகுதியில் உலகில் பல்வேறு இனக்குழுக்களின்... என்பது முதல் அடையாளப்படுத்தப் பட்டுள்ளன என்பது வரை)

8. டாக்டர் கால்டுவெல்லுக்கு முன்னைய திராவிட மொழியாய்வு குறித்து எழுதுக.
(தொடக்க நிலையில் என்பது முதல் கால்டுவெல் ஆவார் என்பதுவரை)

9. திராவிட மொழியாய்வில் டாக்டர் கால்டுவெலின் பங்களிப்பை விளக்குக.
( கி.பி. 1856இல் திராவிட மொழி ஒப்பியலாய்வின் தந்தை என்பது முதல் டாக்டர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் கருத்தாகும் என்பது வரை)

10. டாக்டர் கால்டுவெல்லுக்குப் பிந்தைய திராவிட மொழியாய்வு குறித்து எழுதுக.
(கால்டுவெல்லுக்குப் பின் என்னும் தலைப்பின் கீழ் கூறப்பட்ட செய்திகள்)

11. திராவிட மொழிகளும் ஏனை உலகமொழிக்குடும்பங்களும் என்பது குறித்து எழுதுக.
(திராவிட மொழிகளும் ஏனை உலகமொழிக்குடும்பங்களும் என்னும் தலைப்பின் கீழ் கூறப்பட்ட செய்திகள்)

### பெருவினாக்கள்

12. திராவிட மொழியாய்வின் வளர் நிலை குறித்துக் கட்டுரைக்க.
(திராவிட மொழிகள் பற்றிய ஆய்வு என்னும் தலைப்பின் கீழ் கூறப்பட்ட செய்திகள்)

13. திராவிடம் என்னும்சொல் வழக்காற்றை விளக்கியுரைக்க.
(திராவிடம் என்பதன் பழைய வழக்காறு என்னும் தலைப்பின் கீழ் கூறப்பட்ட செய்திகள்)

## கூறு 2

## தென் திராவிட - நடுத்திராவிடம் குடும்பம்

திராவிட மொழிகள் ஒரே குடும்பத்தைச் சார்ந்தவை என்பதைக் கண்டுணரும் முன்பே திராவிட மொழிகள் பற்றிய தனித் தனி ஆய்வுகள் மேலைநாட்டாரால் நிகழ்த்தப்பட்டுள்ளன. திருந்திய, திருந்தாத மொழிகளைப் பற்றிய இவ்வாய்வுகளில் கூர்க், துளு பற்றிய ஆய்வு முன்பே நிகழ்த்தப்பட்டுள்ளது. 1798இல் ராபர்ட்ஸ் என்பாரின் ஆய்வு இதனை உணர்த்தும் என்று தெ.பொ.மீ குறிக்கின்றார். 1837இல் தோதர் மொழி பற்றி பெர்டின்ராண்ட் ஸ்மித், 1838இல் பிராகூயி மொழி பற்றி லீச், 1849இல் கோண்டி மொழி பற்றி ஜெ.ஜி.டிரிப்பர்க், ஹாரிசன் ஆகியோர்

1853இல் கூய் மொழி பற்றியும் லெட்சுமாஜி எனப் பலர் ஆய்வைச் செய்துள்ளனர். 1866இல் கோலாமி பற்றி எஸ்.ஹிஸ்லாப் என்பவரும் 1884 இல் மால்டோ பற்றி இ.டிரெளஸ் என்பவரும் ஆய்ந்துரைத்துள்ளனர். பின்னாளில் மொழி ஆய்வு வளர்ந்த நிலையில் இந்திய மொழிக் கணக்கீட்டில் பார்ஜி, கோண்டா, கதபா மொழி பற்றி அறிந்துகொள்ள முடிந்தது. தற்காலத்தில் குறவா, எருக்கலா, இருளா ஆகியனவும் திராவிடக் கிளைமொழிகளாக அறியப்பட்டன என்று தெ.பொ.மீ கூறுகின்றார். அவருடைய தமிழ்மொழி வரலாறு என்னும் நூலில் 1961 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி இந்தியாவில் வழங்கும் திராவிட மொழிகள் பற்றிய பட்டியலை இணைத்துள்ளார். தற்போதைய நிலையில் 2011 கணக்கெடுப்பின்படி அவற்றைப் பேசுவோரின் எண்ணிக்கை மாறுபடுகின்றது.

**குறிப்பு**

| | | |
|---|---|---|
| 1. | தெலுங்கு | 8 கோடி |
| 2. | தமிழ் | 6.8 கோடி |
| 3. | கன்னடம் | 4.35 கோடி |
| 4. | மலையாளம் | 3.47 கோடி |
| 5. | கோண்டி | 29.84 லட்சம் |
| 6. | குருக் | 19.88 லட்சம் |
| 7. | துளு | 18 46 லட்சம் |
| 8. | கூயி | 9.41 லட்சம் |
| 9. | குவி (கோந்த்) | 1.55 லட்சம் |
| 10. | கோயா | 4 லட்சம் |
| 11. | மால்டோ | 2.34 லட்சம் |
| 12. | குடகு | 96 ஆயிரம் |
| 13. | படகா | 1.33 லட்சம் |
| 14. | கோலாமி | 1.28 லட்சம் |
| 15. | இருளா | 11,870 |
| 16. | குறவா | 10,421 |

குறிப்பு

| | |
|---|---|
| 17. பார்ஜி | 52 ஆயிரம் |
| 18. கதபா | 40.9 ஆயிரம் |
| 19. கோடா | 47ஆயிரம் |

என்பனவாகும். 2011 கணக்கெடுப்பில் 17 மொழிகள் மட்டுமே திராவிட மொழிகளாகச் சுட்டப்பெற்றுள்ளன. 1961 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி கொண்டா (கூபி) - 13,000 , நாய்க்கி -1500, பெங்கோ - 1300, ஒல்லாரி - 800, தோடர் - 800, பிராகூய் - 3 கோடி பேர் பேசி வந்ததாகவும் அறிகின்றோம். இத்தகைய பரவலான மொழிகளை அவை வழங்கும் இடங்களின் அடிப்படையில் மூன்று பிரிவாகக் கண்டோம். அவற்றை நிரலாகக் காணலாம்.


## <u>தென் திராவிட மொழிகள்</u>

தென் திராவிட மொழிகளில் தமிழ், கன்னடம், மலையாளம், துளு ஆகிய திருந்திய மொழிகளும் படகா, இருளா, கொடகு, தோடா, கோடா ஆகிய திருந்தாத மொழிகளும் அடங்கியுள்ளன. இவற்றுள் தமிழும் மலையாளமும் மிகப்பிற்காலத்தில் பிரிந்தமையால் மிகவும்நெருங்கிய தொடர்புடையன. இவற்றிற்கு அடுத்த நிலையில் கோடா, தோடா ஆகிய மொழிகள் மிக நெருங்கிய தொடர்பு உடையனவாக உள்ளன என்று பேரா.எமனோ கருதினார். ஆனால் எல்.வி.இராமசாமி ஐயர் கொடகு மொழிதான் தென் திராவிட மொழிகளில் தமிழ் மலையாள மொழிகளுக்கு அடுத்த நிலையில் உறவுடையது என்கிறார். தென் திராவிட மொழிகளில் துளு மொழி ஏனைய திராவிட மொழிகளிருந்து வேறுபடுவதால் எமனா, கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் இம்மொழியினை நடு திராவிட மொழி இணைத்துவிட வலியுறுத்தினர். ஆனால் டாக்டர் பி.எஸ்.சுப்பிரமணியன் துளுவைத் தென் திராவிட மொழி என்று கொள்வது ஏற்புடையது என்றும் தென் திராவிட மூல மொழியிலிருந்து துளு முதலில் பிரிந்த காரணத்தால்தான் அது தமிழ், மலையாளம் போன்ற மொழிகளிலிருந்து மிகவும் வேறுபடுகின்றது என்று விளக்குகின்றார்.

தென் திராவிட மொழிகளுள் படகா கன்னடத்தின் கிளை மொழியாகக் கருதப்படுகின்றது. நீலகிரி மாவட்டத்தில் வாழும் பழங்குடியினர் இதனைப் பேசுகின்றனர். மலைப்பகுதியில் உள்ள பழங்குடி மக்களால் தோடா, கோடா மொழிகளும் பேசப்படுகின்றன. கர்நாடக

குறிப்பு

மாநிலப் பகுதியில் கன்னடம், துளு குடகு போன்றன வழக்கில் உள்ளன. ஆர். இ. இராபர்ட்டால் 1798இல் துளு தனி மொழியாக அறிவிக்கப்பட்டது. 1837இல் தோடா தனி மொழி என்று உணரப்பெற்றது. தென் திராவிட மொழிகள் தமிழ் - கன்னடக் கிளை என முதலிலும் பிறகு துளு என்றும் பிரிந்திருக்க வேண்டும். இவ்வாறு துளு முதலில் தனி மொழியாகப் பிரிந்த பின்னர் தமிழ் - கன்னடக் கிளை, தமிழ் - குடகு கிளை என்றும் கன்னடம் என்றும் பிரிந்திருக்கவேண்டும். கன்னடமொழி பிரிந்து சென்ற அடுத்த நிலையில் தமிழ் - கொடகுக் கிளையிலிருந்து தோடா - கோடா மொழிகள் இணைந்த கிளை பிரிந்திருக்கக் கூடும். இவை பிரிந்தபின்னர் தமிழ் - மலையாளம் கிளையிலிருந்து கொடகு பிரிந்து சென்றது. இறுதி நிலையில் மலையாளம் பிரிந்திருக்கக்கூடும் என்றும் தென் திராவிடக் கிளையிலிருந்து முறையே, துளு, கன்னடம், தோடா, கோடா, கொடகு மலையாளம் என்பன படிப்படியாகப் பிரிந்திருக்க இயலும் என்றும் டாக்டர் பி.எஸ்.சுப்பிரமணியன் விளக்குகின்றார். இதனைப் பின்வரும் படம் உணர்த்தும்



## தமிழ்

திராவிட மொழிகளில் முதலில் திருந்திய நிலைபெற்றது தமிழாகும். தொன்மைச்சிறப்பு, சொல்வளம், பழமையான இலக்கண மரபுகள், இலக்கிய ஆளுமை ஆகியவற்றால் மிளிர்வது தமிழ் என்று டாக்டர் கால்டுவெல் பாராட்டுகின்றார். நாகரிக மேன்மையில் கிரேக்க நாட்டு மக்களுடன் ஒப்பிட்டுப் பேசுகின்றார். அவர் இந்திய மக்களுள் மூட நம்பிக்கைப் பழக்க வழக்கங்கள் - சடங்குகள் குறைந்தவர் தமிழர்கள் என்கின்றார். பல்வேறு மக்களுடன் தொன்றுதொட்டுக் கலாச்சார வாணிகத் தொடர்புகள் கொண்டு வாழ்வின் முறையிலும் ஒழுங்கிலும் கொள்வினை கொடுப்பினையால் வளன் செய்து வாழ்பவர்கள் தமிழர்கள். தொல்காப்பியர் காலத்தில்,

வடவேங்கடம் தென் குமரி ஆயிடைத்
தமிழ் கூறு நல்லுலகம்

என எல்லை குறித்தாலும் இன்று தமிழ் வழங்கும் பகுதி இந்திய நாட்டில் சுருங்கிவிட்டது. வங்கக் கடலுக்கும் குட மலைக்கும் இடையே பழவேற்காடு முதல் குமரி முனைவரை இம்மொழிபேசப்பட்டு வருகின்றது. இருப்பினும் தென் திருவிதாங்கூர் ஈழத்தின் வடமேற்குப்பகுதி, கொழும்பு, மலேசிய, சிங்கப்பூர், பிஜித்தீவுகள் ஆகிய மொழிகளில் தமிழ்மொழி பேசப்பட்டு வருகின்றது.

தமிழென் கிளவி (தொல்)
தமிழ் கூறு நல்லுலகம் (தொல்-பாயிரம்)
தமிழ் தலை மயங்கிய (புறம்)
தமிழ் கெழு கூடல்
தமிழன்கண்டாய் (தேவாரம்)

போன்ற தொடர்கள் தமிழ் என்னும் வழக்காற்றின் தொன்மையை உணர்த்தும்.

குறிப்பு

இம்மொழியில் சொல்நிலையில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் காணக்கிடைக்கின்றன. நம்நாட்டாரும் மேலைநாட்டவரும் தமிழ் என்ற சொல்லில் இருக்கும் சிறப்பு ழகரத்தை உச்சரிக்க முடியாமல் தங்கள் நாச் சென்றவழி பல்வேறு வகையாகத் திரித்து வழங்குவர். தமிழ் என்ற சொல் தமிள் என்றே பலராலும் உச்சரிக்கப்பட்டு வந்தது. ஐரோப்பியர் இதனைத் தமுள் என்றும் தமுலிக் என்றும் வழங்கினர். போர்த்துகீசியர்கள் மலபார் என்று குறித்தனர் என்று கோல்.ஃ.ப்ருக் கூறுவார். 1766 இல் 14ஆம் லூயி மன்னன் தமிழர் ஒருவருக்கு தமிழர் தலைவர் என்னும் பொருள்படும் மலபார் தலைவர் என்ற பட்டத்தை வழங்கியுள்ளதாகக் காண்கின்றோம்.

தமிழ் என்ற சொல்லிற்கு இணையான வடமொழிச் சொல் திராவிட என்பதாகும். இச்சொல் திராவிடர் வாழும் பகுதி, மொழி இரண்டையு ஒருசேரக் குறித்தது. தமிழ், த்ராவிட இவ்விரு சொற்களும் முற்றிலும் வேறுபடுவன. பிறப்பியல் முறையால் ஒரு தன்மையன என்று கால்டுவெல் கருதுவார். திரமிடம் என்றும் இச்சொல் வழங்கப்பட்டது. திரமிடம் என்னும் வழக்காறு தமிழ் நிகண்டுகளிலும் இடம்பெற்றுள்ளது.

வராக மிகிரரின் பிருஹத் சம்ஹிதையில் திராவிடம் என்ற சொல்லிற்கு மாறாக திரமிடம் என்று காணப்படுகின்றது. திரமிடம் என்ற சொல் திரமிளம் எனவும் திரிந்து வழங்கப்படுகின்றது. 1573இல் இயற்றப்பட்ட தாரநாதரின் இந்தியாவில் புத்தமத வளர்ச்சி என்னும் நூலில் இச்சொல் இடம்பெற்றுள்ளது. டாக்டர் குண்டர்ட் என்பார் மலையாள மொழியின் தொன்மையான புராணங்களில் இத்திரமிளம் என்னும் சொல் மிகுதியாக காணக்கிடைக்கின்றது என்று குறிப்பிடுவார். பாலி மொழியில் அமைந்த மகாவம்சத்தில் திரமிளம் எனும் சொல் தமிளோ (திராவிட) எனக் காணப்படுகின்றது. திராவிடம் > திரவிடம் > திரமிடம்> திரமிளம்> தமிளோ> தமுள்> தமிழ் என்ற வரிசையில் மொழிப்பெயர் இவ்வாறு திரிந்திருக்கலாம் என்கின்றார் டாக்டர் குண்டர்ட்.

இதனைத் தற்கால ஒப்பியல் அறிஞர்கள் ஏற்பதில்லை. ஜான் சாமுவேல் தமிழர் தம் மொழியில் தம்மொழிக்குப் பிற மொழிச் சொல் ஒன்றைப் பெயராக அமைத்துக்கொண்டனர் என்பது பொருத்தமின்று என மறுக்கின்றார்.

தக்காண முகமதியரும், தெலுங்கர்களும் கன்னடரும் தமிழை அரவம் என்ற சொல்லால் குறித்தனர். இச்சொல் எவ்வகையிலும் பொருந்துவதாகத் தோன்றவில்லை. குண்டர்ட் அரவம் என்ற சொல்லினை அறவம் என்பதாகக் குறிப்பார். இது அறிவு என்ற சொல்லிலிருந்து பிறந்தது என்பார் ஒரு சாரார். நம் மொழி பரவி வந்த சூழலில் செந்தமிழ் கொடுந்தமிழ் என்ற பாகுபாடுகள் அமையக் கொடுந்தமிழ் வழங்கும் நிலப்பகுதிகளில் அருவா நாடு என்பதும் ஒன்று. அருவா , அரவம் எனத் திரிந்திருக்கும். தெலுங்கு மொழியாளர் அரவம் என்பதை வடசொல்லாகக் கருதுகின்றனர்.

அ + ரவ = அரவம் (ஒலியற்றலை)

எனவே தமிழில் ஹ போன்ற மூச்சொலிகள் இன்மையால் இப்பெயர் பெற்றது என்பர். ஆனால் இது ஏற்றுக்கொள்ளத்தக்கது அன்று. வடமொழியில் ரவ என்பதற்கு உரிய பொருள் பேரொலி என்பதாகும். தமிழில் அரவம் என்பதற்கு மெல்லொலி எனும்பொருள். இக்காரணத்தால் தமிழை அரவம் என்பது பொருந்தும்.

## மலையாளம்

தமிழோடு நெருங்கிய தொடர்பு கொண்ட மொழி என்பதால் இது திராவிட மொழி வரிசையில் தமிழை அடுத்து எண்ணப்படுகின்றது. மேற்கு மலைத் தொடர்ச்சி மலபார் என்னும் பகுதியைச் சார்ந்த மங்களூருக்குத் தெற்கு முதல் திருவனந்தபுரம் வரை அமைந்த ஊர்களை உள்ளடக்கிய பகுதி. பண்டைத் தமிழ் மன்னர்கள் சேரலர் ஆண்ட பகுதி. இப்பகுதியில் எழுந்த பதிற்றுப்பத்தும் சிலப்பதிகாரமும் செந்தமிழ் செழித்து விளங்கியமைக்குச் சான்று பகரும் இலக்கியங்கள். தொடக்க கால மலையாள நூல்களில் தமிழின் ஆதிக்கமே நிலவிற்று. பின் 15 ஆம் நூற்றாண்டுவரை சம்ஸ்கிருதமும் பின் ஆங்கிலமும் தாக்கமுற்று அமைந்த மொழி மலையாளம் ஆகும். தாய்மொழியில் எழுந்த லீலாதிலகம் போல குண்டர்ட் போன்ற ஐரோப்பிய பாதிரிமார்களால் இலக்கணம் எழுதப்பட்ட மொழியும் கூட.

குறிப்பு

மலையாளக் கடற்கரை கிரேக்கர், யூதர், டச்சுக்காரர், போர்த்துக்கீசியர், அரேபியர் ஆங்கிலேயர், பிரெஞ்சுக்காரர் எனப் பலரும் வந்து வாணிகத் தொடர்பு மேற்கொள்ளும் களமாக இருந்தது. அசோகன் கல்வெட்டில் கேரள புத்திரர் என்ற சொல்லாட்சி சேரமான் என்பதன் மரூஉ ஆகும். என்றாலும் சேர பகுதியை கேரள என்று குறிக்கும் தொன்மைச் சான்றும் ஆகும். பிளினி என்பவர் செலபத்ராஸ் என்றும் தாலமி கெரபத்ராஸ் என்றும் தொன்மையான இப்பகுதி மன்னர்களைக் குறித்தனர்.

தமிழிலிருந்து மிகப் பிற்காலத்தில் பிரிந்தது என்றாலும் தமிழில் உள்ளது போலப் பால் காட்டும் ஈறுகள் மலையாளத்தில் அமையப்பெறாமை வியப்புக்குரியது. ஐகார இறுதிச் சொற்கள் மலையாளத்தில் அகரம் எனத்திரியும்

**மலை > மல**

தமிழிலிருந்து மலையாளம் பிரிந்தது என்ற கொள்கையைக் கேரள பாணினீய ஆசிரியர் ஏ.ஆர்.இராசராசவர்மா என்பவர் மறுக்கின்றார். குண்டர்ட் என்பாரும் கொடுந்தமிழின் ஒரு கிளை மலையாளம் என்றும் மற்றொரு கிளை தமிழ் என்றும் உரைக்கின்றார். ஆத்தூர் கிருஷ்ண பிஷரூலி, கே.எம்.ஜார்ஜ் ஆகியோர் தமிழே மலையாளத்தின் மூலமொழி என்பதை ஏற்கின்றார். தமிழ் மொழி இலக்கியம் தோன்றிய ஒரு பகுதியில் படிபடியாகக் கலாச்சார பண்பாட்டு மாறுதல் ஏற்பட்டு வேற்று மொழியாகத் திரிந்து விட்டது. பழைய மலையாள மொழிக்கூறுகள் தமிழ் ஒலியன் உருபன் அமைப்பைச் சார்ந்து அமைந்திருக்கப் பின்னாளில் சம்ஸ்கிருத மொழித் தாக்கத்தால் வடமொழி அமைப்பை ஒட்டி ஒலியன்களும் சொற்களும் முகிழ்த்தன.

**கன்னடம்**

இன்றைய கர்நாடகப் பகுதிகளிலும் மகாராஷ்டிரத்தின் தெற்குப் பகுதிகளிலும் வழங்கும் கன்னடமொழி கானரீஸ் என்றும் வழங்கப்பெறும். கர்நாடகம் என்னும் பெயர் மருவி கன்னடம் என்னும் பெயரைப் பெற்றது என்பர். கன்னடம் பழங்கன்னடம் புதுக் கன்னடம் என்னும் இருவகையாக

கருதப்பெறும். கன்னட மொழியின் ஒலியன்கள் பற்றி எச்.எஸ்.பிலிகிரி ஆராய்ந்துள்ளார்.

தமிழுக்கு அடுத்து மிகுதியான பழமையான இலக்கிய வளத்தை உடைய மொழி கன்னடம். இதன் எழுத்து வடிவம் தெலுங்கை ஒத்திருந்தாலும் உருபன் அமைப்பில் தமிழுடன் நெருங்கிய தொடர்புடையது. மலையாளம் போலவே கன்னடமும் சம்ஸ்கிருத, பிராகிருத தாக்கத்தால் ஒலிப்புடை ஒலிப்பிலா ஒலிகளைப் பெற்று வளர்ந்துள்ளது. கிபி. 450ஐச் சேர்ந்த ஹல்மிதிக் கல்வெட்டு பழங்கன்னடம் ஆகும். தமிழ் ஒலியன்களான ழகரம், றகரம், னகரம் ஆகியன பழங்கன்னடத்தில் உண்டு. எட்டாம் நூற்றாண்டின் பெல்மன்னு செப்பேடு முழுமையான கன்னட மொழி வடிவிலான செப்பேடாக அமைந்தது. இம்மொழியில் தோன்றிய கவிராஜ மார்க்கம் குறிக்கத்தக்கது.

### படகா

தமிழ்நாட்டின் நீலகிரி பகுதியில் படகா மொழியைப் பேசும்மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இம்மொழியைக் கன்னடத்தின் வட்டார வழக்கு என்பர். எனினும் இன்றைய மொழியறிஞர்கள் தனிமொழியாகவே கொள்வர். தமிழ் இலக்கியம் கூறும் வடுகர்களே படகர் என்பாரும் உண்டு. இம்மொழியை ஆய்ந்த எமனோ தோடர், கோடர் ஆகியோருக்குப் பின்பே நீலகிரிப் பகுதிக்குப் படகர் குடியேறியிருக்கவேண்டும் என்ற கருத்தினர் ஆவார்.

### துளு

மைசூர் சந்திரகிரி, கல்யாணபுரி ஆறுகளுக்கு இடைப்பட்ட பகுதியைத் துளு வழங்கும் மொழியாகக் காண்பர். டாக்டர் கால்டுவெல் திருந்திய மொழிகள் பட்டியலில் துளு மொழியை அடக்கிக் காண்கிறார். எனினும் இதற்கு வரிவடிவம் இல்லை. இலக்கிய வளமுமில்லை. பேசில் மிஷனரி பாதிரியார்கள் துளு மொழியில் பல்வேறு நூல்களை எழுதியபோதும் அதனைக் கன்னட வரிவடிவத்தில்தான் வெளியிட்டனர். ஜே.பிரிகல், என்பவர் துளுவின் இலக்கணத்தைப் படைத்தார். ஏ.மான்னர்

என்பார் துளு அகராதி உருவாக்கினார். உபாத்தியாயர் துளு பேரகராதி ஒன்றை உருவாக்கினார்.

குறிப்பு

## கொடகு

காவிரி உற்பத்தியாகும் குடகு மலையைப் பெயராக உடைய கொடகு மொழி எழுத்து வடிவமும் இலக்கிய வளமும் பெறாமல் பேச்சுமொழியாக நின்ற மொழியாகும். டாக்ர மொக்லிங் இதனைத் தமிழ் மலையாளத்துடன் உறவுடையது என்கின்றார். மேஜர் ஆர்.ஏ.கோல் என்பார் இதன் இலக்கண அமைதியை விளக்கியுள்ளார். இம்மக்கள் பிற பகுதியினருடன் கலவாது தனித்து வாழ்வதால் இம்மொழியில் மூலத் திராவிடத் தொன்மைப் பண்புகளை இனங்காணமுடிகின்றது.

## கோடா

நீலகிரிப் பகுதியில் வாழும் பழங்குடியினர் பேசும் மொழி கோடா. இவ்வினத்தாரின் பெயரால் இம்மொழி கோடா எனப்படுகின்றது. கால்டுவெல் கன்னடத்தின் கொச்சை வழக்கு என்று கோடா மொழியைக் கருதுவார். பழைய முரட்டுத் தன்மை வாய்ந்த கன்னடத்தின் கிளைமொழி என்று குறிப்பினும் மிகப் பழங்காலத்து நாடுகடத்தபட்ட மக்களுடையது என்பாரும் உளர். இதனைத் தனிமொழி என்று எமனோ ஆய்ந்துரைக்கின்றார்.

## இருளா

நீலகிரிப் பழங்குடிக் கூட்டத்தைச் சேர்ந்தவர்களால் பேசப்படும் மொழிகளுள் இருளாவும் ஒன்று. ஆனைமலைப் பகுதிகளில் இவ்வினத்தார் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் வட்டக்காடு இருளர்கள் என்றும் நீலகிரிப் பகுதி மக்கள் மலைத்தேச இருளர்கள் என்றும் குறிக்கப்பெறுகின்றனர். கமில் சுவலபில், எ∴ப்.டிப்லாத் ஆகியோர் இக்குழுவின் மொழியை ஆய்ந்துரைத்துள்ளனர்.

## தோடா

பெர்னார்ட் ஸ்மித் என்பாரால் 1837இல் ஆய்வு செய்யப்பட்டு தனித்த மொழியாக அறிவிக்கப்பட்ட மொழி தோடா. தோடா தொத என்றும் துதம் என்றும் வழங்கும் பழங்குடிகளின் மொழி. போப் தொழுதி - கூட்டம் என்று பொருள்படும் தமிழுடன் தொடர்புடைய பெயர் என்று கருதுவர். இம்மொழிபேசுவோர் நீலகிரி மலைப்பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர். எண்ணிக்கையில் இவர்கள் அன்று அருகிவிட்டதாகத் தெரிகின்றது.

கொலனியல் மார்ஷல், இம்மொழி பேசும் மக்களைப் பற்றி விரிவான நூல் ஒன்றைப் படைத்துள்ளார். எமனோ இம்மொழியின் சொற்களை ஆய்வு செய்துள்ளார். இம்மொழியில் தனித்த ஒலியன் கூறு காணப்படுகின்றது. sh, ch, th ஆகிய ஒலிக்கூறுகள் திணிக்கப்பெற்று வழங்கப்பெறுகின்றன என்று ஜி.யூ.போப் கூறுவார். இம்மொழிச் சொற்களின் முதலைசையில் ஒலியழுத்தம் இயல்பாகவே அமைந்துள்ளது. இதனை எமனோ தனியான திராவிட மொழி என்றும் பிற திராவிட மொழியின் திரிபன்று என்றும் கருதுவார். தமிழுடன் தோடர் மொழி உறவுடையது என்பதனை ரகர றகர ஒலிக்கூறுகள் இடம்பெற்றிருப்பதைக் கொண்டு உணரலாம். இம்மொழியை ஃப்ரெடெரிக் மெட்ஸ் என்பார் ஆய்ந்துள்ளார்.

தென் திராவிட மொழியின் சிறப்பியல்புகள்

1. ஏனைத் திராவிட மொழிகளில் பெண்பால் ஒருமையும் அஃறிணை ஒருமையும் ஒன்றாகவே அமைந்துள்ளன. தென் திராவிட மொழிகளில் உயர்திணை ஆண்பாலைப் போலவே பெண்பால் ஒருமைக்குத் தனி விகுதிகள் அமைந்துள்ளன. தென் திராவிட மொழிகளில் உள்ள உயர்திணை பெண்பால் விகுதி இகரம் அஃறிணை ஒருமையைக் குறிப்பதாகவும் வழங்கிற்று

   கிழத்தி, செல்வி- உயர்திணை பெண்பால் ஒருமை

   மரவெட்டி, அலரி - அஃறிணை ஒன்றன்பால்

2. இம்மொழிகளில் ஒரு சொல் மெய்யொலியைக் கொண்டு முடியும் என்றால் அது ஒலித்துணையாக உகர ஒலியனைப் பெறும் . இத்தகைய ஒலியினை ஒலித்துணை உயிர் என்பர். தென் திராவிட மொழிகளில் இவ்வுகரமொழி இடை இதழ் குவி ஒலியாக உள்ளது

   பால் - பாலு

   தேன் - தேனு

குறிப்பு

3. தென் திராவிட மொழிகளின் இகர, உகரம் தெலுங்கு கன்னடத்தில் எகர ஒகரமாக மாறும்

இலை - எல

உரல் -ஒரல்

4. கன்னடத்தில் ககர ஒலி மொழி முதலி வந்து அதனை அடுத்து முன்னுயிர் வந்தால் அக்ககர ஒலி தமிழ் தெலுங்கு மலையாளம் போன்ற ஒலிகளில் சகரமாக மாறும்

கின்ன - சின்ன

கிவி - செவி

5. மேலும் இவ்வகை மொழிகளில் அ.்.றிணையில் பன்மை விகுதி கட்டாய உறுப்பாக அமைவதில்லை

ஆறு ஆடுகள் - ஆறு ஆடு

6. வியங்கோள் விகுதிகளைச் சிறப்பாகப் பெற்ற மொழிக்கூட்டம் தென் திராவிட மொழிகளே

வாழ்க

7. தொடர்வடிவில் எச்ச வடிவங்களொடு வேண்டும் என்பதை இணைத்து உடன்பாட்டுப் பொருளையும் வேண்டாம் என்பதை இணைத்து எதிர்மறை பொருளையும் இணைத்து உணர்த்துவது உண்டு

செய்யவேண்டும் - செய்ய வேண்டாம்

8. ண், ள் ஆகிய வளைநா ஒலிகள் தென் திராவிட மொழிகளில் மட்டுமே திருத்தமாக உள்ளது. ஏனைய திராவிட மொழிகளில் அவை திரிந்தும் மயங்கியும் காணப்படுகின்றன.

9. ஏனைய திராவிட மொழிகளில் இறந்த கால இடைநிலைகள் குறைவு. ஆனால் தென் திராவிட மொழிகளில் த்த், ந்த், த், இ, ட்ட், ட், ற், ற்ற் ஆகியன இறந்த கால இடைநிலைகளாகப் பயின்று வருகின்றன.

10. மொழிமுதல் சகரம் , ஞகரம், யகரம் ஆகியன கெடுகின்றன. மொழிமுதல் நகரம் இழப்புறுவது பிறழ்பிரிப்பால் என்பர். ஞகரம் நகரம் ஆகியது என்று எண்ணவும் இடமுண்டு

ஞான் - நான்

நீன் ஞாய் - உன் தாய்

11. எனவே மொழிமுதல் நகரம் இழப்புறுவதும் இடையண்ண ஒலி இழப்பு என்ற நிலைக்குள் அடங்கும் என்பது தெ.பொ.மீயின் கருத்தாகும். மொழிமுதல் இடையண்ண யகர மெய் மறைகின்றது.

யாய் - ஆய்

யானை - ஆனை

யாறு - ஆறு

யாடு - ஆடு

என்ற திரிபுகளடைவதைக் காணலாம்.

12. தென் திராவிட மொழிகளில் சிலபோது அடுத்துவரும் உயிரையே இடையண்ண ஒலியாக மாற்றிய பிறகு யகரம் மறைவதுண்டு. மூலத் திராவிடத்தில் வேற்றுமை ஏற்கும் வடிவங்களும் யகரம் எகரமாகத் திரியும்.

யாவை - எவை

யாது - எது

யாவன் - எவன்

யான் - என்

13. மொழிமுதலில் இடையண்ண ஒலிகள் மறைதல் தெலுங்கு மொழியிலும் உண்டு. தென் திராவிட மொழிகளில் உப்பு என வழங்குவது பிற திராவிட மொழிகளில் சுப்பு என வழங்குகின்றது. இ என்னும் தென் திராவிட வேர் பிற திராவிட மொழிகளில் சி என அமைகின்றது.

14. மெய்யொலி இடம் பெயர்தல் தெலுங்கிலும் பிற திராவிட மொழிகளிலும் ஏற்படுவது போலத் தென்திராவிட மொழிகளில் ஏற்படுவதில்லை.

இலது - லேது - தெலுங்கு

15. இரண்டு - ரெண்டு எனத் தமிழில் வழங்குவது தெலுங்குக் கிளைமொழியிலிருந்து கடன்பெறப்பட்டது.


16. தமிழ், மலையாளத்தில் முதலசையில் குற்றுயிரைப் பெற்றுள்ள வேர்ச்சொல் அடுத்துள்ள குற்றுயிருக்கு ஏற்பத் திரியும் இயல்புடையது. அடுத்துவரும் உயிர்மேல் உயிராக இஇ என வரா

**குறிப்பு**

நடுத் திராவிட மொழிகள்

நடுத் திராவிட மொழிகளைத் தெலுங்கு- குவி கிளை என்றும், கொலாமி-நாய்க்கி கிளை என்றும், மொழி நூலார் இருவகை என கூறுவர். தெலுங்கு-குவி கிளையில் தெலுங்கு, கோண்டி, கோண்டா, குயி, குவி, பெங்கோ மற்றும் மண்டா ஆகிய ஏழு மொழிகள் உள்ளன. கொலாமி-நாய்க்கி கிளையில் கொலாமி, நாய்க்கி, பர்ஜி, கடப்பா ஒல்லாரி, கடப்பா சில்லூர் ஆகிய மொழிகள் உள்ளன. இவற்றுள் கடப்பா ஒல்லாரி, கடப்பா சில்லூர் ஆகியன தனிமொழிகள் அல்ல, ஒரே மொழியின் கிளைகள் என்று சிலர் கருதுவர். தெலுங்கு மொழியைத் தென் திராவிட மொழிகளோடு இணைத்து ஆய்வது பழைய மரபு, ஆனால் இப்போது தெலுங்கு நடுத் திராவிட மொழிகளோடு இணைக்கப்படுகிறது. கொல்லமி, நாய்க்கி, பர்ஜி, கடப்பா ஆகியன நடு திராவிட மொழிகளுக்குள் சில தனித்தன்மைகளைக் கொண்டு விளங்குவதால் அவற்றை ஒரு தனி கிளையாக பரோ, பட்டாச்சாரியா, எமனோ ஆகியோர் குறிப்பிடுகின்றனர்.

நடுத் திராவிட மொழிகள்



குறிப்பு

## தெலுங்கு

தமிழைப் போலவே தொன்மைச் சிறப்பிலும் சொல் வளத்திலும் சிறப்புடையதாகத் தெலுங்கு மொழி உள்ளது. ஐரோப்பியர்கள் இம்மொழியினை ஜெண்டு என்று அழைத்தனர். தம்ழிகத்ன் வடக்குப்பகுதியான ஆந்திரப்பகுதியில் இம்மொழி பேசப்படுகின்றது. வடமொழியாளர் இதனை ஆந்திரம் என்று அழைத்தனர். இம்மொழியின் பெயர்க்காரணத்தை ஆராய்பவர்கள் திரிலிங்கம் - தெலிங்கம் - தெலுங்கு மூன்றுகோயில் என்ற சொல்லே தெலுங்கு எனத் திரிந்தது என்றும் இனிமை எனப்பொருள் பயக்கும் தேனுகு - தெனுகு - தெலுங்கு எனமருவியது என்றும் பலவிதமாகப் பொருள் கொள்வர். இம்மொழி வட இந்திய மொழிகளிலிருந்து வேறுபட்டது என்று யுவான் சுவாங் குறிப்பிடுவார், இம்மொழிக்கு மேல்நாட்டாரும் பல இலக்கண நூல்களை எழுதியுள்ளனர்.

நன்னயப்பட்டர் வடமொழி அறிஞர்கள் இம்மொழியில் பல இலக்கியங்களைப் படைத்தமையால் இது வடமொழியுடன் பெரிதும் உறவுடையதாக அமைந்துவிட்டது. தெலுங்கர்கள் ஆந்திரர்கள் என்றும் கலிங்கர்கள் என்றும் இருவகைப்படுவர். தமிழைவிட மிகுதியும் மக்களால் பேசப்படும் இம்மொழி ஆந்திரப் பகுதியேயன்றி தமிழ்நாட்டுப் பகுதியிலும் வழங்கப்படும் மொழியாக அமைந்துள்ளது. இம்மொழியின் வினையடிகளை பேரா. கிருஷ்ணமூர்த்தி நுணுகி ஆராய்ந்துள்ளார்.

திணை, பால் பாகுபாட்டைப் பொறுத்தவரை ஏனைய நடுத்திராவிட மொழிகளினின்றும் தெலுங்கு வேறுபடுவது கண்கூடு. இருமையில் ஆண்பால் ஆண்பால் அலாதன என்ற பாகுபாடு தெலுங்கில் உண்டு. இந்நிலையினை குருக் மால்டோ உள்ளிட்ட வட திராவிட மொழிகளிலும் காண முடிகின்றது. திராவிட மொழிகளில் இத்தகைய பால் பாகுபாடே தொன்மையானது என்பது பி.எஸ்.சுப்பிரமணியத்தின் கருத்தாகும்.

குயி மொழியோடு தெலுங்கு நெருங்கிய உறவுடையது. இதனை இவ்விரு மொழிகளிலும் ஒத்திருக்கும் ஒலி இடம் பெயர்தலை வைத்துக் குறிப்பிடலாம். பன்மை விகுதிப் பயன்பாட்டைப் பொறுத்தவரை கோண்ட், கோண்டி, குயி, குவி ஆகிய மொழிகளிலிருந்து தெலுங்கு வேறுபடுகின்றது.

### கோண்டி

குறிப்பு

கோண்டி மொழியைப் பேசும் மக்கள் கோண்டுவனம் என்று அழைக்கப்படும் மத்திய இந்தியாவின் காட்டுப் பகுதிகளில்பெரும்பான்மையாக வாழ்கின்றனர். இவர்கள் தங்களைக் கோயிதார் என்று குறித்துக் கொள்வர். இம்மக்களைப் பற்றிய பல செய்திகளைப் பேராசிரியர் டால்டன் என்பவரின் “வங்காள மக்களின் வரலாறு“ என்ற நூலால் உணரலாம். பேராசிரியர் ஜே.சி.டிரிபெர்கு பேரா. சி.ஜி.செனிவிக்ஸ் என்பவரும் எச்.டி.வில்லியம்சன் ஹென்ரீ டிரமண்டு என்பாரும் இம்மொழிக்கு எழுதிய இலக்கண நூல்கள் குறிப்பிடத்தக்கன.

### குவி / கோந்த்

கோண்டி மக்களைப் போலவே கோந்த் அல்லது குவி மொழி பேசும் மக்கள் கோண்டுவனத்தின் பகுதிகளிலும், ஒரிய மலைப்பகுதிகளிலும் வாழ்கின்றனர். இவர்களைக் கொண்டர்கள், கந்தர்கள் கூ என்று அழைப்பதுண்டு. இம்மொழிக்கென வரிவடிவமோ, இலக்கியங்களோ எதுவும் இல்லை.

### குயி

ஒரிய கோராபுத் பகுதியில் பேசப்படும் மொழியாகும். இம்மொழியின் இலக்கணத்தை பேரா. வின்ஃபீல்டு என்பார் படைத்துள்ளார். பெரா என்பவரும் இலக்கண நூலை எழுதியுள்ளார்.

### கோண்டா

ஆந்திர எல்லைப் பகுதிகளில் கோண்டா மொழி பேசப்படுகின்றது. பத்தாயிரம் பேர் மட்டுமே பேசிவரும் இம்மொழியை, பட்டாச்சார்ய, பர்ரோ ஆகியோர் ஆராய்ந்துள்ளனர்.

### கொலாமி

இந்திய மத்தியப் பகுதியில் ஆந்திரப் பிரதேசத்திலும் மகாராட்டிரத்திலும் இம்மொழி பேசப்படுகின்றது. மராத்தி மொழியாளர்கள் கோலாமீ என்று தலைப்பிட்டு, ஆதிவாசிகளான கோலாம் இனத்தினர் அம்மொழியைப் பேசுவதாகக் குறிப்பிட்டுள்ளனர். இதனைத் தென்கிழக்கு கொலாமி, வடகிழக்கு கொலாமி என இரு மொழிகளாக வகைப்படுத்துவர். பேரா.சேதுமாதவராவ் இம்மொழியின் இலக்கணத்தை எழுதியுள்ளார். எமனோ பர்ரோ, பட்டாச்சாரியா ஆகியோரும் இம்மொழிகளை ஆராய்ந்துள்ளனர்.

## நாயகி, பர்ஜி

நாய்கி மொழி மத்தியப் பிரதேசப் பகுதிகளிலும் மகாராட்டிரத்திலும் பேசப்படுகின்றது. பர்ஜி மொழி மத்தியப்பிரதேசப் பகுதிகளில் பேசப்படுகின்றது. இம்மொழிகள் பஸ்தர் கோறாபுட் ஜகதல்பூர் ஜெய்ப்பூரும் ஆகிய இடங்களை எல்லையாகக் கொண்ட உள்ளடங்கிய பகுதிகளில் அமைந்திருக்கின்றன. பேரா. பரோவும் பேரா.பட்டாச்சாரியாவும் இணைந்து இம்மொழியை விரிவாக ஆய்ந்து தனிமொழியென முதன் முதலில் நிறுவிச் சென்றனர். மேலும் இவர்கள் இம்மொழிக்கு நான்கு வட்டார வழக்குகள் இருப்பதையும் சுட்டிச்செல்கின்றனர். முன்னதாக இம் மொழியைத் தவறுதலாகக் கொண்டி மொழியின் வட்டார வழக்கு என்று குறித்து விட்டனர்.

## கடபா

ஒரிசாவிலும் மத்தியப் பிரதேசத்தின் சில பகுதிகளிலும் கடபா மொழி பேசப்படுகின்றது. கடபா ஒல்லாரி, கடபா சில்லூர் ஆகிய இரண்டையும் ஒரே மொழியாகச் சிலர் கருதினாலும் பேரா. பரோ, பட்டாச்சாரியா ஆகியோர் இவற்றைத் தனிக் கிளைகள் என்று கருதுகின்றனர்.

## பெங்கோ, மண்டா

பெங்கோ மொழியைப் பேசும் மக்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு. இம்மொழி பேராசிரியர் பரோவால் திராவிட மொழிக் குடும்பத்தைச்

சார்ந்த தனி மொழி என்று ஆய்ந்து கூறப்பட்டது. மண்டா மொழி பற்றி பேரளவிலான ஆய்வுகள் நிகழவில்லை.

குறிப்பு

## நடுத் திராவிட மொழிகளின் சிறப்பியல்புகள்

1. தென் திராவிட மொழிகளில் முன்னுயிர்களின் முன் வரும் மொழிமுதல் ககர ஒலி சகர ஒலியாக மாறுவதைக் காணலாம். ஆனால் நடுத்திராவிடமொழிகளில் இக்ககரம் திரிவதில்லை.
2. நாவளை ளகரம் நாய்கி தவிர வேறு எந்த மொழியிலும் வருவதில்லை
3. நடுத் திராவிட மொழிகள், நெடிலற்ற ஒரியா போன்ற மொழிகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட போதிலும் தமக்கேயுரிய குறில் நெடில் ஒலியன்களை இழக்காமல் பேணிக் காக்கின்றது
4. மூலத் திராவிட மூக்கொலியான ணகரம் பெரும்பாலும் "ன"கர ஒலியாக இம்மொழிகளிலும் மாறுகின்றது. எனினும் கோண்டா. பெங்கோ மண்டா போன்ற மொழிகளில் திரியாமல் வழங்குவதும் உண்டு.
5. தென் திராவிட மொழிகளில் மொழி முதலில் டகர ஒலி வருவதில்லை. நடுத்திராவிட மொழிகளில் இது அருகி மொழி முதலில் வருவதுண்டு.
6. ஒலியன்கள் இடம் பெயர்ந்து நிற்றலை குயி, குவி, பெங்கோ போன்ற மொழிகளில் அதிகமாகக் காண முடிகின்றது.
7. நடுத் திராவிட மொழிகளில் ஆண்பால், ஆண்பால் என்ற இருவகைப் பாகுபாட்டினை ஒருமையிலும் பன்மையிலும் காணலாம். தெலுங்கில் இப்பாகுபாடு ஒருமையில் மட்டுமே காணமுடியும்.
8. தென் திராவிட மொழிகளிலும், வட திராவிட மொழிகளிலும் பன்மையினை உணர்த்துவதற்குப் பலவின்பால் விகுதியைக் கட்டாயமில்லை. ஆனால் இம்மொழிகளில் அ.ஃறிணைச் சொற்கள் பன்மையுணர்த்த வேண்டும் என்றால் பலவின்பால் விகுதி கட்டாயம் இணைக்கப்பட வேண்டும்.

9. தென் திராவிட மொழிகளில் “அவன்“ என்பது படர்க்கை ஆண்பால் ஒருமை சுட்டுப் பெயராக உள்ளது. ஆனால் நடுத் திராவிட மொழிகளில் இதற்கு ஒத்த அவண்ட் என்ற வடிவம் உள்ளது. இது தெலுங்கு வழக்கில் வாண்டு எனத் திரிந்துவிட்டது.

## வட திராவிட மொழிகள்

பலுசிஸ்தான் பகுதிகளில் பேசும் பிராகூயி, மத்திய இந்தியப் பகுதிகளில் வழங்கும் மால்டோ, பீகார் ஒரியப் பகுதிகளில் பேசும் குருக் ஆகியனவற்றை வட திராவிட மொழிகள் என்பர். வட ஆந்திரத்தில் வழங்கும் கோயா மொழியை வட திராவிடம் என்று குறிப்பர். ஆனால் அதனை கோண்டி மொழியின் வட்டாரத் திரிபு மொழி என்று அறிஞர்கள் கருதுவதை ஜி.ஜான்சாமுவெல் சுட்டிச் செல்கின்றார். வட திராவிட மொழிகளில் பிராகூயி தொடக்க நிலையில் பிரிந்திருக்கவேண்டும். பின்னைய காலத்தில் குருக், மால்டோ ஆகியன ஒரு மொழியாக வழங்கிப் பின் நெடுங்காலம் கடந்து இவை தனி மொழிகளாக உருப்பெற்றிருக்கவேண்டும்.

## மால்டோ

பீகார், ஒரியா, வங்க மாநிலங்களில் மால்டோ மொழி வழங்கப்படுகின்றது. மால்டோ மொழி பேசும்மக்கள் தங்களை மாலர்கள் என்று குறித்துக்கொள்வர். மாலர் என்பது மலை என்பதன் திரிபாகும் என்றும் மலையில் வாழுவோர் எனும் பொருளுடையது என்று கிரியர்சன் தம் ஆய்வில் குறிக்கின்றார். பேராசிரியர்ஹாட்ஜன், கேம்பல் ஆகியோர் இம்மொழிச் சொற்களை ஆராய்ந்துள்ளனர். எர்னஸ்ட் டிரெளஸ் 1884 ஆம் ஆண்டில் மால்டோ மொழி பற்றிய அறிமுகநூல் ஒன்றைப் படைத்துள்ளார். இலக்கியவளம் இல்லையெனினும் ஐரோப்பியர்களால் சிற்சில நூல்கள் படைக்கப்பட்டுள்ளன.

இம்மொழிகளில் குறில் நெடில் வேறுபாடு பொருளை வேறுபடுத்தும் ஒலி மாற்றமாக அமைகின்றது. சொற்களுக்கு இடையில் உயிரொலிகள் பயின்று வந்தாலும் நெட்டோசை உயிர்கள் மொழியிறுதியாக வருவதில்லை.

அடைப்பொலிகள் (Stops) உரசொலிகள் (Fricatives), மூக்கொலிகள் (Nasals), வருடொலிகள் (Trillis) பிரிவளி ஒலிகள் (Laterals), ஆடொலிகள் (Flaps), அரை உயிர்கள் (Semi- Vowels) என இம்மொழியின் மெய்யொலிகள் ஏழாகக் கூறுபடுத்தப்படுகின்றன.

குறிப்பு

## குருக்

டாக்டர் கால்டுவெல் ஒரோவன் என்று தம் நூலில் குறிக்கும் மொழியே குருக் ஆகும். பிகார், அஸ்ஸாம், வங்கம் மாநிலப் பகுதிகளில் இம்மொழி பேசுவார் பரவி வாழ்கின்றனர். கொலானியல் டால்டன் என்பார் வங்காள வரலாறு பற்றிய நூலில் குருக் மொழி பேசுவோரைக் குறிப்பிடுகின்றார். கிறித்தவப் பாதிரியார் பட்ஸச் இம்மொழியின் இலக்கணத்தை எழுதியுள்ளார். இம்மக்கள் தங்களை மேற்கு கொங்கணப் பகுதிகளிலிருந்து வந்தவராகக் குறிப்பிட்டுக் கொள்வதாகவும் பாட்னா மலைப்பகுதிகளில் வாழ்ந்தவர்கள் என்றும் குறிப்பிடுவதாகவும் அறிஞர்கள் கருத்துரைக்கின்றனர். குருக் மொழி மக்களுக்கும்மாடோ மக்களுக்கும் தொடர்பு இருந்ததைச் சொல்லாராய்ச்சியில் கால்டுவெல் நிறுவியுள்ளார். ஏ.க்ரிக்நாட் என்பாரும் ∴பெண்ட் ஹான் , சி.பி.லீஸ் ஆகியோரும் குருக் மொழியின் அகராதிகளை உருவாக்கியுள்ளனர்.

## பிராகூயி

தற்போதைய பாகிஸ்தானின் தெற்கு பலுசிஸ்தான் பகுதிகளில் பிராகூயி தம் நூலில் குறித்துள்ளார். எனினும் திராவிட மொழிக்குடும்பத்தில் இணைத்துக் காணவில்லை. டென்னிஸ் டி.எஸ்,பிரே என்பாரே திராவிட மொழிக்கூறுகளுடன் பிராகூயி ஒன்றிச் செல்வதை ஆராய்ந்து நிறுவியுள்ளார். இம்மொழி பற்றிய ஆய்வுகளில், பிராகூயி முதலில் மூலத் திராவிட மொழியிலிருந்து வழங்கியிருக்கவேண்டும் என்றும் திராவிட மொழி பேசுமமக்களுடன் கலப்பு ஏற்பட்டதால் மொழி உறவு ஏற்பட்டு இருக்கலாம் என்றும் இருவகையாகச் சுட்டுகின்றனர். இம்மொழி பார்சி மொழியுடன் தொடர்புடையதாக அமைந்துள்ளது.

குறிப்பு

## வட திராவிட மொழிகளின் சிறப்பியல்புகள்

1. மூலத் திராவிட மொழியில் காணப்படும் வகரம் இவ்வகை மொழிகளில் பகரமாக (டி) எனத் திரியும்.

   | | | |
   |---|---|---|
   | தமிழ் | குருக் | பிராகூயி |
   | வாய் - | பாய்- | பா |

2. மூலத் திராவிட மொழியான ககரம் இ, ஈ தவிர்ந்த முன்னுயிர்களின் முன் இடம்பெறும்போது க்ஸ கரமாகத் திரிகின்றது. இதனை உரசொலியாதல் எனலாம்.

   | | | | |
   |---|---|---|---|
   | தமிழ் - | மால்டோ - | பிராகூயி - | குருக் |
   | கண் - | Xanu - | xan - | xann |

3. மொழிமுதல் சகரம் , உகர, உகார, எகர, ஏகாரங்களுடன் இணைந்து வரும்போது ககரமாகத் திரியும்

   | | | |
   |---|---|---|
   | தமிழ் - | மால்டோ - | குருக் |
   | சுடு - | Kur - | kur |

4. குருக் மால்டொ மொழிகளில் தன்மை ஒருமை, முன்னிலை ஒருமை ஆகியவற்றின் வேற்றுமை உருபேற்கும் வடிவங்கள் நான்காம் வேற்றுமையில் அமைகின்றன.
5. இம்மொழிகளில் இறந்த கால இடைநிலையாக - க்-கும் இறப்பல்லாக் கால இடைநிலையாக -ஓ-உம் உள்ளன.

### இரு மதிப்பெண் வினாக்கள்

1. தென் திராவிட மொழிகளில் திருந்திய மொழிகள் எவை?

   தமிழ், கன்னடம், மலையாளம்

2. நடுத் திராவிட மொழிகளில் திருந்திய மொழி எது?

   தெலுங்கு

3. வடத் திராவிட மொழிகள் எவை?

   குருக், மால்டோ, பிராகூயி

4. இந்தியாவிற்கு வெளியே பேசப்படும் திராவிட மொழி எது?

குறிப்பு

பிராகூயி

5. நீலகிரி மலைப் பகுதிகளில் வழங்கும் மொழிகள் எவை?
தோடா, படகா, கோதா, இருளா

6. தமிழை ஆந்திரர் எவ்வாறு குறிப்பர்?
அரவம்

7. தெலுங்கு என்பதை எச்சொற்களிலிருந்து வருவித்து உரைப்பர்?
தெனுகு, திரிலிங்கம்

## குறுவினாக்கள்

8. தென் திராவிட மொழிகளில் தமிழ் குறித்து எழுதுக.
தமிழ் என்ற தலைப்பின் கீழ் திராவிட மொழிகளில் முதலில் திருந்திய நிலைபெற்ற முதல் அரவம் என்பது பொருந்தும் என்பது வரை

9. தென் திராவிட மொழிகளில் மலையாளம் குறித்து எழுதுக.
மலையாளம் என்ற தலைப்பின் கீழ் உள்ள பகுதி மட்டும்.

10. தென் திராவிட மொழிகளில் கன்னடம் குறித்து எழுதுக.
கன்னடம் என்ற தலைப்பின் கீழ் உள்ளவை மட்டும்

11. தென் திராவிட மொழிகளில் துளு, கொடகு குறித்து எழுதுக.
துளு, கொடகு என்ற தலைப்பின் கீழ் உள்ளவை மட்டும்

12. நீலகிரி மலைப் பகுதி மொழிகள் குறித்து விளக்குக.
தோடா, படகா, கோதா, இருளா என்ற தலைப்பின் கீழ் அமைந்த செய்திகள்

13. நடுத் திராவிட மொழிகளில் தெலுங்கு குறித்தெழுதுக.
தெலுங்கு என்ற தலைப்பின்கீழ் அமைந்தவை

14. நடுத் திராவிட மொழிகளில் திருந்தாத மொழிகள் குறித்து எழுதுக.
நடுத் திராவிட மொழிகளில் தெலுங்கு நீங்கலாக கோண்டி, கோந்த், கொலாமி, நாய்க்கி, பர்ஜி, பெங்கோ, மண்டா, கடப்பா ஆகிய மொழிகள் பற்றிய செய்திகள்

15. நடுத் திராவிட மொழிகளின் சிறப்பியல்புகள் யாவை?
நடுத் திராவிட மொழிகளின் சிறப்பியல்புகள் என்னும் தலைப்பின் கீழ் அமைந்த செய்திகள்

16. வடத் திராவிட மொழிகளின் சிறப்பியல்புகளை எழுதுக.
வடத் திராவிட மொழிகளின் சிறப்பியல்புகள் எனும் தலைப்பிலான செய்திகள்

17. வடத் திராவிட மொழிகள் குறித்து எழுதுக.
குருக், மால்டோ, பிராகூயி மொழிகளைப் பற்றிய செய்திகள்

## பெருவினாக்கள்

18. தென் திராவிட மொழிகள் குறித்து எழுதுக.
தமிழ், மலையாளம், கன்னடம், துளு, கொடகு, இருளா, படகா, தோடா,கோதா மொழிகளைப் பற்றிய செய்திகள்

19. தென் திராவிட மொழிகளின் சிறப்பியல்புகளை எழுதுக.
தென் திராவிட மொழிகளின் சிறப்பியல்புகள் என்னும் தலைப்பின் கீழ் அமைந்த செய்திகள்

20. நடுத்திராவிட மொழிகள் குறித்தும் அவற்றின் சிறப்பியல்புகள் குறித்தும் விளக்குக.
தெலுங்கு, கோண்டி, கோந்த், கொலாமி, நாய்க்கி, பர்ஜி, பெங்கோ, மண்டா, கடப்பா ஆகிய மொழிகள் பற்றிய செய்திகளும் அவற்றின் சிறப்பியல்புகள் குறித்த செய்திகளும்

## கூறு - 3 திராவிட மொழிகளின் தனித்தன்மைகள்

குறிப்பு

உலகளாவிய தொன்மையான மொழிக் குடும்பமாகவும் தனக்கென்று தனித்த மரபுகளையும் இலக்கணக் கூறுகளையுமுடையதாகவும் அமைந்தது திராவிட மொழிக்குடும்பம். இம்மொழிக் குடும்ப மொழிகள் பல செவ்விய திருந்திய நிலைபெற்ற வடிவங்களாக அமைந்திருக்கின்ற தன்மையும் அவை காலத்தால் பழமையான மொழிகளாக அமைந்திருக்கின்ற தன்மையும் அவற்றின் இலக்கிய, இலக்கண வளங்களும் அம்மொழிகளின் பண்பட்ட தன்மையை எடுத்துக் காட்டுகின்றன.

திராவிட மொழிகள் ஒரு மூல மொழியின் மண்டிலத் திரிபு மொழிகள் ஆகா

ஒரு மொழி அது வழங்கும் பிரதேசத்திற்கு ஏற்பச் சிற்சில வேறுபாடுகளைக் கொண்டிருக்கும். அவ்வேறுபாடுகளின் அடிப்படையில் அதனைத் திசைமொழி என்றோ திரிபு மொழி என்றோ கூறலாம். ஆனால் திராவிட மொழிகள் தமக்குள் அடிச்சொற்களிலும் இலக்கண அமைதியிலும் உறவுடையன என்றாலும் அவற்றை ஒன்றின் திரிபு மொழிகள் என்று வழங்குதற்கு இல்லை.

தமிழ் பேசும் ஒருவரால் தெலுங்கை புரிந்துகொள்ளுதல் இயலாது. அவ்வாறே தெலுங்கருக்கும் தமிழோ கன்னடமோ எளிதில் உணர்வதற்கில்லை. இலக்கியத்திலும் இவ்வகை வேறுபாடுகள் உண்டு. இவை தனித் தனிவரி வடிவங்களை உடையன.

வரி வடிவில் ஒன்றிய தெலுங்கும் கன்னடமும் அடிச்சொற்களில் வேறுபட்டன. கன்னடம் தெலுங்கினும் பழந்தமிழோடு நெருங்கிய உறவுடையது. எனவே இம்மொழிகள் ஒரே மூலமொழியிலிருந்து கிளைத்தனவே ஆயினும் இன்றைய நிலையில் அவை தனித் தனி மொழிகளாகவே கொள்ளத்தக்கன.

## திராவிட மொழிகளின் தனித்தன்மைகள்

1. உலக மொழிகளில் பல தனி நிலை மொழிகளாகவும் உட்பிணைப்பு நிலை மொழிகளாகவும் ஒட்டு நிலை மொழிகளாகவும் அமைந்துள்ளன. அவற்றுள் திராவிட மொழிகள் யாவும் ஒட்டு நிலை மொழிகளாகவே அமைந்துள்ளன. பெயரடியுடன் சாரியை வேற்றுமை உருபு அல்லது பால் காட்டும் விகுதிகள் வினையடியுடன் கால இடைநிலைகள் பாலீறுகள் ஆகியன இணைந்து முறையே இணைந்து ஒட்டி ஒரு சொல் நீர்மைத்தாக வருவது என்பது திராவிட மொழிகளின் பொதுக் கூறு எனலாம்.

   காண்- கண் - ட் - ஆன் - கண்டான்

   வாழ் - வாழ் - கை - வாழ்க்கை

குறிப்பு

மரம் - மரம் - அத்து - ஐ - மரத்தை

2. வழக்கில் மிகுதியும் பயின்றுவரும் சொற்கள் ஒவ்வொரு மொழிக்கும் மாறுபடும் இயல்பையுடையன. எனினும் தமிழ் உள்ளிட்ட திராவிட மொழிகளில் அவற்றின் அடிப்படை வடிவங்கள் மாறாமல் ஒன்றுபட்டு அமையக் காணலாம்.

தமிழ் - கண்
மலையாளம் - கண்ணு
தோடா - கொண்
கொடகு - கன்னு
தெலுங்கு - கன்னு
பர்ஜி - கெண்
குருக் - ∴கன்

3. திராவிட மொழிகளில் வழங்கும் எண்ணுப்பெயர்கள் தம்முள் பெரிதும் வேறுபாடற்று ஒன்றுபட்டு விளங்குகின்றன.

| எண் | தமிழ் | தெலுங்கு | கன்னடம் | துளு | மலையாளம் | குறுக் | கோலமி | பிராகுயி | மூலத் திராவிடம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | ஒன்று | ஒக்கட்டி | ஒந்து | ழுதெை | ழுரெ ஒந்நு | ழுṇṭய | ழுமமழுன | யளனṭ | ழுழுசர(1) |
| 2 | இரண்டு | ரெண்டு | எரடு | சயṟனர | சயனெர ரண்டு | னைனெறை | சைāṭ | சைāṭ | ழுசைர(2) |
| 3 | மூன்று | மூடு | மூரு | அபீதை | அபீரெ மூந்நு | அபீனெ | அபீனெறை | அரளனṭ | ழுஅரஊ |
| 4 | நான்கு | நாலுகு | நாலக்கு | ெāடர | ெāடர நாலு | ெāமா | ெāடறை | čāச | ழுெāட |
| 5 | ஐந்து | ஐது | ஐது | யறைெ | ய+உர அஞ்சு | pancē | யலன | ியெč | ழுஉயலே |
| 6 | ஆறு | ஆறு | ஆறு | āதை | āசர ஆறு | ளழலலē | āச | ŝயŝ | ழுஉயசூ |
| 7 | ஏழு | ஏடு | ēடர | ēடர | ēணார ஏழு | ளயவவē | ēḍ | ாயகவ | ழுநẓர |
| 8 | எட்டு | எணிமிதி | எண்ட்டு | ēṉஅய | நṭṭṟ எட்டு | யṭṭṟē | நரெஅயனī | ாயŝவ | ழுநṭṭṟ |
| 9 | ஒன்பது | தொம்மிதி | ஒம்பத்து | ழுசஅடிய | ழுடியவர ஒம்பது | யெறைலē | வழஅனī | ெōா | ழுவழ! |
| 10 | பத்து | பதி | ஹத்து | ியவவர | ியவார பத்து | னயளளē | ியனī | னயா | ழுியவ(வர) |

4. மேலை ஐரோப்பிய சார்ந்த ஆங்கிலம் போன்ற மொழிகளில் பெரும்பான்மை சொற்கள் மெய்யொலிகளில் முடியத் திராவிட மொழிச் சொற்கள் மிகுதியும் உயிரொலிகளைக் கொண்டு முடிகின்றன. மெய்யொலி இறுதியைப் பெற்ற சொற்களும் வழக்கில் ஒலித்துணை உயிரொலிகளைப் பெற்று வழங்கப்படுகின்றன.

மண் - மண்ணு

நாய் - நாயி

5. மூக்கொலிகளைக் கொண்டு முடியும் சொற்களில் இறுதி மெய்கெட்டு அதன் முன் வழங்கும் உயிரொலி மூக்கின ஒலிச் சாயல் பெற்று ஒலிக்கும்

   அவன் - அவ(ன்)

6. இடையின ஒலிகளால் முடியும் சொற்களிலும் ஈற்றொலி கெட்டு உயிரொலி மட்டும் நிற்பதுண்டு

   கந்தல் - கந்த

   வற்றல் - வத்த

7. திராவிட மொழிகளில் காணும் குறில் நெடில் குறிக்கத்தக்க தனித் தனி ஒலியன்களாகும். இவை பொருளை வேறுபடுத்தத் துணை செய்கின்றன. ஒலியன்களில் குறிலைக் குறிக்கவும் நெடிலைக் குறிக்கவும் தனித்தனி வடிவங்கள் உள்ளன. ஆங்கிலத்தில் இத்தகைய வேறுபாடு கிடையாது.

   நடு - நாடு

8. திராவிட மொழிச் சொற்கள் இகரம் அல்லது எகரத்தில் தொடங்கினால் பெரும்பாலும் யகரத்தை மொழிமுதலில் பெற்றொலிப்பதுண்டு. இவ்வாறே உகரம் ஒகரம் மொழிமுதலில் வரின் வுகரத்தைப் பெற்றொலிப்பதுண்டு

   இலை - யெல

9. பிற மொழிகளில் காணப்படும் உரசொலிகள் (S, s, z, h, f ) ஆகியன திராவிட மொழிகளில் ஒலியன்களாக இடம்பெறவில்லை

10. நாவளை ஒலிகள் திராவிட மொழிச் சொற்களில் சொற்றொடக்கமாக இடம் பெறுவதில்லை. மருங்கொலியன்களைக் கொண்டும் தொடங்குவதில்லை.

11. வல்லின ஒலியன்கள் மொழியிறுதியாக அமையாது உயிரொலியுடனே அமையும்.

12. திராவிட மொழிகளில் மொழியிடை மெய்ம்மயக்கம் மட்டுமே காணப்படும். சொற்றொடக்கம், இறுதியில் இருமெய்யிணைவுகள் வருவதில்லை.

13. ழகரம் தமிழ். மலையாள மொழிக்கே உரிய தனித்த சிறப்புடைய ஒலியனாகும்.

14. வாக்கியமைப்பில் எழுவாய், செயப்படுபொருள், பயனிலை ஆகியவற்றை இடம் மாற்றினாலும் அத்தொடரின் பொருளமைதி மாறுவதில்லை.

திராவிடமொழி - வடமொழி வேறுபாடுகள்

வடமொழி ஆராய்ச்சியாளர்கள் கோல்புருக், காரி, வில்கின்சன் ஆகியோர் திராவிட மொழிகளில் வழங்கும் வடசொற்களை அறிந்துகொண்டு தமிழ் முதலான மொழிகளுக்கு வடமொழியே மூலம் என்றும் இம்மொழிகளில் வழங்கும் ஏனைச் சொற்கள் புறநாட்டுத் தாக்கத்தால் கலந்தவை என்றும் கருதினர். ஆனால் நன்கு நுணுகி ஆராயாமல் வடமொழிச் சொற் பயன்பாடு ஒன்றனையே அடிப்படையாகக் கொண்டதால் ஏற்பட்ட விளைவு இது.

ஒப்பிலக்கணத்தின் உண்மைகளைத் தெரிந்த எவரும் திராவிட மொழிகளின் இலக்கண இலக்கிய அமைதிகளையும் சொற்றொகுதிகளையும் வடமொழியின் இலக்கண இலக்கிய அமைதிகளுடனும் சொற்றொகுதிகளுடனும் ஒப்பிட்டுக் கண்டபின் வடமொழியைத் திராவிட மொழிகளுக்கு மூலம் என்று சொல்லத் துணியமாட்டார்கள். திராவிட மொழிகள் வடமொழியிலிருந்து முற்றிலும் வேறுபட்டவை என்பதை டாக்டர் கால்டுவெல் தம் நூலில் பலவாறு விளக்கியுள்ளார்.

1. மொழிக்கு அடிப்படையான மூவிடப் பெயர்கள் பெயர், வினைகள், கால விகுதிகள், சுட்டுச்சொற்கள், தொடரமைதி ஆகியன முற்றிலும் வேறுபட்டு விளங்குகின்றன.
2. திராவிடமொழிச் சொற்களில் வடமொழிச் சொற்கள் எளிதில் பகுத்தறியும்வண்ணம் தொன்று தொட்டு வடசொல் என்று பகுத்துக் கண்டுரைத்துள்ளனர்.
3. பொருள் நோக்கில் திராவிட மொழிகளில் பால் திணைப் பாகுபாடுகள் அமைந்திருக்கின்றன. வடமொழியில் சொல்லளவில் பால் திணை பாகுபாடுகள் அமையும்

தமிழ் - ஆடு அ∴றிணை ஒன்றன்பால்

வடமொழி அஜ: (ஆடு) - ஆண்பாற் சொல்

தமிழ் - ஒன்று அ∴றிணை ஒன்றன்பால்

வடமொழி ஏக: (ஒன்று) ஆண்பால்

ஏகா (ஒன்று) பெண்பால்

ஏகம் (ஒன்று) ஒன்றன்பால்

குறிப்பு

4. திராவிட மொழிகளில் பெரிதும் ஒருமை பன்மை என்னும் கோட்பாடே உள்ளது. வடமொழியில் ஒருமை - இருமை - பன்மை என்னும் நிலையைக் காண்கின்றோம்.

   தமிழ் - ஆடு - ஆடுகள்

   வடமொழி - அஜ: (ஆடு) - அஜௌ ( இரு ஆடு) அஜா: (ஆடுகள்)

5. பன்மை விகுதியேற்றபின்னே வேற்றுமை உருபு சேருவது திராவிட மொழிக் கூறாகும். வடமொழியில் இதற்கு மாறாக ஒருமை, பன்மைக்கு வேறு வேறு வேற்றுமை வடிவங்கள் இடம்பெறுகின்றன.

6. திராவிட மொழிகளில் பன்மையைச் சுட்டிய அ.்.றிணைப் பெயர்கள் உண்டு எனினும் அவை ஒருமையைச் சுட்டி வழங்குவதே வழக்காகும்

   பத்துப் பூ(க்கள்)

7. திராவிட மொழிகளில் இடை உருபுகள் மொழிக்குப் பின்னொட்டாக வழங்க வடமொழியில் முன்னொட்டாக அமையும்.

8. பெயருக்கும் பெயரடைக்கும் பால் திணைஇயைபு வடமொழியில் காணப்படுகின்றது. திராவிட மொழிகளில் பெயரடையில் பால் வேறுபாடு இல்லை

   தமிழ் - நல்ல பையன் - நல்ல பெண் - நல்ல புத்தகம்

   தெலுங்கு - மஞ்சி வாடு - மஞ்சி பிட்ட - மஞ்சி புஸ்தகமு

9. பெயரடைகளாகப் பண்புச் சொற்கள் இடம்பெறும்போது பெயரெச்சங்கள் பயன்படுத்துவதுண்டு. பண்புச் சொற்களை வினை வடிவ அடையாக நிறுத்துகின்றன.

10. முன்னிலையாரை உளப்படுத்தும் (நாம்) உளபடுத்தாத (யாம்) என்னும் இருவகைகளில் தன்மைப் பன்மை வழக்குகள் திராவிட மொழிகளில் உண்டு. ஐரோப்பிய மொழிகளில் இவ்வாறு அமைவதில்லை.

11. செயப்பாட்டு வினைகளுக்கு தனி விகுதிகள் டிராவிட மொழியில் இல்லை. படு முதலிய துணைவினைகள் செயப்பாட்டு வடிவத்தை உருவாக்கும்.

    நூலை வாசித்தான் - நூல் வாசிக்கப்பட்டது

12. உடன்பாட்டு எதிர்மறைகளை விகுதிகளால் சுட்டுவதினும் தனித்தனி வினைவடிவங்களால் சுட்டுவது திராவிட மொழிகளின் சிறப்பியல்பாகும்.

## மூலத் திராவிடத்துடன் நெருங்கிய திராவிடமொழி

டாக்டர் கால்டுவெல் திராவிட மொழிகளை ஆய்கையில் இம்மொழிகளுக்கு எல்லாம் மூலமாக ஒன்று இருந்து அதுவே வெவ்வேறு திராவிடமொழிகளாக வகைபெற்றிருக்கவேண்டுமென்று குறிக்கின்றார். அவ்வாறு ஆய்கையில் மூலத் திராவிட மொழியை அதனடிப்படை இயல்பை உள்ளவாறு விளக்கி நிற்பது தமிழே என்று விளக்கிச் செல்கின்றார்.

1. திராவிட மொழிகள் அனைத்திலும் சிறந்த இலக்கிய வளமும் திருந்திய அமைப்பும் கொண்டது தமிழே. மிகச் சிறந்த அடிப்படை சொல் வடிவங்களைப் பெற்றிருப்பதோடு ஏனை மொழிகளுக்கும் தரத் தக்கவகையிலான சொல்வளங்களை உடையது.
2. தமிழில் வடசொற் கலப்பு இருப்பினும் வடசொற்களை அவ்வாறே வழங்காமல் தற்சமம், தற்பவம் எனத் தமிழுக்கேற்றவாறு வழங்குதல் சிறப்புக்குரியது. இதனைத் தொல்காப்பியத்தின்

    வடசொற் கிளவி வட எழுத்து ஒரீஇ
    எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும்மே

   என்ற நூற்பா விளக்கும். ஆனால் வடசொற்களைத் தெலுங்கு முதலிய திராவிட மொழிகள் வடமொழியில் உள்ளவாறே வழங்குகின்றன.
3. தொடர்ந்த காலப்போக்கில் முற்றிலும் மாறுபட்ட வடிவங்களாக இருவேறு மொழிகளோ எனும் வகையில் ஆங்கிலம் போன்ற மொழிகள் அமைந்திருக்கத் தமிழின் பழைய வடிவங்களுக்கும் தற்கால வடிவங்களுக்கும் அமைந்த வேறுபாடுகள் மிகக்குறைவு.

4. ஏனைத் திராவிட மொழி இலக்கண இலக்கியங்கள் தோன்றுவதன் முன்பே தனக்கெனச் சிறந்த இலக்கண, இலக்கிய வளமுடையது. தொல்காப்பியம் முதலாக நெடிய இலக்கணப் பாரம்பரியத்தை உடைய மொழியாகவும் தமிழ் திகழ்கின்றது. சங்கப் பாக்கள் முதலான பல்வேறு வகையான இலக்கிய வளமும் உடையது.
5. ஏனைத் திராவிட மொழி பேசுவோரினும் தமிழரே பல அயல்நாடுகளுக்குச் சென்று தம்நாகரிகத்தைப் பரப்பி வந்துள்ளனர். மலேயா, ஈழம், கம்போடியா நாடுகளில் தமிழரே சென்று வணிகம், போர் ஆகிய காரணங்களால் குடியேற்றம் செய்துள்ளனர்.
6. ஏனைய திராவிட மொழிகள் பேச்சு நடையுடன் முற்றிலும் வேறுபடுகின்றன. அவற்றில் சம்ஸ்கிருதச் சாயலும் மிகுதி. ஆனால் தமிழ்ப் பேச்சிற்கும் இலக்கியமொழிக்குமான வேறுபாடுகள் மிகக்குறைவு.
7. ஒரு பொருளைக் குறிக்கத் தமிழில் பல சொற்கள் வழங்குகின்றன. அச்சொற்கள் ஏனைத்திராவிட மொழிகளில் தனிச் சிறப்புடைய சொற்களாக வழங்கி வருகின்றன.

| | |
|---|---|
| வீடு<br>இல்<br>மனை<br>குடில் | } தமிழ் |

இல்லு - தெலுங்கு

மனெ - கன்னடம்

8. தொல்காப்பியத்திற்கும் முன்பே இலக்கணவளம் நிறைந்த மொழியாகத் தமிழ் திகழ்ந்தமைக்கு அதன்கண் காணலாகும் என்ப, என்மனார் போன்ற சொல்லாட்சிகள் துணைசெய்யும். பிறமொழிகளின் ஒலியன் அமைப்பைப் பேணாமல் தனக்கென அமைந்த ஒலியன்களைப் பெற்றது.

9. ஏனைத் திராவிட மொழிகள் வடமொழியைப் போல வல்லினங்களில் ஒலிப்புடை, ஒலிப்பிலா ஒலிகள் பெற்றிருக்கின்றன. தமிழ் ஒலியச் சூழலில் மட்டும் அவ்வொலிகளை ஒலிக்கும் இயல்பை உடையது. தனித்த ஒலியன்களைப் பெறுவதில்லை.
10. இன்றைய தமிழுடன் தெலுங்கும் கன்னடமும் வேறுபட்டாலும் பழந்தமிழ் வேர்ச்சொற்களுடன் அவை ஒன்றுபட்டிருக்கின்றன.
11. தமிழின் மூவிடப் பெயர்கள் தெலுங்கில் ஒலியிடம் பெயரலால் மருவி வழங்குகின்றன

    அதனை - தானி

    அவன் - வாடு

    நம் -மன

12. தெலுங்கு, கன்னடப் பகுதிகளில் சம்ஸ்கிருதக் கல்வெட்டுகள் மிகுதி. தமிழ்நாட்டில் தமிழ்க் கல்வெட்டுக்களே மிகுதி.

**இரு மதிப்பெண் வினாக்கள்**

1. திராவிட எவ்வகை மொழிநிலைகளைச் சார்ந்தவை?

    ஒட்டு நிலை

2. திராவிட மொழிப் பேச்சு வழக்கில் மெய்யொலிகள் எவ்வாறு வழங்கப்பெறும்?

    ஒலித்துணை உயிர்கள் பெற்று

3. ஒன்பது எனும் சொல் தெலுங்கில் எவ்வாறு வழங்கப்பெறுகின்றது?

    தொம்மிதி

4. பத்து கன்னடத்தில் எவ்வாறு திரிந்துவழங்கும்

    ஹத்து

5. ழகரம் எவ்வெம்மொழிகளில் வழங்கப்படுகின்றது?

    தமிழ், மலையாளம்

6. ஒருமை, இருமை, பன்மை என்ற அமைப்பை உடைய மொழி எது?

சம்ஸ்கிருதம்

குறிப்பு

7. முன்னிலையாரை உளப்படுத்தியும் உளப்படுத்தாதும் சுட்டும் தன்மைப் பன்மை வடிவங்கள் எம்மொழிகளுக்கு உரியவை?

திராவிட மொழிகள்

8. வடமொழியைத் தற்சமம், தற்பவம் எனப் பகுத்து ஏற்ற மொழி எது?

தமிழ்

9. தமிழில் ஒரு பொருளைக் குறிக்கும் பல சொற்கள் பிற திராவிட மொழிகளில் தனிச் சொற்களாக உருப்பெற்றமைக்குச் சான்று தருக.

வீடு தமிழ்
இல்
மனை
குடில்
இல்லு - தெலுங்கு
மனெ - கன்னடம்

## குறுவினா

10. திராவிட மொழிகள் ஒரு மூல மொழியின் மண்டிலத் திரிபு மொழிகள் ஆகா என்பதை விளக்குக.
(ஒரு மொழி அது வழங்கும் பிரதேசத்திற்கு ஏற்ப என்பது முதல் கொள்ளத்தக்கன என்பதுவரை)

## பெருவினாக்கள்

11. திராவிட மொழிகளின் தனித்தன்மைகள் என்பது குறித்துக் கட்டுரைக்க.
திராவிட மொழிகளின் தனித்தன்மைகள் என்னும் தலைப்பின் கீழுள்ள செய்திகள்

குறிப்பு

12. வடமொழிக்கும் திராவிட மொழிகளுக்கும் உள்ள வேறுபாடுகள் குறித்து ஒரு கட்டுரை வரைக.
திராவிடமொழி - வடமொழி வேறுபாடுகள் என்னும் தலைப்பின் கீழுள்ள செய்திகள்

13. திராவிட மொழிகளில் மூலத் திராவிடத்துடன் நெருங்கிய உறவுடையது தமிழ் என்பதை நிறுவுக.
மூலத் திராவிடத்துடன் நெருங்கிய திராவிடமொழி என்னும் தலைப்பின் கீழுள்ள செய்திகள்

# கூறு 4

## ஒலி பிறப்பு – உயிரொலி மாற்றம்

மொழி என்பது பேச்சினால் நிலைபெறுகின்றது, பேச்சின்றேல் மொழியில்லை. பொருளை உணர்த்தும் ஒழுங்குபட்ட ஒலியின் திரட்சியே பேச்சு. ஒரு மொழி பேசும்போது கேட்போரும் அம்மொழியை உணர்ந்துகொள்வது என்பது அம்மொழி ஒலிக்கூட்டங்களின் பொருளை உள்ளவாறு உணர்வதாகும். மொழியின் குறியீடுகளாக அமைபவை பேச்சும் எழுத்தும் . ஒவ்வொரு மொழிக்கும் அடிப்படையான ஒலிகள் உண்டு. இவ்வொலிகள் நுரையீரல், குரல்வளை, ஒலித்தசைகள், நாக்கு, இதழ், அண்ணம் மூக்கறை ஆகியனவற்றைக் கருவிகளாகவும் பிறப்பிடங்களாகவும் கொண்டு பிறக்கின்றன. நுரையீரலிலிருந்து எழும் காற்று முற்சுட்டிய உறுப்புக்களில் தொழிற்பட்டு, வேறுவேறு ஒலியாய்ப் பிறப்பது மொழிக்குரிய ஒலியின் தோற்றம் ஆகும். மொழியின் பேச்சொலிகளிலிருந்து அடிப்படை ஒலியன்கள் வருவிக்கப்பட்டுள்ளன.

### உயிரொலிகள்

நுரையீரலிலிருந்து எழும் காற்று, வாய்ப்பகுதிக்கு வந்து தடையின்றி வெளியேறும்போது நா, இதழ் அமைவின் வேறுபாட்டால்

பல்வேறு உயிரொலிகளாகப் பிறக்கின்றன. உயிரொலிகள் குரல்வளையில் ஒலிப்பைப் பெறுகின்றன. நாவின் நீட்சி, இதழ் குவிதல் ஆகியவற்றால் உயிரொலிகள் வகைப்படுத்தப்பெறும்.

தமிழ் நெடுங்கணக்கில் அமைந்த உயிரெழுத்துக்கள் பன்னிரண்டு ஆகும். இவை குறில் என்றும் நெடில் என்றும் வகைப்படுத்தப் பெற்றுள்ளன. அ, இ, உ, எ, ஒ ஆகியன குறிலாகவும் ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ ஆகியன நெடிலாகவும் அமைந்துள்ளன. இவற்றுள் ஐகாரமும் ஔகாரமும் சந்தியக்கரம் எனும் ஈருயிர்க் கூட்டிணைவு (அஇ அஉ ) எனலாம். மேலும் அய், அவ் என்றும் இவை வழக்கில் வருவதால் மொழியியல் அடிப்படையில் இவற்றைத் தனி ஒலியன்கள் எனத் தக்கன அல்ல. இவற்றை நீக்கி ஏனையனவற்றை அடிப்படைத் திராவிட ஒலியன்கள் எனலாம். இவ்வகையில் ஐந்து குறில் ஒலியனுக்கு நிகராக ஐந்து நெடில் ஒலியன்கள் அமைந்துள்ளன.

| | முன் | நடு | பின் |
|---|---|---|---|
| உயர் | இ | | உ |
| இடை | எ | | ஒ |
| கீழ் | | அ | |

உயிரொலிகளில் அ, ஆ ஆகியன வாய் அங்காந்த நிலையில் நா படிந்திருக்கும் நிலையில் பிறப்பன - நடு உயிர்கள்.

இ, ஈ ஆகியன நாக்கு முன்னோக்கி மேல் எழும் நிலையில் பிறப்பன - முன்னுயிர்கள்

உ, ஊ ஆகியன நா பின்னோக்கி மேல் எழும் நிலையில் பிறப்பன - பின்னுயிர்கள்

எ, ஏ ஆகியன இடை முன்னுயிர் என்றும் ஒ, ஓ ஆகியன இடைப் பின்னுயிர் என்றும் குறிக்கப்பெறும். ஒலிக்கையில் இதழமைவு பற்றி உ, ஊ, ஒ, ஓ ஆகியன இதழ் குவி உயிர்கள் என்றும் இ, ஈ. எ. ஏ ஆகியன இதழ் விரி உயிர்கள் என்றும் குறிக்கப்பெறும். ஒலிப்பு அளவை ஒத்து குறில், நெடில் என்ற பகுப்பும் முற்சுட்டப்பட்டது.

ஒலியின் நீட்சியைத் தனி ஒலியன்கள் என்று கொள்வது திராவிட மொழிகளின் தனிச்சிறப்பியல்பு ஆகும்.

குறிப்பு

மொழிநூலார் யகரத்தையும் வகரத்தையும் அரையுயிர் என்பர். உயிர்த்தன்மை உடைய பிறப்பு முயற்சியால் இவை உடம்படுமெய்யாகப் பயன்படுகின்றன.

## மூக்கின உயிர்கள்

மூக்கின உயிர்கள் உயிரொலிகள் பிறக்கும்போது அண்ணத்தின் பின் தசைப்பகுதி மூக்கறை வாயிலை அடைப்பதால் காற்றுவாய் வழியாக வெளியேறும். சிலவேளைகளில் பின் அண்ணத்தசைப்பகுதி முற்றிலும் தடுக்காதுவிடின் காற்று வாய்றை, மூக்கறை இரண்டின் வழியாகவும் வெளியேறும். இவ்வகையில் தோன்றும் உயிரொலிகளை மூக்கின உயிர்கள் என்பர்.

வந்தான் என்பதுபேச்சு வழக்கில் வந்தா(ன்) என இறுதி மூக்கின ஒலி கெட்டு வழங்கும்போது அதற்கு முந்தைய உயிரொலி மூக்கின ஒலிச் சாயலைப் பெறுகின்றது. புளூம்∴பீல்டு ஒலிப்பு முயற்சியின் சுருக்கமே இவ்வாறு மூக்கின ஒலிகள் தோன்றுவதற்குகுக் காரணம் என்கின்றார்.

தமிழில் உள்ளதுபோல ஏனைத்திராவிட மொழிகள் தனி ஒலியன் எனத்தக்க மூக்கின ஒலிகளைப் பெற்றிருக்கவில்லை.

அவன், அவள் என்பன பேச்சு வழக்கில் வரும்போது ஈறுகெட்டு அவ(ள்) அவ(ன்) என வந்தாலும் மூக்கின ஒலித் தனித்த பால்வேறுபாட்டை உணர்த்திவிடுகின்றது. அதாவதுமூக்கின ஒலியன் ஆண்பாலை உணர்த்துவதால் தனி ஒலியன் தன்மையைப் பெறுகின்றது எனலாம்.

### மெய்யொலிகள்

நுரையீரலில் எழும்காற்று வாய்ப்பகுதியில் தடைப்படும்போது மெய்யொலிகள் பிறக்கின்றன. இலக்கணிகள் இவற்றை வல்லினம் என்றும் மெல்லினம் என்றும் இடையினம் என்றும் வகைப்படுத்துவர்.

க ச ட த ப ற ஆகியன வல்லினம் என்றும் ங, ஞ, ண, ந, ம, ன மெல்லினம் என்றும் யரலவழள இடையினம் என்றும் சுட்டப்பெறும். இவ்வகை ஒலியன்கள் திராவிட மொழிகளில் ஒரு சீராக வழங்காவிடினும் ஒலியன்முறைவைப்பில் ஒத்த முறையைக் காணமுடிகின்றது. ஒவ்வொரு வல்லின ஒலியை அடுத்து மெல்லொலியும் பின் இடையின ஒலிகளும் வழங்கும்வகையில் அமைத்துக்கொண்டமை எண்ணத்தக்கது.

மொழியியல் வல்லுநர்கள் மெய்யொலிகளை ஒலிப்பிடம் ஒலிப்புமுயற்சி ஆகியவற்றின் அடிப்படையில் வகைப்படுத்தி உரைப்பர். நுரையீரற் காற்று மூக்கறையில் வெளிப்படுகையில் மூக்கொலிகளும் வாயறையில் வெளிப்படும்போது ஏனை ஒலிகளும் இவ்விரண்டின் வழியாக வெளிப்படுகையில் மூக்கின ஒலிகளும் பிறக்கின்றன.

க, ங ஆகியன நாவின் பின் பகுதியும் பின் அண்ணமும் தொடப் பிறக்கின்றன - இவைகடையண்ண ஒலிகள் (ஏநடுயுசு ) ச,ஞ ஆகியன இடைநாவும் இடையண்ணமும் பொருந்தப் பிறக்கின்றன - இவை பின்னண்ண ஒலிகள் (palatal)

ட,ண ஆகியன நாவின் நுனிவளைந்து முன்னண்ணத்தை வளைந்து தொட்டுப்பிறக்கும் - இவை நாவளை ஒலிகள் (சுநவசழகடநஒ) த, ந ஆகியன நாவின் நுனிப்பகுதி பல்லின் அடிப்பகுதியைப் பொருந்தப் பிறக்கும் - இவை பல்லின ஒலிகள் (னுநவெயட ஊழளெழயெவள)

ப, ம ஆகியன இதழிரண்டும் இயையப் பிறக்கும் - இவை இதழொலிகள் (டீடையடியைட) இடையண்ணப் பகுதியில் யகரம் பிறக்கும். வகரம் பல்லும் இதழும் இயையப் பிறக்கும் இது பல்லிதழின ஒலி ஆகும் . (Labio Dental)

ற,ன ஆகியன முன் அண்ணத்தில் நா பொருந்திய நிலையில் பிறக்கின்றன - இவை முன்னண்ண ஒலிகள் (யுடஎநழடயச) றகரம் வருடுவதால் முன்னண்ண ஆடொலி (Trill) என்று தனித்துக் குறிக்கப்பெறும்.

ரகரம் முன்னண்ணத்தை ஒற்றுவதால் பிறக்கும் (Alvelor Flap) . ல, ள, ழ, ர ஆகியன நாவளைந்து அண்ணத்தைத் தொடக் காற்று

இருமருங்கும் பிரிந்து செல்வதால் பிரிவளியின ஒலிகள் என்றும் கூறப்பெறும். (Lateral)

குறிப்பு

## திராவிட மொழி ஒலியன்கள்

*அ

நீலகிரியில் வழங்கும் தோடாவைத்தவிர ஏனை மொழிகளில் அகர ஒலியில் திரிபு இல்லாமல் வழங்கப்பெறுகின்றது. இவ்வொலிக்கு இணையாக ஓவும் - பர்ஜியில் சில சொற்களில் எகரமும் வழங்கப் பெறுகின்றன.

| தமிழ் | மலையாளம் | தெலுங்கு | கன்னடம் | கோடா | தோடா | கொடகு | துளு | பர்ஜி | கடபா | காண்ட் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பன்றி | anni | ndi | ndi | paj | pody | pandi | panji | pend | pand | panri |

*ஆ

அகரத்தைப் போலவே தோடாவிலும் பர்ஜியிலும் மட்டும் ஆகாரம் வேற்றொலியாகத் திரிந்துள்ளது. ஏனை மொழிகளில் ஆகார ஒலியன் அதே பொருள் சுட்டும்சொற்களில் மாற்றமின்றி இடம்பெற்றுள்ளது. தெலுங்கில் சிலவடிவங்களில் இத்திரிபு உள்ளது.

| தமிழ் | மலையாளம் | தெலுங்கு | கன்னடம் | கோடா | தோடா | கொடகு | துளு | ர்ஜி | காண்ட் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| கால் | மயுட | மயுடர | மயுடட | மயுட | மழுட | - | மயுசுர | மநுட | மயுட |
| ஆறு | யுசரபய | யநசர | யயச | யச | ழசு | ய-ச | புசரனெ | ன | சயயெய |

## முன்னுயிர்கள்

*இ

தோடாமொழி தவிர ஏனையவற்றில் இகர ஒலியன் இகரமாகவே உள்ளது. தோடாவின்சில சொற்களில் நீண்டுஒலிக்கின்றது.

| **தமிழ்** | **மலையாளம்** | **தெலுங்கு** | **கன்னடம்** | **தோடா** | **கொடகு** | **துளு** | **பர்ஜி** | **கோண்ட்** |
|---|---|---|---|---|---|---|---|---|
| சிக்கு | cikkuka | cikku | ikku | tIk | cikk | sikkuni | cirng | jirk |
| வில் | vil | villu | bil | PIs | bil | illu | vil | vil |

குறிப்பு

* ஈ

திராவிட மொழிச் சொற்களில் ஈகார ஒலியன் திரிபின்றி வழங்குகின்றது.

| தமிழ் | மலையாளம் | தெலுங்கு | கன்னடம் | தோடா | கொடகு | துளு | பர்ஜி | குயி |
|---|---|---|---|---|---|---|---|---|
| நீர் | nIr | nIru /nIlu | nir | ni-r | ni-r | nir | nIr | niru |

## பின்னுயிர்கள்

*உ

தோடாவைத் தவிர எஞ்சியமொழிகளில் உகரமும் தோடாவில் றை உம் றய உம் காணப்படுகின்றன.

| தமிழ் | மலையாளம் | கன்னடம் | தோடா | துளு |
|---|---|---|---|---|
| உதிர் | uthiruka | udir | wiΘ | uduruni |
| உடல் | util | odal | wirt | udalu |
| உறங்கு | urannuka | warx | orangu | oreguni |

* ஊ

திராவிட மொழிக்குடும்பத்தின் எல்லா மொழிச் சொற்களிலும் ஊகார ஒலியனில் திரிபில்லை.

| தமிழ் | மலையாளம் | கன்னடம் | தோடா | கோடா | கொடகு | துளு | தெலுங்கு | பர்ஜி |
|---|---|---|---|---|---|---|---|---|
| யுல் | nUl | nUl | nu.s | nu-l | nu*ll | nUlU | nUlU | nUl |

## இடை முன்னுயிர்கள்

*எ

எல்லாச் சொற்களிலும் எகரமாகவே உள்ளது. தோடாவில் பெரும்பான்மை ஓ ஆகவும் பர்ஜியில் சில சொற்களில் அ ஆகவும் பிராகூயி மொழியில் இ அல்லது அ ஆகவும் உள்ளது பிராகூயி மொழியில் எகரக்குறில் வடிவமில்லை.

| தமிழ் | தோடா | கோடா | கன்னடம் | துளு | தெலுங்கு |
|---|---|---|---|---|---|
| எழு | od- | eRv | eR | erkuni | le |
| நெய்த்தோர் | netsxar | nets | nettaru | nettru | nethuru |

குறிப்பு

*ஏ

ஏகாரம் எல்லா மொழிகளிலும் ஏ ஆகவும் கோடாவில் ஓ ஆகவும் பர்ஜியில் ஆ ஆகவும் உள்ளது.

| **தமிழ்** | **மலையாளம்** | **கன்னடம்** | **தோடா** | **கோடா** | **துளு** | **தெலுங்கு** | **குயி** |
|---|---|---|---|---|---|---|---|
| தேறு | teRuka | tEru | tOr | tEr | tETu | tEru | tEr |
| வேறு | vEr | bEr | pOr | ve-r | bEru | vEru | bEri |

## இடை பின்னுயிர்கள்

*ஒ

எல்லாத் திராவிட மொழிகளிலும் ஒகரம் ஆகவும் தோடா மொழியில் றய ஆகவும் றஜ ஆகவும் ஐ ஆகவும் இருக்கும். பிராகூயி மொழியில் ஒகரம் உகரம் அல்லது அகரமாக வரும். பிராகூயி மொழியில் ஒகரக்குறில் இல்லை.

| **தமிழ்** | **மலையாளம்** | **கன்னடம்** | **தோடா** | **கோடா** |
|---|---|---|---|---|
| தொடு | toduka | toDu | twaD | toRv- |

*ஓ

அனைத்துத் திராவிட மொழிகளிலும் ஓ ஆகவும் தோடாவில் அருகியும் வரும். சிலவிடங்களில் றய ஆகவும் றஜ ஆகவும் ஐ ரு ஆகவும் மட்டுமே உள்ளன. மாண்டாவில் ரு எனக் காணப்படுகின்றது.

| தமிழ் | மலையாளம் | தோடா | கோடா | கன்னடம் | கொடகு | துளு | தெலுங்கு | கோலமி |
|---|---|---|---|---|---|---|---|---|
| கோல் | மழுட | மறஜள | மழுட | மழுட | மழ-டட | மழுடர | மழுடய | மழுடய |
| | நாய்கி | பர்ஜி | பெங்கோ | மாண்டா | கோண்டா | குயி | கூவி | |
| | மழுட | மழுட | மழுட | மருட | மழுட | மழுனுர | மழுடர | |

## உயிரொலி மாற்றங்கள்

### உயிரொலித் திரிபு

ஒரு மொழியில் வழங்கும் உயிரொலியன்கள் வேற்றொலியாகத் திரிந்து வழங்குவது இயல்பான ஒன்று. தமிழ்மொழியிலேயே பேச்சிற்கும் எழுத்திற்கும் இடையே இத்தகைய திரிபுகள் இருப்பதைக் காணலாம்.

குறிப்பு

உரல் - ஒரலு எனவும் உலகம் - ஒலகம் எனவும் உகரம் திரிந்து ஒகரமாக ஒலிக்கக் காணலாம். இதேபோல இலை, இறங்கு, இளம், திரை, நினை ஆகியவற்றில் இகர ஒலியன் மருவி எல, எறங்கு, எள, தெரெ, நெனெ என வழங்கவும் காண்கின்றோம். இதுபோன்ற நிலையை மலையாள மொழியிலும் காணலாம். ஆனால் தெலுங்கு கன்ண்ட மொழிகளில் அவ்வாறு வழங்குவதில்லை.

| தமிழ் | மலையாளம் | கன்னடம் | தெலுங்கு | பேச்சுத் தமிழ் |
|---|---|---|---|---|
| இலை | ila | ele | - | எலெ |
| இறங்கு | iRannu | eRagu | eRagu | எறங்கு |
| நினை | ninaiyu | nene | - | நெனெ |
| திரை | tira | tere | tere | தெரெ |
| உடல் | uTal | oDalu | oDalu | ஒடலு |
| உறை | uRa | oRe | oRa | ஒறெ |
| குடை | kuTa | koDe | goDugu | கொடெ |
| முதல் | mutal | modalu | modalu | மோத |

இங்குச் சுட்டப்பெற்ற சொற்களில் எவை பழைய சொற்கள் என்ற எண்ணம் வருகையில் தமிழ்ச்சொற்களே கன்னடம், மலையாளம், தெலுங்கு ஆகிய மொழிகளில் திரிந்திருக்கும் என்ற எண்ணுதல் உண்டு. தமிழின் காலப் பழைமை கருதி அவ்வாறு எண்ணலாம். பேச்சுத்தமிழ் ஒலிகள் பிறமொழிச் சொற்களுடன் நெருங்கிய உறவுடைய ஒலிகளாக அமைந்திருப்பதும் ஒரு காரணம். ஆனால் அவ்வாறு எண்ணுதல் அத்துணை பொருத்தமின்று.

| தமிழ் | கன்னடம் | தெலுங்கு | பேச்சுத் தமிழ் |
|---|---|---|---|
| இலங்கு | | | எல் (ஒளி) |
| சிவப்பு | kem | | செம் |
| பிணவல் | pen | | பெண் |
| விளங்கு | | | வெள் |
| உடை | ode | | ஒடி |
| உளவு | oLavu | oLavu | ஒளி(த்தல்) |
| | | | கொய் |
| குயம் | | | (அரி) |
| துயங்கு | | | தொய் |

குறிப்பு

மேற்சுட்டிய சொற்களில் தமிழ் மொழி எகரம் ஒகரத்திரிபுகளைக் காட்டும் (இலங்கு - எல், சிவப்பு - செம், செவப்பு) இச்சொற்கள் அகர ஒட்டுக்களுடன் இணையும்போது இகரம் உகரமாகவும் எகரம் உகரமாகவும் வருதலால் எகர, ஒகரங்களே பழைய வடிவங்கள் என்பதைக் காட்டும் என பர்ரோ குறிக்கின்றார். எனவே, சிவப்பு, பிணவல் ஆகியவற்றில் காணும் இகரம் பழமையானது அன்று; இவை செவப்பு, பெண் போன்ற சொற்களிலிருந்து இகரமாக மருவியிருக்கும். இவ்வாறே உடை உளவு துயங்கு ஆகியவற்றில் உள்ள உகரமும் பழமையானது அன்று. பேச்சில் வழங்கும் ஒடெ, ஒளவு ஆகியவற்றில் வழங்கும் ஒகரமே பழமையானது என்பர்.

இக்கருத்திற்கு மாறாக இகர உகரங்களே தொன்மையானவை இவையே எகர, ஒகரங்களாகத் திரிந்தன. இவ்வாறுமாறும் நிலை மூலத் தென் திராவிட மொழிகளில் பிரித்தறிய முடியாத நிலையில் மயங்கிக் கிடக்கின்றது தமிழ் மலையாளம் ஆகிய மொழிகளில் சொல்லின் இரண்டாம் எழுத்தாக அகர ஒலி வரின் முதல் எழுத்தாக இகர, உகரமும் தெலுங்கு கன்னடத்தில் இரண்டாம் எழுத்தாக அகர ஒலிவரின் முதலெழுத்தாக எகர, ஒகரமும் வருகின்றன என ஜி.ஜான்சாமுவேல் விளக்குகின்றார்.

தமிழ் - இரண்டு

கன்னடம் - எரடு

## ஒலித்துணை உயிர்கள்

மொழியில் வழங்கும் சொற்களை அப்படியே ஒலிக்க இயலாத நிலையில் பேச்சு வழக்கில் சில திரிபுகள் ஏற்படும். மேலும் அடிப்படைச் சொற்களும் சில மாற்றங்களைப் பெற்று வரும் . இவ்வகை மாற்றங்களில் குறிப்பிடத்தக்கது உயிரொலியை மொழியிறுதியில் பெற்று வருவதாகும்.

திராவிட மொழிகளில் இடம்பெறும் உகரம் ஓர் எளிமையான ஒலி என்றும் மொழி உச்சரிப்பில் ஒலித்துணையாக வரும் என்றும் கால்டுவெல் குறிப்பிடுகின்றார். உயிரை இறுதியாகக் கொள்ளாத சொற்களை உச்சரிக்க ஏதுவாக உகரத்தைப் பயன்படுத்துதல் இம்மொழிகளில் பொதுமைப் பண்பாக உள்ளது. மேலும் தமிழ்ச் சொற்கள்

மெய்யைக் கொண்டுமுடிந்தால் அவற்றிற்கு இணையாக, மூலத் திராவிட மொழியிலிருந்து ஏனைத் திராவிட மொழிகளில் வழங்கும் சொற்கள் உகரத்தைப் பெற்று முடியும் தன்மையையும் காண்கிறோம். தெலுங்கில் எல்லாச் சொற்களும் ஒலிக்க ஏதுவாக உயிரைக் கொண்டு முடியும். அன்றேல் அவை உகரத்தைப் பெற்று முடியும்.

தெலுங்கு - கண்ணு (கண்), நெத்துரு (நெய்த்தோர்)

கன்னடத்தில் அகர ஈற்றுச் சொற்களும் உகரத்தைப் பெற்று முடியும் பண்பின.

கன்னடம் - கெலவு, பலவு

தமிழில் தொல்காப்பியம் ஆகார இறுதிச் சொற்கள் உகர பெற்று முடியும் என்று குறிக்கின்றது.

பலா - பலவு

நிலா - நிலவு

புறா - புறவு

சுறா -சுறவு

தமிழ்மொழியில் காணும் குற்றியலுகரமும் வல்லின மெய்களின்மீது மட்டும் ஊர்ந்துவருவதை ஒட்டி அடைப்பொலிகளை ஒலிக்க ஏதுவாக வந்து இணைந்த உகரமே குறுகி ஒலிக்கின்றது என்று மொழியாய்வாளர் கருதுகின்றனர். பேச்சுத்தமிழில் தமிழ்மொழிச சொற்களும் பிறமொழிச்சொற்களும் உகரம் பெற்று முடியக் காணலாம்

பாடு, பாக்கு, தெங்கு இவை குற்றுகர இறுதியாய் வந்தன.

கண்மணி - கண்ணுமணி

பொன்மணி - பொன்னுமணி

பஸ் - பஸ்ஸு

எனினும் இவை எல்லாச் சூழலிலும்வருவதில்லை. ஓரசையாக வரும் சொற்களில்மட்டுமே இவ்வாறு ஒலித்துணை உயிர்களைப் பெறுகின்றன.

கால் - காலு எனவும் கள்- கள்ளு எனவும் திரியலாம். பன்மை விகுதியான கள் அவ்வாறு திரிவதில்லை. மலையாளத்தில் இவ்வகை உகரம் இன்னும் குறுகி ஒலிப்பதாகவும் அதனை உணர்த்த அவ்வொலி

குறிப்பு

மேல் பிறைவடிவக் குறி பயன்படுத்துவதாகவும் கால்டுவெல் கூறுகின்றார்.

உகரமே அன்றி இகரமும் ஒலித்துணையாக வருவதையும் காணலாம்

காய் - காயி

வை - வையி

இவ்வாறு வரும் உயிரொலிகள் நிலைபேறற்றன. வருமொழியில் உயிர்வரின் அவை நீங்கிடுமென்று ஆண்டர்னோ என்னும் அறிஞர் கூறுகின்றார். இதனைத் தொல்காப்பியர் முன்பே

மெய்யீறெல்லாம் புள்ளியொடு நிலையல்

குற்றியலுகரமும் அற்றென மொழிப

என்று மெய்யைப்போல் புணரியலில் விதி கூறக்காணலா. நன்னுலார் இன்னும் விளக்கமுற

உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும்

என்பார்.

.உயிர் குறுகல்

திராவிட மொழிகளில் மூவிடப்பெயர்கள் முதலசையில் நெடில் எழுத்தாக அமையும்போது அப்பெயர்கள் வேற்றுமை வடிவாக மாறும்போது நெடுமுதல் குறுகி ஒலிப்பது இயல்பான ஒன்றாகும். தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு, துளு ஆகியவற்றில் இம்மாற்றங்கள் இடம்பெறக்காணலாம்.

| | |
|---|---|
| தெலுங்கு - | நேனு - நென்ன , நன்ன |
| தமிழ் | நீ - நின் |
| | தான் - தன் |
| குயி | ஆன் - அன் |

மூவிடப்பெயர்களே அல்லாமல் வினையடிச் சொற்களிலும் இவ்வகைத் திரிபைக் காணமுடிகின்றது. நெடிலை முதலாக உடைய பெயர்ச்சொற்கள் வினையாகத் திரியும்போது இத்தகைய மாற்றங்களைக் காணலாம்.

ஆர் - அரற்று

வினைப்பகுதியிலும் அவற்றோடு கால இடைநிலைகள், விகுதிகள் சேரும்போது நெடுமுதல் குறுகுவதுண்டு. இது எல்லாச்சூழலிலும் வருவதில்லை.

காண் - கண்டான்

பெயரடையாக வரும் எண்ணுப்பெயர்களில் முதலெழுத்தாக அமைந்த நெடில் எழுத்து குறுகியும் குறுகாதும் வருகின்ற நிலையைக் காணலாம்.

ஓர் - ஒரு

ஈர் - இரு

மூ - மு

சில எண்ணுப்பெயர்களும் பெயரடையாக வரும்போது நெடுமுதல் குறுகி வருவதுண்டு.

ஆறு - அறு

ஏழ் -எழு

பெயர்கள் பெயரடையாகவோ, வினையாகவோ மாறும்போது இத்தகு திரிபு ஏற்படுவதாக ஜிசான்சாமுவேல் கூறுகின்றார்.

மீன் (பெ) - மின் (வி)

பேர் (பெ) - பெருங்கல் (பெயரடை)

உயிரொலி நீட்சி

திராவிட மொழிகளில் முதலெழுத்தாக வரும் நெட்டுயிரொலி குறுகி ஒலிப்பதைப்போலவே குறில் ஒலி நீண்டுஒலிப்பதும் உண்டு. வினைச் சொற்களின் அடிப்படையில் பிறந்த பெயர்களில் இவ்வகை மாற்றத்தை அவதானிக்கலாம்.

உறு - ஊறு

பெறு - பேறு

சொல்லில் ஓரொலி கெடுமாயின் அதனை ஈடு செய்ய உயிர் நீண்டு ஒலிக்கும்.

மகன் - மான்

சேர மகன் - சேரமான்

அதியர் மகன் - அதியமான்

கேரள புத்திர எனவும் சத்தியபுத்திர எனவும் அசோகன் கல்வெட்டில் காணும் மொழிபெயர்ப்பை நோக்கினால் மகன் என்பதே மான் எனத் திரிந்தமையை உணரலாம்.

பகல் - பால்

குறிப்பு

பகுதி - பாதி

உயிர் இடம் பெயர்தல் (நிலை பெயரல்)

ஒரு சொல்லுக்குள் ஒலிகள் தமக்குள் இடம்பெயர்ந்து ஒலிப்பதை ஒலியிடம் பெயரல் ஆநவயவாநளளை என்பர். தமிழில் வழங்கும் சொற்கள் பிறமொழிகளில் ஒலியிடம் பெயர்ந்து ஒலிக்கின்றன.

| | | |
|---|---|---|
| தமிழ் | கொப்புள் | |
| தெலுங்கு | பொக்குளி | |
| மலையாளம் | பொக்குள் | |
| தமிழ் | அவன் | அ-வ்-அன் |
| தெலுங்கு | வாடு | வ்-அ-அடு |
| தமிழ் | இரண்டு | |
| தெலுங்கு | ரெண்டு | |

தமிழ்- உரல் பேச்சுத்தமிழ்- ஒரலு தெலுங்கு- ரோலு

தெலுங்கில் னி என்னும் வேற்றுமை உருபு அதி, இதி என்னும் சுட்டுச்சொற்களுடன் பின்னொட்டாகச் சேரும்போது இறுதி இகரம் கெட்டு, ஒலியிடம்பெயர்ந்து நீண்டு ஒலிக்கும்.

அதி - னி தானி

நடுத்திராவிட மொழியில் மொழி முதல் வாரா எழுத்துக்கள் முதலெழுத்தாக வருவது மூலத்திராவிட மொழியில் உள்ள ஒலிகள் இடம்பெயர்தலால் ஏற்பட்ட விளைவு ஆகும்.

தமிழ்மொழியில் சிவிறி - விசிறி, தசை - சதை - மிஞிறு - ஞிமிறு எனவரும் ஒலியிடம் பெயர்தலையும் இங்குச் சுட்டலாம்.

உயிரொலி இயைபு

இருவேறுபட்ட ஒலிகள் இணைந்து வரும்போது ஒலிகளை ஒலிக்கும் முறை ஒத்திசைவு கருதி, ஒலிப்பின் எளிமை கருதி ஓரொலி வேறு உயிராக ஒலிக்கலாம். இவ்வகை ஒலிமாற்றம் சித்திய, பினிசிய மொழிகளிலும் காணப்படுகின்றன. இம்முறை தமிழில் பேச்சுத்தமிழில் பரவலாகக் காணலாம்

பேச்சுத்தமிழ் கத்தி - கு - கத்திக்கு- -பிடி -கத்திக்கிப்பிடி

| | |
|---|---|
| தெலுங்கு | கத்தி - லு - கத்தலு |
| | தானி - கு - தானிகி |
| | ஆவு- னி - ஆவுனு |

உடம்படுமெய்

தமிழில் இரு உயிர்கள் இணைந்து வருவதில்லை. அவ்வாறு வரின் உடம்படுமெய் தோன்றும். வடமொழிகளில் இரு உயிர் வரின் அவை நீண்டு ஒலிப்பதோ வேற்றுயிராகத் திரிந்தோ வரும்.

தொல்காப்பியருக்கு முன் இவ்வாறு இரு உயிர்கள் இணைந்துஒலிப்பில் விட்டிசைத்து ஒலித்திருக்கும் என்பதைக் குகைக் கல்வெட்டுத் தொடர்கள் உணர்த்தும்.

நிகமத்துஓர் கொட்டிஓர்

தொல்காப்பியர்,

எல்லாமொழிக்கும் உயிர்வருகாலை
உடம்படுமெய்யின் உருபுகொளல் வரையார்

என்று குறிப்பிட்டாலும் இன்னின்ன ஒலிகள் முன் உயிர்கள் வரின் இன்ன உடம்படுமெய் தோன்றும் என்பது பிற்கால வீரசோழிய காலமுதல் வந்த வழக்கு. இவ்வகை உடம்படு மெய் என்பது திராவிட மொழிகளில் பொதுமைப் பண்பாக அமைந்திருந்தமையைக் கால்டுவெல் நன்கு விளக்கியுள்ளார். தமிழில் யகர வகரங்கள் உடம்படு மெய்யாக வருகின்றன. இதைப்போலவே கன்னடத்திலும் யகரம் உகரம் உடம்படு மெய்யாக இடம்பெறக்காணலாம்

| | |
|---|---|
| தமிழ் | குடி ஆளுமை குடியாளுமை |
| தமிழ் | கடு இன் கடுவின் |
| கன்னடம் | குடி - ஓ - குட்யோ (குடித்தல்) |
| கன்னடம் | மகு - இன - மகவின - மக்வின் (குழந்தையின்) |

தெலுங்கின் எண்ணுப்பெயர்களில் ஹகரம் இணைப்பொலியாக வருகின்றது

பதி- ஐது - பதிஹைது -15

பதி - ஏடு - பதிஹேடு 17

திராவிட மொழிகள் போன்ற ஒட்டு நிலை மொழிகளில் இணைப்பொலியாக உடம்படுமெய் வருதல் தவிர்க்க முடியாது என்றும் இதனால் வேர்ச்சொற்களையும் அடிச்சொற்களையும் பகுத்தறிய முடியும் என்றும் ஜி.ஜான்சாமுவேல் விளக்குகின்றார்.

குறிப்பு

## இரு மதிப்பெண் வினாக்கள்

1. ஏனைத் திராவிட மொழிகளில் வழங்கும் அகரம் தோடாவில் எவ்வாறு வழங்குகின்றது?
   ஓகாரம்

2. உகர உயிர் வகரமாகத் திரிவது எந்த மொழியில்?
   தோடா

3. எகர, ஒகரக் குறில் எழுத்துப் பெறாத மொழி எது?
   பிராகூயி

4. தமிழில் வழங்கும் இகர, ஒகரங்கள் பிற மொழிகளில் எவ்வாறு வேறுபட ஒலிக்கும்?
   இகரம் எகரமாகவும் உகரம் ஒகரமாகவும்

5. உயிரொலி மாற்றங்கள் இரண்டனைச் சுட்டுக.
   உயிரொலித் திரிபு, உயிர் குறுகல், உயிர் நீடல், உயிரொலி இடம்பெயரல்

6. மகன் என்பது எவ்வாறு திரியும்?
   மான்

## குறுவினா

7. திராவிட மொழிகளில் உயிர் நீடல் என்பதை விளக்குக
   உயிர் நீடல் என்னும் தலைப்பின் கீழ் உள்ள செய்திகள்

8. சொற்களில் ஒலித்துணை உயிர்கள் தோன்றுவது குறித்தெழுதுக.
   ஒலித்துணை உயிர்கள் என்ற தலைப்பில் உள்ள செய்திகள்

9. ஒலியிடம்பெயரல் குறித்து விவரிக்க
   உயிர் இடம்பெயர்தல் என்னும் தலைப்பில் உள்ள செய்திகள்

10. உயிர் குறுகி ஒலிக்கின்ற பான்மையை விளக்குக.
    உயிர் குறுகல் என்னும் தலைப்பின் கீழ் உள்ள செய்திகள்

## பெரு வினா

11. திராவிட மொழிகளில் உயிரொலிகள் குறித்துக் கட்டுரைக்க.
    உயிரொலிகள் என்னும் தலைப்பின் கீழ் உள்ள செய்திகள்

12. திராவிடமொழிகளில் உயிரொலி மாற்றங்கள் குறித்துக் கட்டுரைக்க
உயிர் நீடல், உயிர் குறுகல், உயிர் இடம்பெயர்தல் ஆகிய தலைப்பிலான செய்திகள்

குறிப்பு

## கூறு 5

## மெய்யொலி மாற்றம் - உருபன்களும் சொல்லாக்கமும்

தமிழில் மெய்யொலிகள் வல்லினம், மெல்லினம், இடையினம் என்று பகுக்கப்பெறும். மொழியியல் அறிஞர்கள் மெய்யொலிகளை அவை பிறக்குமிடம், பிறக்கும் முறை நோக்கியும் பாகுபடுத்திக் கூறுவர். தமிழில் மொழியில் பதினெட்டு மெய்கள் வழங்கப்பெறுகின்றன.

எனினும் மூலத் திராவிட மொழியில் 16 மெய்களே இருந்திருக்கும் என்று அறிஞர் கருதுவர். ஞகரத்தை தனி மெய்யொலியாகப் பிறர் கொள்ளாத நிலையில் பி.எச்.கிருஷ்ணமூர்த்தி, எமனோ ஆகியோர் தனி ஒலியனாக மூலத்திராவிடத்தில் வழங்கியிருக்கும் என்று நிறுவினர். ழ, ள, ற, ன ஆகியன திராவிட மொழிகளுக்கேயுரிய சிறப்பெழுத்துக்களாகக் கொள்ளப்படுகின்றன.

| | இதழ் ஒலி | பல் ஒலி | முன்னண்ண ஒலி | வளைநா ஒலி | இடையண்ண ஒலி | பின்னண்ண ஒலி | முன்தொண்டை ஒலி |
|---|---|---|---|---|---|---|---|
| ஒலிப்பில் ஒலி | ͤ ப் | வ த் | வ | ட் | | ம க் | ங |
| ஒலிப்புடை ஒலி | டி ப் | ன த் | ன | ட் | | ப க் | |
| ஒலிப்பில் ஒலி | | È | | | உ ச் | | |
| ஒலிப்புடை ஒலி | | த | | | து ஜ் | | |
| ஒலிப்பில் ஒலி | க | ழு ளு | ஞ | ளு | ś | ஒ | ா |
| ஒலிப்புடை ஒலி | ß | கு ண | ண | | ண | | |
| வருடொலி | | | ச | சு | | | |
| மூக்கொலி | அ ம் | ெ | ெ | ண் ே | ῆ ஞ் | ŋ ங் | |
| பிரிவளி ஒலி | | | | டு ட | | | |
| இடையின ஒலி | எ வ் | | ணு | | ல | | |

மொழியியலார் கூறும் பல்வகை மெய்யொலிகளில் திராவிட மொழிகளுக்கே உரிய தனிச்சிறப்பிடம் உடைய ஒலிகள் வளை நா ஒலிகள் ஆகும். மேலும் மெய்யொலிகள் மொழிமுதலில் தனித்து வருவதில்லை. மாறாக உயிருடன் சேர்ந்துவருகின்றன. இரட்டை மெய் இணைவும் மொழிமுதலில் வராமல் மொழியிடையில் சேர்ந்துவருவதுண்டு. மூலத்திராவிடச் சொற்கள் ஒலியிடம் பெயர்ந்து திரிந்து வழங்கும் சொற்களில் மொழிமுதல் இரட்டித்து வருவதுண்டு

## .வல்லொலிகள்

மூ க் - பின்னண்ண ஒலி

பின்னண்ணத் தடையொலியாக வழங்கும் ககரம் மொழிமுதலில் வரும்போது ஒலிப்பில் ஒலியாகவே உள்ளது. மொழிமுதல் ககரம் இகரம், எகரம் போன்ற முன்னுயிர்களை அடுத்து வரும்போது அது இடையண்ண ஒலியாகிய சகரமாகத் திரிகின்றது. வட திராவிட மொழிகளில் முன்னுயிர்களை அடுத்து வரினும் இடையண்ண ஒலியாக மாறுவதில்லை. எனினும் உரசொலியாக வருவதுண்டு. தமிழ் மலையாளத்தில் ககரம் வளை நா ஒலிகளுக்கு முன் வரின் திரிவதில்லை.

கன்னடம் - கிவி

தமிழ் - செவி

தமிழ் - கிளி

தெலுங்கு - சிலுகா

தமிழ் -கண்

குருக் - ஒமுாய

மால்டோ -ஓரயரே - உரசொலியாகத் திரிதல்

மூலத் திராவிட பின்னண்ண ஒலி இடையண்ண ஒலியாகத் திரிதலைத் தெலுங்கில் காணலாம். எனினும் இத்திரிபு ஒலிக்குறிப்புச் சொற்களில் ஏற்படுவதில்லை

தெலுங்கு - கிலகில

கன்னட மொழியில் இவ்வாறு அண்ண ஒலியாதல் அருகி வரினும் மூலத்திராவிடத்தில் உள்ள ஒலிகளைக் கண்டுணரத் துணை செய்கின்றது,

கன்னடம் - கின்ன

தமிழ் - சின்ன

தெலுங்கு - சின்ன

இவற்றுள் கின்ன என்பதில் உள்ள பின்னண்ணத் தடையொலியே தொன்மையானது என்றும் அதுவே இடையண்ண ஒலியாகத் திரிந்திருக்கும் என்றும் அறிந்து கொள்ளலாம். வடமொழியில் தமிழ்ப் பெயர்கள் திரியும்போது இவ்வாறு இடையண்ண ஒலிகள் நிற்பதில்லை. அவை பின்னண்ண (கடையண்ண) ஒலிகளாக வழங்கப்படும்.

தமிழ் சீர்த்தி

வடமொழி -கீர்த்தி

தமிழ் - சேரல்

வடமொழி கேரள

தமிழில் ஐகாரத்தின் முன்வரும் ககரம் திரியாமலிருக்க தெலுங்கில் சகரமாகத் திரியும்.

தமிழ் - கைத்தல்

தெலுங்கு - சேது (கசப்பு)

- க்- மொழியிடை

தமிழில் எழுத்து வடிவில் ககரம் ஒன்று மட்டுமே இருப்பினும் அதுவே ஒலிப்பில் ஒலியாகவும் ஒலிப்புடை ஒலியாகவும் வழங்கும். திராவிட மொழிகளில் மொழிமுதலில் ஒலிப்பில் ஒலியாக ஒலிக்கும் ககரம் இரட்டித்து வரும்போது வல்லின ஒலியாகவும் மெல்லின மூக்கொலிகளை அடுத்து வரும்போது ஒலிப்புடை ஒலியாகவும் இரு உயிரொலிகளுக்கு இடையில் வரும்போது உரசொலியாகவும் வரும்.

-க்- பொது - உயிரொலியிடை - இரட்டித்தல் - தோடா - பர்ஜி - பிராகுய் மால்டோ

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| -ப | -ஒ - | -ம- - | ஒ- | -ப- -எ | மா | ங |
| தமிழ | மலையாளம் | கோடா | | தோடா | கொடகு | |
| | | | | | கோண்டி | கோண்டா |
| புகை | புக | பெக் | | pax | பொகெ | |
| | | | | | பொய | பொகோ |

## *ச்- இடையண்ண ஒலி

மூலத் திராவிட ஒலியுள் ஒன்றாகிய சகரம் மொழி முதலில் வரும்போது தமிழைப் பொறுத்தவரை ஸகரமாகவே ஒலிக்கின்றது.

மெல்லின மூக்கொலியை அடுத்து ஒலிக்கும்போது ஜ என ஒலிப்பிடை ஒலியாகவும் மொழியில் இரட்டிக்கும்போது மட்டும் முழுமையான தடையொலியாக ஒலிக்கின்றது. சகரம் இடம்பெற்ற சொற்கள் ஏனைத் திராவிட மொழிகளில் திரிந்து ஒலிக்கின்றன. தோடாவில் தகரமாகவும் பெங்கோ, மண்டா ஆகியவற்றில் ஹகரமாகவும் துளுவில் ஸகரமாகிய உரசொலியாகவும் வட திராவிட மொழிகளில் ககர ஒலியாகவும் ஒலிக்கக் காணலாம். வட திராவிட மொழிகளில் ககரமாகத் திரிவதை பின்னண்ண ஒலியாதல் என்பர். தென் திராவிட மொழிகளில் சகர மெய் கெட்டுவிடும் மொழிவழக்குகளும் உள்ளன.

| | |
|---|---|
| தமிழ் மலையாளம் - | ச் |
| கன்னடம் , துளு - | ஸ் |
| ஏனைத் தென் திராவிடம் - | Ø |
| தெலுங்கு கோண்டி- | Ø |
| தோடா - | த் |
| மண்டா பெங்கோ - | ஹ் |
| வட திராவிடம் - | க் |

மொழிமுதல் சகரம் கெடுதல்

தொல்காப்பியர் காலத்தில் சகரம் மொழி முதலில் இடம்பெறுவதில்லை. அ, ஐ, ஔ ஆகிய உயிருடன் சகரம் கூடி மொழி முதலாவதில்லை என்பதைத் தொல்காப்பியர்

சகரக்கிளவியும் அவற்றோரற்றே
அ ஐ ஔ என்னும் மூன்றலங்கடையே (தொல்.எழுத்.62)

என்னும் நூற்பாவில் இதனை விளக்குகின்றார். எனவே மொழிமுதலில் சகரம் வருதல் அருகிய வழக்காக இருந்திருக்கலாம். சகர ஒலி தென் திராவிட மொழிகளில் மட்டும் கெடுகின்ற நிலையையும் கெடாமல் வழங்கும் நிலையையும் பர்ரோ நன்கு ஆய்ந்துள்ளார். இதனால் இருவகையாகச் சகர ஒலி இருந்திருக்குமா என்னும் ஐயமும் எழுகின்றது. கோண்டியில் ஹகரமாகத் திரிந்தபின் அதுவும் கெட்டு விடுகின்றது. வடமொழிச் சொற்களைத் தமிழில் வழங்கும்போது சகரமும் ஸகரமும் கெட்டுவிடுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| தமிழ் | அரண் | அவை | அமணர் |
| சமஸ்கிருதம் | ஸரண் | ஸபா | ஸ்ரமண |

எனினும் சகரம் கெடாமல் வழங்கிய வடசொற்களும் தமிழில் நிலவின என்பதை நற்றிணையில் வரும் சாபம் எனும் சொல் உணர்த்தும்

| | | |
|---|---|---|
| தமிழ் | சாகாடு | சடை |
| சம்ஸ்கிருதம் | ஸகட | ஜடை |

என வரும் இடங்களில் தமிழின் சகரமே வடமொழியில் திரிந்திருக்கும் என்றும் இவை தமிழ்ச் சொற்களே என்றும் பர்ரொ கருதுகின்றார். கோண்டி, குயி ஆகியவற்றில் மொழி முதல் ஸகரம் சகரத்திலிருந்தே திரிந்திருக்கவேண்டும் என்றும் அவர் கருதுவார்.

தமிழ் - அணில்

குயி - சிருனி

துளு - சணிலு

முன்பே குறிப்பிட்டவாறு கி.மு. 3 ஆம் நூற்றாண்டில் பொறிக்கப்பெற்ற அசோகன் கல்வெட்டில் புறநானூற்று அரசன் பெயர் அதியமான் என்பது சதிய புத்ர என்று வழங்கப்பட்டுள்ளது. இதனால் தமிழில் வழங்கும் அதிய முற்காலத்தில் சதிய என்றே வழங்கியிருக்கும் என்றும் சகரம் மொழிமுதல் கெடும் மரபால் அதிய எனத் திரிந்திருக்கும் என்றும் ஆய்வாளர் கருதுவர்.

சகரம் கெடாமல் வருகின்ற திராவிட மொழிச் சொற்கள் சகரமாகவும் ஸகரமாகவும் ஒலிக்கின்றன. கன்னடம் தெலுங்கு துளு ஆகியவற்றில் இவ்விரு மாற்றொலிகளும் உள்ளன. சகரம் கெடும் நிலையை வட, நடுத் திராவிட மொழிகளில் காண முடிவதில்லை. திராவிட மொழிகளில் மொழிமுதல் ககரம், இடையண்ண ஒலியான சகரமாகத் திரிவதற்கு முன்பே சகரம் கெட்டுவிடும் நிலை தோன்றிவிட்டது. இடையண்ண ஒலியாகச் சகரமாகத் திரியும் வழக்கு வந்தபிறகு இம்மாற்றம் நிகழவில்லை. எனவே முற்குறித்த அசோகன் கல்வெட்டுக் காலத்திற்கு முன்பே இத்தகைய திரிபுகள் நேர்ந்திருக்கும் என்பது பர்ரோவின் கருத்தாக அமைகின்றது.

## -ச்- மொழியிடையில் சகரம்

முன்பே குறிப்பிட்டதுபோல சகரம் மொழிமுதலில் வரும்போது மூக்கொலியை அடுத்துவரின் ஜ ஆக மாறிவிடும். அதேநேரம் வடமொழி ஜகரம் தமிழில் வரும்போது ஸகரமாகவும் யகரமாகவும் திரியும்

குறிப்பு

மஞ்சள் - அயதெயட

வடமொழி ராஜா - தமிழ் - ராசா, ராயன்

மலையாளத்தில் மொழிக்கிடையிலும் கெடுவதை அரிசி அரி என வருவதுகொண்டு உணரலாம்.

கன்னடத்தில் உள்ள பெசர் என்னும் சொல்லின் சகரம் துளுவில் தகரமாகத் திரிந்து புதர் என வழங்குவதாகக் குண்டர்ட் கூறுகின்றார். ஒலி இரட்டிக்கும் இடையில் சகர ஒலி (ச்ச்) வல்லினமாக ஒலிக்கும் இயல்பை தோடா கோடா மொழிகளில் காண இயலாது.

| | | |
|---|---|---|
| -ச்- | தமிழ், மலையாளம் தெலுங்கு இரட்டிக்கும் இடங்களில் - | |
| -ச்- | தமிழ், தெலுங்கு, கன்னடம், கொலாமி நாயகி, | |
| | பர்ஜி, மால்டோ, பிராகூயி இரட்டிக்காதவிடத்து | - ஸ்- |
| | கோண்டி - குயி வட திராவிட மொழிகள் | - த்- |
| | துளு | - ஜ்- |
| | தமிழ், கொடகு, துளு, மலையாளம் | - ய்- |
| | பர்ஜி கடபா | -ஹ்- |

## *-ட்- வளைநா ஒலி

மொழிமுதல் ஒலிகளாக டகரம், ணகரம் ஆகியன திராவிட மொழிகளில் இடம் பெறுவதில்லை. டகர மொழி முதல் பிறமொழிச் சொற்கள் தமிழில் வரும்போது இகரத்தைப் பெறும். இவ்வொலி தமிழில் இரட்டிக்குமிடங்கள் தவிர ஏனையவிடங்களில் ஒலிப்பு-ஒலியாக ஒலிக்கின்றது. நாயக்கி, மண்டா, குயி, குவி போன்ற மொழிகளில் இது (சு) ஒலியாகவும், கோடா, தோடா, கன்னடம், கொடகு, துளு தெலுங்கு, கொலாமி, பர்ஜி போன்ற மொழிகளில் (னு) ஒலியாகவும், கடபா, கோண்டி, பிராகுயி ஆகிய மொழிகளில் (-ச-) ஒலியாகவும் ஒலிக்கின்றது.

| | | | |
|---|---|---|---|
| 1. | தமிழ் | - | மயனுந |
| | தோடா | - | மயசுவ |
| 2. | கன்னடம் | - | ரனுய |
| | கோண்டா | - | ரசரஅ |

**குறிப்பு**

## *-த்- பல்லினத் தடையொலி

தகரவொலி திராவிட மொழிகளில் திரிபின்றிப் பயின்றுவருதல் பெரும்பான்மையாகும்

| | | |
|---|---|---|
| தமிழ், மலையாளம், தோடா | - | தான் |
| தோடா | - | தோன் |
| தெலுங்கு, கொடகு, துளு | - | தானு |
| பிராகுயி | - | தேன் |

கன்னடம், துளு ஆகிய மொழிகளில் முன்னுயிர்களையடுத்து வரும்போது சிலவிடங்களில் 'ச' கரமாகவும் மாறுகின்றது.**-த்-**

மொழியிடையில் மூக்கொலிகளையடுத்து வரும்போது 'த' கர வல்லொலி ஒலிப்பு ஒலியாக மாறுகின்றது. தமிழின் வட்டார வழக்கில் உயிரொலிகளின் முன் தகரவொலி ரகரமாக மாறுமியல்பை டாக்டர் கால்டுவெல் குறிப்பிட்டுள்ளார்.

விதை > விரை

இவ்வாறே கன்னட மொழியிலுள்ள 'ad' என்னும் சாரியை 'அர்' என்று மாறக் காணலாம். இத்தகைய மாற்றம் பிராகிருத மொழியிலும் உள்ளது. தமிழ்மொழியின் பேச்சு வழக்கில் இவ்வொலி சில விடங்களில் 's' ஒலியாகத் திரிகின்றது. இவ்வொலி மாற்றம் மலையாள மொழியிலும் இடம் பெறுவதை குண்டர்ட் குறிக்கின்றார்.

பெரிது - பெரிசு

'ந' கர மெய்யோடு இணைந்து வரும் 'த' கர மெய் மலையாள மொழியிலும், தமிழ்மொழியின் பேச்சு வழக்கிலும் 'ச' கரமாகத் திரிவதைக் காணலாம்.

**எ.கா.** ஐந்து > அஞ்சு

பெயரெச்சச் சொற்களில் மொழியிடையில் இரட்டிக்குமிடங்களிலும் தமிழில் முன்னுயிர்களை அடுத்து வரும்போது அண்ண ஒலியாதலைக் காணலாம்.

குறிப்பு

வைத்து - வச்சு

சிரித்த - சிரிச்ச

உரித்த - உரிச்ச

கன்னடம், துளு போன்ற மொழிகளில் இது -o- ஒலியாகவும் கோண்டாவில் '-dd-' ஒலியாவும் குரூக் மால்டோ மொழிகளில் 'th' ஒலியாகவும், ஏனைய மொழிகளில் ஒலிப்பு ஒலியாகவும் திரியும்.

- த்- த்- (தமிழ், மலையாளம் - இரட்டிக்குமிடங்கள்)

-ன- (பெரும்பான்மைத் திராவிட மொழிகளில் ஒலிப்புடை ஒலியாக)

-ழ- (தோடா)

-னன- (கோண்டா)

-வா- (குரூக், மால்டோ)

## *-ப்- இதழின ஒலிப்பில் ஒலி

மொழிமுதலில் வரும் 'ப' கர ஒலி பெரும்பாலான திராவிட மொழகளில் திரிபின்றி ஒலிப்பில் ஒலியாகவே ஒலிக்கின்றது. இப் 'ப' கர ஒலி கன்னடத்தில் 'ஹ' என்று உரசொலியாகத் திரிகின்றது. திராவிட மொழிகளில் கன்னடத்தில் மட்டுமே இவ்வியல்பு காணப்படுகின்றது.

| | | | |
|---|---|---|---|
| எ.கா. | 1. தமிழ் | - | பத்து |
| | கன்னடம் | - | ஹத்து |
| | 2. தமிழ் | - | பாம்பு |
| | கன்னடம் | - | ஹாவு |

பழங்கன்னடத்திலும், கன்னடமொழியோடு நெருங்கிய தொடர்புடைய படகாமொழியின் வட்டார வழக்கிலும் இவ்வாறு பகரம் ஹகரமாகத் திரிவதில்லை. எனவே இவ்வழக்கு கி.பி 10-ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் கன்னடமொழியில் புகுந்திருக்க வேண்டும். மற்றொரு வட்டார வழக்கான தேவாங்கா கன்னடத்தில் மொழி முதலில் வரும் பகர வொலி கெட்டு விடுகின்றது.

| | | | |
|---|---|---|---|
| எ.கா. | 1. தமிழ் | - | பால் |
| | கன்னடம் | - | ஹாலு |
| | தேவாங்கா கன்னடம் | - | ஆலு |

குறிப்பு

மொழிமுதல் ‘ப’ தெலுங்கில் கூட்டுச்சொற்களில் ஓரினமாதலால் ‘ம’ கரமாகவும் திரியும்.

தமிழ் - பதி

தெலுங்கு - மிதி (தொம்மிதி)

தமிழில் சிலவிடங்களில் இது ‘வ’ கரமாகவும் மாறுகின்றது.

பகுத்தல் - வகுத்தல்

**-ப்-** மொழியிடையில் பகரம்

மொழியிடையில் மூக்கொலிகளையடுத்து பகரம் (b) ஒலிப்புடை ஒலியாக மாறுகின்றது. இரட்டிக்குமிடங்களில் மட்டுமே இது ஒலிப்பில் ஒலியாக ஒலிக்கின்றது. தமிழில் மொழியிடையில் வரும்போது இவ்வொலி மகரமாகத் திரிவதுண்டு. மலையாள மொழியிலும் இம்மாற்றம் ஏற்படுவதுண்டு.

எண்பர் - எண்மர்

## *-ற்- முன்னண்ண ஆடொலி

மூலத் திராவிட ‘ற’ கர ஒலி மொழி முதலில் இடம் பெறாது. இவ்வொலி தெலுங்கு, கன்னட மொழிகளில் பழைய இலக்கிய வடிவில் மட்டுமே காணப்படும். துளு மொழியில் இது ‘ஜ்’ என்று ஒலிப்பு ஒலியாகத் திரிகின்றது.

தமிழ் - ஆறு

துளு - ஆஜி

சிலவிடங்களில் துளு மொழியில் இது **D** ஒலியாகவும் திரியும்.

எ.கா. தமிழ் - நூறு

துளு - nuDu

தமிழ்மொழியின் பேச்சு வழக்கில் ர, ற ஆகிய ஒலிகள் மாறி மாறி பொருள் மாற்றமின்றி ஒலிக்கின்றன. இதன் இரட்டை ஒலி (**RR**) தெலுங்கில் ‘ண்ட்’ என்று மாறும்.

எ.கா தமிழ் - ஒற்றை

தெலுங்கு - ஒண்டி

தமிழ் பேச்சு வழக்கில் றகரம் தகரமாகவும் திரியும்.

ஒற்றை - ஒத்தை

குறிப்பு

காற்று - காத்து

இவ்வொலி கோடா. கொடகு ஆகிய மொழிகளில் 'ர' ஒலியாகவும் கொலாமி, நாயக்கி ஆகிய மொழிகளில் 'd' ஒலியாகவும் மாறுகின்றது. குயி மொழியில் 'j' 'ச' ஆகிய ஒலிகளாகத் திரிகின்றது. கோண்டா, பிராகுயி போன்ற மொழகளில் இது பெரும்பாலும் இரட்டித்து வருகின்றது. இது குருக், மால்டோ போன்ற மொழிகளிலும் 'ஸ' ஒலியாகவும் கடபா மொழியில் 'ய' ஒலியாகவும் மாறுகின்றது. தெலுங்கிலும், கன்னடத்திலும் 'ட' ஒலியாகத் திரியும்.

| | | |
|---|---|---|
| - ற் - | - ற் - | (பழந்தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு) |
| | -ர்- | (கோடா, கொடகு, துளு கொலாமி, நயக்கி, குயி, |
| | -o- | குவி, குருக், மால்டோ, பிராகுயி) |
| | -ர்ர்- | (துளு, நாயக்கி, பர்ஜி) (கோண்டி, பிராகுயி) |
| | -th- | (குயி) |
| | -ய்- | (கடபா) |
| | -ஸ்- | (குருக், மால்டோ) |

## மூக்கொலிகள்

*-ஞ்- இடையண்ண மூக்கொலி

'ஞ' கர மெய் மலையாளத்திலும், அரிதாகப் பழந்தமிழிலும், துளு மொழியிலும் மொழிக்கு முதலில் வருகின்றது. இம்மொழிகளில் பொருளை வேறுபடுத்திக் காட்ட இவ்வொலி துணை செய்வதால் இதனைத் தனி ஒலியனாகக் கொள்ளவேண்டும். தற்கால மலையாளத்தில் இவ்வொலி மிகுந்துள்ளது. தற்கால மலையாளத்தில் ஞகரம் வழங்குமிடமெல்லாம் தமிழில் நகரம ̇ வழங்கப்படுகின்றது. எனவே ந-கரஒலியே மலையாளத்தில் ஞகரமாய் திரிந்து இருக்கக் கூடும்

மலையாளம் - ஞான் > தமிழ் - நான்/யான்

ஞாலுதல் என்பதற்குத் தொங்குதல் என்னும் பொருள். இது இன்றைய பேச்சுவழக்கில் நாண்டு எனவருதலால் தமிழிலும் இவ்வகைத் திரிபு இருந்தமையை அறிய முடிகின்றது. பழந்தமிழ் 'ஞ' கரம் வழங்கிய இடங்களிலும் தற்காலத் தமிழில் 'ந' கரம் இடம் பெறுகின்றது.

ஞாண் - நாண்

ஞமலி - நாய்

ஞண்டு - நண்டு

ஞாயிறு - நாயிறு

பழந்தமிழில் 'ஞ'கரம் 'ஞெ' கரமாக மாறுவதைச் சங்க இலக்கியங்களில் காணலாம்.

ஞண்டு > ஞெண்டு

திராவிட மொழிகளில் 'ஞ' கர ஒலி, மலையாளத்தில் மட்டும் தொன்மையான வழக்குச் சிதையாமல் இருந்து வருகின்றது. மலையாள வட்டார வழக்குகளில் மட்டும் 'ஞ' - 'ஞெ' ஒலியாகத் திரியும். தமிழிலும் மலையாளத்திலும் 'ஊ' கார உயிரின் முன்னர் ஞகரம் வருவதில்லை. ஆ, எ, ஒ ஆகியவற்றுடன் மட்டுமே ஞகரம் இணைந்து மொழி முதலாக வரும் என்றார் தொல்காப்பியர் (ஞாலம், ஞெண்டு, ஞொள்கிற்று) எனினும் புறநானூற்றில் 'ஞமலி' என்ற சொல்லும் திருமுருகாற்றுப்படையில் 'ஞரல்' என்னும் சொல்லும் அகரத்துடன் கூடி மொழி முதலாக இடம் பெறுகின்றன. ஞமலி என்பதை நச்சர் திசைச்சொல் எனக்குறிக்கின்றார். மொழியிடையில் 'ச' கர ஒலிக்கு முன்னர் வரும் 'ஞ' கரவொலி தெலுங்கு, கொலாமி, நாயக்கி ஆகிய மொழிகளில் 'ன' கர ஒலியாகத் திரிகின்றது.

எ.கா. தமிழ் - அஞ்சு

தெலுங்கு - an ju

*-ண்- வளைநா மூக்கொலி

வளைநா மூக்கொலியான ணகர வொலி திராவிட மொழிகளில் மொழி முதலில் வருவதில்லை. தமிழிலுள்ள 'ண' கர மெய் தெலுங்கில் 'ன' கர மெய்யாகக் காணப்படுகின்றது.

கண் - கன்னு

தமிழில் 'ன' கரம் வருமிடங்களில் மலையாளத்தில் 'ண' கர மெய் இடம் பெறுவதைக் காணலாம். (நினக்கு - நிணக்கு)

பேச்சுத்தமிழ் வழக்கில் சிலவிடங்களில் 'ண' கரம் 'ம' கரமாகத் திரிவதுண்டு.

எண்பது - எம்பது

இவ்வொலி கோண்டா, குவி போன்ற மொழிகளில் திரிபின்றிக் காணப்பட்ட போதிலும் ஏனைய நடுத்திராவிட மொழிகளிலும், வடதிராவிட மொழிகளிலும் 'ன' கரமாகத் திரிகின்றது. தமிழில் ண்ட் > ட்ட் என்று மாறுகின்றது.

எ.கா எண்டு > எட்டு

## *-ந்- பல்லின மூக்கொலி

மொழி முதலிலும் இடையிலும் இறுதியிலும் வருமொலியாக நகரம் தமிழில் வரினும் இறுதியில் அருகியே வரும். தெலுங்கு மொழியில் இது மகர மெய்யாக மாறுவதாகக் கால்டுவெல் குறிப்பிடுகின்றார். தகரத்தின் முன்வரும் நகரம் ஞகரமாகத் திரிந்து தகரத்தையும் இனவல்லினமான சகரமாகத் திரிக்கின்றது. இம்மாற்றம் பெரும்பான்மை பேச்சு வழக்கிலும், சிறுபான்மை இலக்கிய வழக்கிலும் இடம் பெறுகின்றது.

எ.கா. ஐந்து > அஞ்சு

இத்திரிபுகள் இ, ஈ, ஐ என்னும் முன்னுயிர்களையடுத்து நகரம் இடம்பெறும் சூழலில் ஏற்படும். தற்காலத் தமிழில் நகரம் எழுத்து வடிவத்தில் நகரமாகவே எழுதப்பட்ட போதிலும் ஒலிப்பில் னகரமாகவே அமைகின்றது.. கொலாமி, நாயக்கி மொழிகளில் மொழிமுதல் வரும் நகரம் கெடுகின்றது. குயி மொழியில் இது 'd' ஒலியாகத் திரிகின்றது. 'த' கர மெய்யும் 'ந' கர மெய்யும் இணைந்த மெய்ம்மயக்கம் மலையாள மொழியில் நகர ஒலி இணைந்த இரட்டைகளாக (ந்ந்) மாறிவிடும்.

| | | |
|---|---|---|
| தமிழ் | - | வந்து |
| மலையாளம் | - | வந்நு |

துளு மொழியிடையில் இது 'த' கர ஒலியாகத் திரிதலும் உண்டு.

| | | |
|---|---|---|
| தமிழ் | - | பந்து |
| கன்னடம் | - | வந்து |
| துளு | - | batte |

பிராகுயி மொழியில் முன்னுயிர்களின் முன்னர் மட்டுமே இது ன ஒலியாக மாறுகின்றது.

குறிப்பு

-ந்- ந் - பெரும்பான்மைய திராவிடமொழிகளில்

- ந் - (மலையாளம், தற்காலத் தமிழ்)

-Ø- (கொலாமி, நாயக்கி)

-ன- (Fv-பிராகுயி)

-ன- (c-குயி)

## *-ம்- இதழின மூக்கொலி

பெரும்பான்மைய திராவிட மொழிகளில் திரிபின்றி வழங்கும் மொழி முதல் 'ம' கரம் பிராகுயி மொழியில் மட்டும் 'டி' ஒலியாகத் திரிகின்றது. இம்மாற்றம் முன்னுயிர்களின் (front vowels) முன்னர் ஏற்படுவதாக பி.எச்.கிருஷ்ணமூர்த்தி குறிப்பிடுகின்றார். கன்னட மொழியில் மொழியிடை வரும்போது வகரமாகத் திரிகின்றது.

| | | |
|---|---|---|
| தமிழ் | - | பாம்பு |
| மலையாளம் | | |
| கன்னடம் | - | பாவு |
| தமிழ் | - | நாம் |
| கன்னடம் | - | நாவு |

தோடா, கோடா ஆகிய இரு மொழிகளிலும் மொழியிடையில் இவ்வொலி நீங்கிவிடுவதும் உண்டு.

| | | |
|---|---|---|
| தமிழ் | - | பாம்பு |
| தோடா, கோடா | - | pop |

தமிழில் வலித்தல் விகாரமாகப் பாப்புக்கடுப்பன்ன என்ற அடியில் இத்தகு திரிபு ஏற்படக் காணலாம்.

மகரம் னகரத்தை மாற்றொலியாகப் பெறுதலும் உண்டு, தமிழில் இலக்கண நூல்கள் இவற்றை எடுத்துக் கூறுகின்றன.

| | | |
|---|---|---|
| 1) மரம் | 2) குளம் | 3) கலம் |
| மரன் | குளன் | கலன் |

குறிப்பு

இவற்றை இலக்கணநூலார் போலி (Free variation) என்பர். சிலர் இவ்விரு ஒலிகளும் பொருள் வேறுபாட்டிற்குத் துணை செய்கின்றன என்றும், 'ம' கரம் பன்மையையும் 'ன' கரம் ஒருமையையும் உணர்த்துகின்றன என்றும் கூறுவர். அவ்வாறாயின் தனித் தனி ஒலியனாகவே கொள்ளவேண்டும்.

### *-ன்- முன்னண்ண மூக்கொலி

மொழி முதலில் இடம் பெறாத னகரவொலியை ஒப்பியலார் தனித்த ஒலியனாகக் கருதுவதில்லை. இவ்வொலி மொழியிடையில் இன வல்லொலி ஆகிய றகரத்துடன் இணைந்தும், இரட்டித்தும், மொழியிறுதியில் தனியாகவும் வருகின்றது. மலையாள மொழியில் இது 'ந' கரமாகத் திரியும்.

தமிழ் - மூன்று > மலையாளம் - மூந்து

கன்னடம், தோடா, கோடா போன்ற மொழிகளில் மொழியிடையில் இது கெட்டு விடுதலும் உண்டு.

1) தமிழ்- ஒன்று

கோடா – ழன

தோடா - றுனை

2) தமிழ் - மூன்று

கன்னடம் - மூறு

பேச்சில் னகரம் நாவளை மெல்லொலியான ணகரமாகத் திரிந்து இன வல்லொலியை நீக்கவும் செய்யும்

மூன்று - மூணு

### இடையின ஒலிகள்

இடையின எழுத்துக்களில் ய, வ ஆகிய இரண்டு மட்டும் தமிழில் மொழி முதலாக வருகின்றன. இவை தவிர்ந்த பிற இடையின ஒலிகளை மொழிமுதலில் கொண்ட பிற மொழிச் சொற்கள் தமிழில் வந்து வழங்கும்போது அவை, அ, இ, உ என்னும் உயிர்களில் யாதேனும் ஒன்றை முன்னர்ப் பெற்று நிற்கும்.

இரவி, உருசியா உலோபி அரங்கம்

***-ய்- அரை உயிர**



தமிழில் இவ்வொலி மொழி முதலில் இடம் பெறுகின்றது. ஏனைய மொழிகளில் மொழி முதல் 'ய' கரம் குறைவாகவே உள்ளது. தமிழிலும் இதற்கு ந, ஞ, ஆகிய மாற்று ஒலிகள் உள்ளன.

யான் - யாம்

நான் - ஞான்

மண் யாத்த - மண்ஞாத்த

இவற்றுள் யகரமே தொன்மையான ஒலி என்பது டாக்டர் கால்டுவெல்லின் கருத்து. அவர் 'ய' கர வொலி ந, ஞ, எ போன்ற ஒலிகளாகத் திரிவதற்குப் பல சான்றுகள் தருகின்றார்.

சமஸ்கிருதம் - யுகா (yuga) > நுகம்

யமா > யமன், நமன், ஞமன், எமன்

ஆங்கிலம் - anchor > நங்கூரம்

தமிழ் மொழியில் 'ய' கர ஒலி மொழியிடையில் 'ச' கர ஒலியாக மாறுவதைக் காணலாம்.

எ.கா. வயிறு > வசறு

பையன்கள் > பசங்கள்

வயலை > பசலை

கன்னடம், துளு ஆகிய மொழிகளில் மொழியிடையில் இது 'd' ஒலியாக மாறுகின்றது. தமிழில் மொழியிறுதியில் இடம் பெறும் 'ய' கர ஒலி 'இ' கர உயிரின மாற்று வடிவமே.

மூலத்திராவிட ஒலியான 'ய'கரம் மொழியிடைகளிலும் இறுதியிலும் அதிகத் திரிபின்றியே காணப்படுகின்றது. கொடகு, துளு போன்ற மொழிகளிலும் இவ்வொலி அருகிலேயே காணப்படுகின்றது. பிராகுயி மொழியில் இவ்வொலியை அதிகமாகக் காண முடியவில்லை. குயி மொழியில் இது 'j' ஒலியாகத் திரிகின்றது. நாயக்கி, கடபா, பர்ஜி போன்ற மொழிகளில் இது 't' யாக மொழியிடையில் ஒலிக்கின்றது.

குறிப்பு

| | | | |
|---|---|---|---|
| எ.கா | தமிழ் | - | நாய் |
| | நாயக்கி | - | ate |
| | பர்ஜி | - | netta |
| | கடபா ஒல்லாரி | - | nete |
| | கடபா சில்லூர் | - | nette |

அதிகமான திராவிட மொழிகளில் 'ய' கரம் உடம்படுமெய்யாகப் பயன்படுத்தப் படுகின்றது. மொழிமுதல் யகரம் ஆகார உயிரோடு இணைந்து மட்டும் மொழிமுதலில் வருமென்கிறார் தொல்காப்பியர். பழந்தமிழிலக்கியங்களிலும் 'யா' என்னும் மொழிமுதல் எழுத்துடன் 'யாறு', 'யாடு', 'யாணர்', 'யானை' போன்ற பல சொற்களைக் காண்கின்றோம். எனினும் அச்சொற்களிலுள்ள மொழிமுதல் 'ய' கரம் கெட்டு விடுகின்றது. அவை

| | | |
|---|---|---|
| யாமை | > | ஆமை |
| யானை | > | ஆனை |
| யாண்டு | > | ஆண்டு |
| யாறு | > | ஆறு |
| யாடு | > | ஆடு |

என்று வழங்கப்பெறுகின்றன. தென்திராவிட மொழிகளில் 'ஆ' கார உயிரின் முன்னர் 'ய' கரம் கெடுவதைப்போன்று வட திராவிட மொழிகளிலும், நடுத் திராவிட மொழிகளிலும் 'ஏ' கார உயிரின் முன்னர் இது கெடுகின்றது.

| | | |
|---|---|---|
| தமிழ் | - | யாடு > ஆடு |
| கோடா | - | யசு |
| தோடா | - | ழனு |
| கோண்டி | - | நவுை |
| குருக் | - | நசுய |
| மால்டோ | - | நசுந |

மொழிமுதல் 'ய' கரத்தையடுத்து வரும் அ, ஆ என்னும் உயிரொலிகள் தெலுங்கு மொழியில் எ, ஏ என்னும் உயிரொலிகளாக மாறுகின்றன.

யான் - ஏனு

ஆ, ஏ ஆகிய ஒலிகளில் எது தொன்மையானது என்பதை ஆராயும் கே.வி.சுப்பையா இவ்விரு ஒலிகளுக்கும் மூல ஒலியாக இவ்விரண்டிற்கும் இடைப்பட்ட ‘ae’ என்னும் ஒலி மூலத்திராவிட மொழியில் இருந்திருக்க வேண்டுமென்றும், அவ்வொலியே ஆன், ஏன் என்று திரிந்திருக்க வேண்டுமென்று, யான், யாம் என்பனவற்றின் மாற்று வடிவங்களாக நான், நாம் என்பன மிகப் பிற்காலத்தில் தோன்றியிருக்க வேண்டுமென்றும் கருதுகின்றார. இக்கருத்தைப் பரோ மறுத்துரைத்துள்ளார். அவர் மொழி முதலில் வரும் ‘யா’ வை இ + ஆ ஆகிய இரு ஒலிகளின் சேர்க்கையாகக் கருதுகின்றார். இதுவே தமிழ், கன்னடம் ஆகிய மொழிகளில் ‘ஆ’ ஒலியாகவும் தெலுங்கில் ‘ஏ’ ஒலியாகவும் திரிந்திருக்க வேண்டுமென்கிறார். தமிழிலும் யாது > எது; யான் > என் என்று வருவதைக் காணலாம்.

## *-ŕ- முன்னண்ண வருடொலி

‘ர’ கர ஒலி மொழி முதலில் இடம் பெறாது. கோண்டி மொழியின் சில வட்டார வழக்குகளில் இது -ற- ஒலியாக மொழியிடையில் வருகின்றது. தோடா மொழியில் இதற்கு நிகராக -s-; -s- ஆகிய ஒலிகளே உள்ளன. பிராகுயி மொழியிலும் இவ்வொலி காணப்படவில்லை. துளு, கொலாமி, நாயக்கி, குயி, குவி, பெங்கோ, மண்டா போன்ற மொழிகளில் இவ்வொலி பயின்று வரவில்லை துளு, கொலாமி, நாயக்கி, குயி, குவி, பெங்கோ, மண்டா போன்ற மொழிகளில் இவ்வொலி அருகியே காணப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| 1) தமிழ் | - | இரு |
| தோடா | - | ஞைவு |
| 2) தமிழ் | - | இரண்டு |
| கன்னடம் | - | ரெண்டு |

இலக்கியத் தமிழில் இவ்வொலி ழ கரமாக மாறும்.

ஈர்க்கும் > இழுக்கும்

தெலுங்கு மொழியில் இது ல கர ஒலியாகத் திரியும். கோண்டா போன்ற மொழிகளில் இது பெரும்பாலும் -ர்ர்- என்று இரட்டித்து ஒலிக்கின்றது.

குறிப்பு

***ல முன்னண்ண பிரிவளி ஒலி**

இவ்வொலியும் அதிகமாக மொழி முதலில் வராது துளு மொழியிலும், பர்ஜி மொழியிலும் இது 'ர' கர ஒலியாகத் திரிகின்றது.

தமிழ் - வில் - துளு - பிர்

தமிழ் மொழியில் 'ற' கர ஒலி இதன் மாற்றொலியாக உள்ளது.

நில் - நிறுத்து

கல் கண்டு - கற்கண்டு

எல்லாத் திராவிட மொழிகளிலும் இது மொழியிடையில் இடம் பெறுகின்றது. குயி மொழியில் இது -d- ஒலியாகத் திரிகின்றது. பிராகுயி மொழியில் -lh- என்று மாறுகின்றது. தோடா மொழியில் 's' ஒலியாகவும், கோடாவில் 'li' யாகவும் திரிவதைக் காணலாம்.

எ.கா தமிழ்

| | | |
|---|---|---|
| மலையாளம் | - | பால் |
| தோடா | - | pos |
| கோடா | - | pali |
| பிராகுயி | - | palh |

தெலுங்கு மொழியில் லு என்னும் பன்மையுருபு 'ரு' திரிகின்றது

**வ பல்லிதழ் ஒலி**

மொழி முதலில் வரும் 'வ' கர மெய் கன்னடம், கொடகு, துளு ஆகிய மொழிகளிலும், வடதிராவிட மொழிகளிலும் 'b' xலியாக மாறுகின்றது.

எ.கா வாழ் > baL கன்னடம்

தோடா மொழியில் இது 'ப' கர ஒலிப்பில் ஒலியாகத் திரிகின்றது. தெலுங்கில் இது 'g' ஒலியாகத் திரியும்.

எ.கா. வாரு > garu

அறுவர் > aRuguru

பவழம் > paga Ta

மொழியிடையில் வரும் 'வ' கரம் தோட மொழியில் 'f' வாக மாறும். மலையாளத்தில் இது மகர ஒலியாகத் திரியும்.

எ.கா. தமிழ் - காணுவான்

மலையாளம் - காண்மான்

மால்டோ மொழியில் இது 'b' 'ய' என்னும் ஒலியாகத் திரிகின்றது. தமிழில் 'ய' கர மெய்யைப் போன்று இதுவும் உடம்படு மெய்யாகப் பயன்படுத்தப்படுகின்றது.

குறிப்பு

## ழ வளைநா உரசொலி

தமிழுக்கேயுரிய சிறப்பொலியாகக் கருதப்படும் ழகரமெய் தமிழ் மொழியின் பேச்சு வழக்கில் ள, ய, ச போன்ற திரிபுகளைப் பெறுகின்றது. 'ழ' கரம் 'ள' கரமாகத் திரிவதற்கு வீரசோழியம் விதி வகுத்துள்ளது. இலக்கிய வடிவில் இவ்வொலி சிலவிடங்களில் கெட்டு விடுகின்றது. இவ்வொலி மலையாளத்திலும் வழங்கப்படும் ஒலியாகும்

போழ்து > போது

தெலுங்கில் இது 'ட' வாகவும் கன்னடத்தில் 'ள' வாகவும் மாறுகின்றது.

எ.கா. ஏழு - ஏடு - ஏளு

கோழி - கோடி - கோளி

இம்மொழிகளில் சிலவிடங்களில் இது 'ண' ஒலியாகத் திரிதலுண்டு.

எ.கா. குழி > குணி (கன்னடம்)

இவ்விரு மொழிகளிலும் 'ழ' கரம் மறைந்தபோதிலும மலையாள மொழியில் இன்றும் பெருவழக்கிலுள்ளது. பழங்கன்னடத்தில் 'ழ' கரம் திரியாமல் இருந்ததற்கு 9-ம் நூற்றாண்டைய கன்னடக் கல்வெட்டுக்களே சான்று. துளு மொழியில் இவ்வொலி 'ர' கர மெய்யாகத் திரிகின்றது.

பொழுது > பொருது

கோடா மொழியில் இதற்கு ள, ர, ப, ய என்ற மாற்று வடிவங்கள் (reflexes) உள்ளன. கொடகுமொழியில் ஏனைய மெய்யொலிகளின் முன்னர் இது கெட்டு விடுகின்றது. தோடா மொழியில் இதன் மாற்று வடிவங்களாக d-, R-, -s-, -v- என்பன உள்ளன.

குறிப்பு

**ள வளைநா பிரிவளி ஒலி**

'ள'கரவொலி தமிழ், மலையாளம், கோடா, கன்னடம், கொடகு, நாயக்கி ஆகிய மொழிகளில் காணப்படுகின்றது. இது 'ல' கர ஒலியாக துளு, தெலுங்கு, கொலாமி, பர்ஜி, கடபா, குயி, குவி, மால்டோ, பிராகுயி ஆகிய மொழிகளில் திரிகின்றது. கோண்டி, கோண்டா, பெங்கோ, மண்டா ஆகியவற்றில் இதன் மாற்றொலியாக -R- காணப்படுகின்றது. பிராகுயி மொழியில் இது -l-, -lh- என்று மாறுகின்றது. துளு மொழியில் சிலவிடங்களில் இது 'ண'கரமாக மாறும்.

கேள் > கேண்

தமிழில் இவ்வகைத் திரிபு மகரத்தின் முன் ளகரம் வரும் சூழலில் அமைகின்றது.

கேள்-மின் கேண்மின்

## மெய்யொலி மாற்றங்கள்

### ஒலிப்புடை வல்லொலி ஒலிப்பில் வல்லொலி மாற்றம் (Convertibility of surds and sonants)

தற்காலத் தமிழில் ஒலிப்புடை ஒலிகள் (Voiced consonants) ஒலியன்களாகக் கருதப்படும் நிலையைப் பெற்றபோதிலும் பழந்தமிழில் அவை பொருள் வேறுபாட்டிற்குத் துணை செய்யவில்லை. எனவே அவற்றிற்கென்று தனி வரிவடிவமும் அமைக்கப்படவில்லை எனினும் ஒலிப்பில் ஒலிகளாகிய (Voiced consonants) வல்லொலிகள் மொழியிடையில் மூக்கொலிகளையடுத்து வரும்போது ஒலிப்பு ஒலிகளாக மாறி விடுகின்றன. மொழி முதலிலும், இரட்டிக்குமிடங்களிலும் மட்டுமே அவை ஒலிப்பில் ஒலியாக ஒலிக்கின்றன. இரு உயிர்களுக்கு இடையில் பெரும்பாலும் அவை உரசொலிகளாக ஒலிக்கின்றன.

வேற்று மொழிகளிலிருந்து திராவிட மொழிகளில் வந்து வழங்கும் சொற்களிலும் மொழிமுதல் ஒலிப்பு ஒலி இடம் பெறுவதைக் காணலாம். இத்தகைய ஒலிமாற்றத்தை ஒலிப்பு ஒலி மாற்றம் என்கின்றார் டாக்டர் கால்டுவெல். இம்மாற்றம் திராவிட மொழிக் குடும்பத்தின், கிளைமொழிகள் பலவற்றிலும் காணப்பட்டபோதிலும் தமிழ் மொழியில் உள்ளது போன்று

ஒரு சமச்சீரான முறையில் அமையவில்லை என்றும் கருதுகின்றார். இவ்விதியைத் தமிழ் மொழி வேற்று மொழிச் சொற்களைக் கடன் வாங்கும்போதும் தவறாது கையாள்வதைக் காணலாம்.

**குறிப்பு**

| | | | |
|---|---|---|---|
| எ.கா | 1) வடமொழி | - | danta |
| | தமிழ் | - | tandam தந்தம் |
| | 2) வடமொழி | - | bhagya |
| | தமிழ் | - | pakkiyam பாக்கியம் |

மேற்காட்டப்பட்ட இரு வடசொற்களிலும் முறையே, d, b போன்ற ஒலிப்பு ஒலிகள் மொழி முதலில் வந்தபோதிலும் தமிழில் மொழி முதலில் அவை ஒலிப்பில் ஒலிகளாக மாறுவதையும் 't'(த) என்னும் ஒலிப்பில் ஒலி மூக்கொலியை எடுத்து வரும்போது மெல்லொலியாக மாறுவதையும் காண்கிறோம்.

திராவிட மொழிகளிலமையும் ஒலிப்பில் ஒலி ஒலிப்புஒலி மாற்றத்தை விளக்கும் டாக்டர் கால்டுவெல் இம்மாற்றம் இந்தோ-ஐரோப்பிய மொழிகளில் இல்லையென்றும், ஏபிரேய மொழியில் மட்டும் ஓரளவிற்கு உள்ளது என்றும், சித்திய மொழிக் குடும்பத்தைச் சார்ந்த சில மொழிகளிலும் காணக்கிடக்கின்றன என்றும் குறிப்பிடுகின்றார். திரு. நோரிஸ் என்பவர் தமிழுக்குரிய சிறப்பு விதியாக இம்மாற்றத்தைச் சுட்டிச் சென்றதையும் குறிப்பிட்டு இம்மாற்றம் மிகத் தொன்மையானது என்கின்றார். எனினும், மொழியில் கண்ணோட்டத்தோடு தமிழ் மொழிக்கு இலக்கணம் வகுத்த தொல்காப்பியர் கூட இம்மாற்றத்தைப் பற்றி ஒன்றும் குறிப்பிடவில்லை. இம்மாற்றம் ஓரினமாதலைப் போல (Assimilation) முயற்சிச் சிக்கனம் காரணமாக ஏற்படுவது என்பது பலர் கருத்து.

மொழியிடையில் ஒலப்பில்ஒலி ஒலிப்புஒலி மாறுவதைப் பற்றிக் கால்டுவெல் கொண்ட கருத்தை அனைவரும் ஓரளவிற்கு ஏற்று வந்தனர். ஜுல்ஸ்பிளாக் குமரிலபட்டரின் தந்திரவர்த்திகா என்ற இடைக்கால சமஸ்கிருத நூலில் இடம்பெற்ற பலதிராவிட மொழிச் சொற்களை ஆராய்ந்து 'திராவிடமும் சமஸ்கிருதமும்' என்ற கட்டுரையில் மூலத்திராவிட மொழியில் ஒலிப்புஒலிகள் உண்டு என்பதை நிலை நிறுத்தினார். தமிழ் மொழியில் கி.பி.100க்கு முன்னர் மொழிமுதலிலும் மொழியிடையிலும் மொழியிறுதியிலும் ஒலிப்புஒலிகள் இடம்பெற்றன

குறிப்பு

என்றும் கி.பி.2ஆம் நூற்றாண்டு வரை தமிழில் ஒலிப்பு ஒலிகளெல்லாம், ஒலிப்பில் ஒலிகளாக மாறின என்றும் கி.பி.12ஆம் நூற்றாண்டு முதல் மொழியிடையில் வரும் ஒலிப்பில் ஒலிகள் மீண்டும் ஒலிப்புத் தன்மை (Voicing) பெறத் தொடங்கின என்றும் அவர் விளக்கிச் சென்றார்.

| | | |
|---|---|---|
| வடமொழி | - | கொடகா (ghotaka) |
| தமிழ் | - | குதிரை (kutirai) |
| கன்னடம் | - | குதிரெ (kutire) |
| தெலுங்கு | - | குற்றமு (gurramu) |

ஆகிய சொற்களைக் காட்டி இவற்றின் மூலத்திராவிட வடிவம் *gutr என்பதாகத்தான் இருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தார். அவர் கருத்துப்படி ஒலிப்புஒலி மட்டுமன்றி அவற்றின் உயிர்ப்பொலியும் மூலத்திராவிட மொழியில் இருந்திருக்க வேண்டும். இக்கருத்தை ஏற்றுக்கொண்ட கோடவர்மா, மலையாளம், கன்னடம் போன்ற மொழிகளிலிருந்து சில சொற்களைக் காட்டி மூலத்திராவிட மொழியில் ஒலிப்புஒலி இடம்பெற்றமையைத் தெளிவுறுத்த முயன்றுள்ளார்.

| | | |
|---|---|---|
| எ.கா. 1) மலையாளம் | - | keTTu(anekkaTTu) |
| கன்னடம் | - | gaTTu |
| 2) மலையாளம் | - | keTTu |
| கன்னடம் | - | geDDaa |

ஜுல்ஸ் பிளாக் போன்றோரின் கொள்கைப்படி 'Ghotaka' (குதிரை) போன்ற சொற்கள் திராவிட மொழிச் சொற்களே, அவை வடமொழியில் பிற்காலத்தில் புகுந்தன. வடமொழிக்குச் செல்லும் முன்னர் அவற்றின் முதல் ஒலி ஒலிப்பு ஒலியாகவே இருந்திருக்க வேண்டும். நடுத்திராவிட மொழிகளின் சொற்கள் பலவற்றிலும் ஒலிப்புஒலிகள் மொழிமுதலில் இடம்பெறுவதை அவர் காட்டிச் செல்கின்றார். எனினும் மொழி முதலில் வல்லொலிகளைக்கொண்டு தொடங்கும் சொற்களுக்கு இணையான ஒலிப்புஒலிகளை மொழி முதலில் கொண்ட தெலுங்கு, கன்னட மொழிச் சொற்களை அவரால் நிறையத் தர முடியவில்லை. இவ்வொலி மாற்றத்தைச் சிறப்பாக ஆராய்ந்த பரோ, B.H.கிருஷ்ணமூர்த்தி போன்ற ஒப்பியல் அறிஞர்கள் ஜுல்ஸ் பிளாக்கின் கொள்கையை மறுத்து தெலுங்கிலும், கன்னடத்திலும் காணப்படும் ஒலிப்புஒலிகள் பிற்காலத்தில்

ஏற்பட்ட வளர்ச்சி என்றும் மூலத்திராவிட மொழியில் மொழி முதலில் ஒலிப்புஒலிகள் இடம் பெறவில்லை என்றும் கூறி பல்வேறு சான்றுகள் மூலம் தம் கருத்தை நிலைநாட்டியுள்ளனர்.



குறிப்பு

### பரோ தரும் காரணங்கள்

1) ஒலிப்புஒலிகளைக் கொண்டு தொடங்கும் அதிகமான தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளின் சொற்களுக்கு நிகரானத் தமிழ்சொற்களைக் காண முடியவில்லை.

| | | | |
|---|---|---|---|
| எ.கா | கன்னடம் | - | gaDika |
| | தெலுங்கு | - | gaDa |
| | தமிழ் | - | Ø |

இவ்வாறு வருகின்ற சொற்களில் பல சொற்கள் தெலுங்கு கன்னடம் ஆகிய இவ்விரு மொழிகளுக்கு உரிய பொதுச்சொற்களாக அமையாது. ஒவ்வொரு மொழிகளுக்கும் உரிய சிறப்புச் சொற்களாகவே அமைகின்றன. இவற்றுள் பல வேற்று மொழிச் சொற்களாகவே உள்ளன. இத்தகைய சொற்கள், கன்னட மொழியைவிட, தமிழ்மொழியிலிருந்து பெருமளவிற்கு வேறுபட்டு நிற்கும் தெலுங்கு மொழியில் மிகுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

2) ஒலிப்புஒலிகளை மொழி முதலில் கொண்ட தெலுங்கு, கன்னட மொழிச் சொற்களுக்கு இணையான சொற்கள் தமிழ், மலையாளம் ஆகிய மொழிகளில் காணப்படுமிடங்களில் அவை காலத்தால் பிற்பட்ட வேற்று மொழிச் சொற்களாகவேயுள்ளன. எனவே அவை மூலத்திராவிட மொழியின் ஒலிநிலையை ஆராயத் துணை செய்யா.

| | | |
|---|---|---|
| தமிழ் | - | குட்டு (இரகசியம்) |
| தெலுங்கு | - | |
| கன்னடம் | - | guTTu |

3) இத்தகைய தொடர்புகள் பழையனவாக இருப்பினும் அவைகளில் ஓர் ஒழுங்கு முறையினைக் காண முடியவில்லை. சிலவிடங்களில் தெலுங்கு மொழியில் தமிழைப்போன்று வல்லொலியை மொழி முதலில் கொண்டு தொடங்கும் சொற்களும், சிலவிடங்களில்

கன்னடத்தில் ஒலிப்பில்ஒலியை மொழிமுதலில் பெற்ற சொற்களும் மாறிமாறி ஒழுங்கின்றி அமைவதைக் காணலாம்.

1) கன்னடம் - garuvali

தெலுங்கு - karuvali

2) கன்னடம் - kalta

தெலுங்கு - gaDita

4) ஒலிப்புஒலிகள் இடம் பெறும் தெலுங்கு, கன்னடம் போன்ற மொழிகளைத் தனியாக எடுத்து நோக்கும்போது ஒலிப்பு ஒலிகள் பிற்காலத்தில் ஏற்பட்டன என்று தோன்றுகின்றது. இவ்வொலி மாற்றத்தைப் பொறுத்தவரையில் தமிழ்மொழி மூலத்திராவிட மொழியினியல்பைக் காட்டுகின்றது என்பது பரோவின் முடிவு.

வட திராவிட மொழிகளில் வடமொழிக்கூறுகள் மிகுந்து காணப்படுவதால் ஒலிப்பு ஒலியை முதலில் கொண்ட சொற்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. மேலும் திராவிட மொழிகளில் மொழியிடையில் மாற்றம் பெற்ற ஒலிப்புஒலிகள் ஓரினமாதல் என்னும் பொதுவிதியால் மொழிமுதல் இடம் பெறும் ஒலிப்புஒலிகளாக மாற்றி விடுகின்றன.

எ.கா tirattu - > tirdu - > diddu

இவற்றைத் தவிர ஒலி இடம் பெயர்தல் காரணமாகவும் மொழியிடையிலுள்ள ஒலிப்புஒலிகள் மொழிமுதலில் இடம்பெயர்ந்து நின்ற ஒலிப்பு ஒலியை மொழி முதலில் கொண்ட சொற்களைத் தோற்றுவித்து விடுகின்றன.

பழந்தமிழில் மொழிமுதலில் மட்டுமன்றி ஏனைய விடங்களிலும் ஒலிப்பில்ஒலிகளே இடம் பெற்றன என்பது தெளிவு. இக்காலத்தைப் போல இடத்திற்கேற்ப மாறி ஒலிக்குமியல்பு பழந்தமிழில் இல்லை என்பது அறிஞர் பலரின் கருத்து. கி.மு.3-ஆம் நூற்றாண்டைய பிராமி எழுத்தில் எழுதப்பட்ட கல்வெட்டுக்களில்கூடத் தமிழ்ச் சொற்கள் ஒலிப்பில் ஒலிகளின் வரி வடிவாலேயே எழுதப்பட்டன. அதே சமயத்தில் வட சொற்களை எழுதும்போது இவைகளில் ஒலிப்பு எழுத்துக்களுக்குரிய வரிவடிவம் பயன்படுத்தப்பட்டுள்ளது. எனவே கி.பி.1350-க்குப் பின்னர்தான் ஒலிப்புஒலிகள் ஒலிப்புத் தன்மை (voiced) பெற்றன என்பர். எனினும்

கமில் சுவலிபில் போன்ற அறிஞர்கள் பழந்தமிழில் மொழி முதலில் ஒலிப்பில் ஒலி ஏனைய விடங்களில் அதன் மாற்றொலிகளுக்கு வழங்கியிருக்கலாம் என்று கருதுகின்றனர்.

குறிப்பு

## இரட்டை மெய் தனி மெய்யாதல்

திராவிட மொழிகளில் பொதுவாகக் குறிலையடுத்து இரட்டை மெய் இடம்பெறுகின்றன.

கிள்ளு

கிள் - ஐ என வரின் கிளை என அமையுமே தவிர கிள்ளை என இரட்டிப்பதில்லை. இங்கு அடிச்சொல் தொடர்ந்து வேறு அசைகள் வரும்போது இரட்டை மெய் தனி மெய்யாக ஒலிக்கின்றன.

கொட்டு - கொடுக்கு

## மெய்யொலிகள் ஓரினமாதல் (Assimilation of consonant)

வேறுபட்ட இரண்டு மெய்கள் தொடர்ந்து வரும்போது ஒன்றன் ஆற்றலால் மற்றொன்று தன் நிலைமாறி இரண்டும் ஓரினமாகி நிற்றலை ஓரினமாதல் என்பர்.

கன்று - கன்னு

இங்கு ‘கன்று’ என்னும் சொல்லிலுள்ள முன்னண்ண மூக்கொலியான ‘ன’ கர ஒலி தன் ஆற்றலால் அதைத் தொடர்ந்துவந்த ‘ற’ கர ஒலியையும் தன்னினமாக(ன) மாற்றியது. புளும்ஃபீல்டு இம்மாற்றத்திற்கு ஒலிக்கும் உறுப்புக்களில் அமைப்பே காரணம் என்கிறார். ஓர் ஒலியை ஒலிக்கும் இடத்திற்கும் அடுத்த ஒலியை ஒலிக்கும் இடத்திற்கும் இடைவெளி அதிகமாக இருந்தால் அவ்வொலியை ஒலிப்பது அரிது. எனவே முயற்சி எளிமை நோக்கி நாவானது அந்த ஒலியின் பக்கத்திலே அதற்கு அடுத்த ஒலியையும் ஒலித்து விடுகின்றது.

ஓரினமாதல் பெரும்பாலான உலக மொழிகளில் உள்ளது. ஆங்கில, மொழியில் ஏற்படும் ஓரினமாதலை வரலாற்று நிலையில் ஏற்படுவன என்றும் இடத்திற்கும் ஏற்ப ஏற்படுவன என்றும் இரண்டாக விளக்குவர். 13-ஆம் நூற்றாண்டில் இருந்த ‘amte’ என்னும் சொல் ‘ant’,

குறிப்பு

'and' என்று வரலாற்று நிலையில் மாறியதைச் சுட்டுவர். முன்னண்ண ஒலியான 't' ஒலியின் முன்னர் இடம்பெற்ற ஈரிதழ் மூக்கொலியான 'ம' கரம் முன்னண்ண மூக்கொலியான 'n' ஒலியாக மாறிவிடுகின்றது. இடத்திற்கேற்ப ஏற்படும் மாற்றத்திற்கு horse shoe என்பது h⊃: ∫∫u என்று மாறுவதைக் காட்டுவர்.

மொழியில் ஒரே உருபனுக்கு (Morpheme) பல்வேறு மாற்று உருபன்கள் ('allomorph) ஏற்படுவதற்கு ஓரினமாதலே அடிப்படைக் காரணமாக அமைகின்றது.

முள் - முட் (செடி)

இம்மாற்றுருபன்களின் வடிவ மாற்றங்களுக்கு விளக்கந் தரவும் இவ்விதி பயன்படுகிறது. பல ஒலிகள் ஒலிக்கும் உறுப்புகளாலும் (Point of articulation) ஒலிக்கும் முறையாலும் (Manner of articulation) ஓரினமாகி நிற்றலைக் காணலாம்.

முள் + செடி > முட்செடி – ஒலிக்கும் முறை

(பிரிவளி ஒலி தடையொலியாக மாறியது)

கீழ் + பாலம் > கீப்பாலம் - ஒலிக்கும் உறுப்பு ('ழ்' ஒலி ஈரிதழ் தடையொலியாக மாறியது)

ஓரினமாதலை 1) கட்டாய விதியின (established)

2) தற்செயலாக வருவன (accidental)

என்று இரண்டாகப் பிரிப்பர் மொழிநூலார். பொதுவாக

1) நிலைமொழி ஈறு திரிதல் (Regressive assimilation)

2) வருமொழி முதல் திரிதல் (Progressive)

3) இரண்டும் திரிதல் (Reciprocal)

4) தொடர்ச்சியானவை, தொடர்ச்சியற்றவை (Continuous, Non-continuous)

5) முழுமையானவை, முழுமையற்றவை (Complete, Partial)

என்று பலவாறு பிரித்து விளக்குவர்.

நிலைமொழி ஈறு திரிதல் முள் + செடி > முட்செடி

வருமொழி முதல் திரிதல் - என் + தம்பி > என்றம்பி

இரண்டும் திரிதல் - கல் + தூண் > கற்றூண்

குறிப்பு

தொடர்ச்சியற்று வருவன - pin + ko > kinko ti – go > tido

திராவிட மொழிகளில் முன்னர் காட்டிய வகைளுள் முதன் மூன்று வகை மாற்றங்களும் அதிகமாக இடம்பெறுகின்றன. வேறுபட்ட ஒலிகள் இவ்வாறு ஓரினமாவதற்கு மாறாக ஓரினமாக உள்ள ஒலிகள் வேறுபட்டு நிற்கும் நிலையும் (dissimilation) சில மொழிகளில் உண்டு. திராவிட மொழிகளில் இத்தகைய மாற்றம் மிகக் குறைவு. தமிழில்

போடடா > போடுறா

போன்ற பேச்சு வடிவங்களில் இம்மாற்றத்தைக் காணலாம். மூலத்திராவிட மொழியில் மெல்லொலி இரட்டை வல்லொலி

(N=மூக்கொலி P=தடையொலி)

மலையாளத்திலும் பேச்சுத் தமிழிலும் மெல்லொலியை அடுத்து வரும் வல்லொலி ஒலிப்புடை ஒலியாகவே Voiced plosive) வரும். அதே வேளையில் மெல்லொலியை அடுத்து ஒரே ஒர வல்லொலி தான் வரும் கோடா – தோடா மொழிகளில் மெல்லொலியும் ஒலிப்பிலா வல்லொலியும் இணைந்து வருவது இணையசையில் (Derivative suffix) உள்ள உயிரொலி மறைந்ததால் உருவாகிறது.

கோடா oNk

தோடா Wi : Nk - <*oNakk – (மூலக் கோடா – தோடா)

(தமிழ் - uNakku " உணர்த்து" )

கொடகு மொழியில் சில சொற்களில் மட்டும் இந்நிலை காணப்பட்ட போதிலும் இவற்றில் பெரும்பாலானவை கன்னட மொழியிலிருந்து கடன் வாங்கப்பட்டவையாகவே காணப்படுகின்றன.

-kuNTee "முடவன்" /<kuNTa (கன்னடா)

கொடகு

kuNTi "முடப்பெண்" /<kunTi (கன்னடா)

மெல்லொலியை அடுத்து ஒலிப்பிலா வல்லொலி (NP) வருவது, தமிழ் - மலையாளம் - கொடகு – கோடா – தோடா ஆகிய மொழிகள் அல்லாத பிற மொழிகளில் மிகுதியாகக் காணப்படுகிறது. மெல்லொலியை அடுத்து ஒலிப்புடை வல்லொலி (NB) வருவது என்பது இவ்வகையான எடுத்துக்காட்டுக்களிலிருந்து வேறுபட்டதாகும். அதாவது,

குறிப்பு

NP என்று வருவதும், NB என்று வருவதும் வெவ்வேறானவை யாகும். எடுத்துக்காட்டாகத் தெலுங்கு மொழியில் காணப்படும்.

maNDu "எரி"

maNTa "தீச் சுவாலை"

ஆகிய இரண்டும் வெவ்வேறானவை.

*NPP > PP என்பது தமிழ் - மலையாளம் ஆகிய மொழிகளுக்கு மட்டுமல்லாமல் கொடகு, கோடா, தோடா, ஆகிய மொழிகளுக்கும் இந்நிலை உண்டு என்பதை பி.எஸ்.சுப்ரமணியம் சுட்டிக்காட்டுகிறார்.. இதனை விளக்குவற்கு மூலத்திராவிட மொழியில் அமைந்த மூன்று வகையான ஒலியன்களின் மெய்ம்மயக்கங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

i) *PP > PP (குறிலுக்குப் பின் /

>P (நெடிலுக்குப் பின் / (தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு)

> P (இருவகை உயர்களுக்குப் பின்னும்) (கோடா, தோடா)

ii) *NP > NP (தமிழ்)

NN/NP (மலையாளம்)

> (N)B (பிற மொழிகள்)

ii) *NPP > PP (தமிழ், மலையாளம், கொடகு)

> P (கோடா, தோடா)

> NP (பிற மொழிகள்)

இந்த *NPP > *pp மாற்றம் என்பது தமிழ்-மலையாளம்-கொடகு-கோடா-தோடா-ஆகிய மொழிக் குழுக்கள் பிரிந்த நிலையில் ஏற்பட்டிருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| எ.கா. | தமிழ், மலையாளம் | - | tooTTam |
| | கோடா | - | tooTm |
| | தோடா | - | twi:Tm |
| | கொடகு | - | tooTa |
| | கன்னடம் | -tooTa/tooNTa | |
| | துளு | - | tooTa |
| | தெலுங்கு | - | tooTa |
| | கடபா ஒல்லாரி, குவி | - | tooNTa |

**சந்தி மாற்றத்தின் அடிப்படையிலான விளக்கம்**

குமாரசாமி ராஜா குறிப்பிடுவது போல் மூலத்திராவிட மொழியில் உள்ள *NPP என்பது தமிழ்-தோடா மொழிக் குழுக்களில் PP என்று மாற்றம் பெறுவது பல்வேறு சந்தி மாற்றத்தின் அடிப்படையில் நிகழ்கிறது. காடட்டாக, தனி வினையிலுள்ள NP> மற்றும் பிற வினையிலுள்ள PP> அகநிலையில் முறையே NP ஆகவும் NPP ஆகவும் உள்ளதாகக் கருதப்படுகிறது.

எ.கா aTank - "அடங்கு" (தன்வினை – Intransitive)

aTakkn – (ஈழுTankk) "அடக்கு" (பிறவினை – Transitive)

மேலும்

aaT – "ஆடு" (தன்வினை)

aaTT – "ஆட்டு" (பிறவினை)

என்ற எடுத்துக்காட்டுக்களில் உள்ளது போன்று தன்வினையில் P என்பதும் பிறவினையில் P என்பதும் உள்ளதாக விளக்குவதை போல மேலே குறிப்பிட்ட NP மற்றும் PP-யையும் விளக்க முடியும்.

குமாரசாமி ராஜாவின் விளக்கத்தின்படி *NPP > PP மாற்றம் சாதாரணமாக மெல்லொலி மறைந்தால் மட்டும் ஏற்படுவதல்ல.

taTpam "குளிர்ச்சி" (<*taN – ppam)

teRku "தெற்கு" (<*ten – kku)

போன்ற சொற்களில் உள்ள மெய்ம்மயக்கம் காட்டுவது என்னவென்றால் முதலில் மெல்லொலி என்பது அதனோடு ஒத்த வல்லொலியாக மாற்றம் பெறுகிறது. பிறகு மெல்லொலிக்குப் பின் வரும் PP-யில் உள்ள முதல் P மறைந்துவிடுகிறது. தமிழைப் பொறுத்தவரை மெல்லொலியோடு மும்மெய்ம்மயக்கம் ஏற்படுமானால் அவற்றிவல் மெல்லொலியை அடுத்து வரும் வல்லொலி ஓடிவிடும் என்பதைக் கீழே உள்ள எடுத்துக்காட்டுக்கள் மூலம் விளக்கலாம்.

enpu "எலும்பு"

noonpu "நோன்பு"

என்பவை முறையே enpu <*en –mpu<*el-mpu (ellu, elumpu மலையாளம்) என்றும், noonpu <* noon – mpu <* nool - mpu (தமிழ்,

குறிப்பு

மலையாளத்தில் nool "நீட்டித்திரு", "பொறுத்துக்கொள்") என்றும், ஆகிய இவ்விரு மூலச் சொற்களிலும் உள்ள l என்பது m- க்கு முன்வருவதால் n ஆகிப் பிறகு m என்பது மறைந்து விடுகிறது எனலாம்.

## சொல்லாக்கம்

திராவிட மொழிகளில் அடிச்சொற்கள் தனித்து நின்று சொல்லாகச் செயல்படுவதைக் காணலாம். வினையடிச் சொற்களெல்லாம் இம்மொழிகளில் ஏவல் வடிவங்களாக (Imperative forms) உள்ளன. இதைத் தவிர வினைச் சொற்களோடு கால இடைநிலை, எதிர்மறை இடைநிலை, எதிர்மறை இடைநிலை, தன்வினை பிறவினை உருபுகள் பாலறிகிளவிகள் ஆகியன ஒட்டி ஒட்டு நிலையாகப் பெரும்பாலான சொற்கள் அமைகின்றன. தமிழில் பல அடிச்சொற்கள் பெயருக்கும் வினைக்கும் பொதுவாக நிற்கின்றன.

எ.கா. பூ - பெயர், பூத்தது – வினை

வல்லொலிகளை இறுதியிலே கொண்டு முடியும் சொற்கள் ஒலித் துணையாக 'உ'கரத்தைப் பெற்று நிற்பதைப் பெரும்பாலான திராவிட மொழிகளில் காணலாம். இவ்வாறன்றி அடிச்சொற்களோடு தனி விகுதிகள் இணைந்தும் சொற்கள் அமைவதை காணலாம் திராவிட மொழிகளின் அடிச்சொற்கள் பொதுவாக ஓரசைச் சொற்களாக (Mono syllabic) அமைகின்றன. இவற்றோடு பொருட் சிறப்பை நோக்கி ஆக்க விகுதிகள் இணைக்கப்படுகின்றன. அடிச்சொற்களோடு இணையும் இலக்கண விகுதிகள் (Grammatical additions) காலம், திணை, பால், எண், இடம் ஆகியவற்றை உணர்த்துகின்றன.

சொல்லாக்கத்தை அடிப்படையாகக் கொண்டு தனிநிலைமொழி, ஒட்டுநிலைமொழி, உட்பிணைப்பு நிலைமொழி என்ற பிரிவில் அடங்கும். இம்மொழியில் இலக்கணக் கூறுகள் அடிச்சொற்களோடு ஒட்டி அமைந்து பொருள் தந்து நிற்கும். அடிச்சொற்களோடு இணையும் இணைப்புகளைப் பொதுவாக,

1) இலக்கண வேறுபாடு உணர்த்துவன
2) பொருள் சிறப்புத் தருவன
3) ஒலித்துணை ஆவன

என்று மூன்றாகப் பகுக்கலாம்.

குறிப்பு

## இருமதிப்பெண் வினாக்கள்

1. திராவிட மொழிகளுக்குரிய சிறப்புமெய்யொலிகள் எவை?
   ழ, ள,ற, ன
2. இடை அண்ணத் தடையொலி வடமொழியில் எவ்வாறு திரிகின்றது?
   பின் அண்ணத் தடையொலி
3. மொழியிடையில் ககரம்பெறும் ஒலிமாற்றங்களைச் சுட்டுக .
   க் (மு), க் (ப). ஹ்(ர)
4. தகரம் அண்ண ஒலியாதலுக்குச் சான்று தருக.
   வைத்து - வைச்சு
5. தமிழில் மொழிமுதலில் வரும் பகரம் கன்னடத்தில் எவ்வாறு வருகின்றது?
   பால் - ஹாலு
   பத்து - ஹத்து - ஹ எனத் திரிதல்
6. எலும்பு எனும்சொல் எவ்வாறு திரிகின்றது?
   என்பு

## குறுவினாக்கள்

7. திராவிட மொழிகளில் ககரம் குறித்து எழுதுக.
   க்- பின்னண்ண ஒலி என்னும் தலைப்பில் உள்ள செய்திகள்
8. திராவிட மொழிகளில் சகரம் குறித்தெழுதுக.
   ச்- இடையண்ண ஒலி என்னும் தலைப்பில் உள்ள செய்திகள்
9. யகர அரையுயிர் குறித்தெழுதுக.
   யகர அரையுயிர் என்னும் தலைப்பில் உள்ள செய்திகள்
10. மெய்யொலி ஓரினமாதல் பற்றி விளக்குக.
    மெய்யொலி ஓரினமாதல் என்னும் தலைப்பில் உள்ள செய்திகள்
11. ஒலிப்புடை ஒலி, ஒலிப்பில் ஒலி குறித்து பர்ரோ கூறுவன யாவை?
    பர்ரோ தரும் காரணங்கள் என்னும் தலைப்பில் உள்ளவை
12. சொல்லாக்கம்  குறித்தெழுதுக.
    சொல்லாக்கம் என்னும் தலைப்பில் உள்ள செய்திகள்

குறிப்பு

### பெருவினா

13. திராவிடமொழிகளில் வல்லொலிகள் குறித்துக் கட்டுரை வரைக.
    வல்லொலிகள் என்னும் தலைப்பில் உள்ள செய்திகள்
14. திராவிடமொழிகளில் மூக்கொலிகள் குறித்துக் கட்டுரை வரைக.
    மூக்கொலிகள் என்னும் தலைப்பில் உள்ள செய்திகள்
15. மெல்லொலி -இரட்டை வல்லொலி வழக்கு குறித்து விளக்குக.
    மூலத் திராவிட மொழியில் மெல்லொலி -இரட்டை வல்லொலி என்னும் தலைப்பிலான செய்திகள்

# கூறு 6 & 7

## பெயர்கள் - திணை – பால் - இடம்

ஒருமொழிக்கண் வழங்கும் தனித்த ஒலியனோ (எழுத்துக்கள் தனித்தோ) ஒலியன் சேர்க்கையோ (எழுத்துக்கள் சேர்ந்தோ) பொருளை உணர்த்தி நிற்குமாயின் அவை சொல் எனப்படும். இச்சொற்களை மொழியியலார் உருபன் என்பர். உருபன் என்பது மொழியில் பொருள் தரும் மிகச்சிறிய அசை என்பர். ஆனால் எல்லாத் தனி ஒலியன்களும் உருபன்களாவதில்லை. அதாவது எல்லா ஒலியும் தனித்துப் பொருள் தரும் மொழிக்கூறாகிய சொல்லாக அமைந்துவிடுவதில்லை. ஒலியன்சேர்க்கை பகுக்க முடியாதபடி நின்று பொருள் தரும் சொற்கள் அடிப்படை உருபன் ஆகும். சொற்களைப் பொதுவாக மொழிநூலார் பொதுப் பொருளை உணர்த்தும் சொற்கள் என்றும், இலக்கணப் பொருள் உணர்த்தும் சொற்கள் என்றும், இரு கூறாகப் பகுப்பர். மரபிலக்கண அறிஞர்கள் சொற்களைப் பெயர், வினை, இடை, உரி என்று நான்காகப் பகுக்கின்றனர்.

முதலில் திராவிடமொழிகளில் அடிப்படை மொழிக்கூறுகளாக பெயரும் வினையும் அமைகின்றன. இவை தனித்து இயங்க வல்லன. இவற்றொடு உணர்ச்சியை பண்பைக் குறித்து நின்று தனித்து இயங்காமல் பெயர் வினையைச் சார்ந்து இயங்கும் இடைச் சொல், உரிச்சொல் ஆகியனவும் மொழியில் வழங்கப்படும்.

பெயர்ச்சொல்

பெயர்ச்சொல் என்பது ஒன்றன் பெயரை உணர்த்தும் சொல் ஆகும். இது பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்று ஆறுவகையாகத் தோன்றும் . இவ்வகையில் பெயரை, பொருட் பெயர், இடப் பெயர், காலப் பெயர், சினைப் பெயர், பண்புப் பெயர், தொழிற் பெயர் என்று ஆறாகச் சுட்டலாம். தொல்காப்பியம்.

நிலனும் பொருளும் காலமும் கருவியும்
வினைமுதற் கிளவியும் வினையும் உளப்பட
அவ் அறுபொருள்

என்று கூறும். நன்னூல்

"இடுகுறி காரண மரபோடு ஆக்கம்
தொடர்ந்து தொழில்அல காலம் தோற்றா
வேற்றுமைக்கு இடனாய்த் திணைபால் இடத்து ஒன்று
ஏற்பதுவும் பொதுவும் ஆவன பெயரே"

என்னும் நூற்பாவில் பெயர் இடுகுறியாகவும் காரணப்பெயராகவும் மரபு, ஆக்கம் ஆகிய நிலைகளில் தோன்றும் என்று கூறும். பெயர்ச்சொல் உயர்திணை அஃறிணை எனத் திணையையும் அத்திணையின் அடிப்படையில் ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன் பால், பலவின்பால் எனப் பாலையும் ஒருமை, பன்மை என எண்ணையும் தன்மை, முன்னிலை, படர்க்கை என மூன்று இடத்தையும் உணர்த்தி நிற்கும். பெயர்ச்சொல் வேற்றுமை ஏற்குமே அன்றி, மூவகைக் காலத்தை உணர்த்தாது.

ஒருபெயர்ச்சொல்லுக்குப் பதிலாக அதனை உணர்த்தி நிற்கும் பெயர்ச்சொல் பதிலிடு பெயர் எனப்படுகின்றது. சுட்டுப்பெயர்களும் படர்க்கைப் பெயர்களும் பதிலிடு பெயர்களாகும். இவை தவிரக் குழுவின் பெயர் குடியின் பெயர் எனவும் ஆண்பால் பெயர், பெண்பாற் பெயர் எனவும் பெயர்கள் வகைப்படுதல் உண்டு.

திராவிட மொழிகளின் பெயர்ச் சொற்களைப் பொதுவாக.

1) பொருட் பெயர்கள் (Concrete nouns)
2) குணப் பெயர்கள் (Abstract nouns)
3) தொழிற்பெயர்கள் (Verbal nouns)
4) வினையாலனையும் பெயர்கள் (Participial noun)

குறிப்பு

என்றும் இடப்பெயர்களை

1) மூவிடப்பெயர்கள் (Personal pronouns)
2) சுட்டுப்பெயர்கள் (Demonstrative pronouns)
3) வினாப்பெயர்கள் (Interrogative pronouns)
4) எண்ணுப் பெயர்கள் (Numerals) என்றும் பிரிக்கலாம்

மரபிலக்கண வல்லுநர்கள் உயர்திணைப் பெயர்கள் அ∴றிணைப் பெயர்கள் என்ற பெயர்ச் சொற்களைக் கூறுபடுத்துவர். மேலும் திரவிட மொழிகளின் பெயர்களைப் உயிர் உள்ளன பற்றி வரும் பெயர்கள் (Animate nouns) உயிரற்றன பற்றி வரும் பெயர்கள் (Inanimate nouns) என்று இரு கூறுபடுத்தலாம். உயிரற்றன பற்றி வரும் பெயர்கள் இடவேற்றுமை உருபான 'இல்' என்பதை ஏற்று நிற்க, உயிர் உள்ளன பற்றி வரும் பெயர்கள் சில முன்னொட்டுகளாக அமையும் சொல்லுபுகளையே பெற்று நிற்கின்றன. மலையாளம், கோடா, கன்னடம், கோண்டி, கோண்டா போன்ற மொழிகளில் உயிர் உள்ளன பற்றி வரும் பெயர்களில் இரண்டாம் வேற்றுமை கட்டாய உறுப்பாகவும், உயிரற்றன பற்றி வரும் பெயர்களில் இரண்டாம் வேற்றுமை உருபு விருப்ப உறுப்பாகவும் (Optional) உள்ளன.

மேலும் எண்ண முடியும் பொருட்கள் பற்றிய பெயர்கள் (Countable nouns) எண்ண முடியாப் பொருட்கள் பற்றிய பெயர்கள் (Mass nouns) என்றும் திராவிட மொழிகளின் பெயர்களைப் கூறுபடுத்துவர். இவற்றுள் அதிகமான முன்னைய பெயர்கள் பன்மை விகுதிகளை ஏற்கும். பின்னையது பன்மை உருபுகளை அதிகமாக ஏற்பதில்லை. நடுத்திராவிட மொழிகளிலும், வடதிராவிட மொழிகளிலும் இதற்குப் பல விதிவிலக்குகள் உள்ளன. இவற்றைத் தவிர நான்கு மணி, ஐந்து மணி என்று பொழுதைச் சுட்டி நிற்கும் பெயர்களையும் (Noun of time) தனியாகக் கூறுபடுத்திக் காட்டுவதுண்டு. இத்தகைய பெயர்கள் அதிகமாக வேற்றுமை ஆகியவற்றை மட்டுமே ஏற்கின்றன.

## பெயர்ச் சொற்கள் - திணை, பால்

திராவிட மொழிகளில் தனிச் சொற்களும், சில விடங்களில் விகுதிகளும், திணை, பால் பாகுபாட்டை தெளிவுறுத்திக் காட்டுகின்றன.

இம்மொழிகளில் தன்மை, முன்னிலை ஆகிய இடங்களில் பால் வேறுபாட்டைக் காண்பது அரிது. இப் பெயர்கள் ஒருமை, பன்மை என்ற எண் வேறுபாட்டை மட்டுமே காட்டி நிற்கின்றன. படர்க்கைப் பெயர்களின் எண், திணை, பால் ஆகியவற்றைத் தெளிவாக காணலாம்.

பால் பாகுபாடு மொழிக்குடும்பங்களுக்கு மொழிக்குடும்பங்கள் வேறுபட்டு அமைவதைக் காணலாம். வடமொழியில் திராவிட மொழிகளைப் போன்று பொருட்களின் தன்மையை ஒட்டிப் பால் பாகுபாடு அமையாமல் உயிரற்ற பொருட்களும் கட்புலனாகாத நுண் பொருட்களுங் கூட ஆண், பெண் என்று கூறுபடுத்தப்படுகின்றன. மலையாள மொழியில் இப்பிரிவு தெளிவாக அமைந்த போதிலும் இவற்றிற்குத் தனிப் பெயர்கள் கொடுக்கப்படவில்லை எனினும் மிகப் பழங்காலத்தில் இப்பாகுபாடு இருந்திருக்காது என்றும், சித்திய மொழிகளில் உள்ளது போன்று எல்லாப் பெயர்களும் திராவிட மொழிகளில் அ.்.றிணையாகக் கருதப்பட்டிருக்க வேண்டுமென்று சிலர் கருதுவர்.

ஆண்பால் பெண்பால் என்ற பாகுப்பாட்டை திராவிட மொழிகளில் உயர்திணை ஒருமையில்தான் காண முடிகின்றது. பழந்தமிழில் அ.்.றிணைப் பொருட்களையும் ஆண், பெண் என்று பால் அடிப்படையில் பகுக்கும் முறை இருந்தபோதிலும் அவற்றிற்கெனத் தனிப் பால்காட்டும் விகுதிகள் இல்லை. மாறாக தனிச் சொற்களே அமைகின்றன.

குரங்கு - மந்தி (பெண்பால்) கடுவன் (ஆண்பால்)

யானை - பிடி (பெண்பால்) களிறு (ஆண்பால்)

பால் பாகுபாடு திராவிட மொழிக் குடும்பத்திலும் மொழிக்கு மொழி வேறுபட்டுத் தோன்றுவதைக் காணலாம். பழங்கன்னடத்தில் இலக்கண நூலார் ஒன்பது வகையான பால்பாகுபாட்டினைக் காட்டுகின்றனர். மலையாளம் போன்ற மொழிகளில் சுட்டுப் பெயர்களில் மட்டும் ஐந்து வகையான பால்பாகுபாடு அமைய வினைமுற்றுக்களில் பால்பாகுப்பாட்டினைக் காண முடியவில்லை. தமிழிலுள்ள காணிக்காரர்களின் வட்டார வழக்கிலும், தோடா, கொடகு போன்ற மொழிகளிலும் இம்முறை உள்ளது.


குறிப்பு

கௌடா கன்னடத்தில் சுட்டுப் பெயர்களில் ஆண்பால் ஒருமை, ஆண்பால் அல்லாத (Non-masculine) ஒருமை, பன்மை என்ற பாகுபாடும், வினைமுற்றில் ஒருமை. பன்மை என்ற பாகுபாடும் உள்ளது. கன்னட மொழியின் மற்றொரு வட்டார வழக்கில் (Southern Havyaka kannada) வினை முற்றிலும் ஆண்பால் ஒருமை, ஆண்பால் அல்லாத ஒருமை, பலர்பால், பலவின் பால் என்ற நால்வகைப் பகுப்புகள் உள்ளன. கோண்டா, கோண்டி, கோணா,கொலாமி, நாயக்கி, ப்ர்ஜி, கடபா போன்ற மொழிகளில் வினைமுற்றுக்களிலும், சுட்டுப் பெயர்களிலும் ஆண்பால் ஆண்பால் ஒருமை, ஆண்பால் பன்மை, ஆண்பால் அல்லாத ஒருமை, ஆண்பால் அல்லாத பன்மை என்ற நால்வகைப் பகுப்புகள் உள்ளன.

மால்டோ மொழியில் ஆண்பால் ஒருமை, ஆண்பால் அல்லாத ஒருமை, பலவின்பால் என்ற மூன்று வகையான பால் பாகுபாடும், வினை முற்றுக்களில் ஐந்து வகையான பால் பாகுபாடும் உளளன. திராவிட மொழிகளிலுள்ள பால்பாகுபாட்டை விளக்கும் ஒப்பியலறிஞர்களுள் சிலர் அவற்றை மூவகையாகவும், வேறு சிர் நால்வகையாகவும் கூறுபடுத்தி விளக்குவர்.


**முதல்வகை**

**பெயர்ச் சொல்**




இவ்வாறு ஒருமையை ஆண்பால், பெண்பால் ஒன்றன்பால் என்று மூன்றாகவும், பன்மையைப் பலர்பால், பலவின்பால் என்று இரண்டாகவும் பிரிக்கும் முறை தமிழ், பழைய மலையாளம், கோடா, கன்னடம், கொடகு, துளு, போன்ற தென் திராவிட மொழிகளில் காணப்படுகின்றன.

**இரண்டாம் வகை**




இவ்வாறு ஒருமையை ஆண்பால், ஆண்பால் தவிர்ந்தன என்று பிரிந்து ஆண்பால் தவிர்ந்தன என்ற பிரிவில் பெண்பால், ஒன்றன்பால் ஆகியவற்றை அடக்கும் இயல்பிணையும், பன்மையை பலர்பால், பலவின்பால் என்று கூறுபடுத்தும் இயல்பினையும் தெலுங்கு, நாயக்கி, கொலாமி, பர்ஜி, கடபா, குரூக், மால்டோ போன்ற மொழிகளில் காணலாம்.

**மூன்றாம் வகை**



கோண்டா, கோண்டி, குயி, குவி போன்ற மொழிகளில் மேற் காட்டியவாறு ஒருமை, பன்மை ஆகிய இரண்டிலும் ஆண்பால், ஆண்பால் தவிர்ந்தன என்ற சமச்சீரான பகுப்பு முறையினைக் காண முடிகின்றது.

பிராகுயி, தோடா, தற்கால மலையாளம் ஆகியவற்றில் பால்பாகுபாடு தெளிவாக இல்லை. டாக்டர் கால்டுவெல் பால்பாகுபாடு திராவிட மொழிகளில் மிகப் பிற்காலத்தில் ஏற்பட்டதாகக் கருதுகின்றார். பாலறிகிளவிகள் (Pronominal terminations) இணைக்கப்படும் நிலை தொடங்கிய பின்னரே பால்பாகுபாடு அறிமுகப்படுத்தப்பட்டிருக்க வேண்டுமென்பது அவர் கருத்து. ஆனால் பாலறிகிளவிகளைப் பெறாத ஆண்பால், பெண்பால் ஆகியவற்றைக் குறிக்கும் சொற்களில் பால்பாகுபாடு உள்ளதைக் காண்கின்றோம். எனவே, டாக்டர் கால்டுவெல்லின் கூற்று முழுதும் பொருந்துவதில்லை.

ஜூல்ஸ்பிளாக் இம் மூவகைப் பிரிவில் முதல்வகைப் பாகுபாடு காலத்தால் பிந்தியது என்றும், தெலுங்கு போன்ற மொழிகளில் அமையும் இரண்டாவது வகைப் பிரிவே தொன்மையானது என்றும் குறிப்பிடுகின்றார். ஜூல்ஸ்பிளாக்கின் கருத்தையே B.H. கிருஷ்ணமூர்த்தியும் ஏற்றுக்கொண்டு இரண்டாம்வகைப் பிரிவே தொன்மையானது என்றும், இதன் பிற்கால வளர்ச்சியே முதலாம் வகைக் கூறுபாடு என்றும் விளக்கிச் செல்கின்றார். பெண்பாலைத் தனியாகப் பிரித்து வழங்கும் முறை திராவிடமொழிகளின் பல்வேறு கிளைமொழிகளிலும் இன்னும் வளர்ச்சியடையாமல் இருப்பதைச் சான்றாகக் காட்டி, ஆண்பால் தவிர்ந்தன **(Non-masculine)** என்னும் பிரிவிலிருந்து தென் திராவிடமொழிகளில் பெண்பால் என்னும் தனிப்பிரிவு பிற்காலத்தில் நாகரிக வளர்ச்சியின் காரணமாகவும், மக்களின் மனப்போக்கிற்கு ஏற்பவும் தனியாகப் பிரிந்திருக்கவேண்டுமென்று குறிப்பிடுகின்றார். மேலும் இரண்டாவது வகைப் பாகுபாடே அதிகமான திராவிடமொழிகளில் உள்ளதையும் காட்டிச் செல்கின்றார். ஆனால் பரோவும், பட்டாச்சாரியாவும் முதல்வகையே தொன்மையானது என்று கருதுகின்றனர்.

## இருமதிப்பெண் வினாக்கள்

1. அஃறிணையில் பால்வேறுபாடு பெயரில் காணப்பட்டமைக்குச் சான்றுதருக.

   குரங்கு - கடுவன் -ஆண், மந்தி - பெண்

2. உயிரற்ற பொருட்களைப் பால்வேறுபாடு காட்டிப்பகுக்கும் மொழி எது?

   வடமொழி

3. உயர்திணை, அஃறிணை தெலுங்கில் எவ்வாறு வழங்கப்படும்?

   மஹத், அமஹத்

4. ஆண், ஆண்பால் தவிர்ந்தன என்ற பாகுபாடு காணப்பெறும் மொழிகள் எவை?

   தெலுங்கு, நாய்கி, கொலாமி, பர்ஜி

**குறிப்பு**

## குறுவினா

5. பெயர்ச்சொல்லின் பண்புகளையும் வகைப்பாட்டையும் விவரிக்க.

   பெயர்ச்சொல் என்ற தலைப்பில் உள்ள செய்திகள்

6. திராவிடமொழிச் சொற்களின் திணையமைதியை விவரிக்க.

   திராவிட மொழிகளில் தனிச்சொற்களும் என்பது தொடங்கி மாறாகத் தனிச்சொற்களே அமைகின்றன. என்பதுவரை

## பெருவினா

7. திராவிட மொழிகளில் திணை பால் பாகுபாட்டை விவரிக்க

   பெயர்ச்சொற்கள் திணை, பால் என்ற தலைப்பின் கீழ் அமைந்தவை

குறிப்பு

# கூறு 8

## எண் உணர்த்தல்- வேற்றுமைகள்

### எண் உணர்த்தல்

திராவிட மொழிகளில் எண்ணைப் பொறுத்தவரையில் ஒருமை, பன்மை என்ற பாகுபாட்டை மட்டுமே காண்கின்றோம். இவற்றுள் ஒருமை எண்ணுக்கெனத் தனி விகுதிகளை இணைக்கும் மரபு இல்லை. எனினும் சிலர் பழந்தமிழில் 'ம'கரம் பன்மையுருபாகவும், 'ன'கரம் ஒருமையுருபாகவும் பயன்படுத்தப் பட்டதாக வாதிடுவர். சிலர் 'மனிதன்' என்ற சொல்லில் வரும் 'ன' கர ஒற்றையும் கன்னடச் சொல்லான huruganu (பையன்) என்ற சொல்லின் இறுதி ஒலியான 'nu' என்பதையும் tammu-ru என்ற சொல்லின் இறுதி ஒலியான 'று' என்பதையும் ஒருமை விகுதிகள் என்பர்.

இந்தோ ஐரோப்பிய மொழிகளில் ஒருமை, இருமை (dual,) பன்மை என்ற முப்பிரிவுகள் உள்ளன. அடிச்சொல்லுடனோ, ஒருமைப் பெயர்களுடனோ பன்மை விகுதிகளை இணைத்துப் பன்மை எண்ணை உணர்த்துவது திராவிட மொழிகளின் பொதுவியல்பு. நடுத்திராவிட மொழிகளில் பெண்களைக் குறிக்கும் சொற்களொடு பன்மை விகுதியனை இணைத்து உணர்திணையாக வழங்கும் வழக்கமில்லை. உயர்திணைக்குரிய பன்மை விகுதியாகத் திராவிட மொழிகளில் 'ர' என்பது பெருவழக்கிலுள்ளன. சில மொழிகளில் 'க'ரத்தோடு 'உ'கர உயிர் இணைந்தும் 'அ' கரம் இணைந்தும் பன்மை விகுதி அமைவதுண்டு.

எ.கா. (1) நாயக்கி - தல் (தலை)
- தல்கு (தலைகள்)
(2) கோண்டா - மேமர் (கணவன்)
- மேமாரு(கணவன்மார்கள்)

சில மொழிகளில் -V, -ev, -ov என்பனவும் பன்மை விகுதிகளாக உள்ளன. இவ்விகுதிகளைக் கடபா, பர்ஜி, கொலாமி, ஆகிய மொழிகளில் காணலாம்.

(1) பர்ஜி - அலியக் (எருமை)
- alioakev (எருமைகள்)

குறிப்பு

(2) கோண்டா - iya (தாய்)

- iyov (தாய்மார்கள்)

திராவிட மொழிகளில் திணை, பால் பாகுபாட்டில் எண்ணும் அடங்கி விடுகின்றது.

| திணை | | பால் | எண் |
|---|---|---|---|
| (1) உயர்திணை | - | ஆண்பால் | - ஒருமை |
| | - | பெண்பால் | - ஒருமை |
| | - | பலர்பால் | - பன்மை |
| (2) அ∴றிணை | - | ஒன்றன்பால் | - ஒருமை |
| | - | பலவின்பால் | - பன்மை |

## உயர்திணை ஆண்பால் ஒருமை விகுதிகள்

திராவிட மொழிகளில் ஒருமைக்கெனத் தனி விகுதிகள் இல்லை. எனினும் மூவிடப் பெயர்களில் இணைக்கப்படும் பாலறிகிளவிகள் எண் வேறுபாட்டையும் உணர்த்தி நிற்கின்றன. உயர்திணை ஆண்பால் ஒருமை விகுதிகளாகத் தமிழ், மலையாளம் போன்ற தென் திராவிட மொழிகளில் 'அன்' 'ஆன்' என்னும் விகுதிகள் இடம் பெறுகின்றன.

தமிழில் காணப்படும் 'அன்' என்னும் விகுதி ஒலித்துணையாக உகரத்தைப் பெற்றுக் கன்னடமொழியில் 'அனு' என்று வருகின்றது. டு, உடு, அடு, ண்டு, அண்டு என்னும் வடிவங்கள் தெலுங்கு மொழியில் உள்ளன. தெலுங்கில் காணப்படும் இறுதி மூன்று வடிவங்களும் 'அன் ' என்பதன் திரிபே. மூவிடப் பெயர்களோடு மட்டுமின்றிச் சில திரிபுகளோடு அன் போன்ற விகுதிகளை இணைக்கும் போது அவை ஆண்பால் ஒருமைப் பெயர்களாகின்றன.

எ.கா மலை + அன் > மலையான்

நாடு + அன் > நாடன்

திராவிட மொழிகளில் காணப்படும் ஆண்பால் ஒருமை விகுதிகளில் *an> *-van> *-(k)kan> *-ikan> *-akan> *-avan> *-antu> *-ak> *-ttan என்பவற்றை மூலத்திராவிட வடிவங்களாகக் கொள்ளலாம்.

உயர்திணை பெண்பால் ஒருமை விகுதிகள்

பெண்பால் ஒருமை விகுதிகளாகத் தமிழ், மலையாளம் பொன்ற தென்திராவிட மொழிகளில் அள், ஆள், இ என்பன உள்ளன. தெலுங்கில் சிலவிடங்களில் ‘ஆளு’ என்ற விகுதி வழங்குகின்றது. தமிழில் ‘இ’ என்னும் விகுதி சிறுபான்மை வழக்கிலுள்ளது. கன்னடம், தெலுங்கு பொன்ற மொழிகளிலும் இவ்விகுதியைக் காணலாம்.

எ.கா. தமிழ் - குறத்தி

தோழி

அரசி

கன்னடம் - அரசிதி

தெலுங்கு - சின்னதி

துளு, மால்டோ பொன்ற மொழிகளில் orti என்ற வடிவம் காணப்படுகின்றது. -*tti, *al, *-(k)ki, *-atti akati, *ace என்ற பல விகுதிகள் திராவிட மொழிக் குடும்பத்தின் பல்வேறு கிளைகளில் காணப்பட்டபோதிலும் *-tti, *-I, *-ai என்பவற்றை மட்டுமே மூலத்திராவிட மொழி நிலைக்குத் திருத்தியமைக்க முடியும் என்கிறாா செ.வை.சண்முகம். தமிழிலும், மலையாளத்திலும், பல நடுத்திராவிட மொழிகளிலும் ஆண்பால் ஒருமை வடிவத்தோடு பெண்பால் விகுதியை இணைத்துப் பெண்பால் ஒருமையை உணர்த்தும் இயல்பும் காணக்கிடக்கின்றது.

பார்ப்பான் - இ > பார்ப்பினி

அதைத் தவிர இரட்டை பெண் பால் விகுதிகளை இணைத்துப் பெண்பாலை உணர்த்தும் இயல்பும் தமிழ், மலையாளம், கொடகு பொன்ற மொழிகளில் உள்ளன.

தமிழ் - மைத்தினித்தி

மலையாளம் - Ku:n-I.tti

## அ.்.றிணை ஒன்றன்பால் விகுதிகள்

ஒன்றன்பால் விகுதிகளாக ‘து’ ‘த’ போன்ற திராவிட மொழிகளில் காணப்படுகின்றன. திராவிட மொழிகளில் முற்காலத்தின் எல்லாப் பெயர்ச் சொற்களும் அ.்.றிணையாக இருந்திருக்க வேண்டுமென்றும், பின்னா் காலப்போக்கில் பாலுணர்த்தும் விகுதிகள் அவற்றோடு இணைந்து உயர்திணையாக அமைந்திருக்க வேண்டுமென்றும் என்பது டாக்டர்

கால்டுவெல் கருத்து. ஒருமை, பன்மையமைப்பில் திராவிட மொழிகள் பெரும்பாலும் சித்திய மொழிகளை ஒத்துக் காணப்படுகின்றன.

இந்தோ-ஐரோப்பிய மொழிகளில் விகுதி இணைத்தல், இடையொட்டு (infix) இணைத்தல், தனி வடிவம் அமைத்தல் எனப் பல முறைகள் இருக்க, திராவிட மொழிகளில் விகுதிகளை இணைத்துப் பன்மை உணர்த்தும் முறை மட்டுமே உள்ளது."

## உயர்திணைப் பலர்பால் விகுதிகள்

தெலுங்கு தவிர்ந்த ஏனைய நடுத்திராவிட மொழிகளில் அண்பால் பன்மை மட்டும் காணப்படுகின்றது. ஏனைய அனைத்து மொழிகளிலும் உயர்திணையில் பொதுநிலையில் பலர்பால் (Epicine plural) என்ற தனிப்பிரிவு உள்ளது. இவற்றுள் பலர்பால் என்ற பகுப்புத்தான் தொன்மையானது என்பதும் ஆண்பால் பன்மை என்பது பிற்காலத்தில் ஏற்பட்டது என்பர்.

உயர்திணைப் பலர்பால் விகுதிகளில் அர், ஆர், இர், ஈர், அ, மார் என்பன தமிழ், மலையாளம் போன்ற தென் திராவிட மொழிகளில் பெருவழக்கில் உள்ளன. அரு, ஆரெ, ஏரு, ரி, ரு போன்றன கன்னடம், தெலுங்கு போன்ற மொழிகளில் காணப்படுகின்றன. பலர்பால் விகுதியான மார் இடைக்காலத் தமிழிலக்கியங்களிலும், தற்கால மலையாள மொழியிலும் பெருவழக்கிலுள்ளது.

தமிழில் அர், ஆர், போன்ற பன்மை விகுதிகளோடு கள் விகுதியும் இணைந்து 'அவர்கள்' என்பன போன்ற இரட்டைப் பன்மை வடிவங்களும் மரியாதைப் பன்மை வடிவங்களும் அமைவதுண்டு. சில வட்டார வழக்குகளில் 'க' விகுதியும் 'ங்க' என்னும் விகுதியும் பலர்பால் விகுதிகளாக உள்ளன. 'கள்' 'ள்' போன்ற பன்மை விகுதிகள் உயர்திணைக்கு மட்டுமின்றி அஃறிணைக்கும் பயன்படுத்தப்படுகின்றன.

'அர்' விகுதி தமிழ், மலையாளம் ஆகிய மொழிகளில் மட்டுமின்றி கோண்டா, பெங்கொ, நாயக்கி, பர்ஜி போன்ற மொழிகளிலும் உள்ளது. 'வர்' விகுதி கொடகு, கோண்டா, குயி, குருக், மால்டோ போன்ற மொழிகளில் காணப்படுகின்றது. இவற்றைத் தவிர, தமிழ், மலையாளம் ஆகிய மொழிகளில் 'ஓர்' என்னும் விகுதியும் உள்ளது.

**மரியாதைப் பன்மை**

திராவிட மொழிக் குடும்பத்தின் அதிகமான மொழிகளில் ஒருவருக்கு அதிக மரியாதை கொடுக்க வேண்டுமாயின் மூவிடப் பெயர்களின் பன்மை வடிவினை ஒருமையாகச் சுட்டப் பயன்படுத்துவதுண்டு.

மரியாதைப் பன்மை தொல்காப்பியர் காலத்திலிருந்தே தனித்த ஓர் இலக்கணக் கூறாக மரபிலக்கண வல்லுநர்களால் கருதப்பட்டு வருகின்றது. தமிழில் மரியாதைப் பன்மை பேச்சு வழக்கிற்கே உரியதெனத் தொல்காப்பியர் சுட்டிச் செல்கின்றார். பழந்தமிழில் மரியாதைப் பன்மை இலக்கியங்களில் பெருவழக்காக இல்லாத போதிலும் பாடல்களின் அடிக்குறிப்புகளில் இடம் பெறும் புலவர் பெயரோடு பல இடங்களில் அது இணைக்கப்படுகின்றது.

சிலம்பில், மகனார், மகளார் என்னும் வழக்குகள் இடம் பெறக் காணலாம். பன்மை ஆகியன வேறுபடுத்திச் சுட்டப்படுகின்றன. இயற்பெயரோடு அவர்கள் என்பதை இணைத்து மரியாதை வடிவங்களை அமைக்கும் போக்கினை கி.பி.16ஆம் நூற்றாண்டிலிருந்து காணமுடிகின்றது.

மலையாளக் கல்வெட்டில், ‘அர்’ ‘கள்’ என்னும் விகுதிகள் மரியாதைப் பன்மையுணர்த்தத் துணைபுரிகின்றன.

தமிழில் தாங்கள், நீங்கள், அவர்கள் என்னும் இரட்டைப் பன்மை வடிவங்களைப் பெரும்பாலும் பயன்படுத்துகின்றோம் இவற்றோடு அவர் என்னும் பலர்பால் படர்க்கை வடிவினை கள் விகுதி சேர்க்காமல் பயன்படுத்துவதும் உண்டு. மலையாள மொழியில் அத்தேகம், இத்தேகம் என்பன போன்ற வடிவங்கள் உள்ளன. கன்னடத்தில் ஆதனு, ஓதனு, ஈதனு என்பன ஆண்பால் மரியாதைப்பன்மை வடிவங்களாகவும் ஆகெ, ஊகெ, ஈகெ, என்பன

பெண்பால் மரியாதைப்பன்மை வடிவங்களாகவும் உள்ளன. தெலுங்கில் ஆயன, ஈயன, ஆமெ, ஈமெ போன்ற வடிவங்கள் காணப்படுகின்றன.

சில மொழிகளில் படர்க்கைப் பெயர்கள் சில மாறுதல்களோடு மரியாதைப் பன்மை வடிவங்களாக வருகின்றன. inpu என்பன போன்ற துளு மொழியின் மரியாதைப் பன்மை வடிவங்கள் இதற்குச் சான்று. தெலுங்கு தவிர்ந்த ஏனைய நடுத்திராவிட மொழிகளில் ஆண்பால் பன்மை

குறிப்பு

வடிவமே மரியாதைப் பன்மை வடிவாகப் பயன்படுத்தப்படுகின்றது. ஏனைய பன்மை வடிவங்கள் ஒரு என்னும் எண்ணுப் பெயரடையோடு (Numeral attribute) உருவாவதில்லை. ஆனால் மரியாதைப் பன்மை 'ஒரு வேட்டுவர்' என்று எண்ணுப் பெயரடையோடு வருகின்றது.

## பெண்பால் பன்மை

பெண்பால் பன்மையைக் கோண்டி, கோயா, கோண்டா, குயி, குவி, பெங்கொ ஆகிய மொழிகளில் காண்கின்றோம். இவற்றுள் கொயா, கோண்டா, குயி, குவி என்பவற்றில் (-sk(a) என்னும் பெண்பால் பன்மை விகுதி காணப்படுகின்றது. கோண்டி மொழியில் -hk) என்னும் விகுதியும் உள்ளது. பெங்கோ மொழியில் -(i) k,c என்ற விகுதிகளும் காணப்படுகின்றன.

## அ.்.றிணைப் பன்மை

தமிழில் அ.்.றிணைப் பன்மை விகுதியாக 'கள்' என்பதும் அதன் மாற்று வடிவமான 'gal' என்பதும் காணப்படுகின்றன. 'அ' விகுதி இலக்கியத் தமிழில் பெருவழக்கிலுள்ளது. இவற்றோடு 'பல' 'சில' என்ற தனி வடிவங்களும் தமிழில் உள்ளன. திராவிட மொழிகளில் அ.்.றிணைப் பன்மை வடிவங்கள் பல காணப்பட்ட போதிலும் --கள், --ள் என்பவற்றை மட்டுமே மூலத்திராவிட வடிவங்களாகக் கொள்வர். இவற்றின் மாற்று வடிவங்கள் துளு, கொலாமி, பர்ஜி பொன்ற மொழிகளில் காணப்படுகின்றன. தெலுங்கு மொழியில் 'லு' என்னும் விகுதியே அதிகமாகப் பயின்று வருகின்றது.

| | ஒருமை | | பன்மை |
|---|---|---|---|
| எ.கா | சிலுகா | - | சிலுகலு |
| | எலுகு | - | எலுகலு |

அ.்.றிணைப் பன்மை விகுதிகளில் 'கள்' விகுதி குற்றுயிரைக் கொண்ட ஓரசைப் பெயர்களையடுத்தும் (C) VCV என்று அமைகின்ற ஈரசைப் பெயர்களையடுத்தும் இடம் பெறுவதாகவும், --ள் விகுதி ஏனைய பெயர்களையடுத்து இடம்பெறுவதாகவும் டாக்டர். சுப்பிரமணியம்

விளக்குகின்றார். நடுத்திராவிட மொழிகளில் பன்மை விகுதி எண்ணமுடியும் பொருட்களின் பெயர்களோடு (Count nouns) மட்டுமே இணைக்கப்பட்டுள்ளது.

ஆனால் நடுத்திராவிட மொழிகளில் எண்ணமுடியாப் பொருட்களின் பெயரோடும் (Mass nouns) பன்மை விகுதி இணைக்கப்படுவதைக் காணலாம். எனினும் இம்முறை சமச்சீராக அமையவில்லை.

**வேற்றுமைகள்**

திராவிட மொழிகளில் வேற்றுமைகள் எண்ணற்றனவாக உள்ளன. பெயர்ச்சொற்களின் பின்னர் இணைக்கப்படும் ஒவ்வொரு இணைப்பும் இம்மொழிகளில் பொதுவாக ஒரு புதிய வேற்றுமையைத் தோற்றுவிக்கின்றன. இவ் வேற்றுமைகள் தொடர்களிலுள்ள பெயருக்கும், வினைக்கும் இடையேயுள்ள தொடர்பினை உணர்த்துவன. ஆறாம் வேற்றுமை மட்டும் பெயருக்கும் பெயருக்கும் இடையேயுள்ள உறவினைக் காட்டி நிற்கின்றது. வடமொழி இலக்கண வல்லுநர்கள் அம் மொழியிலுள்ள வேற்றுமை எட்டாக வரையறுத்து விளக்கிச் சென்றனர். இலத்தீன் மொழியின் இலக்கணத்தை ஒட்டி ஆங்கில மொழிக்கு இலக்கணம் அமைத்ததைப் போன்று, வடமொழியில் காணப்படும் வேற்றுமைப் பாகுபாட்டைப் பின்பற்றித் தமிழிலும் ஒப்புமையாக்கமாக வேற்றுமைகள் எட்டு என்று வரையறுத்துவிட்டனர். மலையாளம், கன்னடம், தெலுங்கு போன்ற மொழிகளின் இலக்கண நூற்களான லீலாதிலகம், சப்தமணி தர்ப்பணம், பாலவியாகரணமு என்ற நூற்களும் இம்மொழிகளில் தமிழைப் போன்று எட்டு வகையான வேற்றுமைகள் உள்ளன என்று குறிப்பிடுகின்றன.

திராவிட மொழிகளில் முற்காலத்தில் வேற்றுமையை உணர்த்த முழுச்சொற்கள் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டுமென்றும், நாளடைவில் அச்சொற்கள் திரிந்து தனித்தியங்கும் உருபன்களாக (bound forms) மாறி, பின்னர் உருபுகள் (suffixes) என்ற நிலையை அடைந்திருக்க வேண்டுமென்றும் டாக்டர். கால்டுவெல் கருதுகின்றார். வேற்றுமைகள் திராவிட மொழிகளில் இரண்டு விதமாக அமைவதைக் காணலாம்.

(1) பெயர் + சொல்லுருபு (Freeform)

எ.கா மரத்தின் மேல், கல்கொண்டு

(2) பெயர் + உருபு (Case marker)

எ.கா. கல்லால், அவனது

குறிப்பு

இவ்வாறு வேற்றுமையை உணர்த்தப் பயன்படுத்தப்படும் உருபுகள் அல்லாத சொற்களைச் சொல்லுருபுகள் (Free forms or post position) என்பர். வேற்றுமை உருபுகளொடு இத்தகைய சொல்லுருபுகள் பல தமிழிலும் ஏனைய திராவிட மொழிகளிலும் உள்ளதால், திராவிட மொழிகளில் வேற்றுமைகள் எட்டு அல்ல பல என்பது தெளிவாகின்றது.

மேலும் இந்த எட்டு வேற்றுமைகளில் முதல் வேற்றுமை வெறும் பெயராகவே உள்ளது. ஏனைய வேற்றுமைகளைப் போன்று உருபுகள் இல்லாத அதனையும் வேற்றுமையுள் ஒன்றாகக் கணக்கிட்டு எண்ணுவது பொருத்தமாகத் தோன்றவில்லை. இதைப் போன்று எட்டாம் வேற்றுமையாகிய விளிவேற்றுமையும் உருபற்றதாக அமைகின்றது. எனினும் விளி ஏற்கும்போது அப்பெயர்ச்சொற்களில் ஓரளவு வடிவமாற்றத்தைக் காணமுடிகின்றது. மூன்றாம் வேற்றுமை கருவி, கருத்தா, உடனிகழ்ச்சி போன்ற பல பொருட்களில் வருவதாக மரபிலக்கண நூலார் குறிப்பிடுவர். எனவே இவ்வேற்றுமையைக் கருவிப் பொருள் வேற்றுமை (Instrumental case) உடனிகழ்ச்சிப் பொருள் வேற்றுமை (Sociative case) என்று தனித்தனி வேற்றுமைகளாகப் பிரிப்பதே ஏற்புடையது.

பழந்தமிழைப் போன்று கொடா, பர்ஜி, கடபா போன்ற மொழிகள் இவ்விரண்டிற்கும் பொதுவாக உருபுகளைப் பெற்ற போதிலும், தொடர்களில் அவை செயல்படும் முறையை வைத்து நோக்கும்போது இவ்விரண்டையும் தனித்தனி வேற்றுமைகளாகக் கொள்வதே சிறப்பாகத் தோன்றுகின்றது. டாக்டர். கால்டுவெல் நீங்கற் பொருளை உணர்த்தும் ஐந்தாம் வேற்றுமை (ablative of motion) யினையும், இடப்பொருள் உணர்த்தும் ஏழாம் வேற்றுமையினையும் இருவேறு வேற்றுமைகளாகக் கொள்ள வேண்டியதில்லை என்று கூறிச் செல்கின்றனர்.

1) மரத்தில் உள்ளது 5-ம் வேற்றுமை

2) மரத்தின் கண் உள்ளது -7ஆம் வேற்றுமை

இவ்விரு தொடர்களும் தனித்தனி வேற்றுமைப் பொருளை உணர்த்துவதாகக் கூறப்பட்ட போதிலும் பொருளடிப்படையில் பார்க்கும் போது ஒன்றாகவேயுள்ளன. எனினும் திராவிட மொழிகளில் இவ்விரு வேற்றுமைகளுக்கிடையில் அடிப்படையில் சில வேறுபாடுகள் உள்ளன

ஏழாம் வேற்றுமை இடப் பொருளை மட்டும் உணர்த்த, தமிழ் படகா, துளு, பர்ஜி, குருக், பிராகுயி போன்ற மொழிகளில் நீங்கற் பொருளைக் காட்டும் வேற்றுமை, நீங்கற் பொருளோடு ஒப்புமைப் பொருளிலும் ‘அவனின்’ (அவனைவிட) என்று உயர்திணை மூவிடப் பெயர்களையடுத்து வருகின்றது. எனவே நீங்கற் பொருள் வேற்றுமையான 5ஆம் வேற்றுமையினையும், இடப்பொருள் வேற்றுமையான 7ஆம் வேற்றுமையினையும் ஒன்றாக இணைப்பதைவிடத் தனித்தனி வேற்றுமையாகக் கொண்டு 5ஆம் வேற்றுமையை நீங்கற் பொருள் வேற்றுமை, ஒப்புமைப் பொருள் வேற்றுமை என இரண்டாகக் கொள்ளலாம். இராமசுவாமி ஐயர், ச.அகத்தியலிங்கம், கோதண்டராமன் போன்றோர்கள் வேறு சில வேற்றுமைகளையும் காட்டிச் செல்கின்றனர்.

வேற்றுமைகள் ஒவ்வொரு மொழியின் அல்லது மொழிக்குடும்பத்தின் இயல்பிற்கேற்ப அமைவதால் அவை மொழிக்கு மொழி எண்ணிக்கையில் வேறுபடுகின்றன. சான்றாக, வடமொழியில் எட்டு வேற்றுமைகளும், இலத்தீன் மொழியில் ஆறு வேற்றுமைகளும், கிரேக்க மொழியில் ஐந்து வேற்றுமைகளும், பின்ஷிய மொழியில் பதினெட்டு வேற்றுமைகளும் உள்ளன. ஒரு மொழிக்கு இலக்கணம் வகுக்கும்போது அம்மொழியின் உண்மையான நிலையை ஆராய்ந்து இலக்கண நெறிகள் அமைக்க வேண்டுமே தவிர அக்கால மக்கள் வழிபட்டு வணங்கிய ‘தேவபாஷை’களோடு ஒப்பிட்டு நோக்கி அம்மொழிகளிலுள்ள பாகுபாட்டைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றுவது தவறாகப் போய்விடும். வடமொழியைப் பின்பற்றித் தமிழிலும் வேற்றுமைகள் எட்டு என்று தவறாக வகுத்து விட்டனர் என்பது கால்டுவெல்லின் கருத்தாகும்.

வேற்றுமைகளைப் பொருள் நோக்கியும், உருபு நோக்கியும் வகுப்பது இயல்பு, இந்நிலையில் நின்று பார்க்கும் போதும் திராவிட மொழிகளின் வேற்றுமைப் பாகுபாடு பொருந்துவதாக இல்லை. சான்றாக, ஒவ்வொரு வேற்றுமையிலும் பல பொருட்களைக் காண்கின்றோம், மூன்றாம் வேற்றுமையில் கருவி, கருத்தா, உடனிகழ்ச்சி போன்ற பொருட்களும்,

குறிப்பு

நான்காம் வேற்றுமையில் கொடை, பகை போன்ற பல பொருட்களும் அமைவதைக் காணலாம் எனவே பொருள் நோக்கியும் தனித்தனி வேற்றுமைகளாக வகுக்கப்படவில்லை என்பது தெளிவு. ஐந்தாம் வேற்றுமைக்குரிய, ‘இல்’ உருபுக்கும் இடப்பொருளில் வரும் ஏழாம் வேற்றுமைக்குமிடையில் அதிக வேறுபாட்டைக் காணமுடியவில்லை இரண்டும் இடப்பொருளையே உணர்த்துகின்றன. நீங்கற் பொருளை உணர்த்தத் தற்காலத் தமிழில் ‘இல்’ உருபொடு ‘இருந்து’ போன்ற தனிச்சொற்கள் சேர்க்கப்படுகின்றன.

ஒவ்வொரு மொழியிலும் அதன் வளர்ச்சியை ஒட்டியும், தேவையை ஒட்டியும் வேற்றுமைகள் பலப்பலவாய் எழுதல் இயல்பே. இந்நிலையில் பிற மொழிகளின் அமைப்பைப் பின்பற்றித் தனக்குரிய தனித்தன்மையில் வளர்ந்து செல்லும் ஒரு மொழிக்கு இலக்கண வரையறை செய்வது முற்றிலும் பொருத்தமற்றதே என்பதற்குத் திராவிட மொழிகளின் வேற்றுமைப் பாகுபாடே சான்றாக அமைகின்றது.

## உருபு ஏற்கும் முறை

திராவிட மொழிகள் வேற்றுமை உருபுகளை ஏற்பதற்கும் இந்தோ-ஐரோப்பிய மொழிகள் வேற்றுமை உருபேற்பதற்குமிடையே பல வேறுபாடுகள் உள்ளன. திராவிட மொழிகளில் வேற்றுமைகள் பொதுவாக பெயர் + சாரியை + வேற்றுமை உருபு என்ற முறைப்படி அமைகின்றன. பெயர்ச் சொற்கள் சாரியைகளைப் பெறுவதிலும் ஓர் ஒழுங்கு முறையை இம்மொழிகளில் காணமுடிகின்றது.

பொதுவாக ‘அத்து’ ‘இன்’ போன்ற சாரியைகள் அஃறிணை ஒன்றன்பால் பெயர்களையடுத்தும் ‘அற்று’ ச் சாரியை அஃறிணைப் பலவின்பால் பெயர்களையடுத்தும், வருவதைக் காணலாம். அன் சாரியை அஃறிணை ஒன்றன்பால் பெயர்களையடுத்தும், சுட்டுப் பெயர்களையடுத்தும் வருகின்றது. வேற்றுமை உருபுகளைப் பொறுத்த வரையிலும் இம்மொழிகளில அதிகத் திரிபுகள் இல்லை. இம் மொழிகளில் காணக்கிடக்கும் ஒரு சில திரிபுகள் அதிகமாகப் புணர்ச்சி வகையால் வகையால் ஏற்படுவனவே.

இந்தோ-ஐரோப்பிய மொழிகளில் பெயர்ச் சொற்கள் வேற்றுமை ஏற்கும் போது அச்சொற்களின் இறுதி ஒலிக்கேற்ப உருபுகளும் மாறுவதால் உருபேற்கும் முறைகளும் பலவாக அமைகின்றன. திராவிட மொழிகளில் பெயரீறுகளுக்கேற்ப உருபுகள் மாறும் நிலை இல்லை. மாறுதல்கள் அனைத்தும் பெயர்களுக்கும் உருபுகளுக்கும் இடையில் இணைக்கப்படும் சாரியைகளிலே நிகழ்கின்றன. இம்மொழிகளில் பெயரே வேற்றுமை ஏற்கும் அடிச்சொல்லாக (Inflexional base) அமையும். தமிழில் 'ம'கர ஈற்றைக் கொண்ட அ.்.றிணைப் பெயர்கள் உருபேற்கும் போது இறுதி ஒலி கெட்டு 'அத்துச் சாரியை வருவதையும், து, டு ஆகிய ஈறுகளுடைய பெயர்கள் வேற்றுமை ஏற்கும் அவ்வொலிகள் இரட்டிப்பதையும் காணலாம்.

எ.கா. நாடு > நாட்டை

இந்தோ-ஐரோப்பிய மொழிகளில் ஒருமைக்கும் பன்மைக்கும் தனித்தனி உருபுகள் உள்ளன. திராவிட மொழிகளில் அவ்வாறில்லை. ஆறாம் வேற்றுமையில் மட்டும் ஒருமைக்கும், பன்மைக்கும் எனத் தனித்தனி உருபுகளை காண முடிகின்றது. திராவிட மொழிகளின் சொல்லுருபுகளான 'இடம்', 'கொண்டு' போன்றன தனியாக வழங்கும் தகுதியினையுடையன. வேற்றுமை உருபு ஏற்கும் முறையில் திராவிட மொழிகள் ஓரளவிற்குச் சித்திய மொழிகளை ஒத்துள்ளதாக டாக்டர் கால்டுவெல் குறிப்பிடுகின்றார்.

## உருபுகளும், சாரியைகளும்

உருபு ஏற்காமல் தொகையாக நின்று வேற்றுமைப் பொருளை உணர்த்தும்போது பெயர்ச்சொற்கள் திரியாமல் நிற்கும். உருபு ஏற்கும் போது பெயர்ச் சொல்லின் ஈறும், உருபும் திரிந்து நிற்கும்.

எ.கா அவன் + ஐ > அவனை

இராமன் + ஆல் > இராமனால்

சில பெயர்ச் சொற்கள் உருபு ஏற்கும் போது அவ்வொலிச் சேர்க்கை ஒலிப்பதற்கு அரிதாக இருந்தாலோ, அல்லது அம்மொழியின் ஒலியமைப்பிற்குப் பொருந்துவதாக அமையாவிட்டாலோ, பெயருக்கும் உருபுக்கும் இடையில் பொருள் தராத உருபன்கள் (empty morphs)

சிலவற்றைப் பயன்படுத்துகின்றோம் பெயர்ச் சொற்களையும் வேற்றுமை உருபுகளையும் சார்ந்து இயைந்து வரும் இவற்றை வேற்றுமை உருபுகளையும் சார்ந்து இயைந்து வரும் இவற்றைச் சாரியை என்று மரபிலக்கண நூலாரும், Inflexional increaments or Augments என்று மொழிநூலாரும் அழைப்பர். சாரியைகள் தனித்து வருவதோடு, இரண்டாக இணைந்தும் வருவதைக் காணலாம்.

எ.கா மரம் + அத்து + இன் + ஆல் > மரத்தினால்

அத்துச் சாரியை பெரும்பாலும் 'ம'கர மெய்யை அடுத்து வருகின்றது. 'உ'கர உயிரைக் கொண்டு முடியும் சொற்கள் பெரும்பாலும், 'இன்' சாரியை பெறுகின்றது.

எ.கா. பூவினால், பூவிலங்கு

## திராவிட மொழிகளின் சாரியைகள்

தமிழில் 'உ' கரத்தைக் கொண்டு முடியும் எண்ணுப் பெயர்களை அடுத்து அன், இன் போன்ற சாரியைகள் இடம் பெறும், அது, இது என்னும் சுட்டுப் பெயர்களையடுத்தும் 'அன்' சாரியை வருகின்றது. 'அற்றுச்' சாரியை பல, சில போன்ற பெயர்களை (Collective nouns) அடுத்து இடம் பெறுகின்றது. 'உ'கரச் சாரியை 'ண'கர ஈற்றுச் சொற்களையடுத்து வருகின்றது.

எ.கா கண்ணுக்கு

மண்ணுக்கு

மலையாள மொழியில் 'ம'கர ஈற்றையுடைய அஃறிணைப் பெயர்களின் மன்னர் -த்த்- என்ற சாரியையும், உ, ஊ அ போன்ற ஈறுகளையுடைய பெயர்கள் ஆறாம் வேற்றுமை, நான்காம் வேற்றுமை ஆகியவற்றின் உருபுகளை ஏற்கும் போது 'இன்' சாரியையும் இடம் பெறுகின்றன. கோடா மொழியில் -t-, -n- ஆகியனவும், தோடா மொழியில் -t வும் கொடகு மொழியில் -t-, -an- ஆகியனவும், கன்னடத்தில் d-, ar/ar என்பனவும், துளு மொழியில் t-, -d-, -a-, -e- ஆகியனவும் சாரியைகளாக வருகின்றன. கோண்டி மொழியில் -t-, -d-, -n- போன்ற சாரியைகளையும், கோண்டா மொழியில் -ti, -di- ஆகிய

சாரியைகளையும், குயி மொழியில் -n, i-, -tin- -i- arin போன்ற சாரியைகளையும், குவி மொழியில் -n-, -r-, -t- என்பனவற்றையும், குருக் மொழியில் -i-, a-k- போன்ற சாரியைகளையும் காண முடிகின்றது. இவற்றுள் *-an, *-tt-*-in- *-a- *-tt- *-k- என்பனவற்றை மூலத்திராவிட வடிவங்களாகக் கொள்ளலாம்.

## எழுவாய் வேற்றுமை அல்லது முதல் வேற்றுமை

எழுவாய் வேற்றுமைக்கென தனி உருபுகள் கிடையா. வடமொழியில் பெயர்ச்சொல்லிலிருந்து எழுவாய் வேற்றுமை வடிவத்தால் மாறுபடுகின்றது. இதையொட்டித் தமிழ் மொழியை ஆய்ந்த பல அறிஞர்களும் 'மரம்' என்ற வடிவில் 'அம்' என்பது முதல் வேற்றுமை உருபு என்றனர். திராவிட மொழிகளின் பெயர்ச் சொற்கள் பன்மை உருபினையும், வேற்றுமை உருபினையும் ஏற்கும் போது பெயர்ச்சொல் முதலிலும் பன்மை உருபினையும், வேற்றுமை உருபினையும் ஏற்கும் போது பெயர்ச்சொல் முதலிலும் பன்மை உருபு அதை அடுத்தும், இறுதியில் வேற்றுமை உருபும் நிற்றல் மரபு.

எ.கா காய் + கள் + ஐ

மரம் என்ற சொல்லிலுள்ள 'அம்' வேற்றுமை உருபு என்றால், மரம் என்ற சொல் பன்மையுருபு ஏற்கும் போது 'அம்', உருபு பன்மை உருபையடுத்து நிற்க வேண்டும். ஆனால் 'மரங்கள்' என்ற சொல்லில் 'அம்' விகுதி பன்மைக்கு முன்னர் நீங்காமல் நிற்கின்றது. எனவே, இதனை வேற்றுமையுருபு என்றால் பொருந்தாது என்கிறார் டாக்டர் மு.வரதராசனார்.

## இருவகை வடிவங்கள்

திராவிட மொழிகளில் பெயர்ச் சொற்கள் வேற்றுமை ஏற்கும்போது பலவாறு திரிவதைக் காண்கின்றோம். பொதுவாகத் திராவிட மொழிகளில் மூவிடப் பெயர்கள் எழுவாய் வேற்றுமை வடிவமாக (Nominative forms) இருக்கும் போது உயிர் நீண்டும், ஏனைய வேற்றுமையில் உயிர் குறுகியும் காணப்படுகின்றது. எனவே மூவிடப் பெயர்களுக்கு எழுவாய் வடிவம், (Nominative forms) வேற்றுமை ஏற்கும் வடிவம் (Oblique form) என்று இருவடிவங்கள் அமைகின்றன.

குறிப்பு

எ.கா. தமிழ் - நான், யான் , நாம் > என்னை, நம்மை
-நீர், நீ > நின்னை, உன்னை, நும்மை, உம்மை
கன்னடம் - நானு > நன்ன
நீனு > நின்ன
தானு > தன்ன

இதைத் தவிர, சில சொற்களில் வேற்றுமை உருபு ஏற்கும்போது இறுதி வல்லினம் இரட்டித்தல், இறுதி மெய் கெடுதல் போன்ற பல திரிபுகள் ஏற்படுகின்றன.

## இரண்டாம் வேற்றுமை அல்லது செயப்படு பொருள் வேற்றுமை (Accusative case)

கோண்டு, கோண்டா போன்ற மொழிகளில் இரண்டாம் வேற்றுமை, நான்காம் வேற்றுமை ஆகியவற்றின் பொருட்களைச் செயப்படு பொருள் வடிவமே உணர்த்திவிடுகின்றது. மூலத்திராவிட வடிவங்களான *-an, *ay, *-(V)nk போன்ற உருபுகள் அதிகத் திரிபின்றி திராவிட மொழிகளில் பயின்று வருகின்றன *-an உருபின் மாற்று வடிவங்கள் கோடா, தோடா, கொடகு, கன்னடம், படகா, துளு, தெலுங்கு, கோயா, கொலாமி, நாயக்கி, பர்ஜி, குருக், மால்டோ போன்ற மொழிகளில் உள்ளன. வடதிராவிட மொழிகளில் இவ் உருபு –g, -r ஆகிய ஈறுகளைக் கொண்டு முடியும் பெயர்களையடுத்து வருகின்றது. கொலாமி, நாயக்கி தவிர்ந்த நடுத்திராவிட மொழிகளில் மெய்யீறுகளைக் கொண்டு முடியும் பெயர்களையடுத்து *in உருபு இடம் பெறுகின்றது. 'ஐ' உருபு தமிழ், மலையாளம், போன்ற தென் திராவிட மொழிகளில் இடம் பெறுகின்றது. இவ் உருபு மலையாள மொழியில் 'எ'கர உருபாகத் திரிகின்றது.

எ.கா அவனை > அவனெ

கோடா மொழியில் - 'அ' உருபு காணப்படுகின்றது இதனை 'ஐ' உருபின் திரிபாகக் கொள்வர். நடுத்திராவிட மொழிகளில் மூலத்திராவிட 'அ'கர உருபு 'இ'கர உருபாகத் திரிகின்றது. வடதிராவிட மொழிகளில் இது 'எர்' என்று மாறுகின்றது. இவ்வடிவம் மால்டோ மொழியில் பெருவழக்கிலுள்ளது.

செயப்படு பொருள் வேற்றுமையின் உருபின்றியே அவ்வேற்றுமையை உணர்த்தும் நிலையை எல்லாத் திராவிட மொழிகளிலும் காணலாம். இரண்டாம் வேற்றுமை உருபு இவ்வாறு விருப்ப உறுப்பாக (optional) அமையும் நிலை மூலத்திராவிட மொழியிலும் இருந்திருக்க வேண்டுமென்பது பலர் கருத்து.

தொடரிலுள்ள செயப்படு பொருள் அஃறிணையாக இருந்தால் தமிழ், மலையாளம், கன்னடம், குயி, பராகுயி, போன்ற மொழிகளிலும் இரண்டாம் வேற்றுமை உருபினை இணைத்தாகவேண்டும் என்ற கட்டாய நிலை இல்லை. தமிழ், மலையாளம் போன்ற மொழிகளில் இவ்விரண்டாம் வேற்றுமை உருபின்றித் தொகையாகவும் வழங்குவதை காணலாம். பொருள் தெளிவில்லாத இடங்களில் உருபுடன் எழுதிப் பொருளைத் தெளிவுப்படுத்தல் இம்மொழிகளின் பொதுவியல்பு.

இரண்டாம் வேற்றுமை உருபுகளை ஆராய்கின்ற டாக்டர். கால்டுவெல் ‘அம்’ என்பதுதான் தொன்மையான வடிவமென்றும், அது பின்னர் ‘அன்’ என்றும் ‘ஐ’ என்றும் திரிந்தது என்றும் குறிப்பிடுகின்றார். இவ் உருபு பழங் கன்னடத்திலும் உள்ளது.

## கருவிப் பொருள் வேற்றுமை (Instrumental case)

மரபிலக்கண வல்லுநர்கள் மூன்றாம் வேற்றுமை, கருவி, கருத்தா, உடனிகழ்ச்சி போன்ற மூன்று பொருட்களில் வரும் என்பர். இவையனைத்தையும் இணைத்து ஒரு வேற்றுமையாகக் கொள்வதைவிட இதனைக் கருவிப்பொருள் வேற்றுமை. உடனிகழ்ச்சிப் பொருள் வேற்றுமை என்று இரண்டாகக் கொள்வதே பொருந்தும், கருவிப்பொருள் வேற்றுமை உருபுகளாக ஆல், ஆன், அ, சேத கொண்டு என்பன உள்ளன. இவற்றுள் ‘சே’ அல்லது ‘சேத’ உருபு தெலுங்கு மொழியில் கருவிப்பொருளை உணர்த்த பயன்படுத்தப்படுகிறது.

எ.கா நிப்புசேத - நெருப்பால்

இம்மொழியில் தோ, ஆன போன்ற உருபுகளும் கருவிப்பொருளைத் தருகின்றன.

எ.கா கத்திதோ - கத்தியால்

குருவான - குருவால்

குறிப்பு

பழங்கன்னடத்தில் 'இம்' உருபு உள்ளது. இதனை தமிழிலுள்ள 'இன்' உருவின் திரிந்த வடிவமாகக் கருதுகின்றனர் டாக்டர் கால்டுவெல். புதுக்கன்னடத்தில் 'இந்த' என்ற உருபும் உள்ளது.

எ.கா மரதிந்த - மரத்தால்

துளு மொழியில் 'து' என்னும் உருபு பெருவழக்கிலுள்ளது. கொடகு மொழியில் 'இஞ்சி' என்னும் உருபும், நடுத்திராவிட மொழிகளில் 'தோட' என்ற உருபும் வழக்கிலுள்ளன. கோண்டி மொழியில் ஏழாம் வேற்றுமை, கருவிப்பொருள் வேற்றுமை ஆகிய இரண்டையும் உணர்த்த ஒரு பொது வடிவம் கையாளப்படுகிறது. கடபா மொழியில் -nal என்ற உருபும், மால்டோவில் -(i)t என்ற உருபும், பிராகுயி மொழியில் -at என்ற உருபும் கருவிப்பொருளைத் தருகின்றன. தமிழ், மலையாள மொழிகளில் ஆல், ஆன், என்னும் உருபுகளோடு 'கொண்டு' என்ற சொல்லுருபும் பயன்படுத்தப்படுகிறது. சிலவிடங்களில் 'ஆன்' உருபு உடன் நிகழ்ச்சிப் பொருளில் 'ஒடு' உருபுக்குப் பதிலாகப் பயன்படுத்தப்படுகிறது.

எ.கா தூங்கு கையான் ஓங்கு நடைய

## உடன் நிகழ்ச்சிப் பொருள் வேற்றுமை (Sociative case)

-- ஆன் / -- ஆல் , -- ஒடு /-- ஓடு என்பனவற்றை இவ் வேற்றுமையின் மூலத்திராவிட உருபுகளாகத் திருத்தியமைக்கலாம். இவற்றுள் ஓடு என்னும் உருபே திராவிட மொழிகளில் அதிகமாகப் பயின்று வருகின்றது. இதன் திரிபுகளைத் தமிழ், மலையாளம், கோடா, பர்ஜி போன்ற மொழிகளில் காணலாம். தமிழ், மலையாளம், ஆகிய மொழிகளில் ஓடு, ஒடு என்னும் உருபுகளோடு 'உடன்' என்ற சொல்லுருபும் உள்ளது. கோடா மொழியில் ஒடு என்னும் உருபு மட்டுமே உடன் நிகழ்ச்சிப் பொருளைத் தருகின்றது. தற்காலத் தமிழிலும், மலையாளத்திலும், கொடகு, படகா, ஆகிய மொழிகளிலும் 'கூட' என்ற சொல்லுருபு அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்றது. டாக்டர் கால்டுவெல் தமிழில் காணப்படும் ஓடு, ஒடு என்னும் உருபுகள் 'ஓட்டு' என்னும்

குறிப்பு

வினைப்பகுதியினின்று பிறந்தன என்கிறார். -'ஒடு' உருபு இலக்கியங்களில் ஒப்புமைப் பொருளிலும் வருகின்றது.

மதியொடு **ஒக்கும்** முகம்.

பிராகுயி மொழியில் முறையே –to: n, -to என்ற உருபுகள் உள்ளன. குருக், மால்டோ போன்ற மொழிகளில் 'gane' என்ற உருபு உடனிகழ்ச்சிப் பொருளைத் தருகின்றது. குயி, பெங்கோ, நாயக்கி ஆகிய மொழிகளில் -Ke, -hoke, nokon ஆகிய விகுதிகள் உள்ளன.

நான்காம் வேற்றுமை அல்லது கொடைப்பொருள் வேற்றுமை (Dative case)

தமிழில் நான்காம் வேற்றுமைப் பொருட் கூறுகளாக கொடை, பகை, நட்பு தகவு, ஆகியன அமைகின்றன. திராவிட மொழிகளில் நான்காம் வேற்றுமை உருபுகளாக –கு, கி, -னு ,-க, -g, -கொ, -ge, -கோ, உன், -(u)g, -அகி, -இகி, -திங்கி போன்ற உள்ளன.

| | | |
|---|---|---|
| 1 | மரத்திற்கு | தமிழ் |
| 2 | மரத்தினு | மலையாளம் |
| 3 | மரக்கெ | கன்னடம் |
| 4 | குரமுனமு | தெலுங்கு |
| 5 | மரக்கு | துளு |
| 6 | கொக்கோஸ்கு (குழந்தைக்கு) | குருக் |
| 7 | படித்துன் (பன்றிக்கு) | கோண்டி (பன்றிக்கு) |
| 8 | அபதிங்கு (அப்பாவுக்கு) | குயி |
| 9 | ஹரசே (காளைக்கு) | பிராகுயி (காளைக்கு) |

சித்திய மொழிகளிலுள்ள பெஹிஸ்தான் அட்டவணைகளிலும் திராவிட மொழிகளின் நான்காம் வேற்றுமை உருபைப் போன்ற 'இக்கா' அல்லது 'இக்கி' என்னும் வடிவமே உள்ளது இது மத்திய ஆசிய மொழிகளுக்கும் திராவிட மொழிகளுக்குமிடையேயுள்ள தொடர்பினைக் காட்டும்.

மலையாளம், நாயக்கி, குருக் ஆகிய மொழிகளில் 'இன்' உருபு நான்காம் வேற்றுமைப் பொருளை உணர்த்துகின்றது. தமிழ், மலையாளம்,

கோண்டி, கன்னடம், தெலுங்கு, துளு ஆகிய மொழிகளில் நான்காம் வேற்றுமை உருபு இடப்பொருளையும் உணர்த்துகின்றது. சில மொழிகளில் இது ஒப்புமைப் பொருளையும் உணர்த்தி நிற்கின்றது. மலையாள மொழியிலுள்ள இன்சாரியை என்பதே ‘இன்னு’ என்று திரிந்திருக்க வேண்டுமென்றும், அதுவே ‘ன்னு’, ‘னு’, ‘உ’ என மலையாள மொழியில் பல்வேறு வடிவங்களைப் பெற்றிருக்க வேண்டுமென்றும் கருதுகின்றார். டாக்டர் கால்டுவெல் நான்காம் வேற்றுமை உருபாகிய ‘கு’ விற்கும் தொடர்பிருக்க வெண்டுமென்று கருதுகின்றார்.

## நீங்கற் பொருள் வேற்றுமை (Ablative case)

இல், இன், இம், போன்ற உருபுகள் ஐந்தாம் வேற்றுமை உருபுகளாகத் தென் திராவிட மொழிகளில் வழங்குகின்றன. கொலாமி மொழியில் -tanat என்ற உருபும், நாயக்கி மொழியில் -ar, -tal என்ற உருபுகளும், பர்ஜி மொழியில் -tug, -are, -arre போன்ற உருபுகளும், மால்டோவில் -(i) nte என்ற உருபும், பிராகுயி மொழியில் -ஆன் என்ற உருபும் நீங்கற் பொருள் வேற்றுமைப் பொருளைத் தருகின்றன, தமிழ், மலையாளம், கன்னடம், துளு, குருக், பிராகுயி போன்ற மொழிகளில் இவ்வேற்றுமை உருபுகள் ஒப்புமைப் பொருளை உணர்த்தவும் பயன்படுத்தப்படுகின்றன.

இதன் உருபுகள் இடப் பொருள் வேற்றுமை (locative case) உருபுகளோடு நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளன. இடத்தில் இருத்தலை ஏழாம் வேற்றுமையாகிய இடவேற்றுமை காட்டுகின்றது என்றும், இடத்திலிருந்து நீங்குதலை நீங்கற் பொருள் வேற்றுமை உணர்த்துகின்றது என்றும் இலக்கணநூலார் இவ்விரு வேற்றுமைகளையும் வேறுபடுத்திக் காட்டுவர். எனினும் இவ்வுருபுகள் நீங்கற்பொருளை உணர்த்தவில்லை என்று டாக்டர். கால்டுவெல் கூறுவது மிகப் பொருத்தமாகவே உள்ளது. தமிழ், மலையாளம், போன்ற மொழிகளில் இல், இன் என்பன இடப்பொருளை மட்டுமே தருகின்றன. நீங்கற் பொருளை உணர்த்தத் தமிழில் ‘இருந்து’ என்ற சொல்லுருபும்,

மலையாளத்தில் இதற்கு நிகராக 'நிந்நு' என்ற சொல்லுருபும், பயன்படுத்தப்படுகின்றன.

எ.கா மரத்தில் இருந்து வீழ்ந்தது – தமிழ்

மரத்தில் நிந்நு வீணு – மலையாளம்

## உடைமைப்பொருள் வேற்றுமை (Genitive case)

ஆறாம் வேற்றுமை உருபுகளாக அது, அ, ஆது, இன், உடைய, உடே, ன்ற, ஆ, ர, த, ன்னெ, தொ, -gahi, கி, த்ரா, கது, அதி, அத போன்ற உருபுகள் திராவிட மொழிகளில் உள்ளன. தமிழ், கன்னடம், தெலுங்கு மொழிகளில் அது, அ ஆகிய உருபுகள் பயின்று வருகின்றன. இவற்றுள் 'அ' கர உருபு பன்மை உருபாகக் கருதப்படுகின்றது. 'அ'கர உருபு தமிழ், கன்னடம், கோண்டா, நாயக்கி, பர்ஜி, பிராகுயி, ஆகிய மொழிகளிலும் உள்ளது. இவ்உருபு நீண்டு 'ஆ' என்று நெடிலாகத் தற்காலக் கன்னடம், கோண்டி, பிராகுயி ஆகிய மொழிகளில் வருகின்றது 'அது' என்னும் உருபு பழந்தமிழ் இலக்கியங்களில் உள்ளது. உடைய என்ற சொல்லுருபு தற்காலத் தமிழில் பெருவழக்கில் உள்ளது. மலையாளத்தில் இது 'உடே' என்று திரிகின்றது. இதனோடு 'ன்ற' உருபும் இம் மொழியில் அதிகமாக வழங்குகின்றது 'த்ரா' என்னும் உருபு கோடா மொழியிள்ளது.

எ.கா மத்ரரா - மரத்தினது

குயி மொழியில் : gahi என்ற உருபு உள்ளது.

தமிழில் உயிர் குறுகிய மூவிடப் பெயர்கள் 'என் மகன்' 'உன் மகன்' என்று உருபில்லாமல் ஆறாம் வேற்றுமைப் பொருளைத் தருகின்றன. குமரி மாவட்ட வட்டார வழக்கில் 'க்க' என்னும் உருபும் உள்ளது.

எ.கா எனக்க வீடு

தமிழில் பெயர்ச் சொல்லோடு உருபு சேர்க்காமல் 'இன்' சாரியையினை இணைத்து ஆறாம் வேற்றுமைப் பொருளை உணர்த்தும் மரபும், இன் சாரியைக்குப் பின் ஆறாம் உருபினை இணைத்து அப்பொருளை உணாத்தும் மரபும் உள்ளன.

எ.கா மரத்தின் கொம்பு

மரத்தினது கொம்பு

ஆறாம் வேற்றுமைக்கெனப் பல உருபுகள் திராவிட மொழிகளில் காணப்பட்டாலும் --அது, ---அ என்ற இரண்டையுமே மூலத் திராவிட வடிவமாகக் கொள்ளலாம்.

## இடப்பொருள்வேற்றுமை (Locative case)

தமிழ் இலக்கண வல்லுநர்கள் இடப்பொருள் உணர்த்தும் சொற்கள் பலவற்றையும் ஏழாம் வேற்றுமை உருபு என்பர். திராவிட மொழிகளில் இல், இன், கண், கால், இடம், உள், அலு, அன், ஆன், ஆ, இலி, லு, -(n) adaN துன், தின், அடி போன்ற பல உருபுகள் உள்ளன. இவற்றுள் -* அன், -*இன் -* ன்/* அலு, -(a)tt என்பனவற்றை மட்டும் மூலத்திராவிட வடிவங்களாகக் கொள்ளலாம். அ.ஃறிணைப் பெயர்களோடு (Non-human nouns) மட்டுமே வருகின்றன.

முன்னர் காட்டிய உருபுகளில் முதல் ஆறு உருபுகளும் தமிழில் பெரு வழக்கில் உள்ளன. கன்னடத்தில் ஓள், அல், அல்லி, இல்லி போன்ற வடிவங்கள் உள்ளன.

எ.கா மர ஓள், மரல் மர அல்லி

தெலுங்கு மொழியில் ‘அந்து’, உன்னாது என்ற உருபுகள் காணப்படுகின்றன. திராவிட மொழிகளிலுள்ள ஏழாம் வேற்றுமை உருபுகளில் பெரும்பாலானவை சொல்லுருபுகளாக உள்ளன. இம்மொழிகளிலுள்ள உருபுகளில் ‘இன்’ உருபே பெரும்பாலான மொழிகளில் காணப்படுகின்றது.

தமிழ், நாயக்கி, மலையாளம், கொலாமி, தோடா, போன்ற மொழிகளில் இவ் உருபினைக் காணலாம். ‘அன்’ உருபு கன்னடம், கோண்டா, குவி, குயி, பிராகுயி போன்ற மொழிகளில் காணப்படுகின்றது ‘துன்’ உருபு கொலாமி மொழியிலும் உள்ளது. ‘உள்’ என்னும் உருபு தமிழ், மலையாளம், கொடகு, கன்னடம், துளு, தெலுங்கு போன்ற மொழிகளில் இடப் பொருள் உணர்த்தப் பயன்படுத்தப்படுகின்றது. தமிழிலுள்ள ‘பக்கல்’ என்னும் இடப் பொருள் உணர்த்தும் சொல்லுருபு மலையாளம், கோண்டா, கன்னடம் போன்ற மொழிகளில் உயர்திணைப் பெயர்கள், மூவிடப் பெயர்கள் ஆகியவற்றையடுத்து இடப் பொருள் உணர்த்துகிறது.

குறிப்பு

## விளிவேற்றுமை (Vocative case)

விளி வேற்றுமைக்கெனத் தனி உருபுகள் அதிகமான இலக்கண ஆசிரியர்களால் வரையறுக்கப்படவில்லை. எனினும் *e, *ee, என்ற இரு உருபுகளை மூலத்திராவிட விளி வேற்றுமை உருபுகள் எனலாம் *e, என்ற உருபின் மாற்று வடிவங்கள் தமிழ், மலையாளம், கொடகு, கன்னடம், துளு, பர்ஜி, ஆகிய மொழிகளிலும் *O என்பதன் மாற்று வடிவங்கள் தோடா, துளு, குருக், போன்ற மொழிகளிலும் உள்ளன. நன்னூலார் 'ஓ' என்னும் எட்டாம் வேற்றுமை உருபைச் சுட்டிச் சொல்கின்றார். இடைக்காலத் தமிழிலக்கியங்களில் 'ஓ' என்னும் உருபு இணைந்து விளி வேற்றுமை அமைவதைக் காணலாம்.

எ.கா அண்ணாவோ – (கம்பராமாயணம்)

தமிழில் பெயர்ச் சொற்களின் ஈற்றயல் உயிர் நீண்டும், திரிந்தும் விளி வேற்றுமை வடிவங்கள் அமைகின்றன.

எ.கா மக்காள் - ஈற்றயல் நீட்சி

தெவ்விர் / தெவ்வீர்- ஈற்றயல் திரிபு

### இரு மதிப்பெண்கள்

1. இந்தோ ஐரோப்பிய மொழிகளில் எண் பாகுபாடு எவ்வாறு அமைகின்றது?

   ஒருமை , இருமை, பன்மை

2. திணை பால் பாகுபாட்டிலேயே எண் பாகுபாட்டையும் அடக்கிகூறும் மொழிக்குடும்பம் எது?

   திராவிட மொழிக்குடும்பம்

3. தமிழில் வழங்கும் உயர்திணை ஆண்பால் ஒருமை விகுதிகளெவை?

   அன், ஆன்

4. தெலுங்கில் காணும் ஆண்பால் விகுதிகள் எவை?

   டு, - உடு, - அடு, - ண்டு, அண்டு

5. ஆளு எனும் பெண்பால் விகுதி எம்மொழிக்குரியது?

   தெலுங்கு - மனமராளு

6. பெண்பால் ஒருமை, ஒன்றன்பால் ஆகியவற்றிற்கு ஒரே விகுதியைக் கொண்ட மொழி எது?

   தெலுங்கு

குறிப்பு

7. தெலுங்கில் காணும் பன்மை விகுதி எது?
   லு
8. நீங்கற் பொருளில் வரும்சொல்லுருபு ஏது?
   இருந்து - வீட்டிலிருந்து
9. தெலுங்கில் மூன்றாம் வேற்றுமையைக் குறிக்கும் சொல்லுருபு எது?
   தோ
10. தமிழில் வழங்கும் உடைய எனும் சொல்லுருபு மலையாளத்தில் எவ்வாறு வழங்குகின்றது?
    உடே

## குறுவினாக்கள்

11. உயர்திணை பலர்பால் விகுதிகள் குறித்து எழுதுக.
    உயர்திணை பலர்பால் விகுதிகள் என்னும் தலைப்பின் கீழ் அமைந்த செய்திகள்
12. உயர்திணை, ஆண்பால் பெண்பால் விகுதிகள் குறித்து விளக்குக.
    உயர்திணை ஆண்பால் விகுதிகள், உயர்திணை பெண்பால் விகுதிகள் என்னும் தலைப்பின் கீழ் அமைந்த செய்திகள்
13. திராவிட மொழிகளில் உருபேற்கும் முறையை விளக்குக.
    திராவிட மொழிகளில் உருபேற்கும் முறை என்னும் தலைப்பின் கீழ் உள்ள செய்திகள்
14. திராவிட மொழிகளில் செயப்படுப்பொருள் வேற்றுமை பற்றி எழுதுக.
    செயப்படுப்பொருள் வேற்றுமை என்னும் தலைப்பின் கீழ் உள்ள செய்திகள்.
15. திராவிட மொழிகளில் எழுவாய் வேற்றுமை பற்றி எழுதுக.
    எழுவாய் வேற்றுமை என்னும் தலைப்பின் கீழ் உள்ள செய்திகள்
16. திராவிட மொழிகளில் இடப்பொருள் வேற்றுமை பற்றி எழுதுக.
    இடப்பொருள் வேற்றுமை என்னும் தலைப்பின் கீழ் உள்ள செய்திகள்

**பெருவினா**

17. திராவிட மொழிகளில் எண் பாகுபாடு குறித்து ஒரு கட்டுரை வரைக.
    எண் உணர்த்தல் என்னும்பொருளில் வரும் அனைத்துச் செய்திகளையும் தொகுத்து எழுதவும்
18. திராவிட மொழிகளில் வேற்றுமை வடிவங்கள் குறித்து விடையளிக்க
    வேற்றுமை எனும் தலைப்பில் இடம்பெற்ற செய்திகள்
19. திராவிட மொழிகளில் வேற்றுமையும் பொருளும் என்பதனை விளக்குக.
    எழுவாய் வேற்றுமை முதல் விளி வேற்றுமை வரையிலான தலைப்புக்களின் கீழ் உள்ள செய்திகள்

## கூறு 9

## மூவிடப்பெயர்கள்- எண்ணுப் பெயர்கள்

### *மூவிடப்பெயர்கள்*

பதிலிடு பெயர்களுள் (Pronouns) ஒன்றான மூவிடப் பெயர்கள் (Personal Pronouns) தொன்மையான இலக்கணக் கூறுகளுள் ஒன்றாகும். திராவிட மொழிகளின் ஒற்றுமைக் கூறுகளை விளக்க இவை பெரிதும் துணை செய்கின்றன. இம்மூவிடப் பெயர்கள் ஏனைய பெயர்ச் சொற்களினின்று வேறுபடுகின்றன. ஏனைய பெயர்ச் சொற்கள் விளிவேற்றுமை ஏற்கும், மூவிடப் பெயர்கள் விளி வேற்றுமை ஏற்பதில்லை. மேலும் திராவிட மொழிகளில் உடைமைப் பொருள் உணர்த்தும் ஆறாம் வேற்றுமையை அடுத்தும் மூவிடப் பெயர்கள் வருவதில்லை. எனினும் தமிழின் தற்காலப் பேச்சு வழக்கில் ‘என்னவன்’ ‘என்னவள்’ போன்ற வடிவங்கள் இடம் பெறுகின்றன.

குறிப்பு

மூவிடப்பெயர்களுள் பொதுவாக 'ன'கர ஈறு ஒருமையினையும் 'ம'கர ஈறு பன்மையினையும் உணர்த்தி நிற்கின்றன. ஏனைய இலக்கணக் கூறுகளைவிட மூவிடப் பெயர்கள் அதிக நிலைபேறுடையன. மூவிடப் பெயர்களைத் தன்மைப் பெயர்கள், முன்னிலைப் பெயர்கள், படர்க்கைப் பெயர்கள் என்று மூன்றாகப் பிரிப்பர். இவற்றுள் தன்மை, முன்னிலை ஆகிய பெயர்கள் திணை, பால் பாகுபாட்டைக் காட்டாமல் ஒருமை, பன்மை என்ற எண் வேறுபாட்டை மட்டுமே உணர்த்தி நிற்கின்றன. படர்க்கைப் பெயர்கள் எண் பாகுபாட்டோடு திணை, பால் ஆகியவற்றையும் காட்டி நிற்கின்றன. இதற்கு தோடா, பிராகுயி, ஆகிய இரு மொழிகளும் விதிவிலக்காக உள்ளன. திராவிட மொழிகளின் மூவிடப் பெயர்களில் எழுவாய் வடிவம், வேற்றுமை ஏற்கும் வடிவம் என இருவடிவங்கள் உள்ளன. மூவிடப்பெயர்களின் எழுவாய் வடிவில் உயிர் நீண்டும், வேற்றுமை ஏற்கும் வடிவில் உயிர் குறுகியும் காணப்படும்.

**தன்மை ஒருமை எழுவாய் வடிவம் - வேற்றுமை ஏற்கும் வடிவம்**

| | | |
|---|---|---|
| 1. தமிழ் | : யான், நான் | - என் |
| 2. மலையாளம் | : நான் | - என் |
| 3. கோடா | : ஆன் | - என் |
| 4. தோடா | : ஓன் | - என் |
| 5. கொடகு | : na(nI) | - என் |
| 6. கொலாமி | : ஆன் | - அன் |
| 7. குருக் | : ஏன் | - என் (eng) |

***தன்மை பன்மை***

| | | |
|---|---|---|
| 1. தமிழ் | : யாம், | - எம் |
| 2. மலையாளம் | : ஞன்னல் | - ஞன்னலெ |
| 3. தெலுங்கு | : மேமு | - மம்- |
| 4. கொலாமி | : ஆம் | - அம் |

குறிப்பு

### *முன்னிலை ஒருமை*

| | | |
|---|---|---|
| 1. தமிழ் | : நீ | - நின், உன் |
| 2. மலையாளம் | : நீ | - நின் |
| 3. துளு | : ஈ | - நின் |
| 4. கொலாமி | : நீவ் | - இன் |

### *முன்னிலை பன்மை*

| | | |
|---|---|---|
| 1. தமிழ் | : | - நும் |
| 2. கோடா | : | - நிம் |
| 3. கன்னடம் | : | - நிம் |
| 4. கடபா | : | - இம் |

### *தன்மை ஒருமைப் பெயர்கள்*

திராவிட மொழிகளில் யான், நான், ஆன், ஒன், ஏனி, ஏனு, அனா. ஆனா, ஏன், ஈ போன்ற தன்மை ஒருமை வடிவங்கள் உள்ளன. இவற்றுள் யான் என்பதை மூலத்திராவிட வடிவமாகக் கொள்ளலாம். பிராகுயி மொழியில் மட்டும் ‘ஈ’ என்னும் முற்றிலும் மாறுபட்ட வடிவத்தைக் காணமுடிகின்றது. இது முன்னிலை வடிவமான ‘நீ’ என்பதைப் பின்பற்றி ஒப்புமையாக்கமாகத் தோன்றியிருக்க வேண்டும். மூலத்திராவிட மொழியில் யான் என்ற எழுவாய் வடிவின் வேற்றுமை ஏற்கும் வடிவமாக *யன்* - என்பது இருந்திருக்க வேண்டும். இதுவே ‘என்’ என்று தென்திராவிட மொழிகளிலும், நடுத்திராவிட மொழிகளிலும் திரிந்திருக்க வேண்டும். ‘ய’கர ஒலி கெட்டு இது நடுத்திராவிட மொழிகளில் ‘அன்’ என்று மாறியிருக்க வேண்டும். நடுத்திராவிட மொழிகளில் காணப்படும் ‘ந’கரத்தை மொழி முதலில் கொண்ட வேற்றுமை ஏற்கும் வடிவங்கள் மொழிமாற்றம் (Metathesis) காரணமாகத் திரிந்தவையே.

குறிப்பு

தொல்காப்பியர் தன்மை ஒருமை வடிவமாக 'யான்' என்பதை மட்டும் குறிப்பிட்டுள்ளார். நன்னூலார் காலத்தில் 'யான்' என்பதோடு 'நான்' என்ற வடிவமும் படைத்துக் கொள்ளப்பட்டது. இது தன்மைப்பன்மை வடிவமான 'நாம்' என்பதையொட்டி ஒப்புமையாக்கமாகப் படைக்கப்பட்ட தன்மை ஒருமை வடிவமாக இருக்கலாம். தன்மைப்பன்மை வடிவங்களான 'யாம்' 'நாம்' என்னும் இரு வடிவங்களும் தொல்காப்பியர், நன்னூலார் ஆகிய இருவர் காலத்திலும் பயின்று வந்தன என்பது தெளிவு.

## தன்மைப் பன்மை

திராவிட மொழிகளின் தன்மைப் பன்மை வடிவத்தில் வெளிப்பாட்டுத் தன்மைப் பன்மை (Exclusive plural), உளப்பாட்டுத் தன்மை பன்மை (Inclusive plural) என இரு வகையுண்டு. இவற்றுள் வெளிப்பாட்டுத் தன்மை பன்மை கேட்போரை நீக்கி ஏனையோரை உளப்படுத்தி நிற்கும். உளப்பாட்டுத் தன்மைப் பன்மை கேட்போரான முன்னிலையாரையும் உளப்படுத்தி நிற்கும். இத்தகைய அமைப்பு முறை வேறு பல மொழிக் குடும்பங்களிலும் உள்ளதாகத் தெரிகின்றது. இவ்வமைப்பு முறை கோண்டா, பர்ஜி, கடபா, பிராகுயி ஆகிய மொழிகளில் தெளிவாக இல்லை. தமிழில் நாம் என்பது உளப்பாட்டுத் தன்மைப் பன்மை வடிவமாகவும் யாம் உளப்படுத்தா (வெளிப்பாட்டுப்) பன்மை வடிவமாகவும் உள்ளன. இக்கூறுபாடுகள் பற்றித் தொல்காப்பியம் எதுவும் கூறவில்லை. பழந்தமிழ் இலக்கியங்களிலும் 'நாம்' என்னும் வடிவம் அரிதாகவே வருகின்றது. தென்திராவிட மொழிகளில் வெளிப்பாட்டுத் தன்மைப் பன்மை வடிவங்களில் 'கள்' விகுதி அதிகமாக இணைக்கப்படுகிறது.

'யாம்' என்ற மூலத்திராவிட எழுவாய் வடிவத்தின் வேற்றுமை ஏற்கும் வடிவாகத் தென்திராவிட மொழிகளிலும், வடதிராவிட மொழிகளிலும் 'எம்' என்ற வடிவமும், நடுத்திராவிட மொழிகளில் 'அம்' என்ற வடிவமும் உள்ளன. இவற்றோடு தமிழ், மலையாளம், கொடகு, துளு போன்ற மொழிகளில் 'கள்' விகுதியும் அதிகமாக

இணைக்கப்படுகின்றன. ‘ம’ கரத்தை முதலில் கொண்ட தன்மைப் பன்மை வடிவங்கள் ஒலி இடம் பெயர்தல் காரணமாக ஏற்பட்டவையாதல் வேண்டும்.

குறிப்பு

***வெளிப்பாட்டுத் தன்மை பன்மை வடிவங்கள்***

| மொழிகள் | எழுவாய் வடிவம் | வேற்றுமை ஏற்கும் வடிவம் |
|---|---|---|
| 1. மலையாளம் | naNNal | {ennal - nannal |
| 2. கொடகு | eNga<br>naɹga | enga –<br>ngnaa |
| 3. தெலுங்கு | ஏமு<br>மேமு<br>நேமு | ma –<br>mamm |
| 4. குயி | ஆமு | மா- |
| 5. கொலாமி | ஆம் | அம் - |
| 6. நாயக்கி | ஆம் | அம் - |
| 7. குருக் | ஏம் | எம் - |
| 8. மால்டோ | ஏம் | எம் - |

***உளப்பாட்டுத் தன்மை பன்மை வடிவங்கள்***

| மொழிகள் | எழுவாய் வடிவம் | வேற்றுமை ஏற்கும் வடிவம் |
|---|---|---|
| 1. தமிழ் | நாம் | நம் - |
| 2. மலையாளம் | நாம் | நம் - |
| 3. கோடா | ஆம் | அம் - |
| 4. தோடா | ஓம் | ஒம் - |
| 5. துளு | நாவு | தம் - |
| 6. தெலுங்கு | மனமு | மன - |
| 7. குருக் | நாம் | நம் - |
| 8. மால்டோ | நாம் | நம் - |

பி.எச்..கிருஷ்ணமூர்த்தி மூலத்திராவிட மொழிநிலைக்குரிய உளப்பாட்டுத் தன்மைப் பன்மை வடிவமாக நாம் என்பதைக் கொள்கின்றார். பி.எஸ்சுப்பிரமணியம் போன்றோர் நம் என்பதை மூலத்திராவிட வடிவமாக கொள்கின்றனர்.

மலையாள மொழியில் தன்மைப் பன்மை வடிவங்களாக நாம், நோம், நம்மள், ஞங்ஙள் என்ற வடிவங்கள் உள்ளன. 'யான்' என்ற ஒருமை வடிவம் இராம சரித்திரத்தில் உள்ளதாகக் குண்டர்ட் குறிப்பிடுகின்றார். கன்னட மொழியில் ஆண், ஆம் என்ற வடிவங்கள் முறையே ஒருமை, பன்மை வடிவங்களாக உள்ன. சப்தானுசாசனா என்ற கன்னட இலக்கண நூலின் 288-வது நூற்பா உரையில் நாமு, நாம் என்ற பன்மை வடிவங்கள் பழங்கன்னடத்தில் இருந்ததாகக் குறிப்பிடப்படுகின்றது. கிட்டல என்பவர் நாவு என்பதே நாமு என்று திரிந்ததாகக் குறிப்பிடுகின்றார். யெங்குளு, நம என்ற பன்மை வடிவங்களைத் துளு மொழியில் காண முடிகின்றது. தெலுங்கு மொழியில் ஏமு, நேமு, மேமு, மனமு போன்ற வடிவங்கள் உள்ளன. ஆம், ஓம், ஏம் என்பன தோடா மொழியின் பன்மை வடிவங்களாகும்.

## *முன்னிலைப் பெயர்கள்*

தன்மைப் பெயர்களைப் போல முன்னிலைப் பெயர்களும் ஒருமை, பன்மை என்ற எண் வேறுபாட்டை மட்டுமே உணர்த்தி நிற்கின்றன. தமிழில் முன்னிலைப் பன்மை வடிவங்களாகத் தொல்காப்பியர் 'நீயிர்' என்பதையும் நன்னூலார் 'நீவிர்' 'நீர்' என்பனவற்றையும் கூறுகின்றனர் சிந்தாமணியில் 'நீம்' என்னும் பன்மை வடிவம் உள்ளது. இச்சொல் கன்னட மொழியிலிருந்து கடன் வாங்கப்பட்டிருக்கலாம் என்று டாக்டர் வேலுப்பிள்ளை கருதுகின்றார். ஆனால் குமரி மீனவர் பேச்சு மொழியில் நீம் என்னும் வடிவம் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. தமிழில் காணப்படும் 'நீ' என்னும் முன்னிலை ஒருமை வடிவிற்கு 'நின்' 'உன்' என்ற இரு வேற்றுமை ஏற்கும் வடிவங்கள் உள்ளன. 'நீயிர்', 'நீவிர்', 'நீங்கள்' என்னும் பன்மை வடிவங்களுக்கு நும், உம், நுங்கள் என்னும் வேற்றுமை ஏற்கும் வடிவங்கள் உள்ளன

மலையாளத்தில் நீ, நின், நிங்கள் என்பனவும், கோடாவில் நீ, நீம் என்ற வடிவங்களும் தோடாவில் நீ, நும் என்னும் வடிவங்களும் முன்னிலைப் பெயர்களாக உள்ளன தெலுங்கில் நீவு, மீகு, போன்ற வடிவங்களையும், கோண்டாவில் இம்மா, இம்மத் போன்ற வடிவங்களையும், குயி மொழியில் ஈனு, ஈறா என்பவற்றையும், பிராகுயி மொழியில் நீ, நெ என்பனவற்றையும் முன்னிலைப் பெயர்களாகக் காணலாம்.

## படர்க்கை மூவிடப் பெயர்கள்

தமிழில் காணப்படும் தான், தாம் என்பன படர்க்கை மூவிடப் பெயர்களாகும். இவ்விரு பெயர்களிலும் ஏனைய மூவிடப் பெயர்களைப் போன்ற ஒருமை, பன்மை, என்ற எண் பாகுபாடு மட்டும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இவற்றுள் தான் என்பது ஒருமைப் பெயராகவும், தாம் என்பது பன்மை பெயராகவும் உள்ளன. இவ்விரு வடிவங்களும் ஏனைய மூவிடப் பெயர்களைப் போல விளி வேற்றுமையினையும், பெயரடைகளையும் ஏற்பதில்லை. தான், தாம் என்பனவற்றின் வேற்றுமை ஏற்கும் வடிவங்களாகத் 'தன்', 'தம்' என்பன அமைகின்றன.

தோடா மொழியில் தேன், தம் என்ற பெயர்களும், கொடகு மொழியில் தானி, தங்க என்பனவும் உள்ளன. இவைகள் தற்சுட்டுப் பெயர்களாகவும் செயல்படுகின்றன. இவ்வடிவங்கள் தற்காலத்தில் வழக்கில் அருகிவிட்டன. இவற்றிற்குப் பதிலாகச் சுட்டின் அடியாகப் பிறக்கும் பாலுணர்த்தும் விகுதிபெற்ற பெயர்களான அவன், அவள், அவர், அது, அவை போன்றன படர்க்கைப் பெயர்களாக வருகின்றன. இவை படர்க்கைப் பெயர்களான தான், தாம் என்பனவற்றைப் போலல்லாமல் திணை, பால் ஆகியவற்றைக் காட்டி நிற்பதால், திராவிட மொழிகளில் பெரிதும் வழங்குகின்றன.

## சுட்டுப்பெயர்கள்

சுட்டுப் பெயர்களின் அடிச்சொற்களோடு பாலறிகிளவிகள் இணையும்போது சுட்டுப்பெயர்கள் உருப்பெறுகின்றன. தமிழில் அகரம் சேய்மைச் சுட்டாகவும், இகரம் அண்மைச் சுட்டாகவும் அமையும். இவற்றோடு திணை, பால் காட்டும் விகுதிகளை இணைக்கும் போது

அவன், அவள், அவர், அது, அவை போன்ற சுட்டுப் பெயர்கள் தோன்றுகின்றன. இச்சுட்டுப் பெயர்களே மூவிடப் பெயர்களுள் படர்க்கைப் பெயர்களாகவும் செயல்படுகின்றன. தெலுங்கில் வாடு, அதி வாரு, வாள்ளு, ஆ, ஆயன, ஆவி, வீடு, ஈ, இதி என்பனவும், கன்னடத்தில் அவம், அவள், அவரு, அது, இவரு, இவன், ஈத, இது, இவர் என்பனவும் கோண்டியில் வோர், வூர், வோ், அத், இத், அவ், இவ், என்பனவும் சுட்டுப்பெயர்களாகும். தமிழைப் போன்ற பழங் கன்னடத்திலும் துளுவிலும் மிகச்சேய்மை, அண்மை இரண்டிற்கும் இடையில் நிற்பவரைச் சுட்ட உகரம் பயன்படுத்தப்படுகின்றது. சுட்டுப்பெயர்களின் அடிச்சொல் வடிவங்களில் அவ், இவ் என்பனவற்றை மூலத்திராவிட வடிவங்களாக பலர் குறிப்பிடுகின்றனர். சிலர் அ, இ என்பனவே மூலத் திராவிட வடிவங்கள் என்றும், 'வ்' உடம்படு மெய்யே என்றும் சுட்டுவர்.

### *வினாப்பெயர்கள் (Interrogative pronouns)*

திராவிட மொழிகளின் வினாப் பெயர்கள் அமைப்பில் பெரும்பாலும் சுட்டுப் பெயர்களை ஒத்துக் காணப்படுகின்றன. யா, ய, எ, ஏ என்பன பொதுவாக வினாப் பெயர்களின் அடிச்சொற்களாக உள்ளன. இவ்வினா அடிச்சொற்களோடு பாலறிகிளவிகள் இணையும் போது வினாப் பெயர்கள் அமைகின்றன.

எ.கா. யாவன், எது
எவன், எவை
எவள்
எவர்

இவையனைத்தையும் குறிக்கப் பொது நிலையில் 'யார்', 'எது' என்ற வடிவங்களைப் பயன்படுத்தலும் உண்டு. கோடா மொழியின் evn, evl, e, evr என்ற வினாப் பெயர்கள் உள்ளன.

| | | |
|---|---|---|
| தோடா | ee(an) | – யார், எது - ஒருமை |
| | Ee(am) | – யார், எது – பன்மை |
| கொடகு | BU | - யார் |
| | ennu | - எத |

நாயக்கி bol, bor - யார் - ஆண்பால்

bav - யார் - பெண்பால்

குறிப்பு

போன்ற வடிவங்கள் தோடா, கொடகு, நாயக்கி போன்ற மொழிகளில் உள்ளன. சுட்டு, வினாப் பெயர்களைப் பொறுத்த மட்டில் தமிழ், மலையாளம், கன்னடம் போன்ற மொழிகளில் அதிக வேறுபாடுகள் இல்லை.

## பெயரடைகள் (Adjectives)

பெயர்களைச் சிறப்பிக்க வரும் இலக்கணக் கூறுகளைப் பெயரடைகள் என்கிறோம். திராவிட மொழிகளில் பெயரடைகள் திணை, பால், எண் போன்றவற்றை உணர்த்துவதில்லை. பெயரடைகள் இம்மொழிகளில் பெரும்பாலும் பெயருக்கு முன்னர் இடம் பெறுகின்றன. நாயக்கி, பிராகுயி போன்ற மொழிகளில் பெயருக்கு பின்னரும் பெயரடைகள் வருவதுண்டு. திராவிட மொழிகளில் பெரும்பாலும் 'அ'கரமே பெயரடை உருபாக உள்ளது.

எ.கா தமிழ் - நல்ல

பெரிய

மலையாளம் - வலிய

பிராகுயி - லக்க (சிறிய)

கன்னடம் - dodda (பெரிய)

cikka (சிறிய)

இவைகள் காலத்தில் மிகவும் பிற்பட்டவை என்பது பழைய இலக்கிய வடிவங்களை ஆராயும்போது தெளிவாகின்றன. தமிழில் காணப்படும் மேற்காட்டப்பட்ட பெயரடை வடிவங்கள் அஃறிணைப் படர்க்கை மூவிடப் பெயர்களின் திரிபு என்பது பலர் கருத்து.

குயி மொழியில் எல்லாப் பெயரடைகளும் 'இ'கர ஈற்றைப் பெறுகின்றன.

எ.கா குயி - deri - பெரிய

- kogeri – சிறிய

பெயரடை உருபுகள் தற்காலத் திராவிட மொழிகளில் மிகக் குறைவாக உள்ளது போல மூலத் திராவிட மொழியிலும் மிகக்

குறைவாகத்தான் இருந்திருக்க வேண்டும். அதிகமான திராவிட மொழிகளில் பெயரோ பெயரடையான நின்று மற்றொரு பெயரைச் சிறப்பித்தலைக் காணலாம்.

எ.கா தமிழ் - பொன்முடி

மட்குடம்

தெலுங்கு - stri – nayagam

இத்தகைய அமைப்பு முறையே மூலத்திராவிட அமைப்பு முறையாகவும் இருந்திருக்கலாம். குருக் தவிர்த்த ஏனைய திராவிட மொழிகளில் பெயரடை தனி இலக்கணக் கூறாகப் பெயரிலிருந்து சற்று வேறுபட்டுக் காணப்பட்டபோதிலும், மூலத்திராவிட மொழியில் பெயருக்கும் பெயரடைக்குமிடையே அதிக வேற்றுமை இருந்திருக்க முடியாது என்பது பலர் கருத்து. தமிழில் பெயர்களோடு, பண்பு அடிச்சொற்களும் பெயரடைகளாக வருதலுண்டு.

எ.கா நல்வழி, நன்னூல்

இவற்றோடு பெயரெச்சங்களும் பெயரடைகளாக வருகின்றன.

எ.கா படித்த பாடம்

தமிழில் ‘சில்’ ‘பல்’ போன்ற சொற்களோடு ‘அ’கரம் இணைந்து சில, பல என்னும் பெயரடைகள் அமைகின்றன.

## *எண்ணுப் பெயர்கள்*

பெயர் வகைகளுள் ஒன்றான எண்ணுப் பெயர்கள் மூவிடப்பெயர்களைப் போன்ற அதிக மாறுதல்களின்றித் திராவிட மொழிகளில் வழங்குகின்றன. எண்ணுப் பெயர்கள் இம்மொழிகளில் மூவிடப்பெயர்களைப் போல விளி வேற்றுமையினை ஏற்பதுமில்லை, பெயரடைகளைத் தொடர்வதுமில்லை. இவைகள் அஃறிணை ஒருமை சுட்டுப் பெயர்களோடு இணைந்துவரும் ‘அன்’ சாரியையினை ஏற்கின்றன.

எண்ணுப் பெயர்களை எண்ணு முறைப் பெயர்கள் (ordinals), எண்ணுப் பெயர்கள் (cardinals) என்று இரண்டாகப் பிரிக்கலாம். முதலாம் இரண்டாம் என்பன எண்ணுமுறைப் பெயர்களாகவும், ஒன்று, இரண்டு என்பன எண்ணுப் பெயர்களாகவும் கொள்ளப்படும். ஆங்கில மொழியில் one, two என்ற எண்ணுப் பெயர்களுக்கு முற்றிலும் வடிவத்தால்

மாறுபட்ட first, second என்ற எண்ணு முறைப் பெயர்கள் உள்ளன. திராவிட மொழிகளில் இத்தகைய வேறுபாடு இல்லை. தமிழில் ஒன்று, இரண்டு என்பனவற்றோடு 'ஆம்' இவ்வாறன்றி, 'ஆவது' என்ற விகுதியை இணைத்து முதலாவது / ஒன்றாவது, இரண்டாவது என்று எண்ணு முறைப் பெயர்கள் அமைத்தலுண்டு.

எண்ணுப் பெயர்களில் தனித்து வழங்கும் வடிவங்களோடு தனித்து வழங்காமல் அடையாக வரும் ஒரு, இரு, மூ போன்ற வடிவங்களும் உள்ளன. எண்ணுப் பெயரடைகளோடு, எண்ணுப் பெயரடிகள் (numeral base) இணைந்து இருபது, முப்பது, போன்ற பத்திற்குமேல் வரும் எண்ணுப் பெயர் வடிவங்கள் அமைகின்றன. பழந்தமிழில் 'பான்' என்னும் விகுதி இணைந்து 'ஒருபான்' 'இருபான்', என்று வருவதைக் காணலாம். இதனால் இருபது, முப்பது என்று எண்ணும் வழக்கம் வருவதற்கு முன்னர் ஒருபான், இருபான் என்று எண்ணும் முறையே இருந்தது என்பது தெளிவு.

திராவிட மொழிகளில் ஓர், ஈர், மூ, நால், சை, (C)ai), சார் (C)ar-) ஏழ், எண், தொண், பத், நூற்-என்பன எண்ணுப்பெயர்களின் அடிச்சொற்களாக உள்ளன.

எண்ணுமுறைப் பெயர்கள் சில மொழிகளில் மட்டுமே உள்ளன. தமிழைப் போன்ற எண்ணுப் பெயரோடு ஆம் விகுதி சேர்த்து எண்ணு முறைப் பெயரமைக்கும் மரபை மலையாள மொழியிலும் காணலாம். இம் மொழியில் 'இரண்டாவது' போன்ற வடிவங்களிலுள்ள மாற்ற 'தரி' என்னும் மாற்றப் பெயரை இணைப்பர்.

எ.கா இரண்டாமத்த

குயி மொழியில் எண்ணுப் பெயர்களை எண்ணுமுறைப் பெயர்களாக மாற்ற 'தரி' என்னும் மாற்றப் பெயரை இணைப்பர்.

எ.கா - sari நான்கு

- saritari நான்காம்

தெலுங்கு மொழியில் - ஓ அல்லது –ava என்பது எண்ணுமுறைப் பெயர்களாக மாற்ற இணைப்பர்.

ரெண்டு – ரெண்டோ

- ரெண்டவா

குறிப்பு

கன்னட மொழியில் aneya. Ane ஆகிய மொழிகளில் -ane என்ற விகுதி உள்ளது.

muji – mujane

குருக் மொழியில் ta என்னும் விகுதியும், பிராகுயி மொழியில் -imLKo என்ற வடிவமும் காணப்படுகின்றன.

எ.கா. குருக் - mund – mund – mu – ndta

பிராகுயி – iraT – iraTTmiko

மால்டோ மொழியிலுள்ள எண்ணுமுறைப் பெயர்களனைத்தும் இந்தி மொழியிலிருந்து கடன் வாங்கப்பட்டவை. திராவிட மொழிகளிலுள்ள எண்ணுப் பெயர்களில் *onlu, *okanTu, *iraNTu, *munTu, *nalku, *caintu, *caTu, *eIu, *eNttu, *ton, *pattu என்பனவற்றை மூலத்திராவிட வடிவங்களாகக் கொள்ளலாம்.

### *ஒன்று*

ஓர் ஒரு என்பன ஒன்று என்ற எண்ணுப் பெயரின் அடைகளாக உள்ளன. இவற்றுள் ஓர் என்பது உயிரை முதலில் கொண்ட பெயர்களுக்கு முன்னரும், ஒரு என்பது மெய்யை முதலில் கொண்ட பெயர்களுக்கு முன்னரும் இடம் பெறும். இவ்விரு வடிவங்களையும் மூலத்திராவிட வடிவங்களாகப் பேராசிரியர் எமனோ கொள்கின்றார். இவ்வடிவங்களுக்கு நிகராகத் தெலுங்கு மொழியில் ‘ஒக’ என்ற வடிவம் உள்ளது. எண்ணுப் பெயர் அடைகள் உயர்திணைப் பெயர்கள் அஃறிணைப் பெயர்கள் ஆகியவற்றின் முன்னர் வருகின்றன. துளு மொழியில் ஓரி, ஓர போன்ற வடிவங்கள் உள்ளன. தெலுங்கு மொழியிலுள்ள ‘ஒக’ என்பது வடமொழியிலுள்ள ‘ஏக’ என்பதன் திரிபாக இருக்கலாம் என்பது டாக்டர் கால்டுவெல்லின் கருத்து. திராவிட மொழிகளின் எண்ணுப் பெயர் ஒன்று என்றிருப்பதால் அதன் அடையும் ‘ஒன்’ என்றிருக்க வேண்டும். ஆனால் ஒரு, ஓர் எனறு காணப்படுகிறது. இதனை விளக்கும் எமனோ ‘ஓர்’ என்னும் வடிவம் இரு, ஈர் என்பவற்றின் ஒப்புமையாக்கமாக ஏற்பட்டிருக்க வேண்டுமென்கிறார். டாக்டர் கால்டுவெல் திராவிட மொழிகளிலுள்ள ஒன்று என்னும் எண்ணுப் பெயர் இந்தோ –

ஐரோப்பிய மொழிகளிலுள்ள ஒன்று என்னும் எண்ணுப் பெயர் வடிவத்தோடு தொடர்புடையது என்று விளக்கிச் சொல்கின்றார்.

குறிப்பு

### *இரண்டு*

இவ் எண்ணுப் பெயர் கோடா, தோடா, கொடகு, கன்னடம், துளு போன்ற தென்திராவிட மொழிகளிலுள் eyD eD. daNDt, eraDu raDDu என்று பல திரிபுகளைப் பெறுகின்றது. தெலுங்கு மொழியில் ரெண்டு என்னும் வடிவமும், கடபாவில் இண்டி என்னும் வடிவமும், பெங்கோ மண்டா போன்ற மொழிகளில் 'ரி' என்னும் வடிவமும் உள்ளன. இரண்டு என்பதனோடு தொடர்புடைய 'இரட்டை' என்னும் வடிவம் தமிழ், மலையாளம், தோடா, தெலுங்கு, போன்ற மொழிகளில் உள்ளன. இவ்வடிவங்கள் *iraN-tt-ay. *iraN – tt – I போன்ற வடிவங்களிலிருந்து தோன்றியிருக்க வேண்டுமென்பர்.

இதன் எண்ணுப் பெயரடையாக ஈர், இரு என்பன உள்ளன. இவற்றுள் ஈர் என்பது உயிரை முதலில் கொண்ட சொற்களின் முன்னரும், இரு என்பது மெய்யெழுத்தை முதலில் கொண்ட சொற்களின் முன்னரும் இடம் பெறுகின்றன. இவ்வடிவங்கள் *iraN-tt-ay. *iraN – tt – I போன்ற வடிவங்களிலிருந்து தோன்றியிருக்க வேண்டுமென்பர்.

### *மூன்று*

மூன்று என்ற எண்ணுப் பெயருக்கு முந்து, முட், மூறு, muji, முண்டரி போன்ற வடிவங்கள் மலையாளம், தோடா, கன்னடம், துளு, கோண்டா போன்ற மொழிகளில் உள்ளன. மூன்றி என்ற வடிவமும், அதன் மாற்று வடிவங்களும் துளு, கொலாமி, நாயக்கி, குயி போன்ற மொழிகளில் உள்ளன. பேராசிரியர் எமனோ munri என்பதனையே மூலத்திராவிட வடிவமாகக் கொள்கின்றார். இதன் எண்ணுப் பெயரடை வடிவங்களாக மூ, மு என்பன உள்ளன. இவற்றுள் 'மூ', என்பது அரை உயிர்கள், உயிரொலிகள் ஆகியவற்றின் முன்னர் பெரும்பாலும் இடம் பெறுவதைக் காணலாம். கொடகு மொழியில் முப்பது என்பது nuppadi என்று காணப்படுகின்றது. இதனை 'ந'கரத்தை முதலில் கொண்ட நாற்பது என்ற

எண்ணுப் பெயரின் தாக்கத்தால் ஏற்பட்ட மாறுதலாக எமனோ கருதுகின்றார்.

குறிப்பு

### *நான்கு*

நான்கு என்பதன் மூலத்திராவிட வடிவமாக நால்கு என்பது கொள்ளப்படுகின்றது. பழந்தமிழில் இவ்வடிவம் உள்ளது. மலையாளத்தில் நாங்கு என்ற வடிவமும், கொடகு மொழியில் நாலீ என்ற வடிவமும் காணப்படுகின்றன. கோண்டா, கோண்டி, குயி, நாயக்கி போன்ற மொழிகளில் naigi, nalung, nail போன்ற வடிவங்கள் காணப்படுகினறன. இவற்றின் பெயரடை வடிவங்களாக நால், நான், நோ, நல், நெல் என்பன உள்ளன. தோடா மொழியில் நோ என்ற வடிவம் பர்ஜி மொழியில் 'நெல்' என்னும் வடிவம் காணப்படுகின்றன. இவற்றுள் நால் என்பதை மூலத் திராவிட வடிவமாகக் கொள்வர். இது தடையாலிகளின் முன்னர் 'நாற்' என்னும் மாற்று வடிவத்தைப் பெறுகின்றது. மூக்கொலிகள் தொடர்ந்து வரும்போது 'நாற்' என்னும் மாற்று வடிவத்தைப் பெறும். தொல்காப்பியத்திலும் நால், நான் என்னும் இரு வடிவங்களைக் காணலாம்.

### *ஐந்து*

ஐந்து என்பதன் மூலத்திராவிட வடிவமாக *cayntu என்பது கருதப்படுகின்றது. மொழிமுதல் 'ச'கர ஒலி கெட்டு தமிழில் ஐந்து என்றும், மலையாளத்தில் 'அஞ்சு' என்றும் கொடாவில் 'அஞ்' என்றும் கொடகு மொழியில் 'அஞ்சி' என்றும் இது வழங்குவதைக் காணலாம். கன்னட மொழியில் 'ஐது' என்ற வடிவமும் துளு மொழியில் 'ஜனு' என்ற வடிவமும் இடம் பெறுகின்றன. நாயக்கி, பர்ஜி, கடபா, குயு போன்ற மொழிகளில் 'S', 'ச' ஆகிய ஒலிகளை மொழிமுதலில் கொண்ட sendi, ceduk, saiung, singi, போன்ற வடிவங்களைக் காணலாம்.

டாக்டர் கால்டுவெல் 'அய்' என்பதை ஐந்து என்பதன் அடிச்சொல்லாகக் (radical from) கொள்கின்றார். டாக்டர்.P.S.சுப்பிரமணியம் தென் திராவிட மொழிகளில் முதலில் பிரிந்து

குறிப்பு

சென்ற துளு மொழியில் 'ஐனு' என்ற வடிவம் உள்ளதால் *ayn எனபதை மூலத் திராவிட வடிவமாகக் கொள்கின்றார். டாக்டர். செ.வை.சண்முகம் ஐந்து என்பதன் அடிச்சொல் கால்டுவெல் கூறும் 'அய்' அன்று, (c)aym என்பதே என்று விளக்குகின்றார். மொழி முதல் 'ச'கர மெய்யைக் கொண்ட வடிவங்கள் நடுத்திராவிட மொழிகள் பலவற்றிலும் உள்ளன. இச் 'ச'கரம் தென் திராவிட மொழிகளில் கெட்டு விடுகின்றது. ஐ என்பது மூல வடிவம் என்றும் அது கை என்பதிலிருந்து தோன்றியிருக்க வேண்டுமென்றும் கூறுவர் மு.வரதராசன்.

***ஆறு***

'ஆறு' என்ற எண்ணுப் பெயரினையும், அதன் சற்று திரிந்த மாற்று வடிவங்களையும் தமிழ், மலையாளம், கோடா, தோடா, கன்னடம், துளு, தெலுங்கு, கொலாமி, கொடகு, கோண்டா, ஆகிய மொழிகளில் காணலாம். கோண்டி, குயி, நாயக்கி, போன்ற மொழிகளில் 's' ஒலியை மொழி முதலில் கொண்ட sarung, sagi, ssad போன்ற வடிவங்கள் உள்ளன. இவற்றுள் catu என்பதனையே மூலத்திராவிட வடிவமாகக் கொள்வர், 'ஆறு' என்பதன் குறுகிய வடிவமான 'அறு' என்பது தமிழ், மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகளில் உள்ளன.

அறுவர்

ஆறு என்பதன் பெயரடை வடிவமாகத் தமிழ், மலையாளம், கோடா, தோடா, கன்னடம் ஆகிய மொழிகளில் 'அறு' என்பது காணப்படுகின்றது.

***ஏழு***

தமிழ், மலையாளம், கன்னடம், துளு போன்ற மொழிகளில் இவ் எண்ணுப்பெயர் அதிக மாற்றமின்றிக் காணப்படுகின்றது. கோடா மொழியில் ey என்ற வடிவமும், தோடாவில் ow என்ற வடிவமும், கோண்டி மொழியில் Rung என்ற வடிவமும் உள்ளன இவற்றுள் * I என்பதே மூலத்திராவிட வடிவம். எழுவர், எழுநூறு போன்ற வடிவங்களில் முதலுயிர் குறுகிக் காணப்படுகின்றது. தெலுங்கு மொழியில் எழு என்பது ஏடு என்று திரிகின்றது. தமிழில் உள்ள ழகரம் - ளகரமாகி 'ள'கரமெய் தெலுங்கில் 'ட'கரமெய்யாக மாறும்.

குறிப்பு

### *எட்டு*

எட்டு என்னும் வடிவம் தமிழிலும், மலையாளத்திலும் திரிபின்றி 'எட்டு' என்றே வழங்குகின்றது. கன்னடத்தில் எண்டு என்றும் தெலுங்கில் எனிமிதி என்றும் திரிகின்றது. தோடா மொழியில் oT என்ற வடிவம் உள்ளது. கோண்டி, கொலாமி போன்ற மொழிகளில் தென் மிதி, எனுமிதி போன்ற வடிவங்கள் உள்ளன. இவற்றுள் எண்டு என்பதை மூலத்திராவிட வடிவமாகக் கொள்வர். இவ் எண்ணுப் பெயரின் நெடில் வடிவம் எங்கும் காணப்படவில்லை. எட்டு என்பதற்கு நிகராகத் தெலுங்கில் எனிமிதி என்ற வடிவம் உள்ளது மிதி என்பது தெலுங்கு மொழியில் பத்தை உணர்த்துகின்றது. ஒன்பது என்னும் எண்ணுப் பெயர் இம்மொழியில் தொம்மிதி என்று காணப்படுகின்றது. இதன் ஒப்புமையாக்கமாகத் தோன்றிய சொல்லே எனிமிதி எனலாம்.

### ***ஒன்பது***

ஒன்பது என்ற எண்ணுப் பெயரின் மூலத்திராவிட வடிவங்களாக *ton, - *tonpatu என்பன கொள்ளப்படுகின்றன. திராவிட மொழிகளில் 'த்'கர மெய்யைக் கொண்டு தொடங்கும் எண்ணுப் பெயர்கள், 'ஓ'கர உயிரைக் கொண்டு தொடங்கும் எண்ணுப் பெயர்கள் என்று இருவகை மாற்று வடிவங்கள் இதற்கு உள்ளன.

தமிழில் ஒன்பது, ஒன்பான் என்னும் பெயர்களும், மலையாளத்தில் ஒம்பது என்னும் பெயரும், கோடாவில் onbad என்னும் பெயரும் தோடாவில் winboo என்ற வடிவம் உள்ளன. இம்மொழிகளைப் பொறுத்தவரையில் tonpatu என்ற வடிவத்தை மூலத்திராவிட வடிவமாகக் கொள்ளலாம், தெலுங்கு, கொலாமி, கோண்டி போன்ற மொழிகளில் முறையே தொம்மிதி, தொம்தி, போன்ற வடிவங்கள் உள்ளன. தமிழிலும் தொண்ணூறு போன்ற வடிவங்களில் 'த்'கர மெய்யே மொழிமுதலில் உள்ளன. துளு மொழியில் ஒர்ம்பா என்ற வடிவமும் உள்ளது.

ஒன்பது என்னும் வடிவமும், அதன் திரிபுகளும் தென்திராவிட மொழிகளிலும் கோண்டி மொழியிலும் காணப்படுகின்றன. கோண்டி மொழியிலுள்ள வடிவம் தென்திராவிட மொழிகளையொட்டி அமைந்திருக்க

வேண்டுமென்பர். ‘தொண்’ என்பதிலுள்ள ‘த்’கரம் கெட்டு ‘ஒண்’ என்று வந்திருக்க வேண்டும். அதோடு ‘ண’கர ஒலி ‘ன’கர ஒலியாகத் திரிந்திருக்க வேண்டும். ‘த’கரம் கெட்ட நிலையில் ‘ஒண்’ என்பது ‘ஒன்று’ என்பதன் அடிச்சொல்லோடு பிறழ உணரப்பட்டு ‘ஒன்பது’ என்ற வடிவம் அமைந்திருக்க வேண்டுமென்று விளக்கிச் செல்வர்.

**பத்து**

தமிழில் பத்து என்பதற்கு ப∴து, பது, பான், பதின், என்ற மாற்று வடிவங்கள் உள்ளன. தோடாவில் ‘பொத்’ என்னும் வடிவமும், ‘பொன்’ என்ற மாற்று வடிவமும் காணப்படுகின்றன. துளு மொழியில் பத்து என்பதன் மாற்று வடிவங்களாகப் பதுன், பது, வது போன்றன உள்ளன. இவற்றுள் பத்து, பதின், பதி, பன், பது என்பன மூலத்திராவிட வடிவங்களாகக் கொள்ளப்படுகின்றன. இவற்றுள் பத்து என்பதன் மாற்று வடிவங்கள் தெலுங்கு, கோண்டி, கொலாமி ஆகிய மொழிகளிலும், பதின், என்பதன் மாற்று வடிவங்கள் கோடா, கொடகு போன்ற மொழிகளிலும் பழந்தமிழிலும் உள்ளன. கன்னடத்தில் பத்து என்பது ஹத்து என்று மாறுகின்றது. பதின் என்ற வடிவின் இறுதி ‘ன’கர மெய்கெட்டு தெலுங்கில் பதி என்று வழங்குவதைக் காணலாம்.

***நூறு***

நூறு என்ற எண்ணுப்பெயர் அதிக மாற்றங்களின்றித் திராவிட மொழிகளில் வழங்குவதைக் காணலாம். தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு போன்ற மொழிகளில் நூறு என்ற வடிவமும், கோடா, தோடா, கோண்டி, ஆகிய மொழிகளில் முறையே nur, nuR, nuR என்னும் வடிவங்களும் துளு மொழியில் nudu என்ற வடிவமும் உள்ளன. அதன் வேற்றுமை ஏற்கும் வடிவாக ‘நூற்று’ என்பது காணப்படுகின்றது. கன்னடத்தில் வேற்றுமை ஏற்கும் வடிவத்தில் nuR- என்று ஒற்றை மெய்யே இடம் பெறுகின்றது. துளு மொழியின் வேற்றுமை ஏற்கும் வடிவத்தில் ‘அ’கர உயிர் ஈற்றெழுத்தாக உள்ளது.

தெலுங்கில் ஒக வந்த என நூறைச் சுட்டும் மரபுண்டு.

குறிப்பு

### *ஆயிரம்*

*cayiram என்பது இதன் மூலத்திராவிட வடிவம். இது வடமொழியிலிருந்து கடன் வாங்கப்பட்ட ‘சகஸ்ர’ என்னும் சொல்லின் திரிபாகும். Sahasra என்பதன் முதலிலுள்ள ‘s’ ஒலி கெட்டு, இடையிலுள்ள ‘h’ ஒலிக்குப் பதில் ‘y’ ஒலி தோன்றி, இரு ‘அ’கர ஒலிகளும் இணைந்து ‘ஆ’கர நெடிலாக மாறி (vowel contraction) இத்தகைய வடிவம் தோன்றியிருக்கலாம்.

sahasra > ayara – ayara > ayra > ayram

தெலுங்கில் காணப்படும் வேயி, வேலு என்ற சொற்கள் திராவிடச் சொற்களென்று தோன்றுகின்றன. எனினும் வேறு மொழிகளில் இ∴து இடம் பெறாமையின் இதனை மூலத்திராவிட மொழிக்குரியனவாகக் கொள்ளுதல் அரிது.

## இரு மதிப்பெண் வினாக்கள்

1. மூவிடப்பெயர்களில் பெரும்பான்மையன வேற்றுமை ஏற்கும்போது எவ்வாறு திரியும்?
   நெடுமுதல் குறுகி
2. நான் எனும் வடிவத்தை எடுத்துக்காட்டிய இலக்கணி யார்?
   நன்னூல்
3. தெலுங்கில் வழங்கும் இருவகைத் தன்மைப் பன்மைப்பெயர்களைச் சுட்டுக.
   மேமு, மனமு
4. நீம் என்பது எவ்விடத்தை உணர்த்தி நிற்கும் சொல்?
   முன்னிலைப்பன்மை
5. நான்கு என்பதன் மூலத் திராவிட வடிவம் எது?
   நால்கு
6. தொண்ணூறு, தொள்ளாயிரம் என்பவற்றின் அடிச்சொல் எது?
   தொள்
7. ஆயிரம் எம்மொழியிலிருந்து பெறப்பட்ட திரிபுச் சொல்?
   சமஸ்கிருதம்

குறிப்பு

### குறுவினா

8. திராவிட மொழிகளில் தன்மைப்பன்மை குறித்து விளக்குக
   தன்மைப்பன்மை என்னும் தலைப்பின் கீழுள்ள செய்திகள்
9. சுட்டு, வினாப்பெயர்கள் குறித்து எழுதுக.
   சுட்டுப் பெயர்கள், வினாப்பெயர்கள் என்ற தலைப்பின் கீழ் உள்ள செய்திகள்
10. திராவிட மொழிகளில் ஒன்பது எனும் எண்ணின் வழக்காற்றை விவரிக்க.
   ஒன்பது என்னும்தலைப்பின் கீழ் உள்ள செய்திகள்

### பெருவினா

11. திராவிட மொழிகளில் மூவிடப்பெயர் பாகுபாட்டை விவரிக்க.
   மூவிடப் பெயர்கள் எனும் தலைப்பின் கீழுள்ள செய்திகளைத் தொகுத்துரைக்கவும்
12. திராவிட மொழிகளில் எண்ணுப்பெயர் அமைப்பினை விவரிக்க.
   எண்ணுப்பெயர்கள் என்ற தலைப்பின் கீழுள்ள செய்திகள்

## கூறு 10

## வினைச்சொற்களின் அமைப்பு – வினை வகைகள்

### வினைச்சொற்களின் அமைப்பு

திராவிட மொழிகளில் வேற்றுமை ஏற்கும், அடிச்சொற்களைப் (stem) பெயர் என்றும், காலங்காட்டும் இடைநிலைகளை ஏற்கும் அடிச்சொற்களை வினை என்றும் கூறுபடுத்துவர். திராவிட மொழிகளின் வினையடிச் சொற்களோடு (Verb bases) வு, கு, ங்கு, ந்து, து, பு, ம்பு போன்ற விகுதிகளைச் சேர்ப்பதால் பெரும்பாலான வினைச்சொற்கள் அமைகின்றன. இம் மொழிகளின் வினைச்சொற்கள் காலங்காட்டும் போது அடிச்சொற்கள் முதலில் அமைய, அதனையடுத்து தன்வினை, பிறவினை, இயக்கு வினைகளுக்குரிய இடைநிலைகளும், அதனையடுத்து காலங்காட்டும் இடைநிலைகளும், இறுதியில் பால்காட்டும் விகுதிகளும்

ஒன்றோடொன்று ஒட்டி, ஒட்டு நிலையாக அமைந்து நிற்கின்றன. இவ்வாறு அவை புணர்ந்து நிற்கும்போது சிறிதளவு திரிபும் ஏற்படுகிறது.

**குறிப்பு**

திராவிட மொழிகளின் வினை வடிவங்கள் பால்காட்டும் விகுதி, கால இடைநிலை போன்ற இலக்கணக்கூறுகளோடு இணைந்து நெடிதாக அமைந்த போதிலும் தனிச் சொற்களாகவே கருதப்படுகின்றன. திராவிட மொழிகளின் வினைச்சொற்கள் ஒட்டு நிலையாய் அமைந்தபோதிலும் ஏவல் வினைகளில் மட்டும் இடைநிலைகளும், விகுதிகளும் இணைக்கப்படுவதில்லை. அதிகமாக இம்மொழிகளில் வினைப்பகுதிகளே ஏவல் வடிவங்களாகச் செயல்படுகின்றன. இவற்றோடு பன்மை விகுதிகளும், மரியாதைப் பன்மை விகுதிகளும் இணைந்து வருதலுண்டு.

எ.கா – வாங்க, போங்க

ஆங்கிலம் போன்ற மொழிகளின் வினைச்சொற்கள் காலத்தை மட்டும் காட்டுமே தவிர திணை, பால், எண் ஆகிய வேறுபாட்டைக் காட்டுவதில்லை. ஆனால் திராவிட மொழிகளின் வினைச்சொற்கள் இவற்றைத் தெளிவாகக் காட்டி நிற்கின்றன.

வந்தான் { உயர்திணை, ஆண்பால், ஒருமை }

இப்பொதுவியல்புக்கு மலையாள மொழி மட்டுமே விதி விலக்காக உள்ளது. மலையாள மொழியில், திணை, பால் எண் ஆகியவற்றை உணர்த்தும் பாலறி கிளவிகள் இன்மையால், வினைச்சொற்களுக்கு முன்னர் இடம்பெறும் எழுவாயைக் கொண்டே திணை, பால், எண் போன்றவற்றை அறிய வேண்டிய நிலையுள்ளது. எனினும் வினைச் சொற்களோடு இணைக்கப்படும் பாலறிகிளவிகள் அம்மொழிகளில் கால இலக்கண நூலான லீலா திலகத்தில் குறிப்பு உள்ளது. தற்காலப் பேச்சுத் தமிழிலும் பாலறிகிளவிகள் பயன்படுத்தப்படாத இடங்கள் உள்ளன.

எ.கா அவன் வந்தாச்சி

அது வந்தாச்சி

ஏனைய மொழிகளோடு ஒப்பிட்டு நோக்கும்போது திராவிட மொழிகளின் வினைச்சொல்லாக்கம் எளிமையாக உள்ளது என்று

கால்டுவெல் குறிப்பிடுகின்றார். வினைச்சொற்கள் இம் மொழிகளில் எச்சம் (Non-finite) என்றும், முற்று (Finite) என்றும் கூறுபடுத்தப்படுகின்றன. வியங்கோள் வினை என்ற அமைப்பு துளு மொழி தவிர்ந்த ஏனைய திராவிட மொழிகளில் உள்ளன. இம் முறையில் திராவிட மொழிகள் சித்திய மொழிகளோடு நெருங்கிய தொடர்புடையன என்பது கால்டுவெல்லின் கருத்து.

பாலறிகிளவிகள் பெறாத வினைமுற்று வடிவங்கள் மலையாளம் போன்றே வேறு பல மொழிகளிலும் உள்ளன. எனினும் அவை அருகிய வழக்கின. தமிழிலுள்ள 'அவன் செய்வான்' போன்ற வடிவங்கள் பாலறிகிளவி பெற்றும், 'அவன் செய்யும்' என்று பாலறிகிளவி பெறாமலும் வருவதுண்டு. இம்மொழிகளின் வினைச் சொற்களில் கால இடைநிலைகளோடு சிலவிடங்களில் சாரியைகளும் இடம் பெறுவதுண்டு.

எ.கா. வந்தனன் - 'அன்' சாரியை

திராவிட மொழிகளின் வினைச்சொற்களில் தன்வினை (Intransitive) பிறவினை (Transitive) இயக்குவினை (Causitive) என்ற மூவகையான வினைவகைகளையும், ஏவல்வினை, நிபந்தனைவினை, வியங்கோள்வினை என்னும் பல்வேறு வினைப்பொருட்களையும் (Moods) காணலாம். வினைச்சொற்களின் பொருளைச் சிறப்பிக்க ஐரோப்பிய மொழிகளில் முன்னொட்டுக்கள் (Prepositions) பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் திராவிட மொழிகளில் துணைவினைகளும், எச்சமாக அடுக்கும் வினைகளும் (Particles and infinitives) பயன்படுத்தப்படுகின்றன. இம்மொழிகளின் வினைச்சொற்களைக் காலங்காட்டும் முறை வினையின் தன்மை, பால்காட்டும் முறை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு கூறுபடுத்தலாம்.

| | | |
|---|---|---|
| காலம் - | வந்தான் | - இறந்த காலம் |
| | வருகிறான் | - நிகழ்காலம் |
| வினையின் தன்மை | வந்தான் | வினைமுற்று |
| | வருக | வியங்கோள் |
| பால் | வந்தான் | ஆண்பால் |
| | வந்தாள் | பெண்பால் |

## வினை வகைகள்

### 1. தன்வினை, பிறவினை, இயக்கவினை (Intranstive, Transitive, Causitive verbs) :

குறிப்பு

திராவிட மொழிகளின் வினைச்சொற்கள் இலக்கண ஆசிரியர்களும், மொழிநூலாரும் தன்வினைகள்(Intransitive) பிறவினைகள் (Transitive verbs) என்று இரு கூறுபடுத்துவர். ஒரு வினையைத் தானே செய்தால் தன்வினை என்றும், பிறரைச் செய்வித்தால் பிறவினை என்றும் அழைப்பர்.

எ.கா: ஓடினேன் - தன்வினை
ஓட்டினேன் - பிறவினை
ஓட்டுவித்தேன் - இயக்குவினை

இவ்வினைகள் கால இடைநிலைகளை ஏற்பதிலும், பாலறி கிளவிகளை இணைத்துக் கொள்வதிலும் ஏனைய வினைகளிலிருந்து வேறுபடுவதில்லை. இவற்றுள் தன்வினைகள் செயப்படுபொருளைப் பெறுவதில்லை. பிறவினைகள் செயப்படுபொருளைப் பெற்று நிற்கும். தன்வினைகளையெல்லாம் எளிதில் பிறவினைகளாக மாற்ற முடியும். வினைச்சொற்களைத் தன்வினைகள், பிறவினைகள் என்று பகுக்கும்முறை ஹங்கேரிய மொழியிலும் உள்ளதாகக் கால்டுவெல் குறிப்பிடுகின்றார்.

தொடரளவில் அமையும் பிறவினைகளை மொழிநூலார் இரண்டாகக் கூறுப்படுத்துவார். சில பிறவினை வடிவங்களில் பிறவினைகளுக்குரிய இடைநிலைகள் வெளிப்படையாகத் தெரிகின்றது.

எ.கா – ஆட்சி நடத்து

அவற்றை ஆக்கப் பிறவினைகள் (Derived Transtive) என்பர். தின், கொல் போன்ற பிறவினை வடிவங்களில் இடைநிலைகள் வெளிப்படையாகத் தெரியவில்லை எனினும் அவை இயல்பாகப் பிறவினை வடிவங்களாக அமைவதால் அவற்றை இயல்பாக அமைந்த பிறவினைகள் (Inherent transitive) என்பர். இயல்பாக அமைந்த பிறவினைகளுக்கும், தன்வினைகளுக்குமிடையேயுள்ள வேறுபாட்டை உருபன் நிலையில் (Morphological) கண்டறிவது அரிது. தொடரன்

நிலையில் (Syntactice level) மட்டுமே அவற்றைத் தெளிவாகப் பிரித்தறிய முடிகிறது.

வினைவகைகளை ஆராயும் டாக்டர் கால்டுவெல் இயக்குவினையைத் தனியாக, விரிவாக ஆராய்கின்றார். இவ்வினையை இலக்கண ஆசிரியர்கள் பிறவினைகளோடு இணைத்தனர். வீரமாமுனிவர் இதைத் தனியாக ஏவல்வினை என்றழைத்தார். இது தன்வினை, பிறவினை ஆகியவற்றிலிருந்து சற்று வேறுபடுகின்றது. திராவிட மொழிகளில் இயக்கு வினைகள் பிறவினைகளாகவும் செயல்படுவதுண்டு. திராவிட மொழிகளின் இயக்குவினை வடிவங்களுக்கு நிகரான வினைவடிங்கள் இந்தோ-ஐரோப்பிய மொழிகளில் இல்லை. எனினும் சித்திய மொழிகளில் உள்ளதாக கால்டுவெல் குறிப்பிடுகின்றார். இந்தோ-ஐரோப்பிய மொழிகளில் இயக்கு வினைகளுக்கென தனிவடிவங்களும், உருபுகளும் இல்லையெனினும் துணைவினைகளை இணைத்து இயக்குவினைப்பொருளை உணர்த்தும் மரபினைக் காணலாம்.

திராவிட மொழிகளில் வி, பி போன்ற தனி உருபுகள் காணப்பட்ட போதிலும் துணைவினைகளை இயக்குவினை அமைப்பிற்குப் பயன்படுத்ததுவதை அதிகமாகக் காணலாம். தமிழில் பண்ணு, செய் என்னும் துணைவினைகளும், கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிகளில் மாடு, செய்யு போன்ற துணைவினைகளும் இயக்கு வினையமைப்பிற்கு பயன்படுத்தப்படுகின்றன. பொதுவாகத் திராவிட மொழிகளில் பிறவினைக்குரிய அடிச்சொற்களோடு இயக்கு வினைகளுக்குரிய உருபுகளைச் சேர்ப்பதால் இயக்குவினை வடிவங்கள் அமைகின்றன. பழந்தமிழ், தெலுங்கு, பிராகுயி ஆகிய மொழிகளில் இயக்கு வினைக்கெனத் தனி வடிவம் உள்ளது. தனியாக உள்ள இத்தகைய இயக்குவினை வடிவங்கள் காலத்தால் மிகப் பிற்பட்டவை என்பது அறிஞர்கள் கருத்து. ஆனால் சில இவ்வடிங்கள் மூலத்திராவிட மொழியிலே உள்ளன என்பர். மலையாள மொழியில் ‘இ’, ‘பி’ போன்ற இயக்குவினை உருபுகளாக உள்ளன.

எ.கா. செய்யிச்சு

சோதிப்பிச்சு

பிறவினை இயக்குவினை உருபுகள்

குறிப்பு

**தமிழ்:**

1) தமிழ் மொழியில் வினைப்பகுதியின் ஈற்றிலுள்ள வல்லினத்தை இரட்டித்து பிறவினை இயக்குவினை வடிவங்களை அமைக்க முடிகின்றது.

   எ.கா ஆகு > ஆக்கு
   வாடு > வாட்டு
   பெருகு > பெருக்கு

   இம்முறை கோடா, கொடகு, கோண்டா, குயி, பெங்கோ போன்ற மொழிகளிலும் உள்ளன.

2) மூக்கொலியும், அதன் இனத்தடையொலியும் இணைந்து வரும் இடங்களை (Nasal + Stop clusters) இரு வல்லொளிகளின் இணைவாக மாற்றுவதன் மூலமும் பிறவினை வடிவங்களை அமைக்கலாம்.

   எ.கா அடங்கு > அடக்கு
   நீங்கு > நீக்கு

3) வினைப்பகுதியோடு 'த்த' இணைத்துப் பிறவினை அமைத்தல்

   எ.கா நிகழ் > நிகழ்த்து
   அலர் > அலர்த்து
   பற > பறத்து
   நட > நடத்து

4) வினைப்பகுதியோடு 'று', 'டு' இணைத்தல்

   எ.கா அகல் >அகற்று
   துயில் > துயிற்று
   காண் > காட்டு
   சுருள் > சுருட்டு

5) வினைப்பகுதியோடு 'ப்ப்' இணைத்தல்

   எ.கா களி > களிப்பு

6) வினைப்பகுதியோடு 'உ' சேர்த்தல்.

   எ.கா. கட > கடவு

7) வினைப்பகுதியோடு செய், பண்ணு போன்றவற்றைச் சேர்த்தல்

குறிப்பு

எ.கா. உண்ணச் செய்

உறங்கப் பண்ணு

8) இ, ய, ர, ழ ஆகிய ஒலிகளைக் கொண்டு முடியும் வினையடிச் சொற்களோடு – ந்த்-, -ட்- முதலிய இறந்தகால இடைநிலைகளையும், -கிறு- என்னும் நிகழ்கால இடைநிலைகளையும், -வ்-, -உம்- என்னும் எதிர்கால இடைநிலைகளையும் இணைத்துத் தன்வினையினையும், -த்த்-, -க்கிறு-, -ப்ப்-, -க்கு- போன்றவற்றை இணைத்துப் பிற வினைகளையும் அமைக்கலாம்.

எ.கா. கழிந்தது, கழிகிறது, கழியும் > கழித்தது

கழிக்கிறது, கழிக்கும்

9) இயக்குவினை உருபுகளான வி, பி போன்றவற்றைப் பிறவினையடிகளோடு இணைத்தும், சிலவிடங்களில் தன்வினையடிகளோடு இணைத்தும் இயக்குவினை வடிவங்களை அமைக்கலாம்.

| | | | |
|---|---|---|---|
| எ.கா | செய் | | செய்வி |
| | நட | | நடப்பி |
| | உண் | > | உண்பி |
| | அறி | > | அறிவி |

எல்.வி. இராமசுவாமி ஐயர் இத்தகைய இடைச்சொற்களைப் பெறும் அடிச்சொற்கள் சங்க இலக்கியங்களில் மிகக் குறைவாகவும், ஆழ்வார்கள், நாயன்மார்கள் பாடல்களில் சற்று மிகுந்தும் வருவதைக் காட்டுகின்றார்.

ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே என்று அப்பர் பாடிய பாடலில் இவ்வாறு இயக்குவினை பயிலக் காணலாம். தற்காலத் தமிழில் இயக்குவினைக்குரிய இடைச்சொற்களைப் பயன்படுத்தும் மரபு இல்லை. வினையெச்ச வடிவங்களோடு ‘வை’ என்னும் துணைவினையை இணைத்து இயக்கு வினைப்பொருளை உணர்த்தும் மரபே மிகுந்துள்ளது.

எ.கா. சொல்லவை

நடக்கவை

பிறவினை, இயக்குவினையமைப்பில் மலையாள மொழி பெரும்பாலும் தமிழை ஒட்டியே அமைகின்றது.

## கோடா

ஒலிப்பு ஒலியை ஒலிப்பில் ஒலியாக மாற்றுவதன் மூலம் தன்வினைகளைப் பிறவினைகளாக்கும் மரபினைக் கோடா மொழியில் காணலாம்.

எ.கா. –am—g, > am-k-

இம்மொழியில் -ச-த-போன்றன பிறவினைக்குரிய இடைச்சொற்களாக உள்ளன. மேலும் ச, ர ஆகிய ஒலிகளின் முன்னர் ய, ஞ (nj) ஆகிய ஒலிகள் வந்தும் 'இ' கரத்தின் முன்னர் 'வ' கரம் கெட்டும், 'ண்', 'த்' ஆகிய ஒலிகள் கெட்டு அவற்றின் இடத்தில் -ட்- ஒலிவந்தும் இம்மொழியில் இயக்குவினை இடைச்சொற்கள் அமைகின்றன.

## தோடா

தோடா மொழியிலும் கோடாவைப் போன்ற ஒலிப்பு ஒலி ஒலிப்பில் ஒலியாக மாறி பிறவினைகள் அமைகின்றன.

வ-al-x/-(அசைதல்)al-k

-ச-, -த- போன்றன இம்மொழியில் பிறவினை இடைச் சொற்களாக உள்ளன.

## கொடகு

இம்மொழியில் வினைச் சொல்லின் இறுதியிலுள்ள ஒலிப்பு ஒலியை ஒலிப்பில் ஒலியாக மாற்றுவதாலும், ஒலிப்பு ஒலியும், அதன் இன மூக்கொலியும் இணைந்த இணைவை (Nasal + Vocied Stop) ஒலிப்பில் ஒலியாக மாற்றுவதாலும் பிறவினைகளை அமைக்கலாம்.

**எ.கா.** ag>a-k-

er – ang > erak

சிலவிடங்களில் -k-,-t-,ip- போன்ற பிறவினை இடைநிலைகளை தன்வினை அடிச்சொற்களோடு இணைத்தும் பிறவினைகள் அமைக்கப்படுகின்றன. இம்மொழியில் இயக்குவினை இடைநிலையாக -ச- உள்ளது.

## கன்னடம்

இம்மொழியில் 'இசு' என்பது பிறவினைக்குரிய இடைநிலையாக உள்ளது. கி.பி.7-ஆம் நூற்றாண்டு முதல் 10-ஆம் நூற்றாண்டு வரையுள்ள கல்வெட்டுக்களில் -ப்பு- என்ற வடிவமிருந்ததாகத் தெரிகின்றது. ஒலிப்பு ஒலிகள் ஒலிப்பில் ஒலிகளாக மாறி பிறவினைகள் அமையும் இயல்பும் இம்மொழியில் உள்ளது.

am – ugu > am – uku-

## துளு

இம்மொழிகளில் பிறவினை இடைநிலையாக 'பு' என்பது காணப்படுகின்றது. இதனை இம்மொழியின் பல வட்டார வழக்குகளிலும் காணலாம். –போ- என்னும் இயக்குவினை இடைநிலையும் இம்மொழியில் இடம் பெறுகின்றது.

## தெலுங்கு

இம்மொழியில் -சு-, -பு- இஞ்சு, போன்ற இடைநிலைகள் பிறவினையமைப்பிற்குப் பயன்படுகின்றன.

செயிஞ்சு – செய்விக்க

பிலிபஞ்சு – அழைப்பிக்க

தற்காலத் தெலுங்கு மொழியில் சில துணைவினைகளைத் தன்வினையடிகளோடு இணைந்து பிறவினை, இயக்கவினை வடிவங்கள் அமைக்கப்படுகின்றன.

## கோண்டி, கோண்டா, பெங்கோ மொழிகள்

கோண்டி மொழியில் -ஹு-, பூஸ், -ஊஸ்- என்ற பிறவினை இடைநிலைகள் உள்ளன. கோண்டா மொழியில் தன்வினைகளைப் பிறவினைகளாக மாற்ற --இஸ், -ப-, -பிஸ்- போன்ற இடைநிலைகள் இணைக்கப்படுகின்றன. பெங்கோ மொழியில் ஒலிப்பு ஒலிகள் அதன் இன ஒலிப்பில் ஒலிகளாக மாறிப் பிறவினைகள் அமைகின்றன.

குறிப்பு

## குயி, குவி

-K –s-, -t-, -p- போன்றன குயி மொழியிலுள்ள பிறவினை இடைநிலைகள், குவி மொழியில் -t-, -h-, -p- போன்ற இடைநிலைகளும் உள்ளன. இம்மொழியில் பிறவினை, இயக்குவினை, அமைப்பிற்கு -கி- என்னும் துணைவினையும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

## கொலாமி, நாயக்கி, பர்ஜி

கொலாமி மொழியில் -அப்-, -இப்-, -ப்-, -க-, -த- ஆகிய பிறவினை இடைநிலைகள் உள்ளன. தன்வினை வடிவங்களோடு -அப்- என்னும் இடைநிலை இணைந்து நாயக்கி மொழியில் பிறவினைகள் அமைவதைக் காணலாம். பர்ஜி மொழியில் - இப்-, -இத்- என்னும் இரு இடைநிலைகள் உள்ளன.

## குருக், மால்டோ, பிராகுயி

-p-, -t- போன்ற இடைநிலைகள் பிராகுயி மொழியிலும் என்னும் இடைநிலை மால்டோ மொழியிலும் உள்ளன. டாக்டர் பி.எஸ்.சுப்பிரமணியன், திராவிட மொழியில் மொத்தம் மூன்று வகையான பிறவினை - இயக்குவினை வடிவாக்க முறை காணப்படுவதாகக் குறிப்பிடுகின்றார். போ > போக்கு போன்ற வடிவங்களை முதல் வகையாகக் கொள்கின்றார்.

NP > PP

P > PP என்ற முறைப்படி அமைகின்ற வடிவங்களை இரண்டாவது வகையாகக் கொள்கின்றார்.

எ.கா திருந்து > திருத்து

ஆகு > ஆக்கு

இத்தகைய அமைப்பு முறை தமிழ், கொடகு, கோண்டா, குவி போன்ற மொழிகளிலும் பழங்கன்னடம், பர்ஜி போன்ற மொழிகளின் தொன்மையான வினை வடிவங்களிலும் உள்ளன. இவ்விருவகை அமைப்பு முறைகளும் மூலத்திராவிட மொழியிலும் இருந்திருக்க வேண்டுமென்பது அவர் கருத்து.

வினையடிகளோடு 'த்த' 'த்' 'ந்த்' போன்ற இடைநிலைகளை இணைத்துத் தன்வினை பிறவினைகளை வேறுபடுத்திக் காட்டும் அமைப்பினைக் கொண்ட வடிவங்கள் மூன்றாவது வகையாகக் கொள்ளப்படுகின்றன.

## செயப்பாட்டு வினை

செய்வினை, செயப்பாட்டு வினை என்னும் பாகுபாட்டைப் பழந்தமிழ் இலக்கணங்களில் காணமுடியவில்லை. எனினும் இவை வைத்தியநாத தேசிகர் படைத்த இலக்கண விளக்கம் என்னும் நூலில் இடம் பெறுகின்றன. கால்டுவெல் திராவிட மொழிகளில் செயப்பாட்டு வினை என்ற அமைப்பே கிடையாது என்று கூறிச் செல்கிறார். பழந்தமிழ் இலக்கண ஆசிரியர்கள் செய்வினை, செயப்பாட்டுவினை என்ற பாகுபாடு இந்தோ – ஐரோப்பிய மொழிகளில் உள்ளது போலத் தமிழில் தெளிவாக இல்லாமையால் இப்பாகுபாட்டிற்குச் சிறப்பளிக்காது விட்டுச் சென்றனர். எனினும் பழங்காலத்திலிருந்தே செயப்பாட்டுவினை தமிழில் இருந்து வந்தது என்பதற்கு "எழுத்தெனப்படுப" என்ற தொல்காப்பியத் தொடரே சான்றாக உள்ளது என்றும், இத்தொடரிலுள்ள 'படு' என்பது செயப்பாட்டு வினைப்பொருளை (Passivity) உணர்த்துகின்றது என்றும் டாக்டர் அ.சிதம்பரநாதசெட்டியார் "தமிழில் செயப்பாட்டுவினை" என்ற கட்டுரையில் விளக்குகின்றார். தொல்காப்பியர் மூன்றாம் வேற்றுமையுருபு கருத்தாப் பொருளில் வரும் என்றும் கூறுவதால் அவர் காலத்தில் செயப்பாட்டுவினை இருந்திருக்க வேண்டும் என்று டாக்டர் பி.சுப்பிரமணிய சாஸ்திரி கருதுகின்றார்.

செய்வினைக்கும், செயப்பாட்டு வினைக்குமிடையே அடிப்படையில் சில வேறுபாடுகள் உள்ளன. செய்வினையில் வினை செய்பவனே எழுவாயாக அமைவதுண்டு. செயப்பாட்டு வினையில் செயல்படுபொருளே எழுவாயாக அமைகின்றது. செய்வினையின் எழுவாய், செயப்பாட்டு வினையில் மூன்றாம் வேற்றுமைக் கருவிப்பொருள் உருபைப் பெறும். செயப்படு பொருளுக்குச் சிறப்புக் கொடுக்க எண்ணும் போதும் எழுவாய் தெரியாத நிலையிலும், எழுவாயை அறிவிக்க வேண்டாத நிலையிலும் தமிழில் செயப்பாட்டு வினையமைப்புக்கள் இடம் பெறுகின்றன.

குறிப்பு

திராவிட மொழிகளில் செயப்பாட்டு வினைக்குரிய இடைநிலையாக 'படு' என்பது காணப்படுகின்றது. எனினும் இம்மொழிகளின் பல வினைவடிவங்களில் இது செயப்பாட்டு வினைப்பொருளை உணர்த்துவதில்லை 'படு' என்பது 'வெட்கப்பட்டான்' போன்ற தமிழ் வடிவங்களிலும் சிக்குபடுதாடு (siggupDoadu) போன்ற தெலுங்கு மொழியின் வடிவங்களிலும் வெட்கப்படுத்தினான் (sigguparacenu) போன்ற பிற வினைவடிவங்களுக்கு நிகரான தன்வினை வடிவங்கள் பயன்படவில்லை என்பது தெளிவு. இவற்றின் உண்மையான செயல்பாட்டு வினை வடிவம் 'வெட்கப்படுத்தப்பட்டான்' என்பதே என தெளிவுபடுத்துகின்றார் டாக்டர் அகத்தியலிங்கம். மேலும் 'படித்த பாடம்' போன்ற வடிவங்கள் செயப்பாட்டு வினை வடிவங்கள் அல்ல என்பதையும் சிறப்பாக விளக்கிச் செல்கின்றார்.

செய்வினை எழுவாயும், செயப்படு பொருள் செயப்பாட்டு வினையில் முறையே கருவியாக (Instrumental) எழுவாய் வடிவாகவும் (Nominative) முறையே மாற்றப்படுகின்றன. திராவிட மொழிகளைப் போன்றே பழைய இந்தோ-ஐரோப்பிய மொழிகளிலும் (Primitive IndoEuropean) செயப்பாட்டு வினை இல்லை என்று கருதப்படுகின்றது.

சமஸ்கிருத மொழியில் செயப்பாட்டு வினைப்பொருளில் பயன்படுத்தப்படும் 'w' என்னும் உருபு தொடக்க காலத்தில் தனித்தியங்கும் சொல்லாக இருந்து பின்னர் காலப்போக்கில் ஒரு உருபாக (Bound Morbheme) மாற்றம் பெற்றது என்று கருதப்படுகின்றது. இதனால் சமஸ்கிருத மொழியிலும் செயப்பாட்டு வினை வடிவம் தொடக்க காலத்தில் இல்லை என்ற நிலை தெளிவு பெறுகின்றது. அவ்வாறே தமிழில் காணப்படும் 'படு' என்னும் வடிவமும் தொடக்க காலத்தில் தனிச் சொல்லாக இருந்த பின்னர் ஒரு கட்டு உருபன் (Bound Morbheme) என்ற நிலைக்கு மாறி இருக்க வேண்டும் எனக் கருதப்படுகின்றன.

மாற்றிலக்கண வல்லுனர்கள் செய்வினை, செயப்பாட்டுவினைத் தொடர்களிடையே உள்ள உறவை மிகச்சிறப்பாக விளக்கியுள்ளனர்.

இவ்விருவகைத் தொடர்களையும் ஒரே புறவடிவத்தின் புதைவடிவங்களாக அவர்கள் விளக்கிச் செல்கின்றனர்.

குறிப்பு

## செயப்பாட்டுவினை உணர்த்தப்படும் முறை

1) இந்தோ-ஐரோப்பிய மொழிகளைப் போல 'அது என்னால் உடைக்கப்பட்டது' என்று கூறாமல், 'அது என்னால் உடைந்தது' என்று கூறினாலும் தமிழில் அது செயப்பாட்டுவினைப் பொருளைத் தரும். இவ்வாறு செயப்பாட்டு வினைப்பொருள் உணர்த்தப்படும் முறை ஜப்பானிய மொழிகளிலும் உண்டு என்கிறார் கால்டுவெல்.
2) மேலும் பொருள் தெளிவுபட வேண்டுமாயின் 'ஆயிற்று', 'போயிற்று' என்பவற்றைச் சேர்த்து அது உடைந்து போயிற்று, உடைந்ததாயிற்று என்று கூறுவது மற்றொரு வகை.
3) வினையாலணையும் பெயர்களில் செய்வினையே செயப்பாட்டுவினைப் பொருளைத் தருவதையும் .கால்டுவெல் காட்டிச் செல்கின்றார்.

   சொன்ன போதும் - சொல்லப்பட்டது போதும்.
4) 'உண்' என்னும் துணை வினையை, பெயர், தொழிற்பெயர் ஆகியவற்றோடு இணைத்துச் செயப்பாட்டுவினையுணர்த்தும் மரபும் தமிழில் உள்ளது.

   கொலையுண்டான்
5) தற்காலத் தமிழிலும், ஏனைய திராவிட மொழிகளிலும் 'படு' என்னும் துணைவினையை இணைத்துச் செயப்பாட்டு வினைப் பொருளை உணர்த்தும் மரபே உள்ளது. இம்முறை துளு மொழியில் மட்டும் கிடையாது.

ஐரோப்பிய மொழிகளிலும் தொடக்க காலத்தில் செயப்பாட்டு வினை இல்லை என்றும், பிற்காலத்தில் வளர்ந்து இடம் பெற்றது என்றும் சுனீத் குமார் சட்டர்ஜி குறிப்பிடுகின்றார்.

## எதிர்மறை வினைகள்

திராவிட மொழிகளில் எதிர்மறை வினைகள் பலவாறு அமைகின்றன. எனினும் அடிச்சொல் + எதிர்மறை இடைநிலை பாலறி கிளவி என்பதே பொதுவான அமைப்பு முறையாக உள்ளது.

குறிப்பு

சிலவிடங்களிலும் காலங்காட்டும் இடைநிலைகள் கெட்டுவிடுவதாலும் எதிர்மறை வினைகள் அமைகின்றன.

எ.கா. காணேன் = காண் Ø ஏன்

இத்தகைய அமைப்பு முறையை ஆல்பிரட் மாஸ்டர் என்பவர் zero tense என்கிறார். இதனைப் பிற்கால அறிஞர்கள் ஏற்கவில்லை. சில இடங்களில் ஒன்றன்பால், பலவின்பால் வடிவங்களில் ‘ஆ’ காரம் எதிர்மறை இடைநிலைகள் வருதல் உண்டு.

மாடு ஓடா

குதிரைகள் நில்லா

திராவிட மொழிகளில் எதிர்மறை வினைமுற்றுக்கள் மட்டுமன்றி எதிர்மறை பெயரெச்சங்களும், வினையெச்சங்களும் உள்ளன. நடுத்திராவிட மொழிகளில் எதிர்மறைக்கெனத் தனி வடிவங்களும் உள்ளன. இத்தகைய வடிவங்களில் எதிர்மறை வடிவங்களையடுத்து இறந்தகால இடைநிலைகள் அமைகின்றன. தமிழ், கோடா போன்ற மொழிகளில் ‘ஆ’ காரம் எதிர்மறை இடைநிலையாக வருதல் உண்டு. வினையடைகளிலும் ‘ஆ’கார இடைநிலை எதிர்மறைப் பொருளைத் தந்து நிற்கின்றது.

எ.கா. ஓடாது சென்றான்

மூலத்திராவிட எதிர்மறை இடைநிலையான ‘வா’ என்பது அதிகமான நடுத்திராவிட மொழிகளிலும், கோண்டா, பெங்கோ, மண்டா போன்ற மொழிகளிலும் காணப்படுகின்றது. சில இடங்களிலும் இது குறுகி, ‘வ’ என்று எதிர்மறையை உணர்த்தி நிற்பதைக் காணலாம்.

மேற்காட்டிய அமைப்பு முறைகள் மட்டுமன்றி அடிச்சொல் + எதிர்மறை இடைநிலை + இறந்தகால இடைநிலை + பாலறிகிளவி என்ற முறையிலும் எதிர்மறைவினைகள் அமைகின்றன. இத்தகைய அமைப்பு முறையினைக் கோண்டா, பெங்கோ, குயி, குவி போன்ற மொழிகளில் காணலாம். இவ்வமைப்பை மூலத்திராவிட மொழிநிலைக்கு உரியதாக வகுப்பது அரிது. வினையடைகளில் ‘ஆ’ என்னும் இடைநிலையே எதிர்மறையைக் காட்டி நிற்குமென்றாலும் சிலவிடங்களில் ‘து’ என்னும் விகுதியும் இணைந்து ‘ஆது’ என்று எதிர்மறை இடைநிலைகள் அமைவதைக் காணலாம்.

எ.கா. வராது.

சில மொழிகளில் ‘ஆ’ காரத்தோடு ‘கு’ இணைந்து ‘ஆகு’ என்று எதிர்மறை இடைநிலைகள் அமைகின்றன. பெயரடைகளிலும் ‘ஆ’ காரமே எதிர்மறைப் பொருளை உணர்த்தி நிற்கின்றது. நடுத்திராவிட மொழிகளில் ‘ஆ’ கர இடைநிலை எதிர்மறைப் பொருளைத் தருகின்றது.

துளு போன்ற தென்திராவிட மொழிகளிலும் ‘அ’ கரமே எதிர்மறைக்குரிய இடைநிலையாகக் கருதப்படுகின்றது. இவ் இடைநிலைகளுள் ‘ஆ’ காரமே மூலத்திராவிட வடிவமென்று பலர் கருத்து. வேறு சிலர் ‘அ’கரமே மூலத்திராவிட வடிவமென்று கருதுவர். அதிகமான திராவிட மொழிகளில் முதலசை தவிர்ந்த ஏனைய அசைகளில் நெட்டுயிர்கள் இடம் பெறுவதில்லை. துளு மொழியில் ‘அ’ கரத்தை அடுத்துவரும் அடுத்த குறில் ஒலியும் (அ) இணைந்து நெடிலாவதைத் தடுக்க இரு ‘அ’ கர ஒலிகளுக்கு மிடையில் ‘ய’ கர உடம்படுமெய் வருவதைக் காணலாம். எனவே அகரமே மூலத்திராவிட வடிவமென்பது தெளிவு.

எதிர்மறைப் பொருளை உணர்த்துவதில் திராவிட மொழிகள் இந்தோ-ஐரோப்பிய மொழிகளிலிருந்து வேறுபடுகின்றன. ஐரோப்பிய மொழிகளில் எதிர்மறை உணர்த்தும் சொல் வினைச்சொல்லின் உறுப்பாகாமல் தனித்து நிற்க, திராவிட மொழிகளில் எதிர்மறை இடைநிலைகள் வினையடிச் சொல்லோடு ஒட்டு நிலையாக இணைந்து நிற்பதைக் காணலாம். இம்மொழிகளில் கால இடைநிலையைப் பெறாத எதிர்மறை வடிவங்கள் காலத்தைக் காட்டுவதில்லை.

தமிழில் அல், இல் போன்ற எதிர்மறைச் சொற்களும் எதிர்மறைப் பொருளைத் தருகின்றன. இவை தனியாக எதிர்மறையை உணர்த்தும் என்கிறார் கால்டுவெல். ‘இல்லை’ ‘மாட்டான்’ என்பன போன்ற சொல்லுருபுகளும் தற்காலத் தமிழில் எதிா் மறைப் பொருளை உணா்த்தப் பயன்படுகின்றன.

மலையாள மொழியில் வினையடிகளோடு அல்ல, இல்ல என்பவற்றை இணைப்பதாலும் ‘ஆ’ காரத்தைச் சோ்ப்பதாலும் எதிா்மறை வடிவங்கள் அமையும். கொடகு மொழியில் வினைமுற்றோடு அகரம் இணைந்து எதிா்மறை உருப்பெறுவதைக் காணலாம். அதோடு

இம்மொழியின் வினையெச்சத்தில் ‘அதெ’ என்பது பெயரெச்சத்தில் ‘அத்’ என்பதும் இணைந்து எதிர்மறை அமைதலுண்டு. கன்னடத்தில் உருபு இன்றியும் வினைமுற்றுக்களோடு அகரம் இணைந்தும் எதிர்மறைப் பொருள் உணர்த்தும் முறை உள்ளது. துளு மொழியில் அகரம் பெரும்பாலும் எதிர்மறை இடைநிலையாக உள்ளது. அதோடு ‘ஜி‘ ‘ரி’ போன்ற இடைநிலைகளும் பயின்று வருகின்றன.

இவ் எதிர்மறை இடைநிலைகளைத் தொடர்ந்து இம்மொழியில் பால்காட்டும் விகுதிகள் இடம் பெறுகின்றன. தெலுங்கிலும் ‘அ’கரமே பெரும்பாலும் எதிர்மறை இடைநிலையாகச் செயல்படுகின்றது. வினையெச்சத்தோடு ‘லேது’ என்னும் சொல்லுருபு இணைந்தும் எதிர்மறை வடிவங்கள் அமைகின்றன. தொழிற் பெயரோடு பேச்சுவழக்கில் ta என்னும் பின்னொட்டு இணைந்தும் எதிர்மறை வடிவம் அமையக் காணலாம்.

கோண்டி மொழியில் -v-, -o- போன்றனவும், -mki(n) போன்ற பின்னொட்டுக்களும் எதிர்மறைப் பொருளை உணர்த்தத் துணைசெய்கின்றன. எதிர்மறை வினையெச்ச விகுதியாக இம்மொழியில் -Vak என்னும் பின்னொட்டு உள்ளது. கோயா மொழியில் -vo- என்னும் எதிர்மறை இடைநிலை உள்ளது. இறந்தகால எதிர்மறை வடிவங்களில் ill- என்பதும், நிகழ்கால எதிர்மறை வடிவங்களில் ille எதிர்மறை வினையெச்சத்தில் -akunta என்பதும் எதிர்மறைப் பொருளைத் தரும்.

பெங்கோ மொழியியல் எதிர்மறை இடைநிலையாக -உ- வருகின்றது. மேலும் -a, de போன்றனவும் எதிர்மறைப் பொருளைத் தருகின்றன. கொலாமி மொழியில் -ந- எதிர்மறை இடைநிலையாக உள்ளது. இதே இடைநிலையை நாயக்கி மொழியிலும் காணலாம். பர்ஜி மொழியில் அகரமே பெரும்பாலும் எதிர்மறை இடைநிலையாக உள்ளது. இவ்விடைநிலையினை கடபா மொழியிலும் காணலாம்.

## இரு மதிப்பெண் வினாக்கள்

1. நிகழ் என்னும் வினைப்பகுதி எவ்வாறு பிறவினையாகும்?
   நிகழ் , நிகழ்த்து

2. தெலுங்கில் காணும் பிறவினை உருபுகள் எவை?

சு, பு, இஞ்சு

3. தமிழில் செயப்பாட்டு வினைக்குத் துணை செய்யும் உருபன் எது?
   படு

குறிப்பு

4. பெயரெச்சத்துடன் இணைக்கப்படுவதால் எதிர்மறைப் பொருள் தரும் சொற்களெவை?
   இல்லை, மாட்டான் - வரவில்லை,வரமாட்டான்

### குறுவினா

5. தன்வினை பிறவினையாக மாற்றப்படுவதை விவரிக்க.
   தன்வினை பிறவினை என்னும்தலைப்பின் கீழுள்ள செய்திகள்
6. இயக்குவினை உருபுகள் குறித்து எழுதுக.
   இயக்குவினை உருபுகள் என்னும் தலைப்பின் கீழுள்ள செய்திகள்

### பெருவினா

7. வினைச்சொற்களின் அமைப்புக் குறித்த்க் கட்டுரைக்க.
   திராவிட மொழிகளில் வேற்றுமை ஏற்கும் என்பது தொடங்கி வந்தான், வந்தாள் ஆண்பால், பெண்பால் என்பது வரை
8. வினை வகைகள் குறித்துக் கட்டுரை வரைக.
   வினை வகைகள் என்னும் தலைப்பின் கீழுள்ள செய்திகள்
9. செயப்பாட்டு வினை மற்றும் அது உணர்த்தப்படும் முறை குறித்து எழுதுக
   செயப்பாட்டு வினை, செயப்பாட்டு வினை உணர்த்தப்படும் முறை என்னும் தலைப்பின் கீழுள்ள செய்திகள்
10. எதிர்மறை வினைகள் குறித்து விளக்கியுரைக்க.
    எதிர்மறை வினைகள் என்னும்தலைப்பின் கீழுள்ள செய்திகள்

# கூறு 11

## வினைச் சொற்கள் காலம் காட்டும் முறை

குறிப்பு

திராவிட மொழிகளில் வினையடிகளோடு காலங் காட்டும் இடைநிலைகள் இணைந்து நின்று காலத்தைக் காட்டி நிற்கின்றன. பழந்தமிழில் இறந்தகாலம் அல்லாதன (Non-past) என இரு காலங்களே உள்ளன. பேச்சுவழக்கில் மட்டுமே உள்ள திருந்தாத திராவிட மொழிகள் பலவற்றிலும் பழந்தமிழைப் போன்றே இறந்தகாலம் - இறந்தகாலம் அல்லாதன என்ற இரு பாகுபாடே காணக்கிடக்கின்றன. தொல்காப்பியர் காலம் மூன்று என்று குறிப்பிட்டபோதிலும் இரண்டு காலங்களையே பலவாறு விளக்கியுள்ளார்.

செய்த - இறந்தகாலம்

செய்யும் - இறந்தகாலம் அல்லாதது

மூலத்திராவிட மொழியிலும் இவ்விருவகையான காலப்பாகுபாடு தான் இருந்திருக்க வேண்டுமென்பது பெரும்பாலானோர் கருத்து. இவற்றுள் இறப்பு அல்லாத காலத்தில் எதிர் காலமும் அடங்கும். இறப்பு அல்லாத காலத்தை (aorist future) என்றும் அழைப்பர். இறப்பு அல்லாத காலத்திலிருந்து நிகழ் காலம், காலப்போக்கில் தனியாகப் பிரிந்திருக்கவேண்டும். தற்காலத் தமிழிலும் நிகழ்கால வடிவங்கள் எதிர் காலத்தையும் உணர்த்தி நிற்பதைக் காணலாம்.

நான் வருகிறேன் - நிகழ்காலம்

நான் (நாளை) வருகிறேன்-எதிர்காலம்

### இறந்தகாலம்

தென் திராவிட மொழிகளில் ஏராளமான இறந்த கால இடைநிலைகள் உள்ளன. அவற்றுள் -த்-, -த்த்-, -ந்த்-, -இ- போன்றவற்றை மூலத்திராவிட வடிவங்களாகக் கொள்வர். இவ்வடிவங்கள் தென்திராவிட மொழிகளில் அதிகமாக உள்ளன. பழந்தமிழிலுள்ள இறந்தகால வினைவடிவங்களை அவை ஏற்கும் இறந்த கால இடைநிலைகளை அடிப்படையாகக் கொண்டு நான்காகப் பகுக்கலாம்.

அவை: (1) செய் + த் + ஆன் - செய்தான்

(2) நட + ந்த் + ஆன் - நடந்தான்

(3) அடி + த்த + ஆன் - அடித்தான்

(4) அடங்கு + இன் + ஆன் - அடங்கினான்

குறிப்பு

பேச்சுத் தமிழில் -ந்த்-, -த்த- என்னும் இடைநிலைகள் இடையண்ண ஒலிகளாக மாறி முறையே -ஞ்ச-, -ச்ச- என்று முன்னுயிர்களையடுத்து வருகின்றன. இத்தகைய திரிபு பெற்ற இடைநிலைகள் இலக்கியங்களில் அதிகமாக இடம் பெறாவிடினும் இம் மாற்றம் கி.பி. 7-ஆம் நூற்றாண்டிற்கு முன்னரே ஏற்பட்டிருக்க வேண்டுமென்பது தெளிவு. அப்பர் தேவாரத்தில் இத்தகைய இடைநிலைகள் சில இடங்களில் வருகின்றன.

செய்ஞின்ற

தகர இடைநிலை கூட பேச்சுத் தமிழில் -ஞ்ச்- என்று திரிந்து வருவதைக் காணலாம்.

பெய்தது > பெஞ்சது

த் எனும் இறந்த கால இடைநிலை நாவளை டகர ஒலியாகத் திரிந்து வருதலும் உண்டு.

உண்- த்- ஆன் - உண்டான்

தமிழில் இறந்தகால அடிச் சொற்களோடு (stem) 'உ'கர 'இ'கர ஒலிகளை இணைத்து வினையெச்ச வடிவங்கள் அமைப்பதுண்டு.

நடந்து

திரும்பி

இவ்வாறே இறந்தகால வினையடிச் சொல்லோடு 'அ'கரத்தை இணைக்கும் போது இறந்த காலப் பெயரெச்சங்கள் ஏற்படுகின்றன.

எ.கா. வந்த

ஓடிய

தமிழிலுள்ள –ந்த்- என்ற இடை நிலைக்கு நிகராக மலையாள மொழியில் -ந்ந்- என்ற இடைநிலை உள்ளது. பழங்காலக் கல்வெட்டுக்களில் 'என்ற', 'ந்த', போன்ற வடிவங்கள் உள்ளன. இம் மொழியில் -ண்ண்- என்ற இடைநிலையே பெரு வழக்கிலுள்ளது. தற்கால மலையாளத்தில் - இ-, -ந்ந்-, -ந்-, -ந்த்-, -ற்-, -ட்-, -ச்-, -த்-, போன்ற இடை நிலைகளும் காணப்படுகின்றன. கன்னட மொழியில் -d-, -த்-, -nd-, -id- போன்ற இடை நிலைகள் காணப்படுகின்றன.

குறிப்பு

இறந்த கால இடைநிலைகளைப் பொறுத்த வரையில் தென் திராவிட மொழிகளுக்கும், நடுத்திராவிட மொழிகளுக்குமிடையே அதிக ஒற்றுமைக் கூறுகளை காணலாம். கோண்டா, கோண்டி, குயி போன்ற மொழிகளில் 'இத்' என்னும் இடைநிலையே பெருவழக்கில் உள்ளது. தமிழிலுள்ள நான்கு இடைநிலைகளையும் குயிமொழி –த்-, -இ- என்னும் இரு இடைநிலைகளாகச் (d/t and i/y) சுருக்கிக் கையாள்கின்றது. பா்ஜி மொழியில் -க- என்னும் இறந்தகால இடைநிலை அதிகமாகப் பயின்று வருகின்றது.

தமிழ் கொடகு ஆகிய மொழிகள் வினையடிகளோடு த், ந்ந், த்த், இ என்ற இடைநிலைகளை இணைத்து இற்நதகால வினை வடிவங்களை அமைத்துக் கொள்கின்றன. அம்முறையே மூலத்திராவிட மொழியின் இயல்பாகும். இவற்றுள் த்த், த், என்பவற்றைத் தொடா்ந்து முன்னுயிர்கள் வரும் போது அவை அண்ண ஒலியாக மாறக்காணலாம். நடுத்திராவிட மொழிகளின் இறந்த கால இடைநிலையைப் பழைய தெலுங்கு, குயி, குவி ஆகியவற்றில் காணலாம். வடதிராவிட மொழிகளில் -க்க்- என்ற இறந்தகால இடைநிலையே பெருவழக்கில் உள்ளது.

இவற்றுள் இறந்தகால இடைநிலையான –த்- பெரும்பாலும் ஓரசைச் சொற்களையடுத்து வரக்காணலாம். சில இடங்களில் (c) VcV என்ற அமைப்புடைய ஈரசைச் சொற்களையடுத்தும் இது வருதலுண்டு.

| | | | | |
|---|---|---|---|---|
| எ.கா. | தமிழ் | செய் | + | த் |
| | கொடகு | கெய் | + | த் |
| | தோடா | கீய் | + | த் |

மெய்1 உயிர்1 மெய்2 உயிர்2 எனவரும் அமைப்புடைய வினையடிகளில் மெய்2 என்பது க, த, ற ஆகிய மெய்களில் ஏதாவது ஒன்றாக இருந்தால் அது க், ட், ற் என்பவற்றுள் ஒன்றை இறந்தகால இடைநிலையாக ஏற்கும்.

| | | | |
|---|---|---|---|
| எ.கா. | தமிழ் | நகு | நக்க |
| | | இடு | இட்ட |
| | | பெறு | பெற்ற |

மெய்உயிர் இணைந்த ஓரசை அமைப்புடைய வினையடிகளே பெரும்பாலும் ந்த் என்னும் இறந்தகால இடைநிலையை ஏற்கும்.

குறிப்பு

எ.கா. தமிழ் நோ > நொந்தான்

மலையாளத்தில் ந்த் > ந்ந் என்று மாறி விடுகிறது

அள, எழு போன்ற வினைவடிவங்களும் 'ந்த்' இடைநிலையை ஏற்று நிற்கக் காணலாம், அழி, படி போன்ற இகர ஈற்று வினையடிகள் 'த்த்' என்ற இறந்த கால இடைநிலையை ஏற்கும். இறந்தகால இடைநிலைகளுள் 'இ'கரமே திராவிட மொழிகள் அனைத்திலும் பரவலாகக் காணப்படுவது. கோடா, தோடா போன்ற மொழிகளில் இது 'ய' கரமாகத் திரியும்.

## இறந்தகாலம் அல்லாதன (Non – past)

திராவிட மொழிகளில் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்ற முப்பிரிவு தோன்றும் முன்னர் இறந்தகாலம் அல்லாதன என்ற கூறுபாடே நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் உணர்த்தியிருக்க வேண்டும். எனவேதான் திராவிட மொழிகளை ஆராய்ந்த டாக்டர் கால்டுவெல் இம்மொழிகளில் இறந்தகாலம், எதிர்காலம் என இரு காலங்களே உள்ளன என்று குறிப்பிடுகிறார். மூலத்திராவிட மொழியில் -ப்ப்-, -ப-, -க்ச்-, -த்த்-, -த்-, -உம்-, -ன- போன்றவை இறந்த காலம் அல்லாதனவற்றின் இடைநிலைகளாக இருந்திருக்க வேண்டும். இத்தகு இடைநிலைகள் சில இடங்களில் எதிர்காலத்தையும், சில இடங்களில் நிகழ் காலத்தையும் உணர்த்தி நிற்கின்றன. நிகழ்காலத்தை இடைநிலைகள் இல்லாமல் கூட்டு வடிவங்களால் (Periphrastic construction) உணர்த்தும் முறையும் இம்மொழிகளில் உள்ளன. கிறு, கின்று, ஆநின்று என்பன தமிழில் நிகழ்காலத்தை உணர்த்தும் தனி வடிவங்களாக உள்ளன. இவை பிற்கால வழக்கு ஆகும்.

மூலத்திராவிட இடைநிலைகளான த்த் என்பதை நடுத்திராவிட மொழிகளிலும், -ப்ப்- என்பதைத் தென்திராவிட மொழிகளிலும் காணலாம். –க்க்- இடைநிலை தமிழ், மலையாளம், தோடா, கோடா, கன்னடம், கொலாமி, பர்ஜி ஆகிய மொழிகள் உள்ளன.

தமிழ் - நடக்குவன்

-த்த்- இடைநிலை தமிழ், கன்னடம், தெலுங்கு போன்ற மொழிகளில் இடம் பெறுகின்றன. 'உம்' இடைநிலை தமிழ், மலையாளம், கோடா, துளு,

குறிப்பு

கொலாமி, பர்ஜி போன்ற மொழிகளில் மிகுதியாக இடம் பெறுகின்றது. குயி மொழியில் -வா-, -ந-, -எசி (esi) போன்ற இடைநிலைகளும் உள்ளன.

மலையாள மொழியில் நிகழ்கால இடைநிலைகளாக உன்னு, குன்னு என்பன உள்ளன. பழைய மலையாளத்தில் 'இன்னு' என்னும் இடைநிலையும் உள்ளது தெலுங்கு மொழியில் 'சு' அல்லத 'து' என்னும் இடைநிலை நிகழ்காலத்தைக் குறிக்கப் பயன்படுகிறது. புதுக்கன்னட மொழியில் நிகழ்காலங்காட்டும் இடைநிலைகளாக –உத்- -உத- மாடுத்த என்ற வடிவங்களும், பழங்கன்னடத்தில் -தப்- என்ற இடைநிலையும் பயன்படுத்தப்படுகின்றன.

baldapen (வாழ்கிறேன்)

திராவிட மொழிகளில் எதிர்காலம் தெளிவற்றதாக உள்ளது. பேச்சு மொழியில் நிகழ்காலத்தையே எதிர்காலமாக வழங்குதலும் உண்டு. ஆர்.ஜி.பந்தர்கர் என்னும் அறிஞர் நிகழ்காலம் என்பது நிலையற்ற நொடிப்பொழுதளவான ஒரு காலம் ஆகையாலும் எதிர்காலத்தின் முந்திய ஒரு பகுதியே நிகழ்வு என்று கூறுமாறு உள்ளது. ஆகையாலும் இவ்வாறு வழங்க வாய்ப்பு ஏற்படுகின்றது என்கிறார்.

தமிழ் மொழியில் வ, ப்ப், ப, உம் போன்றன எதிர்கால வடிவத்தை defective future என்றழைக்கின்றார் கால்டுவெல். இத்தகைய வடிவங்களில் பால்காட்டும் விகுதிகள் இணைக்கப்படுவதில்லை. மலையாள மொழியில் 'உம்' 'அம்' ஆகியன எதிர்கால இடைநிலைகளாக அமைகின்றன. தெலுங்கில் எதிர்கால இடைநிலையான 'உ'கரமே பெருவழக்கில் உள்ளது. எனினும் ஒருமையில் 'உனு' என்னும் வடிவமும், பன்மையில் 'உமு' என்னும் வடிவமும் விகுதிகளாக அமைந்து எதிர்காலத்தை உணர்த்தி நிற்பதைக் காணலாம்.

சேஸ்துனு (ஒருமை)

சேஸ்துமு (பன்மை)

கன்னட மொழியில் 'வ'கரமே எதிர்காலத்தை உணர்த்துகின்றது. தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளின் பேச்சு வழக்கில்

குறிப்பு

எதிர்காலத்தைப் பயன்படுத்துவது மிகக்குறைவு, எதிர் காலத்திற்குப் பதிலாக நிகழ்காலமே பயன்படுத்தப்படுகின்றது.

இறந்தகாலம் அல்லாததைச் சுட்டும் இடைநிலைகளுள் மூலத்திராவிட வடிவங்களாக *ப்ப், -*க்க், -*த்த், *உம், *ந் என்பவற்றைக் குறிப்பிடலாம். இவற்றைத் தவிர மூலத்திராவிட மொழிகளின் இடைநிலையாக *-ஓ என்பதைத் திருத்தியமைக்க முடிகின்றது.

இவற்றுள் -*ப்ப் இடைநிலை தென் திராவிட மொழிகளில் பெருவழக்கிலுள்ளது. கோடா மொழியில் வ என்னும் இடைநிலையும், தோடாவில் p என்னும் இடைநிலையும் இறந்த காலம் அல்லாதவற்றை உணர்த்துதலுண்டு. கொடகு மொழியில் இவ்விரு இடை நிலைகளுமே காணப்படுகின்றன. வட திராவிட மொழிகளுள் பிராகுயி மொழியில் மட்டும் ப் இடைநிலை காணப்படுகின்றது. வட திராவிட மொழியிலுள்ள ஒ என்னும் இடைநிலையை வ கர இடைநிலையின் வளர்ச்சி என்பர்.

மூலத் திராவிட இடைநிலையான *க்க் என்பதன் மாற்ற வடிவங்களைத் தமிழ், மலையாளம், கோடா, தோடா, கொடகு, கன்னடம், கோண்டி, கொலாமி, பர்ஜி போன்ற மொழிகளில் காண முடிகின்றது. *த்த் என்னும் இடைநிலையினைப் பழந் தமிழ், கன்னடம், தெலுங்கு, கோண்டி, குயி, கொலாமி, நாயக்கி, *பர்ஜி, கடபா ஆகிய மொழிகளில் காணலாம். அவ்வாறே um விகுதியினைத் தமிழ், மலையாளம், கொடகு, கன்னடம், துளு, தெலுங்கு, கொலாமி, பர்ஜி ஆகிய மொழிகளில் காண முடிகின்றது. ந எனும் இடைநிலையினைத் துளு மொழியில் காணலாம். கோண்டி, கோயா ஆகிய மொழிகளிலும் இது சற்று திரிந்து வழங்கக் காணலாம்.

நிகழ்கால வினையடைக்கெனத் (Present adverb) தனி உருபுகள் தமிழ், மலையாளம், துளு போன்ற மொழிகளில் இல்லாத போதிலும் கோடா போன்ற மொழிகளில் இவற்றைக் காணலாம். தெலுங்கில் cun என்னும் உருபு உள்ளது. இது கொலாமியில் san எனத் திரியும் இவற்றை மூலத் திராவிட நிலைக்கு உரியனவாக வகுப்பது அரிதாக உள்ளது.

## இரு மதிப்பெண் வினாக்கள்

1. தமிழில் வழங்கும் இறந்த கால இடைநிலைகளைக் குறிப்பிடுக.
   -த்த், - த், -ந்த், -ண்ட், -இன், -இ

குறிப்பு

2. காலம் எவ்வாறு பகுத்துணரப்பட்டது?

   இறந்த காலம், இறப்பல்லாக் காலம்

3. திராவிட மொழிகளில் பரவலாகக் காணப்படும் இறந்த கால இடைநிலை எது?

- இ

4. பேச்சில் நிகழ்வு, எதிர் காலங்களுக்கு ஒரே வடிவத்தைக் கையாளும் மொழிகள் எவை?

   தெலுங்கு, கன்னடம்

5. இறப்பல்லாக் காலத்திற்குரிய மூலத் திராவிட இடைநிலைகளை விளக்குக.

   -க்க், - த்த், - ப்ப், உம், ந்

### குறுவினா

6. திராவிட மொழிகளில் இறந்த காலம் என்னும் வரையறையை விளக்குக.

   இறந்த காலம் என்னும் தலைப்பில் அடங்கிய செய்திகள்

7. திராவிட மொழிகளில் இறப்பல்லாக் காலம் என்பதனை விளக்குக.

   இறப்பல்லாக் காலம் என்னும் தலைப்பிலான செய்திகள்

### பெருவினா

8. வினைச் சொற்கள் காலங்காட்டும் முறை குறித்து விரித்துரைக்க.

   வினைச் சொற்கள் காலங்காட்டும் முறை என்னும் தலைப்பில் அடங்கியுள்ள செய்திகள்

## கூறு 12 : எச்சங்களும் முற்றுகளும்

### எச்சங்களும் முற்றுக்களும்

திராவிட மொழிகளின் வினை வடிவங்கள் முற்றுக்கள் என்றும், எச்சங்கள் என்றும் இரு கூறுபடுத்தப்படுகின்றன. முற்றுக்களில் அடிச்சொல், கால இடை நிலைகள், பால்காட்டும் விகுதிகள் ஆகியன இணைந்து நிற்கும். எச்சங்கள் பாலறிகிளவிகளைப் பெறாமலே

நிற்கின்றன. எச்ச வடிவங்களைப் பெயரெச்சங்கள் என்றும், வினையெச்சங்கள் என்றும் இரு கூறுப்படுத்துவர். இரண்டுமே வினைச் சொற்கள் எனினும் பெயரைக் கொண்டு முடியும் வினைச் சொற்கள் பெயரெச்சம் என்றும், வினை முற்றுக்களைக் கொண்டு முடியும் வினைச் சொற்கள் வினையெச்சம் என்றும் அழைக்கப்படுகின்றன.

## பெயரெச்சங்கள்

நாயக்கி தவிர்ந்த ஏனைய திராவிட மொழிகளில் பெயரெச்ச வடிவங்கள் தெளிவாக உள்ளன. ஐரோப்பிய மொழிகளில் உள்ள who, which, where, what போன்ற இணைப்புப் பெயர்களின் பணியினைத் திராவிட மொழிகளில் பெயரெச்ச வடிவங்களே செய்கின்றன.

எ.கா. I saw the man who came,

வந்த மனிதனைக் கண்டேன்

இவ்விரு தொடர்களில், ஆங்கில மொழித் தொடரில் who என்ற இணைப்புப் பெயர் இடம் பெறுகின்றது. ஆனால் தமிழில் ‘வந்த’ என்ற பெயரெச்சமே இணைப்பு இடப் பெயரின் பொருளை உணர்த்தி விடுகின்றது. பெயரெச்ச வடிவங்கள் அவற்றையடுத்து வரும் பெயர்கள் காட்டும் எண், திணை, பால் ஆகியவற்றிற்கேற்ப மாறுவதில்லை. தொல்காப்பியர் பெயரெச்சங்களைப் பெயரெஞ்சு கிளவி என்று அழைக்கின்றார். தமிழில் பெயரெச்சங்கள் இறப்பு, நிகழ்வு, எதிர்வு ஆகிய மூன்று காலங்களையும் காட்டி நிற்கும்.

தொல்காப்பியர் ‘செய்த’ என்னும் இறந்த காலப் பெயரெச்ச வடிவத்தையும் ‘செய்யும்’ என்னும் நிகழ்கால எதிர்கால வடிவத்தையும் மட்டுமே குறிப்பிட்ட போதிலும் இடைக்கால இலக்கியங்களிலும் கல்வெட்டுக்களிலும் செய்கின்ற, செய்யாநின்ற என்பன போன்ற நிகழ்கால பெயரெச்ச வடிவங்களையும் காண்கிறோம். விரசோழிய ஆசிரியர் செய்கிற என்ற வடிவத்தையும் குறிப்பிடுகின்றார். எதிர்மறைப் பெயரெச்சங்களாக செய்யாத, செய்யாமலிருந்த, செய்யாமலிருக்கும் போன்ற வடிவங்கள் உள்ளன. தற்காலத் தமிழில் செய்யப்பட்ட, செய்யப்படுகின்ற, செய்யப்படும் போன்ற வடிவங்கள் உடன்பாட்டு பெயரெச்சங்களாகக் காணப்படுகின்றன.

மலையாளம், கொலாமி போன்ற மொழிகளிலும் பெயரெச்சங்கள் மூன்று காலங்களையும் காட்டுகின்றன. குருக், மால்டோ போன்ற மொழிகளிலும் நிகழ்கால, இறந்தகால இடைநிலைகளைப் பெயரெச்ச வடிவங்கள் ஏற்கின்றன. கன்னடம், தமிழ், மலையாளம் தெலுங்கு, கொலாமி போன்ற மொழிகளில் கால இடைநிலைகளோடு 'அ'கர விகுதி இணைந்து பெயரெச்ச வடிவங்கள் அமைகின்றன.

| | |
|---|---|
| கன்னடம் | maRida |
| தமிழ் | செய்த |
| மலையாளம் | செய்யுன்ன |
| தெலுங்கு | சேசின |

கோண்டா, குயி, குவி, துளு போன்ற மொழிகளில் 'இ'கர விகுதி இணைந்து பெயரெச்ச வடிவங்கள் அமைகின்றன.

| | | | |
|---|---|---|---|
| எ.கா. | கோண்டா | - | aini |
| | குயி | - | nogni |
| | குவி | - | tupi |
| | துளு | - | tuti |

கொடகு மொழியில் 'உ' என்னும் விகுதி காணப்படுகிறது, 'உகர' விகுதி தமிழில் மட்டுமின்றி குருக் மொழியிலும் உள்ளது. கோண்டி மொழியில் 'அல்' விகுதியுள்ளது. பர்ஜி மொழியில் -அன் விகுதி பெருவழக்கிலுள்ளது. எதிர்காலத்தைச் சுட்டப் பயன்படும் 'உம்' விகுதியைப் பெயரெச்ச விகுதியாக மூலத் திராவிட நிலைக்குரியதாகக் கொள்ளலாம்

## வினையெச்சங்கள்

நன்னூலார் வினையெச்சங்கள் தொழிலையும் காலத்தையும் காட்டி, பால் காட்டாது வினை எஞ்சி நிற்கும் என்று விதிவகுத்துள்ளார். வினையெச்சத்தை விளக்காத போதிலும் தொல்காப்பியர் ஒன்பது வகை வினையெச்ச வாயப்பாடுகளைக் குறிப்பிடுகின்றார்.

“செய்து, செய்யூ, செய்பு, செய்தெனச்
செய்யியர், செய்யிய, செயின், செய, செயற்கென

அவ்வகை ஒன்பதும் வினையெஞ்சுகிளவி”

இவற்றைத் தவிர, தொல்காப்பியர் ‘மயங்காமை’ என்பதை வினையெச்சமாக ஆள்வதால் அவர் காலத்தில் ‘செய்யாமை’ என்ற வாய்பாட்டு வடிவமும் இருந்தது என்பது தெளிவு. செய்யாமல் போன்ற வாய்ப்பாட்டு வடிவங்கள் கலித்தொகையில் உள்ளன. இன்றைய தமிழில் செய்வதற்கு, செய்தால் என்ற வாய்ப்பாட்டு வடிவங்களோடு செய்யாவிடின், செய்யாவிட்டால் போன்ற வாய்ப்பாட்டு எதிர்மறை வடிவங்களும் உள்ளன. நன்னூலார் ஆ, வான், பான், பாக்கு என்ற ஈறுகளுடைய வினைடியச்ச வடிவங்களைக் குறிப்பிடுவதோடு வினையெச்ச வாய்ப்பாடுகள் எந்தெந்த காலங்களைக் காட்டி நிற்கும் என்பதையும் தெளிவாக வரையறுத்துள்ளார்.

கோண்டா மொழியில் இறந்தகாலம், இறந்த காலம்-எதிர்காலம் ஆகியவற்றின் இடைநிலைகளை ஏற்று நிற்கும் வினையடிச் சொற்களோடு –a(no) என்ற விகுதியை இணைப்பதால் வினையெச்ச வடிவங்கள் அமைகின்றன.

ki(செய்)

kinano –(செய்த)

பர்ஜி, கடபா, குருக், பிராகுயி, ஆகிய மொழிகளில் வினையடிச் சொற்களோடு ‘இ’கர விகுதியை இணைப்பதால் வினையெச்ச வடிவங்கள் அமைகின்றன. கொலாமி மொழியில் -‘அ’ என்ற விகுதியும், துளு மொழியில் -onudu என்ற விகுதியும், நாயக்கி மொழியில் -c-, -cik, -sik, -cig, -sig போன்ற விகுதிகளும் உள்ளன. குவி மொழியில் நிகழ்கால வினையெச்ச வடிவில் -‘இ’ விகுதியும் இறந்தகால வடிவில் -‘அ’ விகுதியும் உள்ளன. கோடாவில்-r விகுதியும், கோண்டியில் -core, jore போன்ற வடிவங்களும், மால்டோவின் -ஏகர விகுதியும் வினையெச்ச அமைப்பிற்குத் துணை செய்கின்றன.

எதிர்மறை வினையெச்ச வடிவங்கள் தமிழ், மலையாளம், கொடா, கொடகு, கன்னடம், துளு, தெலுங்கு, கொலாமி, பர்ஜி கோண்டா, குயி, மால்டோ ஆகிய மொழிகளில் உள்ளன. இவற்றுள் கொடா, கொடகு, கொலாமி போன்ற மொழிகளில் ‘ஆ’ காரம் எதிர்மறை வினையெச்ச விகுதியாக உள்ளது. மலையாளம், கன்னடம், துளு, போன்ற மொழிகளில்

எகர உருபு உள்ளது. மால்டோ மொழியில் -balo என்ற உருபும், கோண்டா மொழியில் -no என்ற உருபும் உள்ளது.

எச்ச வடிவங்களை உணர்த்தும் பின்னொட்டுக்களுள் மூலத் திராவிட வடிவமாக -*அ, என்பதைக் குறிப்பிடலாம். எச்சங்களின் செயற்பாட்டினை உருபன் நிலையை விட தொடர்களில் வைத்துதான் தெளிவாக விளங்கிக் கொள்ள முடியும். குறிக்கோள், காரணம், பயன் போன்ற பல பொருட்களை இவை தந்து நிற்கும். கன்னடம், கொலாமி, பர்ஜி, கோண்டா, பெங்கோ, பிராகுயி போன்ற மொழிகளில் தொழிற் பெயர் வடிவங்களே எச்சங்களின் பணியினைச் செய்கின்றன.

எச்சங்களை உணர்த்தும் பின்னொட்டான – அகரத்தைத் தமிழ், பழைய மலையாளம், கன்னடம், தெலுங்கு, கோண்டி, குருக் போன்ற மொழிகளில் காண முடிகின்றது.

திராவிட மொழிக் குடும்பத்தின் எல்லாப் பிரிவுகளைச் சார்ந்த மொழிகளிலும் இது வருவதால் இதனை மூலத் திராவிட மொழி நிலைக்குத் திருத்தியமைப்பது எளிது. டாக்டர் கால்டுவெல் எச்ச வடிவங்களின் பின்னொட்டான அகரத்திற்கும், தொழிற் பெயர் விகுதியான அல் என்பதற்கும் தொடர்பு இருப்பதாகக் குறிப்பிடுகின்றார். அதோடு 'அ'கரம் தொன்மையான வடிவம் என்றும் அதன் திரிந்த வடிவமே 'அல்' என்றும் குறிப்பிடுகின்றார். தமிழில் இவையிரண்டின் பயன்பாடு வேறு வேறு என்பதால் இவற்றை ஒன்றாகக் கொள்வது பொருத்தமின்று எனலாம். தெலுங்கு மொழியில் அகரத்திற்குப் பதில் -அன் என்னும் விகுதியைக் காணலாம். இதன் இறுதியிலுள்ள 'ன்'என்னும் ஒலியனைத் தமிழிலுள்ள 'அல்' என்பதன் இறுதியிலுள்ள 'ல்' என்னும் ஒலியின் திரிந்த வடிவாக எல்.வி.இராமசுவாமி ஐயர் கருதுகின்றார்.

### *வினைமுற்றுக்கள் திணை, பால் உணர்த்தும் முறை*

திராவிட மொழிகளின் வினை முற்றுக்கள் திணை, பால், எண் ஆகியவற்றைத் தெளிவாகக் காட்டி நிற்கின்றன, இவற்றை அறிய வினைப்பகுதிகளின் இறுதியில் இணைக்கப்படும் பாலறிகிளவிகளே துணை செய்கின்றன. இத்தகைய அமைப்பு முறைக்கு மலையாள மொழி

மட்டுமே விதிவிலக்கு. எனினும் பழைய மலையாளச் செய்யுட்களில் பாலறிகிளவிகளைக் காணமுடிகின்றது. திராவிட மொழிகளின் வினைமுற்றுக்கள் திணை, பால் உணர்த்தும் முறையை ஆய்ந்த பல அறிஞர்களும் வினைமுற்றுக்கள் திணை, பால் உணர்த்தும் முறை மூலத்திராவிட மொழியில் இல்லை என்பர்.

தமிழில் காணப்படும் பழைய வினை வடிவங்களான செய்கு, செய்கும் என்பவற்றிலும் பாலறிகிளவிகள் இடம் பெறவில்லை. இவ்வாறே கன்னட மொழியிலும் 'கெய்கும்' (geygum) என்ற பொது வினை வடிவம் பால்வேறுபாட்டைக் காட்டாமல் எல்லாப் பாலுக்கும் பொதுவாக வருவதைக் காணலாம். திராவிட மொழிகளின் வினை முற்றுக்களிலும் படர்க்கை வினை முற்றுக்கள் மட்டுமே பால் பாகுபாட்டை உணர்த்துகின்றன. எனவே திணை, பால் உணர்த்தும் முறை சமுதாய மாற்றத்திற்கேற்ப பிற்காலத்தில் ஏற்பட்ட வளர்ச்சி எனலாம். பாலறிகிளவிகளை வினையடிச் சொற்களோடு இணைத்து வினை முற்றுக்கள் அமைக்கும் மரபு மங்கோலிய மொழிகளிலும் உள்ளதாகக் கால்டுவெல் குறிப்பிடுகின்றார்.

## பாலறிகிளவிகள் (Pronominal terminations)

திராவிட மொழிகளில் பால் பாகுப்பாட்டினை உணர்த்த, பாலறிகிளவிகள் பயன்படுத்தப்படுகின்றன. இவை திராவிட மொழிகளின் மூவிடப் பெயர்களோடும், சுட்டுப் பெயர்களோடும் தொடர்புடையன. எனவேதான் டாக்டர் கால்டுவெல் போன்றோர் திராவிட மொழிகளில் பாலறிகிளவிகள் முற்காலத்தில் இல்லை என்றும் பின்னர் மூவிடப் பெயர்களின் குறுகிய வடிவங்கள் வினையடிச் சொற்களோடு இணைக்கப்பட்டன என்றும் கூறுகின்றனர். பின் வந்த அறிஞர்கள் மூவிடப்பெயர்கள் நாளடைவில் திரிந்து பாலறிகிளவிகளாக மாறின என்று கொள்வதைவிடப் பழங்காலத்திலிருந்தே வினை முற்றுக்களின் பின்னர் மூவிடப் பெயர்களின் தன்மையைப் பெற்றுள்ள பால்காட்டும் விகுதிகள் இணைக்கப்படும் மரபு இருந்து வருகின்றது என்று கொள்வதே பொருந்தும் என்பர். இப்பாலறிகிளவிகளை வினைமுற்றுக்களில் மட்டுமின்றி சில பெயர் வடிவங்களிலும் காண முடிகின்றது.

எ.கா. மகன் - அன் (ஆண்பால், ஒருமை, உயர்திணை)

மகள் - அள் (பெண்பால், ஒருமை, உணர்தினை)

திராவிட மொழிகளில் தற்கால மலையாள மொழியில் மட்டும் பாலறிகிளவிகள் இல்லை. எனவெ இம்மொழியின் வினைமுற்றுக்கள் திணை, பால் பாகுப்பாட்டினை உணர்த்துவதில்லை. வினை முற்றுக்களின் முன்னா் வரும் பெயர்சொற்களைக் (எழுவாய்) கொண்டுதான் திணை, பால் பாகுபாட்டை உணர முடிகின்றது.

எ.கா. அவன் வந்நு

அவள் வந்நு

அது வந்நு

இம்மொழியின் வினைமுற்றுக்களில் பாலறிகிளவிகள் இன்மையால் புற அமைப்பியல் வினைமுற்றுக்களும், எச்சங்களும் ஒன்றுபோலக் காணப்படுகின்றன. மலையாள மொழியைத் தவிர பழந்தமிழிலும், தெலுங்கிலும், கன்னடத்திலும் பாலறிகிளவிகள் இல்லாத பல வினை முற்று வடிவங்கள் உள்ளன.

எ.கா. தமிழ் செய்யும், செய்கும்

தெலுங்கு சாலு(ம்), சாகு(ம்)

கன்னடம் beku(m), Sabu(m)

இவ்வடிவங்கள் மூலத்திராவிட மொழியில் பாலறிகிளவிகள் இல்லை என்னும் டாக்டர் கால்டுவெல்லின் கூற்றை அரண்செய்வன போலத் தோன்றுகின்றன. எனினும் தொல்காப்பியர் காலத்தில் உயர் திணைப் பலர்பால் வினைமுற்றுக்கள் பலவற்றிலும் பாலறிகிளவிகள் இடம் பெற்றன என்பதற்கு ‘என்மனார் புலவா்’ போன்ற அவர் கையாண்டுள்ள தொடர்களே சான்று பகரும். எனவே பழங்காலத்து வினை முற்று வடிவங்கள் பாலறிகிளவிகளைப் பெற்றும், பெறாமலும் வந்தன என்பது தெளிவு.

பாலறிகிளவிகளை ஆராய்ந்த டாக்டர் கால்டுவெல், மூலத்திராவிட மொழியில் பாலறிகிளவிகள் இல்லை என்றும், பாலறிகிளவிகளைப் பொறுத்த வரையில் மலையாள மொழி மூலத்திராவிட மொழியினியல்பைக் காட்டுகின்றது என்றும் கூறுகின்றார். எல்.வி.இராமசுவாமி ஐயர் போன்றோர் இக்கருத்தை மறுத்து மலையாள

மொழியில் பாலறி கிளவிகள் இருந்ததாகவும் நாளடைவில் அவை கெட்டுவிட்டதாகவும் நிறுவுகின்றார்.

1) மலையாள மொழியின் பழைய இலக்கியமான இராமசரிதத்தில் அதிகமான வினைமுற்றுக்கள் பாலறிகிளவிகளைப் பெற்றே அமைகின்றன. படிப்படியாகப் பாலறிகிளவிகள் இலக்கிய வழக்கில் அழிந்து வந்ததற்குக் காலந்தோறும் எழுந்த மலையாள மொழியின் இலக்கியங்களே சான்று.

2) கி.பி.14ஆம் நூற்றாண்டில் எழுந்த லீலாதிலகம் என்னும் இலக்கண நூல் பாலறிகிளவிகளைக் குறிப்பிடுகின்றது. லீலாதிலகத்தில் ‘வந்தான்’ ‘இருந்தான்’ போன்ற வினைமுற்றுக்கள் வட்டார வழக்குகளாகச் சுட்டப்படுவதால் பேச்சு வழக்கிலும் பாலறி கிளவிகள் இருந்தமை தெளிவு பெறுகின்றன.

3) லக்காடி (Lakkadiv) அமிண்டி (Admindiv) தீவிலுள்ள மலையாள மொழியின் வட்டார வழக்குகளில் இன்றும் பாலறிகிளவிகள் இடம் பெறுவதைக் காணமுடிகின்றது.

4) மலையாள மொழியின் பழைய கல்வெட்டுக்களிலும் பாலறிகிளவிகள் பயின்று வருவதைக் காணலாம்.

5) கி.பி 10-ஆம் நூற்றாண்டிற்கு முன்னர் மலையாள மொழி தமிழின் ஒரு வட்டார வழக்காக இருந்ததே தவிர தனிமொழியாக உருப்பெறவில்லை. எனவே மலையாள மொழி மூலத்திராவிட மொழயினியல்பைக் காட்டுகின்றது என்று கூறுவது அவ்வளவு ஏற்புடைய கூற்றாக இல்லை.

6) மலையாளம் தவிர்த்த அனைத்து மொழிகளிலும் பாலறி கிளவிகள் இடம் பெறுகின்றன. எனவே மூலத்திராவிட மொழியிலும் பாலறிகிளவிகள் இருந்தன என்றும், மலையாள மொழியில் மிகப் பிற்காலத்தில் இவை கெட்டன என்றுங் கொள்ளலாம்.

## ஆண்பால் ஒருமை விகுதி

தென் திராவிட மொழிகளில் ஆண்பால் ஒருமை விகுதிகளாக ‘ஆன்’ என்ற வடிவமும் அதன் மாற்று வடிவமான ‘அன்’ என்பதும் உள்ளன. நடுத்திராவிட மொழிகளில் *-anr என்னும் விகுதி உள்ளது. தென் திராவிட மொழிகளிலுள்ள ஆண்பால்ஒருமை படர்க்கை மூவிடப் பெயர்களுள் avanr என்பதை மூலத்திராவிட எழுவாய் வடிவமாகவும்

அவன் என்பதை வேற்றுமை ஏற்கும் வடிவமாகவும் கொண்டு 'அவன்' என்னும் வேற்றுமை ஏற்கும் வடிவமே பின்னர் தென் திராவிட மொழிகளில் எழுவாய் வடிவாகப் பயன்படுத்தப்படுகின்றது என்று பரோ, பட்டாச்சாரியா ஆகியோர் கருதுகின்றனர்.

## பெண்பால் ஒருமை விகுதி

குருக், மால்டோ போன்ற மொழிகளிலும், நடுத்திராவிட மொழிகளிலும் பெண்பால் என்னும் பாகுபாடு தெளிவாக இல்லை. தென்திராவிட மொழிகளில் 'ஆள்' 'அள்' என்னும் விகுதிகள் பெண்பால் ஒருமை விகுதிகளாக உள்ளன.

எ.கா. வந்தாள்

வந்தான்

## பலர்பால் விகுதி

பெரும்பாலான மொழிகளில் பலர்பால் விகுதியாக 'ஆர்' விகுதி பயன்படுத்தப்படுகின்றது. தெலுங்கு தவிர்த்த நடுத்திராவிட மொழிகளில் 'ஆர்' விகுதி ஆண்பால் பன்மையினையும் பலவின்பால் விகுதிகள் பெண்பால் பன்மையினையும் உணர்த்துவதைக் காணலாம். 'ஆர்' விகுதியைப் பலர்பால் விகுதியாகப் பயன்படுத்துவது மிகப் பிற்காலவழக்கு என்றும் மூலத்திராவிட மொழியில் இது ஆண்பால் பன்மை விகுதியாகத்தான் இருந்திருக்க வேண்டுமென்றும் பி.எச்..கிருஷ்ணமூர்த்தி கருதுகின்றார். தமிழில் 'ஆர்' விகுதியோடு 'ஆர்கள்' என்னும் இரட்டைப் பன்மை வடிவமும் 'ஆங்கள்' என்னும் வடிவமும் பெருவழக்கில் உள்ளன.

## ஒன்றன்பால் விகுதி

தென்திராவிட மொழிகளில் ஒன்றன்பால் விகுதியாக 'அது' என்பது காணப்படுகின்றது. இவ்விகுதி தெலுங்கு, கோண்டா, பெங்கோ, கொலாமி, நாயக்கி, குருக், மால்டோ, போன்ற மொழிகளிலும் உள்ளது. ஏனைய மொழிகளில் 'எ' 'அ' போன்ற விகுதிகள் உள்ளன.

## பலவின்பால் விகுதிகள்

'அ' என்னும் பலவின்பால் விகுதி பழந்தமிழ், மலையாளம், துளு ஆகிய மொழிகளில் உள்ளன. தற்காலத் தமிழில் ஒன்றன் பால் விகுதியான 'அது' பலவின் பால் விகுதியாகவும் பயன்படுத்தப்படுகின்றது. கன்னட மொழியில் 'அவ்' என்ற விகுதி உள்ளது.

எண் உணர்த்தும் முறை

## தன்மை ஒருமை விகுதிகள்

திராவிட மொழிகள் தன்மை, பன்மை, ஆகிய மூவிடப் பெயர்களில் எண் வேறுபாடு தெளிவாக உள்ளது. தமிழில் என், ஏன், என்பன தன்மை ஒருமை விகுதிகளாக உள்ளன. துளு மொழியில் என் என்னும் விகுதி 'நு' என்று மாறுகின்றது. கோண்டா குயி, போன்ற மொழிகளில் 'என்' என்பதன் இறுதி மூக்கொலி கெட்டு விடுகின்றது. பேச்சுத் தமிழிலும் 'என்' என்பதன் இறுதி 'ன' கரம் கெட்டு அதன் முன்னர் இடம் பெறும் எகர உயிர், மூக்கொலிச் சாயல் பெறுவதைக் காணலாம். பழந்தமிழில் அன் சாரியையை அடுத்து என் விகுதி இடம் பெறுகின்றது. அன் விகுதி சங்ககாலத் தமிழிலும் உள்ளது. எதிர்கால வினைமுற்றில் அல் விகுதியும் இடம் பெறுவதுண்டு.

## வெளிப்பாட்டுத்தன்மைப் பன்மை விகுதிகள்

மூலத்திராவிட விகுதியான -*vm என்பதன் மாற்று வடிவங்கள் எல்லாத் திராவிட மொழிகளிலும் இடம் பெறுகின்றன. பிராகுயி மொழியில் மட்டும் 'ம'கரத்திற்குப் பதிலாக 'ன'கரம் காணப்படுகின்றது. தமிழில் ஓம் என்னும் விகுதி உள்ளது. தன்மைப் பன்மை முவிடப் பெயர் விகுதியாக 'ஆம்' (யாம்) என்னும் விகுதி உள்ளது. திருக்குறளில் 15 இடங்களில் இவ்வடிவம் இடம் பெறுவதாக கே.வி.சுப்பையா குறிப்பிடுகின்றார்.

## உளப்பாட்டுத் தன்மை பன்மை விகுதிகள்

கோடா, தோடா, தெலுங்கு, கோண்டி, கோண்டா, பெங்கோ, குயி, குவி, பர்ஜி, குருக், மால்டோ போன்ற மொழிகளில் உளப்பாட்டுத்தன்மைப் பன்மைக்கும் தனி விகுதிகள் உள்ளன. தெலுங்கு மொழியில் எதிர்கால

வினை முற்றுக்களில் மட்டும் உளப்பாட்டுத் தன்மைப் பன்மை விகுதிகள் இடம் பெறும். தொல்காப்பிய உரையாசிரியர்களான சேனாவரையர், நச்சினார்க்கினியார் போன்றோர் அம், ஆம், என்பவற்றை உளப்பாட்டுத் தன்மைப் பன்மை வடிவங்களாகக் குறிப்பிடுகின்றனர். தெலுங்கு மொழியில் -ஆமு (amu) என்ற விகுதியும், கோண்டா மொழியில் -ta என்ற விகுதியும் பர்ஜி மொழியில் - அர் என்ற விகுதியும் உளப்பாட்டுத் தன்மைப் பன்மை விகுதிகளாக உள்ளன.

## முன்னிலை ஒருமை விகுதிகள்

-ay, -i என்பவற்றை முன்னிலை ஒருமையின் மூலத்திராவிட வடிவங்களாகக் கொள்வர். இவற்றின் மாற்று வடிவங்கள் தெலுங்கு, கொலாமி, பர்ஜி, கடபா, பிராகுயி, தவிர்ந்த ஏனைய மொழிகளில் உள்ளன. பர்ஜி மொழியில் -‘த’ விகுதியும், கடபா மொழியில் -‘ட’ விகுதியும் உள்ளன. தெலுங்கு மொழியில் -‘வு’ – ‘வ’ என்னும் விகுதிகள் காணப்படுகின்றன. தமிழில் ‘ஆய்’ ‘ஐ’ என்னும் விகுதிகள் உள்ளன.

வந்தாய்

வந்தனை

## முன்னிலைப் பன்மை விகுதிகள்

திராவிட மொழிகளில் முன்னிலைப் பன்மை விகுதிகளாக -ஈர் என்னும் விகுதியும் அதன் மாற்று வடிவங்களும் இடம் பெறுகின்றன. கோண்டி மொழியில் மட்டும் it என்னும் விகுதி உள்ளது. தமிழில் ‘ஈர்’ என்னும் விகுதியும், அதன் இரட்டைப் பன்மை வடிவங்களான ஈர்கள், ஈங்க(ள்), இங்(கள்) என்பனவும் உள்ளன.

## இருமதிப்பெண் வினாக்கள்

1. பொதுவாகத் திராவிட மொழிகளில் பெயரெச்சத்தைக் குறிக்க வரும் விகுதி எது?

   -அ

2. பாலறி கிளவிகள் இல்லாத மொழி எது?

குறிப்பு

மலையாளம்

3. தமிழில் பயின்று வரும் பால் அறி கிளவிகள் எவை?
அன், ஆன்- ஆண்பால்
அள் , ஆள் - பெண்பால்

4. தெலுங்கில் பாலறி கிளவி இல்லாத வினைமுற்றிற்குச் சான்று தருக.
சாலும், சாகும்

### குறுவினா

5. திராவிட மொழிகளில் பெயரெச்சம் குறித்து எழுதுக.
பெயரெச்சம் என்னும் தலைப்பில் விளக்கப்பெற்ற செய்திகள்

6. திராவிட மொழிகளில் வினையெச்சம் குறித்து எழுதுக.
வினையெச்சம் என்னும் தலைப்பில் விளக்கப்பெற்ற செய்திகள்

### பெருவினா

7. திராவிட மொழிகளில் பாலறி கிளவிகள் வழங்குமுறையை விரிவாக எழுதுக
பாலறி கிளவி என்பது முதல் -- இங்கள் என்பது முடிய உள்ள செய்திகள்

8. திராவிட மொழிகளில் எச்சங்கள் குறித்து எழுதுக.
பெயரெச்சம், வினையெச்சம் பற்றிய செய்திகள்

## கூறு 13

## வினைப்பெயர்கள் - வினைப்பொருட்கள்

### வினைப்பெயர்

வினையடியாகப் பிறக்கும் பல்வேறு பெயர்களை வினைப்பெயர்கள் எனலாம். ஒரு செயலைப் பற்றிக்கூறும் சொற்களை வினைச் சொற்கள் என்பர். செயலை இதுவெனக் குறித்து நிற்கும் பெயர்களைத் தொழிற் பெயர்கள் என்பர். அத்தொழில் செய்பவனை கருத்தாவை உணர்த்தும் சொற்களை வினையாலணையும் பெயர்கள் என்பர்.

## வினையாலணையும் பெயர்கள்

குறிப்பு

பெயரெச்சங்களோடு, வினையைச் செய்பவனை உணர்த்தும் பாலீறுகளை இணைக்கும்போது வினையாலணையும் பெயர்கள் கிடைக்கின்றன. பெயரிலிருந்து வினையாலணையும் பெயரை வேறுபடுத்திக் காட்டும் முறை தமிழ், மலையாளம், கோடா, கன்னடம், துளு, தெலுங்கு, கொலாமி, பர்ஜி, கோண்டி, கோண்டா ஆகிய மொழிகளில் உள்ளன. வினையடியாகப் பிறந்தபோதிலும் வினையாலணையும் பெயர்கள் பெயர்ச் சொற்களுக்குரிய தன்மைகளையும், வினைச் சொற்களுக்குரிய தன்மைகளையும் ஒருங்கே பெறுவன. இவை வினைச் சொற்களைப் போலக் காலத்தைக் காட்டியும், பெயர்ச் சொற்களைப் போல வேற்றுமை ஏற்றும் நிற்பன.

தமிழ், மலையாளம், கன்னடம், துளு, போன்ற மொழிகளில் பெயரெச்ச வடிவங்களோடு, படர்க்கை மூவிடப் பெயர்களைள் இணைப்பதால் வினையாலணையும் பெயர்கள் பிறக்கின்றன.

தமிழ் - செய்பவன்

மலையாளம் - வருந்நவன்

கன்னடம் - Maruvavanu

துளு - Malpunaye

வினையாலணையும் பெயர்களின் எதிர்மறை வடிவங்கள் தமிழ், மலையாளம், கோடா, கன்னடம், தெலுங்கு, பர்ஜி, மால்டோ ஆகிய மொழிகளில் உள்ளன. எதிர்மறை பெயரெச்சங்களோடு வினையாலணையும் பெயர்களுக்குரிய விகுதிகளை இணைக்கும் போது வினையாலணையும் பெயர்களின் எதிர்மறை வடிவங்கள் அமைகின்றன.

செய்யாதவன்

பழந்தமிழில் -ஆன், -ஆள், -ஆர் போன்றவற்றைச் செய்யாத -, செய் போன்ற வினையடிகளோடு இணைத்து எதிர்மறை வினையாலணையும் பெயர்களை அமைக்கும் முறை உள்ளது.

செய்யாதான், அறியான்

குறிப்பு

கோண்டி மொழியில் -வால் என்னும் விகுதியும் கன்னடத்தில் -அவ் என்னும் விகுதியும் வினையாலணையும் பெயரை உருவாக்குகின்றன

கோண்டி - அட்வால் (அமைப்போன்)

கன்னடம் - உடிதவ (ஒழத்தவன்)

தொழிற் பெயர்கள்

திராவிட மொழிகளில் வினையடிகளோடு தொழிற்பெயர் விகுதிகள் இணைக்கப்படும் போது தொழிற் பெயர்கள் அமைகின்றன. தொழிலின் நிகழ்ச்சியை வினைச் சொற்கள் உணர்த்த. இன்ன ரொழில் என்பதைத் தொழிற் பெயர்கள் காட்டி நிற்கும். பெயர்ச் சொற்களைப் போலத் தொழிற் பெயர்கள் வேற்றுமை ஏற்கின்றன. தொழிற்பெயர்களை,

(1) காலம் உணர்த்தாத தொழிற் பெயர்கள்,

(2) காலம் உணர்த்தும் தொழிற் பெயர்கள்

ஏன்று இரு கூறுப்படுத்துவர்.

வினைப்பகுதிகளோடு –தல், -அல், -அம், -கை, -வை, -கு, -பு, -வு, -சி, -து, -உள் போன்ற விகுதிகளை இணைப்பதால் தமிழில் காலம் உணர்த்தாத தொழிற் பெயர்கள் அமையும்.

எ.கா. ஒடித்தல், ஆடல், செய்கை, நாட்டம், திரிபு, பயில்வு, முயற்சி

வினைப்பகுதியோடு கால இடைநிலையை இணைத்து அதன் பின்னர் -மை விகுதியை அல்லது –து விகுதியை இணைக்கும் பொது காலங்காட்டும் தொழிற் பெயர்கள் அமையும்.

நடந்தது, நடந்தமை

தொழிற்பெயர் விகுதிகளில் ‘கை’ விகுதியும், ‘தல்’ விகுதியும் தமிழில் அதிகமாகப் பயின்று வருகின்றன.

தமிழைப் போலவே மலையாளம், கன்னடம், தெலுங்கு, கொலாமி, நாயக்கி, கடபா, கோண்டி, கோண்டா, குயி, குவி, குருக், மால்டோ, பிராகுயி ஆகிய மொழிகளிலும் தொழிற் பெயர்கள் பயின்று வருகின்றன. இவற்றுள் -uxa என்னும் விகுதி மலையாளத்திலும், -al-, -ali என்பன கன்னடத்திலும், -atanu, -atamu என்பன தெலுங்கு மொழியிலும் - ud என்பது கொலாமி மொழியிலும் -enmur எனபது நாயக்கி மொழியிலும் -al என்பது கடபா மொழியிலும், ana என்பது கோண்டி மொழியிலுமம; -ten, -den

குறிப்பு

என்பன கோண்டா மொழியிலும் -a, ondi என்பன குயி மொழியிலும், -ali, -ayi என்பன குவி மொழியிலும், -na என்பது குருக் மொழியிலும் -no. – ati என்பன மால்டோ மொழியிலும், -ing என்பது பிராகுயி மொழியிலும் உள்ளன.

| | | |
|---|---|---|
| மலையாளம் | - | ceyyuxa |
| கன்னடம் | - | beral (u) |
| தெலுங்கு | - | ceyatamu |
| கொலாமி | - | siud |
| நாயக்கி | - | kahenmur |
| கடபா | - | kasal |
| கோண்டி | - | tindana |
| கோண்டா | - | Parden |

திராவிட மொழிகளில் பல இலக்கியங்களில் ஏராளமான தொழிற் பெயர்கள் உள்ளன. வினைமுற்றுகளும், எச்சங்களும் கூடத் தொழிற் பெயர்களிலிருந்து தோன்றியிருக்க வேண்டும் தொழிற் பெயர்களின் எதிர்மறை வடிவங்கள் மலையாளம், பழைய தெலுங்கு, குவி, குயி, போன்ற மொழிகளில் உள்ளன. கோண்டி மொழியில் - மார் என்னும் தொழிற் பெயர் விகுதியும் உள்ளது.

## முதனிலைத் தொழிற்பெயர்

சில வினையடிகள் ஏவல் வினைகளாகவும், எத்தகைய திரிபும் பெறாமல் பெயர்களாகவும் திராவிட மொழிகளில் வழங்குகின்றன. இதில் வினைப்பகுதி மாறாமல் பெயராகவும் நிற்கும்.

| | | |
|---|---|---|
| உதை | - | ஏவல், வினையடி |
| ஓர் உதை | - | பெயர் |
| கட்டு | - | ஏவல், வினையடி |
| ஒரு கட்டு | - | பெயர் |
| அடி | - | ஏவல், வினையடி |
| ஓர் அடி | - | பெயர் |
| தல்லு (மலையாளம்) | - | ஏவல், வினையடி |

ஒரு தல்லு - பெயர்

குறிப்பு

## முதனிலை திரிந்த தொழிற்பெயர்

வினைப்பகுதியின் முதனிலை திரிந்து பெயராக வழங்குதல். வினைப்பகுதியின் முதுலுயிர் நீண்டு பெயர்கள் அமைவதைக் காணலாம்.

கெடு - கேடு

பெறு - பேறு

சுடு - சூடு

## விகுதி குன்றிய தொழிற்பெயர்

படுதல் - பாடு

நடத்தல் - நடை

நிற்றல் -நிலை

## விகுதி குன்றாத தொழிற்பெயர்

கெடுதல்

ஆடுதல்

## வினையடியாகப் பிறக்கும் பெயர்கள்

திராவிட மொழிகளில் வினையடிகளோடு சில விகுதிகள் இணைவதாலும், வினைப் பகுதிகளில் சில மாற்றங்கள் ஏற்படுவதாலும் பல பெயர்ச்சொற்கள் தோன்றுகின்றன. இவற்றை வினையடியாகப் பிறக்கும் பெயர்கள் என்கின்றார் டாக்டர் கால்டுவெல்.

தொழிற்பெயர்களே அல்லாமல் தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளில் வினைப்பகுதியின் முதலுயிர் நீள்வதோடு இறுதி ஒலிப்பு ஒலி ஒலிப்பில் ஒலியாகவும் மாறியும் பெயர்ச் சொற்கள் அமைவதைக் காணலாம். சில வினையடிச் சொற்களில் விகுதிகள் இணையாமல், ஈற்றிலுள்ள வல்லொலி இரட்டிப்பதால் அவைகள் பெயர்களாக மாறுவதுண்டு.

எழுது - எழுத்து

பாடு - பாட்டு

டாக்டர் கால்டுவெல் தெலுங்கு மொழியில் இவ்வாறு வினையடியின் ஈற்றுமெய் இரட்டித்துப் பெயராகும் இயல்பு இல்லையெனினும் வினையடியின் இறுதி ஒலிப்பு ஒலியை ஒலிப்பில் ஒலியாக மாற்றுவதால் இதற்கு இணையான பெயர்கள் அமைகின்றன என்கிறார். வினையடியின் முதலுயிர் குறுகுவதாலும் பெயர்ச் சொற்கள் அமைவதுண்டு.

காண் > கண்

வினையடிகளோடு –மை விகுதியை இணைப்பதால் பெரும்பாலான பண்புப் பெயர்கள் தோன்றுகின்றன.

அரு - அருமை

வினையடியோடு –அம் விகுதியை இணைப்பதாலும் பல பெயர்ச் சொற்கள் அமைகின்றன. இத்தகைய பெயர்ச் சொற்களை அமைக்கும்போது வினைப்குதியின் இறுதியில் மூக்கொலியிருப்பின் அது வல்லொலியாக மாறும்.

தூங்கு - தூக்கம்

திருந்து - திருத்தம்

விரும்பு - விருப்பம்

தேங்கு - தேக்கம்

–கை, -தி, -பு, -சி, போன்ற விகுதிகள் வினைப்பகுதிகளோடு இணைவதாலும் திராவிட மொழிகளில் ஏராளமான பெயர்ச் சொற்கள் தோன்றுகின்றன.

செய்கை,

கெடுதி,

தொடர்பு,

புகழ்ச்சி

தமிழ், மலையாளம், போன்ற மொழிகளில் கண், மானம், பாடு போன்ற சொல்லுருபுகளை வினையடிகளோடு இணைப்பதாலும் பல பெயர்கள் அமைகின்றன.

இடுக்கண்

சேர்மானம்

கட்டுப்பாடு

குறிப்பு

## வினைப்பொருட்கள்

திராவிட மொழிகளின் வினைச் சொற்கள் ஏவல், வியங்கோள் என்பன போன்ற பல பொருட்களில் வருகின்றன. டாக்டர் கால்டுவெல் திராவிட மொழிகளில் வினை நிலையுரைத்தல் (Indicative Mood) என்ற ஒரு வினைப்பொருளே உண்டு என்றும் ஏனைய வினைப் பொருட்களை உணர்த்தக் கூட்டு வடிவங்களே பயன்படுத்தப்படுகின்றன என்றும் கூறிச் செல்கின்றார். திராவிட மொழிகளில் வினைப் பொருட்களின் வேறுபாட்டை உருபன்கள் நிலையிலும் வேறு சிலவிடங்களில் தொடரளவிலும் காணமுடிகின்றது.

(1) வா -உருபன் நிலை

(2) வந்து இருந்தான் - தொடர்நிலை

உருபன்களில் வினைப் பொருட்களைக் காட்ட இடைநிலைகளையும், விகுதிகளையும் பயன்படுத்துவதும், தொடர் நிலையில் துணை வினைகளைப் பயன்படுத்துவதும் திராவிட மொழிகளின் பொதுவியல்பு. திராவிட மொழிகளின் வினைகளை அவை உணர்த்தும் பொருளுக்கேற்ப ஏவல் வினை, வியங்கோள் வினை, செயலெஞ்சு வினை (Infinitive mood) நிபந்தனை வினை, வினை நிலையுரைத்தல் என்று பல வகைப்படுத்துவர்.

## ஏவல் வினை

ஏவல் வினை கட்டளையிடும் தன்மையது. ஏவற் பொருள் தரும் வினைகளை உடன்பாடு, எதிர்மறை என்று இரண்டாகப் பகுக்கலாம். ஏவல் முன்னிலையில் வரும். ஏவல் வினைகள் முன்னிலை ஒருமை , முன்னிலைப் பன்மை என்று எண் வேறுபாட்டைக் கொண்டன. திராவிட மொழிகளில் ஏவல் வினைகளுக்கெனத் தனி வகுதிகள் இல்லாமல் வினையடிச் சொற்களே முன்னிலை ஒருமைக்குரிய ஏவல் வடிவங்களாக அமைகின்றன. சில மொழிகளில் வினையடிச் சொல்லோடு முன்னிலை ஒருமைக்குரிய விகுதியும், பன்மைக்குரிய விகுதியும் இணைக்கப்படுவதுண்டு. எதிர்மறை ஏவல்களில் வினைப்பகுதி, எண்

உணர்த்தும் விகுதி ஆகியவற்றிடையில் எதிர்மறைக்குரிய இடைச் சொற்கள் அமைகின்றன.

செய்

செய்வீர்

போகாதீர், போகாதீர்கள்

தொல்காப்பியர் வியங்கோள் வினையைப் பற்றிக் குறிப்பிட்ட போதிலும் ஏவல் வினையைத் தனியாகக் குறிப்பிட்டு விளக்கிச் செல்லவில்லை. எனினும் 'செய்யாய்' என்னும் முன்னிலைச் சொல் 'ஆய்' விகுதி கெட்டு 'செய்' என்னும் வடிவில் ஏவல் வினை அமையும் என்பதைத் தொல்காப்பியத்தால் அறிய முடிகின்றது. வினைப் பகுதிகள் மட்டுமின்றி அவற்றோடு 'இ'கரம் இணைந்து ஊக்கி, காட்டி, தேற்றி என்று அமைகின்ற ஏவல் வடிவங்களைக் கலித்தொகயையில் காண்கிறோம். இவையன்றி வினைப்பகுதியோடு 'ஐ' விகுதி இணைந்து வந்தை, கண்டை என வரும் வடிவங்களும், அறிமோ, அறிமதி என்று – மோ, -மதி ஆகிய வகுதிகள் இணைந்து வரும் வடிவங்களையும் ஓம்புமின், காண்மின், செய்ம்மின் என்னும் மின் ஈற்று ஏவல் வடிவங்களையும் இலக்கியங்களில் காணலாம். பேச்சு வழக்கில் முன்னிலைப் பன்மையினை உணர்த்த – உங்கள் என்ற விகுதி இணைந்து 'செய்யுங்கள்' என்பன போன்ற வடிவங்கள் அமைகின்றன.

மலையாள மொழியில் வினைப்பகுதியோடு ஒலித்துணை 'உ' கரம் இணைந்தும் இணையாமலும் ஏவல் ஒருமை வடிவங்கள் அமைகின்றன. இவற்றோடு இடையில் 'க' கர ஒலி இரட்டித்து வந்தும் ஏவல்கள் அமைவதுண்டு.

வா - 'உ' கரம் இணையாமல்

வரு - 'உ' கரம் இணைந்து

இரு - 'உ' கரம் இணைந்து

இருக்கு- 'உ' கரத்துடன் இரட்டித்த 'க' கரம் இணைந்து

-வின், -ப்பின் போன்ற விகுதிகள் பழைய மலையாளத்தில் வினைப் பகுதியோடு இணைந்து பன்மை ஏவற் பொருளை

உணர்த்துவதுண்டு. தற்கால மலையாளத்தில் ஏவல் வினைகளுக்கு ஒருமைக்கென்றும், பன்மைக்கென்றும் தனி விகுதிகள் இல்லை. வினைப்பகுதியோடு –எ, -உ ஆகியன இணைந்து ஏவல்கள் அமைகின்றன. வினைப்பகுதியோடு –உக என்ற விகுதியை இணைத்து மரியாதை ஏவல் (Polite imperative) அமைக்கும் மரபு மலையாள மொழியில் உள்ளது.

எ.கா. ஓதுக, பறையுக

கோடா மொழியில் வினையடிச் சொல்லோடு 'ம' கரம் இணைந்து பன்மை ஏவல் வடிவங்கள் அமைகின்றன. தோடா மொழியில் -ஸ(s) விகுதி சேர்க்கப்பட்டு பன்மை ஏவல் வடிவங்கள் அமையும்.

எ.கா. தோடா - போஸ் (pos)

கொடகு மொழியில் -ரி, இரி ஆகியன ஏவல் பன்மை விகுதிகளாகும். பழங்கன்னடத்தில் -இம் விகுதியும் புதுக்கன்னடத்தில் -இ, -இரி என்னும் விகுதிகளும் ஏவல் பன்மை விகுதிகளாக அமைந்துள்ளன.

துளு மொழியில் ஒருமை வடிவில் வினைப்பகுதியோடு –ல விகுதியும் பன்மையில் -இ, -லெ ஆகிய விகுதிகளும் உள்ளன. குயி மொழியில் -மு விகுதி ஒருமைக்கும் -து விகுதி பன்மைக்கும் இணைக்கப்படுகின்றன.

தெலுங்கு மொழியிலும் வினையடி ஏவலாக வருகின்றது. சில இடங்களில் வினையடியோடு –மு என்னும் விகுதி இணைந்தும் ஏவல் வடிவங்கள் அமைந்துள்ளன.

எ.கா. செப்புமு – சொல்

சூடுமு - பார்

தற்காலத் தெலுங்கில் -மு விகுதி மிகக் குறைவாகவே பயின்று வருகின்றது. ஏவல் பன்மையை உணர்த்த வினையடியோடு பழந்தெலுங்கில் 'உண்டு' என்னும் சொல்லுருபை இணைக்கும் மரபு உள்ளது.

எ.கா. போ போண்டு - போ! போ!

ரா ரண்டு - வா! வா!

தற்காலத் தெலுங்கில் 'அண்டி' என்ற சொல்லுருபே பெருவழக்கிலுள்ளது. இது பன்மை விகுதியாகவும் மரியாதை விகுதியாகவும் உள்ளது.

தின் அண்டி - உண்பீர்

குறிப்பு

ரண்டி - வருவீர்

கோண்டா மொழியில் ஏவல் ஒருமைக்கும் a என்னும் விகுதியும் பன்மைக்கு னர என்னும் விகுதியும் உள்ளன.

. ra a வா ஒருமை

ra du வா பன்மை

பெங்கொ மொழியில் ஒருமை விகுதியாக –aவும், பன்மை விகுதியாக –atவும், என்பதுவும் உள்ளன. கொலாமி மொழியில் ஏவல் ஒருமைக்கென தனி விகுதி இல்லை. –ஒர் என்னும் விகுதி பன்மை உருபாக அமைகின்றது. கொலோமியின் ஏவல் வடிவமும்பர்ஜி மொழியின் ஏவல் வடிவமும் ஒன்றாகக் காணப்படுகின்றன. குருக் மொழியில் ஏவல் ஒருமை பெண்பால் விகுதியாக –ஆ என்னும் விகுதியும், பெண்கள் பெண்களுக்கும் பேசிக்கொள்ளும் போது –ஏ என்னும் விகுதியும் பயன்படுத்தப்படுகின்றன. மால்டோ மொழியில் -அ, -கு, ஆகியன முறையே ஒருமை, பன்மை விகுதிகளாக உள்ளன.

ஓப்பீட்டு நிலையில் நோக்கும்போது பெரும்பாலாக திராவிட மொழிகளில் வினையடியே ஏவல் ஒருமையாகச் செயல்படுகின்றது. எனினும் சில மொழிகளில் ஏவல் ஒருமைக்கென சில தனி விகுதிகள் உள்ளன. கொண்டா, கோண்டி, பெங்கோ ஆகிய மொழிகளில் -அ, ஏவல் ஒருமை விகுதியாக உள்ளது.

## வியங்கோள் வினை

தமிழில் ஏவல் வினை முன்னிலையாருக்கு இடும் கட்டளையாக அமைய, வியங்கோள் வாழ்த்தல், வைதல், விரும்பல் முதலிய பொருட்களில் வருவதாக இலக்கண ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். ஏவல் முன்னிலைக்கு மட்டும் உரியது. வியங்கோள் இருதிணை ஐம்பால் மூவிடங்களில் வரும். ஏவலைப் போன்று எதிர்மறை, உடன்பாடு ஆகிய இரு வடிவங்கள் வியங்கோளிலும் உள்ளன. தமிழ் மொழியில் -இய, -இயர், -க, என்பன வியங்கோள் விகுதிகளாக உள்ளன.

எ.கா. செய்க, வாழ்க, வாழிய, வாழியர்

மலையாளம், பழங்கன்னடம், துளு ஆகிய மொழிகளிலும் -க விகுதியே வியங்கோள் விகுதியாக உள்ளது. மலையாள மொழியிலுள்ள மரியாதைப் பன்மை வியங்கோளோடு தொடர்புடையது என்பர். திராவிட மொழிகளில் எச்சங்களுக்கும் வியங்கோளுக்குமிடையே நெருங்கிய தொடர்பு உண்டு என்றும், தொடக்க காலக்கட்டத்தில் எச்ச வடிவங்களே வியங்கோளாக இருந்திருக்க வேண்டுமென்றும், -க விகுதி மிகப் பிற்காலத்தில் ஏற்பட்டிருக்க வேண்டுமென்றும் கருதுகின்றனர். கோடா மொழியில் -மொ என்னும் விகுதி வியங்கோள் விகுதியாகக் காணப்படுகின்றது. கன்னட மொழியில் -ge, ke ஆகிய விகுதிகளும், துளு மொழியில் –adi என்னும் விகுதியும் உள்ளன. –adi என்னும் விகுதி ஆனால் தன்மை முன்னிலைக்கு வராமல் படர்க்கைக்கு மட்டுமே உள்ளன.

தோடா மொழியில் வியங்கோள் விகுதியாக –கோ என்பது வழக்கிலுள்ளது. திராவிட மொழிகளில் தொடர் நிலையில் எச்ச வடிவங்களோடு 'வேண்டும்' என்னும் சொல்லுருபு இணையும் போது வியங்கோள் வடிவங்கள் தோன்றுவதுண்டு.

வர + வேண்டும்

இங்கு 'வேண்டும்' என்பது கட்டாயம் என்ற அழுத்தப் பொருண்மையினைத் தரவும் துணை செய்கின்றது. இது போன்ற அமைப்பினைத் தமிழ், மலையாளம், கன்னடம், துளு போன்ற மொழிகளிலும் காணலாம்.

## செயலெஞ்சு வினை

மேலை ஐரோப்பிய மொழிகளில் செயலெஞ்சு வினையைத் தனி வகையாக கருதுவர்.. திராவிட மொழிகளில் செயலெஞ்சு வினைகள் உண்டெனினும் அவற்றைத் தனி வகையாகக் கொள்வதில்லை. இவற்றைப் பெயரெச்ச வடிவங்கள் என்றும், வினையெச்ச வடிவங்கள் என்றும் இரண்டாகப் பகுப்பர் தெலுங்கு போன்ற மொழிகளில் தொழிற் பெயர்களே செயலெஞ்சு வினைகளாக நிற்பதாக டாக்டர் கால்டுவெல் குறிப்பிடுகின்றார். தமிழிலும் 'வரவேண்டும்' போன்ற வினையெச்ச வடிவங்கள் 'வரல்' போன்ற தொழிற் பெயர்களின் ஈறு கெட்டமைந்த வடிவங்கள் என்பர். பிராகுயி, குருக் போன்ற வட திராவிட மொழிகளிலும் தொழிற் பெயர்களே

குறிப்பு

செயலெஞ்சு வினைகளாக நிற்கின்றன. திராவிட மொழிகளில் கோண்டி, துளு தவிர்ந்த ஏனைய மொழிகளில் வினையடிகளின் இறுதியில் ‘அ’ கர உருபை இணைப்பதால் செயலெஞ்சு வினை வடிவங்கள் பெறப்படுகின்றன. கன்னட மொழியில் தொழிற் பெயர்களோடு நான்காம் வேற்றுமை உருபு இணைந்து எச்ச வடிவங்கள் அமைகின்றன.

கோண்டி மொழியில் வினைப்பகுதியோடு alle, ille என்பவற்றை இணைப்பதால் செயலெஞ்சு வினை வடிவங்கள் அமைகின்றன. துளு மொழியில் ni, ere போன்றவற்றை வினைப் பகுதியோடு இணைப்பதால் இத்தகைய வினை வடிவங்கள் அமைகின்றன. பேராசிரியர் மார்க்ஸ் முல்லர் திராவிட மொழிகளில் -ka எச்ச உருபாக உள்ளது என்கிறார். இக்கூற்றை டாக்டர் கால்டுவெல் மறுத்து ‘அ’ கரம் தான் எச்ச உருபு என்று விளக்கியுள்ளார்

## நிபந்தனை வினை

இந்தோ-ஐரோப்பிய மொழிகளிலும், துருக்கி, பீனிஷிய மொழிகளிலும் நிபந்தனை வினை மிகத் தெளிவாக அமைகின்றது. திராவிட மொழி வினைச் சொற்களும் நிபந்தனை வினைப் பொருளை உணர்த்தவல்லன. வினையடிச் சொற்களின் இறுதியில் நிபந்தனை வினைப் பொருளைத் தரும் -ஆல், -இன் பொன்ற விகுதிகளை இணைப்பதால் இத்தகைய வினை வடிவங்கள் அமைகின்றன. தமிழில் -ஆல், -இன், -இல், கால், -ஏன் என்ற விகுதிகள் நிபந்தனைப் பொருளைத் தருகின்றன.

எ.கா. தரின் கொள்வேன்

தந்தால் நல்லது

இவ்விகுதிகள் மட்டுமின்றி ‘ஆனால்’, ‘ஆகில்’, ‘என்றால்’ போன்ற சொற்கள் வினைமுற்றுக்களோடு இணைந்தும் நிபந்தனை வினைப் பொருளைத் தருகின்றன. இவையன்றி ஏழாம் வேற்றுப் பொருளில் வரும் கால், கடை போன்ற உருபுகள் சேர்ந்தும் நிபந்தனை வினைகள் அமையும்.

எ.கா. செய்தக்கால்

கன்னட மொழியில் -re என்பது நிபந்தனை விகை விகுதியாக உள்ளது. இதனை யசந என்பதன் சுருங்கிய வடிவாக டாக்டர் குண்டர்ட் கருதுகின்றனர். துளு மொழியில் -வ, -ட ஆகிய விகுதிகள் நிபந்தனை வினை விகுதிகளாக உள்ளன. தெலுங்கு மொழியில் -ina என்னும் விகுதி நிபந்தனை வினைப் பொருளைத் தருகின்றது.

## இருமதிப்பெண் வினாக்கள்

1. வினைப்பெயர்கள் என்றால் என்ன?
   வினையடியாகப் பிறக்கும் பல்வேறு பெயர்கள்
2. வினையால் அணையும்பெயர் என்றால் என்ன?
   வினையைச் செய்பவனைக் குறித்துவரும் பெயர்
3. வினையால் அணையும் பெயரின் இருவகைப்பண்புகளைக்குறிக்க.
   பெயர்போல் வேற்றுமை ஏற்றல், வினைபோல் காலங்காட்டல்
4. முதனிலை திரிந்த தொழிற் பெயருக்குச் சான்று தருக.
   கெடு- கேடு
5. வினைப்பகுதி திரியாது பெயராக வரும் சொற்களுக்குச் சான்று தருக.
   உதை - உதை
6. வினையின் பொருட் கூறுகள் யாவை?
   ஏவல், வியங்கோள், எச்சம், நிபந்தனை

## குறுவினாக்கள்

7. வினையாலணையும்பெயர் குறித்து விளக்குக
   வினையாலணையும்பெயர் என்னும் தலைப்பில் உள்ள செய்திகள்
8. தொழிற்பெயர்கள் குறித்து விளக்குக
   தொழிற்பெயர்கள் என்னும் தலைப்பில் உள்ளவை
9. ஏவல் வினை குறித்துஎழுதுக
   ஏவல் வினை என்ற தலைப்பில் உள்ளவை
10. திராவிட மொழிகளில் வியங்கோள் வினையை விளக்குக
    வியங்கோள் வினை என்ற தலைப்பில் கூறப்பட்ட செய்திகள்

குறிப்பு

### பெருவினாக்கள்

11. வினைப்பெயர்கள் குறித்துக் கட்டுரைக்க
 வினைப்பெயர்கள் குறித்தும், தொழிற்பெயர் குறித்தும், வினையால் அணையும் பெயர்கள் குறித்தும் கூறப்பட்ட செய்திகள்
12. வினைப்பொருள் குறித்து விளக்குக.
 ஏவல், வியங்கோள், எச்சம், நிபந்தனை ஆகிய வினைப்பொருள் குறித்துக் கூறப்பட்ட செய்திகள்

## கூறு 14

## திராவிட மொழிகளின் சொற்றொடரமைப்பு

ஒரு மொழியின் அடிப்படை புலப்பாட்டு வடிவம் கருத்துணர்த்துவதில் அடங்கியிருக்கின்றது. மொழியில் அமைந்த சொற்கள் நிரல்படக் கிடந்தாங்கு கருத்தை உணர்த்தினால் அது சொற்றொடராகக் கருதப்படுகின்றது. இச்சொற்றொடரின் அமைப்பு கூறுவோன் கேட்போன் ஆகிய இருவராலும் ஒரே நிலையில் உணர்ந்துகொள்ளப்படவேண்டும். அப்போது கருத்துப் புலப்பாடு எளிதாகும். சொற்களின் சேர்க்கை அல்லது முறைவைப்பு ஒருகுறிப்பிட்ட அமைப்பில் தொடரவேண்டும். இத்தகு சொற்றொடர் அமைப்பு மொழிக்கு மொழி மாறுபடும். ஒவ்வொரு மொழியும் குறிப்பிட்ட இலக்கணக் கூறுகளைத் தனக்குரிய தொடரன் அலகுகளாகப் பெற்றுள்ளன.

இத்தகைய திராவிட மொழிகளின் தொடரமைதிகள் இம்மொழிகளுக்குள்ளே பெரிய வேறுபாட்டைக் கொண்டனவல்ல; எனினும் அவை பிற மொழிக்குடும்ப மொழித் தொடரமைதிகளிலிலிருந்து வேறுபடுகின்றன.

மொழியின் புலப்பாடு என்பது அது உணர்த்தும் கருத்துணர்த்தும் தொடர்களில்தான், மனிதன் தனிச் சொற்களைச் சிந்திப்பதில்லை. கருத்தையே சிந்திக்கின்றான். ஆகவே தொடர்களே அடிப்படை என்பது மொழியியலார் கொள்கை. தொடர் பற்றிய சிந்தனைகள் மொழி ஆய்வுக்குப் பெரிதும் துணைசேர்ப்பன.

குறிப்பு

மு.வரதராசன் “திராவிட மொழிகளின் தொடரமைப்பைக் குறிக்கையில் வாக்கிய அமைப்பு (Syntax) மிகப் பழங்காலம் முதல் இன்றுவரை ஏறக்குறைய ஒரே தன்மையாகவே இருந்து வருகின்றது. சொற்களின் வடிவங்கள் ஒவ்வொரு திராவிட மொழியிலும் ஒவ்வொரு வகையாக மாறிய போதிலும், வாக்கிய அமைப்பு மட்டும் மாறாமலே ஒரே வகையாக இருந்து வருகிறது. இந்தோ ஐரோப்பிய இனம் என்று குறிக்கப்படும் வட இந்திய மொழிகளும் இவ்வகையில் மட்டும் திராவிட மொழி இனத்தோடு உறவு உள்ளவை என்று கொள்ளலாம். பழந்திராவிட மொழிகளைப் பேசி வந்த மக்கள் கையண்ட அதே வகையான வாக்கிய அமைப்பையே இன்றைய வட இந்திய மொழிகளிலும் காணலாம். மொழியின் மேற்பகுதி எவ்வளவு மாறினாலும் அடிப்படையான வாக்கிய அமைப்பு மட்டும் மாறாமல் இருந்துவரும் என்ற உண்மையே இதற்குக் காரணம். ஆகவே, வட இந்திய மொழிகளின் வாக்கிய அமைப்பு, சமற்கிருதம், கிரேக்கம், இலத்தீன், செருமன் முதலியவற்றின் வாக்கிய அமைப்போடு ஒத்திருக்கவில்லை; தமிழ் முதலான திராவிட மொழிகளின் வாக்கிய அமைப்போடு ஒத்திருக்கிறது” என்று குறிப்பிடுகின்றார்.

எச்சவினைகளின் துணையால் வினைகளின் காலங்களைத் தோற்றுவித்தல், தொடர் வாக்கியங்களை முற்றுவினைகளின் முன் வைத்தல், முடிக்க வரும் சொல்லையடுத்து, முடியும் சொல்லை நிறுத்தி முடித்தல் ஆகிய நிலைகளில் வட இந்திய மொழிகள், திராவிட மொழிகளை ஒத்துள்ளன. எனினும் இவ்வொற்றுமை திராவிட மொழிகளிலிருந்து பெற்ற தாக்கம் என்பது டாக்டர் கால்டுவெல்லின் கருத்தாகும்.

## சொற்றொடர் ஒழுங்கு

தொடர்களில் அமைந்த சொற்றொடர் ஒழுங்கு தொடருக்கு வடிவத்தை ஏற்படுத்துகின்றன. பொதுவாகத் திராவிட மொழிகளில் சொற்களை மாற்றினாலும் பொருள் மாறுவதில்லை என்று முன்னர்க் குறிப்பிடப்பட்டது. ஆனால் பெயரைடை, வினையடைகளை மாற்றியிட்டால் பொருள் புலப்பாடு தடைப்படும். எனவே மொழிகளில் சொற்றொடர் ஒழுங்கு முதன்மையான ஒன்று.

திராவிட மொழிகளில் பெயரடைகள் பெயருக்கு முன்வந்து பெயரைச் சிறப்பிக்கின்றன. அவை தனித்து இயங்காமல் பெயர்த்தொடரின் ஓர் அலகாக அமைகின்றன. வினையடைகள் வினையைச் சிறப்பிப்பன என்றாலும் பெயர்த்தொடரின் அலகாகவும் அமைவதுண்டு

நன்றாக ஓடியவன் இராமன்

வினையடை வினையாலணையும் பெயர் பெயர்

இங்கு பெயரின் அலகாக அமையும் பெயர்த்தொடரில் வினையடை ஓர் உட்கூறாக அமைகின்றது.

மலையாள மொழியில் வினைச் சொற்களைச் சிறப்பிக்கும் வினையடைகள் பெயரைச் சார்ந்து மட்டும் அமையும் பெயரடைகளைப் போல அமைவதில்லை. அவை தனித்து இயங்கும் ஆற்றலுடையன. வினையடைகளாக வினைச் சொல்லுடன் வருவது போலவே தனித்தும் இயங்கும் ஆற்றலுடையன.

திராவிட மொழிகளில் முற்றுத் தொடர்களில் எழுவாய், தொடரில் முதலில் நிற்கும். வினைமுற்றுக்கள் இறுதியில் அமையும். இவற்றிற்கு இடையில் செயப்படுப்பொருள் அமையும். உணர்ச்சியுடைய பேச்சிலும் செய்யுளின் நடையிலும் இவ்வமைப்பைப் பேணுவதில்லை.

“கண்டனென், கற்பினுக்கு அணியை, கண்களால்,
தெண் திரை அலைகடல் இலங்கைத் தென் நகர்
அண்டர் நாயக !இனி, துறத்தி, ஐயமும்
பண்டு உள துயரும்“என்று, அனுமன் பன்னுவான்

என்னும் கம்ப ராமாயணப் பாடலில் கண்டனென் என்னும் வினைச்சொல் தொடக்கத்திலும் அண்டர் நாயக என்னும் விளி இடையிலும் வரக் காணலாம். துறத்தி எனும் வினை முற்று முதலில் வந்து ஐயமும் துயரும் என்ற செயப்படுப்பொருள் பின்னர் வரக்காணலாம். இது செய்யுட்குரிய சிறப்புரிமையாகும்.

## இயைபு

தொடரில் காணும் மொழி அலகுகளுக்கு இடையில் காணும் இயைபுத்தன்மை மொழிகளுக்கு இடையே வேறுபடுகின்றது.

இந்திமொழியில் பெயரைடையும் பெயருக்கும் இடையில் இயைபுத் தன்மை வேண்டப்படுகின்றது.

இந்தி அச்சா லட்கா நல்ல பையன் ஆண்பால் ஒருமை

அச்சி லட்கி நல்ல பெண் பெண்பால் ஒருமை

அச்சே லட்கே நல்ல பையன்கள் பலர்பால்

பெயரடைக்கும் பெயருக்கும் இடையே பாலீறுகள் ஒருமைப்பட அமைவது திராவிட மொழிகளில் இல்லை. தமிழைப் பொறுத்தவரையில் பெயரடைகள் வினையடைகள் எத்தகு பாலீறும் காட்டவேண்டியதில்லை. நல்ல என்னும் அடைச்சொல் ஆண்பால், பெண்பால், பலர்பால் மூவிடத்தும் வேற்றுமையின்றி வருகின்றது. எனவே, பெயரடைக்கும் பெயருக்குமான இயைபு வேண்டுவதின்று. மாறாகக் கோண்டி மொழியில் பெயர்ச்சொல்லுக்கும் அதனைச் சிறப்பிக்க வரும் அடைச்சொல்லுக்கும் இடையே பால் இட இயைபு காணப்படுகின்றது. தமிழில் முற்றெச்சம் அடையாக வரும்போது இவ்வியைபு அரிதாய் வரும்.

வந்தான் ஓடினான் - (வந்தவன் ஓடினான்)

வடமொழியில் சுட்டுப் பதிலிடு பெயர்களுக்கும் பெயர்களுக்கும் பாலியைபு வேண்டப்படுகின்றது. ஆனால் பெயருக்கும் வினைக்கும் பாலியைபு வேண்டப்படுவதில்லை.

**ayam aja:** gachchathi - அது ஆடு செல்கின்றது - ஆண்பால் } வடமொழி

**iyam sita** gachchathi - இவள் சீதா செல்கின்றாள் - பெண்பால்

அவன் இராமன் செல்கின்றான் - ஆண்பால்

இவள் சீதா செல்கின்றாள் - பெண்பால்

திராவிடமொழிகளில் பெயர்ச்சொற்களுக்கும் வினைச்சொல் முடிபுகளுக்கும் திணை, பால், எண் இயைபுத் தன்மை கண்டிப்பாக வேண்டும். தொல்காப்பியர்

வினையில் தோன்றும் பாலறி கிளவியும்

பெயரில் தோன்றும் பாலறி கிளவியும்

மயங்கல் கூடா தம்மரபின

என்னும் நூற்பாவில் வினைக்கும் பெயருக்குமான இயைபை வற்புறுத்துகின்றார். அவை மரபிற்கு உட்பட்டு வருவன என்கின்றார்.

பொதுநிலையில் மூவிடப் பெயர்களில் எண் ஒருமைப்பாடும் ஏனைய சொற்களில் திணை, பால், எண் ஒருமைப்பாடும் இயைபுபட வரவேண்டும்

யான் கற்றேன் - தன்மை ஒருமை
யாம் கற்றேம் - தன்மை பன்மை

நீ வந்தாய் - முன்னிலை ஒருமை
நீவிர் வந்தீர் - முன்னிலைப் பன்மை

தான் சொன்னான் - படர்க்கை ஒருமை
தாம் சொன்னார் - படர்க்கைப் பன்மை

படர்க்கையில் வரும் பதிலிடுபெயர்களான சுட்டுப் பெயர்கள் வினைச்சொற்களுடன் இயைபு பட வருவது தமிழ் மரபாகும்.

அவன் சொன்னான் - உயர்திணை ஆண்பால் ஒருமை
அவள் நின்றாள் - உயர்திணை பெண்பால் ஒருமை
அரசர் வந்தார் - உயர்திணை பலர்பால்
ஆடு தின்றது - அ∴றிணை ஒன்றன்பால்
அவை தின்றன - அ∴றிணை பலவின் பால்

தெலுங்கு மனமு போதாமு - நாம் செல்லலாம் - தன்மை பன்மை
நீவு உன்னாவு - நீ இருக்கின்றாய் - முன்னிலை ஒருமை

மலையாளத்தில் வினைமுற்றுக்களுடன் பாலீறுகளைச் சேர்க்கும் மரபு இல்லை. எனவே அவை திணைபால் வேறுபாட்டைக் காட்டுவதில்லை.

## பெயரடைகள்

பெயர்த்தொடருறுப்புகளில்பெயருக்கு அடுத்த நிலையில் முதன்மைவாய்ந்த உறுப்பு பெயரடைகள். பெயரடைகள் எப்பொழுதுமே பெயர்களுக்கு முன்னால் வருகின்றன. பழந்தமிழில்பெயரடைகள் வேர் வடிவங்கள் அல்லது அடி வடிவங்களிலிருந்து தோன்றும் நிலையில்

அமைந்து விளங்கின என்று மு. வரதராசன்கூறுகின்றார். கன்னடம் உத்தம, துஷ்ட ஆகிய வடமொழிச் சொற்களையும் பெயரடையாகக் கொள்ளும்.

முதல்வகை பெயரடை வகை

வினை அல்லது பெயர்ச்சொல ̇ பெயரடையாக வருதல்

வெல்வினை - வெல்என்பது வினைச்சொல்வேர்

பொன்நகரம். - பொன்என்பது பெயர்ச்சொல்வேர்

இரண்டாம்வகை

வினை அல்லது பெயரடி ஆக்க விகுதி சேர்ந்து அடையாகப் பெயரின்முன்அமைகிறது.

நல் அ. நல ̇ என்னும் வேரும் அ என்னும் ஆக்கவிகுதியும் இணைந்து நல்ல என்னும்பெயரடையை உருவாக்குகிறது.

நல்ல மரம்

ஸன்ன மரட - கன்னடம்

மூன்றாவது வகை

இவ்வகையில்பெயரெச்சம்அடையாகப்பெயருக்கு முன்னால் அமைகிறது.

சிறந்த மரம்

சிறந்த, சிறக்கின்ற சிறக்கும் என்பன போன்ற பெயரெச்ச வடிவங்கள் பெயரடையாக விளங்குகின்றன.

பெரிய, சிறிய போன்ற பெயரடைகள் பெரியன், சிறியன்ஆகிய குறிப்புவினை வடிவங்களிலிருந்து உருவாகின்றன. பழுத்த, கருத்த போன்ற பெயரடைகள்பழ, கரு போன்ற வினை வடிவங்களிலிருந்து தோன்றின. பெயரடையை வினையின்ஒரு பகுதியாகவே கருதுவர் மொழியியலார்.

பெயரடை - ஆக்கப்பெயரடை - பெயர்

கருமை-கரிய ஆன - பெண் - கரிய பெண்

### வினையடை

வினையை விளக்க வரும்வாக்கிய உறுப்பு வினையடை என அழைக்கப்படுகிறது. முறையான பெயரடை, வினையடை என்னும்வாக்கிய உறுப்புகள்திராவிட மொழிகளில்அமைந்திருக்கவில்லை. பெயர்களே பொருளை விளக்குவது போலவே வினைக்குறிப்பு வினையெச்சமாகி வினையடைப் பொருளைத்தந்து நிற்பதனைக்காண முடிகிறது.

அவன் வில்லின் வந்தான்

என்னும் வாக்கியமாக அமைந்து வினையடைப் பொருளைத் தருகின்றது.

பண்புப்பெயருடன் விகுதிகள் சேர்ந்து வினையடையாக வரும்.

தமிழ் நல் - கு - நன்கு ஓடினான்

தெலுங்கு - பாக பரித்தினாடு

வல்லடை

மிகவும் போன்ற சொற்கள் பெயருக்கும் வினைக்கும் வரும் அடைகளுக்கு முன் அடையாக வரும். இவ்வாறு வருவது வல்லடைகள் எனப்பெறும். தெலுங்கில் சால என்பது வருகின்றது.

மிகவும் நல்ல பையன்

மிகவும் வேகமாக ஓடினான்

தெலுங்கு - சால மஞ்சிவாரு

## சில தொடரமைதிகள்

1. திராவிட மொழிகளில் பெயரெச்சங்கள், வினையால் அணையும் பெயர்களைக் கொண்டு கருத்தை இணைத்துக்கொள்ளலாம். ஆங்கிலத்தில் பதிலிடு பெயர்களைப் பயன்படுத்தவேண்டும். அல்லது இணைப்புச்சொல்லைப் பயன்படுத்தவேண்டும். தமிழில் அவ்வாறு அமைவதில்லை.

   இராமன் வந்தான் - இராமன் அமர்ந்தான்

   இராமன் வந்து அமர்ந்தான் - வந்துஅமர்ந்த இராமன்

   Rama Came> He sat. Rama came and sat

2. பல பெயர்கள் தொடர்ந்து வரும்போது உம்மைச் சொல் பயன்பாடு அடுக்கும் பெயர்களில் பின்னொட்டாக அமையும். ஆங்கிலத்தில் இறுதிச்சொல்லின் முன் வரும் இடைச்சொல்லாக வரும்.

   மஞ்சள்- குங்குமம் - சந்தனம் - மஞ்சளும் குங்குமமும் சந்தனமும்

   Turmeric, Kunkum and Sandal

3. ஆங்கிலத்தில் காணும் தொடரியல் உறவு அடுத்து அடுத்து அமைந்த சொற்களிடையிலான இலக்கண உறவாக

அமைகின்றது. எனவே சொற்கள் இடம் மாறுகையில் அதன் பொருளமைதி மாறிவிடுகின்றது. திராவிட மொழிகளில் காணும் தொடரியல் உறவு என்பது உருபன்களுக்கு இடையிலான உறவு என்று ஜி.ஜான்.சாமுவேல் குறிக்கின்றார். சொல்லிலக்கணம் சிறப்புற அமைந்துள்ள திராவிட மொழிகளில் சொற்களுடன் இணைந்த ஒட்டுக்கள் இடம்மாறுவதில்லை. அவை குறித்த பொருளுடன் இணைந்தே வரும். அவ்வாறு பின்னொட்டுக்கள் பொதிந்த சொற்களை இடம் மாற்றினாலும் பொருள் மாறாமல் தொடரில் நெகிழ்வுத்தன்மை ஏற்படுகின்றது. ஆங்கிலத்தில் சொற்களை இடம் மாற்றுகையில் அதன் பொருள் மாறிவிடும்.

Rama weds Sita ; Sita weds Rama

என்னும் தொடர்கள் கருத்தளவில் நெருங்கிய தொடர்புடையன. ஆகவே பொருளில் பெரிய மாற்றத்தைப் பெறுவதில்லை. எனினும் எழுவாய் கருத்தின் முதன்மை அலகாக அமையும். வினைச்சொல்லின் முன்னர் வரும் பெயர் எழுவாயாக அமைகின்றது.

Rama killed Ravana; Ravana killed Rama

என்னும் தொடர்களில் உள்ள பெயர்வரிசையை மாற்றியிட்டால் பொருள் மாறிவிடக் காண்கின்றோம்.

4. ஆங்கில மொழியில் தொடரின் நடுவிலும் ஐரிஷ் மொழியில் முதலிலும் வினைச்சொற்கள் வருவதுண்டு. தமிழ் முதலான திராவிட மொழிகளில் பொதுநிலையில் தொடரமைப்பின் இறுதியில் வினைச்சொல் வருகின்றது. அவ்வாறு வரும் வினைச்சொல்லை இடம்மாற்றியிட்டாலும் பொருள் மாறுவதில்லை.

இராமன் சீதையை மணந்தான்

சீதையை இராமன் மணந்தான்

இராமன் மணந்தான் சீதையை

மணந்தான் சீதையை இராமன்

என்னும் சொற்றொடர் அமைப்புகள் எல்லாவிடத்தும் இயல்பாக வருவதில்லை. என்றாலும் இத்தொடர்களில் பொருள் மயக்கம் நேர்வதில்லை.

இராமன் இராவணனைக் கொன்றான்

இராவணனை இராமன் கொன்றான்

குறிப்பு

என வரும் சொற்றொடர்களில் பெயரை அடுத்து அமையும் வேற்றுமை உருபுகள் பெயரைச் செயப்படுபொருள் ஆக்கிவிடுவதால் பொருள் மயக்கங்கள் நேர்வதில்லை. திராவிட மொழியில் காணும் வினை வடிவங்கள் அவற்றின் கால இடைநிலை, பாலீறுகள் ஒட்டு நிலை மொழிக்கூறுகளாய் இணைந்து வருகின்றன. அவை

தனித்தனியாய்க் கிடக்காமல் இணைந்து ஒரு சொல்நீர்மைத்தாய் உருப்பெறும்.

5. திராவிட மொழிகளில் எழுவாய் உயர்திணைப்பெயர், அ∴றிணைப்பெயர், எண்ணுப்பெயர், மூவிடப் பெயர், சுட்டுப்பெயர், தொழிற் பெயர், பண்பால் அமையும் பெயர், வினையால் அணையும் பெயர் என வரும் பெயர்ச்சொற்களில் ஒன்றைச் சார்ந்திருக்கும். பயனிலைகள் தனிப் பயனிலைகளாகவோ கூட்டு வடிவங்களாகவோ அமையும். ஐரோப்பிய மொழிகளில் வினை மட்டுமே பயனிலையாக வர, தமிழ் முதலான மொழிகளில் பெயரும் வினாவும் பயனிலைகளாக வரும்.

    அவன் யாவன்

    அவன் இராமன்

    வந்தவன் இராமன்

    நல்லவன் இராமன்

6. வினைப்பயனிலைகள் தனிவடிவங்களாக வரும்போது வினைமுற்று அல்லது வியங்கோளைப் பெற்று வரும். கூட்டு வினைப் பயனிலை வடிவங்கள் எச்சங்களையும் முற்றுக்களையும் பெற்று வரும்.

    குழந்தை அழுதது - தனிப்பயனிலை

    குழந்தை அழத் தொடங்கியது -கூட்டுப் பயனிலை

7. திராவிட மொழிகளில் எச்சச் சொற்களுடன் எதிர்மறைச் சொற்களை இணைப்பதன்மூலம் எதிர்மறைத் தொடர்களை உருவாக்கிக் கொள்வதுஎளிது.

    அவன் தர - மாட்டான் அவன் தரமாட்டான்

    அவன் தர - இல்லை - அவன் தரவில்லை.

    வாடு ஈ லேது (தெலுங்கு)

8. தொடரியலில் இலக்கண வடிவங்களை விடப் பொருண்மை மீதான விதிகளை அறிந்துகொள்ளுதல் முக்கியமானது. ஒருவன் பேசும் பேச்சு அவனுடைய வாழிடச்சூழல், தேவை, சமுதாயநிலை ஆகியவற்றுடன் நெருங்கிய உறவுடையது. மொழியின் புறவடிவம் பொருளைப்பெறும்போது மட்டுமே கருத்துப் பரிமாற்றம் சாத்தியமாகும். பேச்சு மொழியில் இலக்கணவடிவம் சற்று நெகிழினும் பொருளுணர்தல் என்பது மாறுவதில்லை.

உண்மை அவனுக்குத் துணையாயிற்று

புலி அவனை விழுங்கிற்று

மறவன் பகைவரை வென்றான்

என்னும் தொடர்களில் காணும் எழுவாய் முறையே வடிவுற்ற பெயராகவும், அ∴றிணைப்பெயராகவும் உயர்திணைப்பெயராகவும் அமைந்துள்ளன. உண்மை என்னும் நுண்பொருள் எழுவாய்க்கு பருப்பொருளுக்குரிய வினைவடிவத்தை இட்டாலும் பொருள் உணர்வது எளிதாகின்றது.

கடமை அவனைத் திருத்தியது

வாழ்க்கை அவனுக்கு வழிகாட்டியது

இவை போன்ற தொடர்களில் நுண்பொருளை உயிருடைய பொருள்களின் செயல்களால் சுட்டிச் செல்வதை ஏற்கமுடிகின்றது. ஒருவரைக் குறித்துவரும் உயர்திணை மொழியாகிய மரியாதைப் பன்மை தமிழில் காணப்படுகின்றது.

தலைவர் வந்தார் - பன்மை

ஒருவர் வந்தார் - ஒருமை (மரியாதைப்பன்மை)

9. மேலைத் தேய மொழிகளில; Preposition என்னும் முன்னொட்டுக்கள் அமைவதுண்டு. தமிழில் பின்னொட்டுக்களாய் வரும் இடைச்சொற்களே மிகுதியாகும்.

In the box - ஆங்கிலம்

பெட்டியின் உள்- தமிழ்

10. தெரிநிலை வினைமுற்றுப் போலவே குறிப்புவினை முற்றுக்களும் திராவிடமொழியில் பயின்றுவருவதாகும். தெரிநிலைவினை வினைப்பகுதியை அடிச்சொல்லாகக் கொண்டு உருவாகின்றன. குறிப்பு வினைமுற்று பெயரையும் பண்பையும் அடிச்சொல்லாக

குறிப்பு

கொண்டு தோன்றுகின்றன. தெரிநிலை வினைகள் கால்ங்க் காட்டுவன. ஆனால் குறிப்பு வினைகள் குறிப்பாய் காலந் தழுவி நிற்பன.

அவன் ஆக்கினான் - தெரிநிலை வினை

அவன் கரியன் - குறிப்பு வினை

11. செயப்படுபொருள் - வினைப்பாகுபாடு

வினைப்பயனிலைகள் எல்லாமும் செய்ப்படுப்பொருளுடன் வருவதில்லை. சில வினைவடிவங்கள் செயப்படுப்பொருளை ஏற்பதில்லை. ஆங்கிலத்தில் இவற்றைச் செயப்படுப்பொருள் குன்றாவினை (Transive Verb) செயப்படுப் பொருள் குன்றிய வினை (Intransitive Verb) என இரண்டாகக் கொள்வர். இது தமிழ்மொழியிலும் காணப்படுகின்றது.

இராமன் ஏற்றினான் - செயப்படுப்பொருள் குன்றாவினை

இராமன் எழுந்தான் -செயப்படுப்பொருள் குன்றிய வினை

ஏற்றினான் எனும்போது எதனை என்னும் வினாத் தொக்கிச் செயப்படுப்பொருளை அவாவி நிற்பதால் செயப்படுப்பொருள் குன்றாவினைத் தொடராக அது அமையும். எழுந்தான் எனும்போது செயப்படுப்பொருள் தேவையில்லை என்பது உணரப்பெறுவதால் அத்தொடர் செயப்படுபொருள் குன்றிய வினை ஆகும்.

## இருமதிப்பெண் வினாக்கள்

1. எவ்வகை மொழிகளில் நெடுங்காலமாக வாக்கிய அமைப்பு ஒன்றாகவே இருக்கின்றது என மு.வ. கூறுகின்றார்?
   திராவிடமொழிகளில்
2. திராவிட மொழிகளிலிருந்து வடமொழிகள் பெற்ற வாக்கியக் கூறுகள் என கால்டுவெல் எவற்றைக் குறிக்கின்றார்
   எச்சவினைகளால் காலங்களை உணர்த்தல், தொடர் வாக்கியங்களை முற்றுவினைகளின் முன் வைத்தல், முடிக்க வரும் சொல்லையடுத்து, முடியும் சொல்லை நிறுத்தி முடித்தல்

3. எந்த திராவிட மொழியில் வினையடைகள் தனித்து இயங்கும் தன்மையனவாக உள்ளன?

மலையாள மொழியில்

4. பெயருக்கும் அடைக்கும் பாலியைபு வேண்டப்படும் தன்மை எம்மொழியில் உள்ளது.?

இந்தி

5. படர்க்கை சுட்டிய தொடரில் திணை, பால் எண், இயைபு

வேண்டப்படும் மொழி எது?

தமிழ்.

## குறுவினாக்கள்

6. சொற்றொடர் ஒழுங்கு குறித்து எழுதுக.

சொற்றொடர் ஒழுங்கு என்னும் தலைப்பின் கீழ் இடம்பெற்ற செய்திகள்

7. தொடரில் இயைபு குறித்து எழுதுக

இயைபு என்னும் தலைப்பின் கீழ் இடம்பெற்ற செய்திகள்

## பெருவினா

8. திராவிடமொழிகளின் தொடரமைப்பு குறித்துக் கட்டுரைக்க.

சொற்றொடர் ஒழுங்கு, இயைபு, சில தொடரமைதிகள் ஆகிய தலைப்புக்களின் கீழ் இடம்பெற்ற செய்திகள்

மாதிரி வினாத்தாள்

திராவிட மொழிகளின் ஒப்பாய்வியல்

10724

நேரம்: மூன்று மணி

மதிப்பெண்: 75

**பகுதி அ : அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு தொடர்களில் விடையளிக்க. (10X2=20)**

1. வட திராவிட மொழிகளைச் சுட்டுக.
2. திரவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற நூலின் ஆசிரியர் யார்?
3. மூலத் திராவிட மொழி உயிரொலி பெரிதும் வேறுபடும் திராவிட மொழி எது?
4. உயிர் நீட்சிக்குச் சான்று தருக.
5. திராவிட மொழிகளில் தகரம் அண்ண ஒலியாதலுக்குச் சான்று தருக.
6. தெலுங்கில் அ.்.றிணைப் பன்மையைக் குறிக்கும் விகுதி எது?
7. தெலுங்கில் ஏவல் வினை எவ்வாறு அமையும்?
8. தமிழில் வழங்கும் எதிர்மறை இடைநிலைகளைச் சுட்டுக.
9. முயற்சி - எவ்வகைப் பெயர்?
10. வினைப்பெயர் என்றால் என்ன?

**பகுதி ஆ: பின்வருவனவற்றிற்கு ஒரு பக்க அளவில் விடைதருக. (5X5=25)**

11. அ. நடு திராவிட மொழிகள் குறித்த அறிஞர் கருத்தைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

ஆ. வட திராவிட மொழிகளின் சிறப்பியல்புகள் யாவை?

12. அ. உயிரொலி குறுகலை விளக்குக.

(அல்லது)

ஆ. மெல்லொலி மாற்றங்கள் குறித்து விவரிக்க.

13. அ. தன்மைப் பன்மை குறித்து எழுதுக.
(அல்லது)
ஆ. திராவிட மொழிகளில் அ∴றிணைப் பன்மை எவ்வாறு வழங்கப்படுகின்றது?

14. அ. இடப்பொருள் வேற்றுமை குறித்து எழுதுக.
(அல்லது)
ஆ. மலையாள மொழியின் வினைவடிவங்கள் பற்றியெழுதுக.

15. அ. வியங்கோள் வினை குறித்து எழுதுக.
(அல்லது)
ஆ. திராவிட மொழிகளில் சொற்றொடர் ஒழுங்கு குறித்து எழுதுக.

## பகுதி இ: எவையேனும் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க. (3X10=30)

16. திராவிட மொழிகளில் தமிழ் பெறுமிடத்தை விவரிக்க
17. திராவிட மொழிகளில் மூக்கொலிகள் குறித்து விளக்குக. .
18. திராவிட மொழிகளில் எண்ணுப்பெயர்கள் குறித்துக் கட்டுரை வரைக.
19. வினையெச்சங்கள் திராவிட மொழிகளில் வழங்குதலை விளக்கியுரைக்க .
20. திராவிட மொழிகளில் சொற்றொடர் அமைப்பு குறித்து விளக்குக.

## பாட நூற் செய்தித் தொகுப்புக்கு உதவிய நூல்கள்


1. ஜி.ஜான்சாமுவேல் திராவிட மொழிகளின் ஒப்பாய்வு - ஓர் அறிமுகம்
2. இராபர்ட் கால்டுவெல் - திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் (மொழிபெயர்ப்பு நூல்)
3. ரா.சீனிவாசன் - மொழி ஒப்பியலும் வரலாறும்
4. தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் - தமிழ் மொழி வரலாறு
5. ம.இராசேந்திரன் (ப.ஆ), தமிழ் மொழி வரலாறு